# அனல்காற்று

ஜெயமோகன்

[ 1 ]

கண்ணாடிக்கதவுகளின் அசைவுகள் உருவாக்கிய அலைகளில் உன் பிம்பம் மிதந்து மிதந்து ஒன்று பலவாகப்பெருகிப்பரவி ஒவ்வொன்றும் என்முன்னால் இதோ விலகி விலகிச் செல்கிசெல்கிறது சுசி. இந்த குளிர்ந்த முன்னிரவின் தனிமையில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட கருவிபோல முற்றிலும் செயலிழந்தவனாக நின்று மஞ்சள் சுடிதாரின் கடைசித்திவலை அமிழும் உன் கடைசிப் பிம்பத்தை பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன்னை அனுப்பிவிட்டு தெளிந்த கண்ணாடிப்பரப்பு மெல்ல அசைந்தாடி பிம்பங்களைக் குழைக்கிறது.

அப்பால் நட்சத்திரங்கள் மின்மினித்துப் பரவிய விரிவானின் கீழே, என் அடிவயிற்று ஆவேசம்போல செஞ்சுடர்விழிகள் விழித்து பேரிரைச்சலிட்டு எழுந்துவந்து திரும்புகிறது பிரம்மாண்டமான ஜெட் விமானம். தனிமை என்ற சொல்லை மொழிதோன்றிய நாளில் இருந்து இக்கணம் வரையெனத் துளித்துளியாக உணர்ந்தவனாக இங்கே நிற்கிறேன். இப்புவியில் பிரிந்துசெல்பவர்களைப்போல குரூரமானவர்கள் எவருமில்லை சுசி.

நீ செல்லும் விமானம் இருளைத்துழாவி மீன் போல் எழுந்து வானில் ஒளிக்குவியலாக நிறைந்து சுருங்கிச் சுருங்கிச்சென்று பின் இருண்டவெளியில் ஒரு மெல்லிய ஒளிச்சிமிட்டல் மட்டுமென ஆகி மறைந்தபின் நட்சத்திரங்களை மட்டும் பார்த்தபடி வெகுநேரம் நின்றிருந்தேன். பெருமூச்சுகளால் மட்டுமே உயிர்ச்சலனம் கொண்டவனாக.

பின்னர் விமானநிலையம் அடங்கியது. வழியனுப்பவந்தவர்கள் ஒவ்வொருவராக நினைவுகளுடன் கண்ணீருடன் பெருமூச்சுகளுடன் திரும்பிச்சென்றார்கள். பொருளிழந்த வார்த்தைகள்

நெருப்புக்கோடுகளாக சுடர்ந்தோடும் அறிவிப்புப்பலகைகளை பிரதிபலித்தபடி கண்ணாடிக்கதவுகள் அசைவிழந்தன. ஒவ்வொருவராக விலகியபின் நீர் வற்றிய குழிஅம் போல வெறுமை கொண்டது விமான நிலையம். காபிக்கோப்பைகள் சில குப்பைக்கூடை அருகே சிதறிக்கிடந்தன. புத்தகக் கடையில் மஞ்சல் ஒளியில் இளைஞன் ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

வெள்ளை உடை அணிந்த ஒரு பெண் மௌனமாக பளிங்குத்தரையைக் கூட்ட ஆரம்பித்தாள். என்னநை அவள் நெருங்கினால் கூட்டித்தள்ளிவிடுவாள் என்று அஞ்சினேன். மூச்சை ஊதி ஊதி வெளியே விடேன். அங்கிருந்து நான் உள்ளே இழுத்து நிறைத்துக்கொண்ட மனச்சுமையை அங்கேயே விட்டுவிட விழைபவனைப்போல. பின்னர் இறுதிப்பெருமூச்சை அங்கே விட்டுவிட்டு நான் என் காரை நோக்கி நடந்தேன். என் கார் என்னைப்போலவே குளிர்ந்து செயலற்று கல்லில் கடைந்தது போலக் கிடந்தது அங்கே. அதன் பானெட்டில் பனித்துளிகள் வியர்த்திருந்தன

என் கைச் சாவியைஅ முத்தினேன். விழிப்புகொண்ட புலி போல மெல்ல உறுமி கண்விழித்தது. கதவைத்திரந்து ஏறி அமர்ந்துகோண்டேன். என் வழக்கமான ஓடுநர் இருக்கையில் என்னுடைய உடலின் தடமும் சூடும் இருந்தது.  என் கார் எனக்கு ஒரு கருப்பை போல. இதற்குள் ஒடிந்து சுருண்டு நான் அமர்ந்துகொள்ள முடியும். வெளியே இரைச்சலிடுக் கொந்தளிக்கும் பேருலகம் அப்போது வெறும் கண்ணாடிப்பாங்களாக எனக்கு  அப்பால் ஓடிக்கொண்டிருக்கும்

சாவியை திருகி, மீண்டும் மீண்டும் என் காரின் எஞ்சினை இயக்கினேன். அதன் நுனியில் தொங்கிய ஜப்பானிய பலசெயல்பொருள்கொத்தை கையல் ஆட்டி ஆட்டி விட்டேன். அதை எடுத்து என் நகங்களை வெட்டிக்கொள்ள வேண்டும் என்ற அபத்தமான எண்ணம் என்னுள் ஓடியது. சில்லென்று குளிர்ந்திருந்தது அந்த

உலோகம். கூர்மை என்பது எப்போதுமே குளிர்ந்தது. குளிர்ந்தவையெல்லாம் ஏனோ மௌனமாக இருக்கின்றன

கார் உறுமி உறுமி உறுமி அது பற்றிக்கொண்டபோது அதன் நெஞ்சில் முழங்கிய சொல்லை நான் அடையாளம் கண்டுகொண்டேன். பின்பு மரணம் ஒரு சொல்லாக இல்லை. விம்ம் என்று முழங்கிய கரிய சாலையில் விரைந்தது அது. ஆரத்தழுவும் வெறியுடன் ஒளிசுடர என்னை நோக்கிப் பாய்ந்துவரும் மரங்களாக விளக்குக் கம்பங்களாக முழங்கும் வாய்திறந்து கண்கள் எரிய சீறி வரும் வாகனங்களாக இருந்தது.

சுசி, மரணம் என்பதை மிக அருகே உணரும்போது நம் சொற்கள் அடங்கிவிடுகின்றன. பிரமித்த எண்ணங்கள் கால்புதைந்து நின்றுவிடுகின்றன. மரணம் என்பதற்கு மிக அருகே உள்ள சொல் மௌனம். ஆனால் உண்மையில் மரணம் அவ்விரு சொற்களில் இருந்து வெகுதூரத்தில் உள்ளது. மரணத்துக்கு ஒரு சொல்லை அடையாளம் வைப்பதுபோல அபத்தம் என்ன? மரணத்துக்கு இந்தப்பிரபஞ்சத்தையே சமன் வைக்கவேண்டும்.

என் எண்ணங்களின் அராஜகம் எனக்கே அச்சமூட்டியது. ஒருவகையான ஒழுங்குக்குள்ளும் வராத எண்ணங்கள். எண்ணங்கள் என்று அவற்றைச் ஒல்வ்துகூட பிழை. வெறும் சொற்றொடர்கல். சிலசமயம் சொற்கள். ‘வலது வலது வலது’ என்று மட்டும் என் மனம் பலநூறுமுறை சொல்லிக்கோண்டது. அப்படிச் சொல்வதை உணர்ந்ததும் தலையை உலுக்கிக்கொண்டு என்ன ஆயிற்று என்று பிரமித்தேன்.’ வோட•போன்’ என்ற மின்விளக்கெழுத்துக்களைப் பார்த்தேனா? ஆனால் என் வாயில் விஒஇட•போன் என்ற சொல் இருப்பதை சற்று நேரம் கழித்து கண்டுகொண்டேன். நான் பைத்தியமாகி விட்டேனா என்ன?

இருநூறு கிலோமீட்டர் தொலைவுக்கு என் கார் விரைந்திருப்பதை பாண்டிச்சேரி புறநகரில் சிறிய பூசணிப்பூக்கள் போல எரிந்த மஞ்சள் விளக்குகளுக்கு கீழே அயர்ந்து தூங்கும் கான்கிரீட் வீடுகளைக் கண்டபோதுதான் உணர்ந்தேன். ஏன் இங்கே வந்தேன் என்று எண்ணிக் கொண்டேன். ஒருபோது இந்நகரை நான் பொருட்படுத்தியதில்லை. என்றோ ஒருமுறை எவரோ சில நண்பர்களுடன் இங்கு வந்திருக்கிறேன். இங்கே ஒரு முகம் கூட எனக்கு இல்லை. ஒரு தெருவோ வீடொ நினைவில்லை. அனிச்சையாக மனம் தேர்வுசெய்த இந்நகரம் வெறுமொரு தற்செயல்தானா? தற்செயல்களின் கொந்தளிப்பில் ஒரு கொப்புளமா?

நியான் விளக்குகள் உருகி வழிந்து கொண்டிருந்த கரிய தார்ச்சாலையில் ஒரே ஒரு தனித்த பைத்தியம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தது. விளக்குகளுக்குக் கீழே பெயர்களும் அறிவிப்புகளும் அந்த பின்னிரவில் பொருளிழந்த உளறல்கள் போல தெரிந்தன. என்னிடமிருந்தே நழுவி பின்னால் வழிந்து ஓடுவதுபோல சாலை பின்னகர்ந்துகொண்டே இருந்தது.

பின்பு ஒரு எண்ணம் என் காலை தன் கட்டுபபட்டில் எடுத்துக்கொண்டபோது பிரேக்கில் காலை வைத்து காரை  வலி முனகலுடன் நிற்கச்செய்தேன். ஸ்டீரிங்கைப் பற்றியபடி அப்படியே சில கணங்கள் அமர்ந்திருந்தேன். பின் ஆழ்ந்த பெருமூச்சுடன் உடல்தளர்ந்தேன். முதலில் பிரேக்கைஅ ழுத்திய கால் , பின் இடுப்பு, பின்பு கைகள் பின்பு தலை. பின்பு மெல்ல மெல்லமெண்ணங்கள் இறுக்கமிழந்தன. பின்பு ஆழம் தளர்ந்தது. நான் பெருமூச்சுவிட்டேன்

நான் அந்த சிறிய தங்கும் விடுதிக்கு முன் சாலையில் நிறுத்தியிருந்தேன். ”ராமநாதன் லாட்ஜ்”. சிறிய சிவப்பு குண்டு விளக்குக்கு கீழே கரிய பலகையில் வெள்ளை எழுத்துக்கள். அத்தகைய விடுதிகள் உலகில் இருப்பதையே நான் அக்கணத்துக்கு முன்

அறிந்திருக்கவில்லை. அங்கு தங்கும் மனிதர்கள் மண்ணுக்குள் வாழும் புழுக்கள் பூச்சிகள் போல என் எண்ணத்துக்கே வராத உயிர்கள்.

பிரீ·ப் கேஸை எடுத்துக்கொண்டு காரைப்பூட்டிவிட்டு அந்த விடுதி நோக்கிச் சென்றேன். தரைத்தளத்தில் ஒரு மருந்துக்கடையும் மின்பொருள் கடையும் சுருள்கதவுகள் மூடிக்கிடக்க பக்கவாடில் ஏறிச்சென்ற இடுங்கிய படிகளுக்கு மேலே வலப்பக்கம் திரும்பும் வாசலுக்கு அப்பால் விடுதியின் வரவேற்பறை இருந்தது. கம்பிக்கதவுக்கு அப்பால் சிவப்பு விளக்குக்கு கீழே தரையில் பாயில் ஒரு முதியவர் தூங்கிக் கொண்டிருந்தார். கைவைத்த பனியன்போட்டிருந்தார். வாய் திறந்திருக்க வெற்றிலைக்காவிப்பற்கள் தெரிந்தன. மூச்சு ஓர் அற்புதம்போல அது பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது.

நான் கம்பிக்கதவுகளைப் பிடித்தபடி நின்றேன். மரத்தாலான மேஜைக்கு மேல் சாவிக்கொக்கிகள் பதித்த பலகை. மேலே பெரிய பிள்ளையார் படத்தில் மின் விளக்குத்துளிகள் சுடர்ந்து அணைந்தன. அப்போது அது எனக்கு தெரியவந்தது, அங்கே நான் வந்த காரணம். அதுதான் எனக்கான இடம். நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் கட்டப்பட்டு பல்லாயிரம் மனிதர்களால் புழங்கப்பட்டு எனக்காக பொறுமையாகக் காத்திருந்தது அது.

கம்பிக்கதவைப்பற்றி ஆட்டினேன். கிழவர் விழித்தெழுந்து தலையைச் சொறிந்தபடி பொருள் மனதில் பதியாமல் என்னை பார்த்தார். ”சார் சார்” என்றேன். கிழவர் என்னை அதிர்ச்சியுடன் பார்த்து ”இன்னா சார்? இன்னா ஒணும்?” என்றார். அவரது புருவம் மிக அடர்த்தியாக நரைத்திருந்தது.

”ரூம்” என்றேன்.

”ரூம் காலி இல்லை” என்றார். என் மேலேயே அவரது கண்கள் பதிந்திருந்தன

”நான் வெளியூரு…கார் நின்னுடிச்சு…இப்ப மெக்கானிக்கைத் தேடிப்போகமுடியாது…கொஞ்சம் பாருங்க”  என்னால் அவர் மனம் ஓடும் வழியை தெளிவாகவே பார்க்கமுடிந்தது.

அவர் எழுந்து லுங்கியை இடுப்பில்செருகிக் கொண்டார். உள்ளெ அர்ணாக்கயிறு தெரிந்தது. பனியன் மேல் தெரிந்த மார்பின் நரைமுடியை சொறிந்தபடி ”சிங்கில் ரூம்தான் இருக்கு….லேடீஸ் உண்டா?”என்றார்.

”சிங்கில் போரும்…நான் மட்டும்தான்”

அவர் மேஜைக்கு அப்பால் துழாவி சாவியை எடுத்து பூட்டைத்திறந்து கிரில் கதவை தள்ளி பிளந்து என்னை உள்ளே விட்டார். ”கொஞ்சம் மூட்டையெல்லாம் உண்டு… இது சின்ன லாட்ஜ்…”

நான் ”பரவாயில்லை…விடியிற வரைத்தானே…?”என்றேன்.

”அப்ப சரி”.  பழைய பதிவேட்டை எடுத்து பிரித்து வைத்தார். நான் என் பெயரையும் விலாசத்தையும் எழுதினேன். ” •போன் எழுதுங்க சார்” செல்பேசி எண்ணை எழுதினேன். அவர் என் விலாசத்தை கூர்ந்து பர்த்தார். அதில் எதையோ கண்டுபிடிக்கப்போகிறவரைப்போல.

அவர் ஒரு விரிப்பை எடுத்துக் கொண்டார்."வாங்க...மணி மூணாச்சுல்ல?"

அறை அழுக்காக, சிறிதாக, சன்னல்கள் இல்லாததாக, இருந்தது. உள்ளே சென்றதுமே மெத்தை மட்கிய நெடியும் கக்கூஸ் நாற்றமும் கலந்து மூச்சடைக்கச் செய்தன. அவர் கூஜாவில் தண்ணிருடன் வந்து ஜன்னல் மடம்பில் வைத்துவிட்டு "அப்ப?"என்றார். நான் தலையசைத்தேன்.

கதவை மூடிக்கொண்டதும் நான்குநாட்கள் ஒவ்வொரு கணமும் என்னை அழுத்திய பாரங்கள் அனைத்தும் விலகி அந்தரங்கமானவனாக பாதுகாக்கப்பட்டவனாக நான் என்னை உணர்ந்தேன். இந்த இடம்தானா? எந்த நாவலில் தெரியவில்லை. போர்க்களம் பல்லாயிரம் தலைகளுடன் கொடிகளுடன் விரிந்து பரந்து கிடக்கிறது. ஒரு வீரன் சொல்கிறான். இந்த பரந்த வெளியில் எங்கோ நான் கடைசி மூச்சை இஅழுத்துவிடும் ஆறடிமண் இருக்கிறது என....எங்கோ ஓர் இடம் மௌனமாக மனிதர்களுக்காக காத்துக்கோண்டிருக்கிறது. எந்த நாவல்?

சப்பாத்துக்களை கழற்றிவிட்டு கட்டிலில் அமர்ந்து காலுறைகளை சுருட்டிக் கழற்றியபோது கால்கள் உணர்ந்த ஆசுவாசத்தை எனக்குள் எங்கும் அறிந்தேன். துருப்பிடித்த வாளியும் மஞ்சள்கறைபடிந்த பீங்கானும் கொண்ட கழிப்பறையில் சிறுநீர் கழித்துவிட்டு வந்து சட்டையை கழற்றினேன். பெல்ட்டை உருவி மரநாற்காலியில் வைத்தேன். என்னிடம் வேறு உடைகள் இல்லை. என் உடலில் இருந்து எழுந்த வியர்வை நெடி அந்த அறையை நிரப்பியது.

மெத்தைமீது கறைகள் கொண்ட ஜமக்காளம் போன்ற விரிப்பை விரித்து அதன் மீது படுத்துக் கொண்டேன். மல்லாந்ததுமே ஓர் நிதானம் வந்துவிடுகிறது எண்ணங்களுக்கு. மல்லாந்து படுத்துக்கொண்டு

எவரேனும் பரபரப்பாக எதையாவது சிந்திக்க முடியுமா? மெல்ல மெல்ல என் அகச்சொற்கள் அடங்கின. எண்ணங்கள் இன்றி இருந்தது மனம். சற்றுமுன்புவரை மழைப்பெருக்குபோல பொருளில்லா சொர்கள் ஓடிய தடம் எத்வும் என் மனதில் இல்லை. காற்று பரவும் மென்மணல்வெளி போல அத்தனை மென்மையாக அந்த்தனை நுண்மையாக அது நிகழ்ந்துகோண்டிருந்தது.

மேலே சுழன்ற கறைபடிந்த பழைய மின்விசிறியையே நோக்கிக் கொண்டிருந்தேன். அத்தனை கூர்மையாக நான் என்றுமே என் மனதைக் கவனித்ததில்லை என்பதை உணர்ந்தேன். நாவல்களில் மனதை சித்தரிக்கும் இடங்களைக்கூட பக்கங்களைப் புரட்டி தாண்டிச்சென்றுவிடுவேன். நிகழ்ச்சிகள் மட்டுமே முக்கியமானவையாகப் படும். ஆனால் அப்போது மனம் தவிர எதுவுமே பொருட்டல்ல என்று பட்டது. மனதை கூர்ந்து கவனிக்கும்போதுதான் எத்தனை பயங்கரமான துணை அது என்று தெரிகிறது. விக்ரமாதியன் தோளில் ஏறிய வேதாளம் போல.

ஆம், இது தான். இந்த இடம்தான். அச்சொற்களையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கோண்டேன். என்ந்த முகமும் நினைவில் எழவில்லை. எந்த ஊரும் உள்ளே விரியவில்லை. என்னை யாரோ பார்த்துக்க்கொண்டிருப்பதுபோல ஒரு பிரமை. மைக அன்னியமான யாரோ. ஆனால் என்னை அவருக்கு நன்றாகத் தெரியும். மிக நெருங்கி நின்று இருளுக்குள் பார்த்துக்கொண்டிருந்தார்…

எழுந்து என் சாவிக்கொத்தை எடுத்தேன். அதில் இருந்த சிறிய ஜப்பானியக் கத்தியைப்பற்றி நான் ஏற்கனவே எண்ணியிருந்ததை அப்போது உணர்ந்தேன்.  என் ஆழ்மனதால் எல்லாமே துல்லியமாக முன்கூட்டி திட்டமிட்டது போலிருந்தது. கத்தியின் முனையை கூர்ந்து நோக்கினேன். சற்றே வளைந்த மிகக் கூரிய கத்தி. அதன் உலோகப்பளபளப்பில் ஒரு சிறிய புன்னகை இருந்தது. இருளுக்குள்

அந்தக் கத்தியின் பிளேடு விசித்திரமான மலரிதழ் போல ஒளியுடன் இருந்தது.

அந்தக் கத்தியால் நுட்பமாக, கவனமாக நகங்களை வெட்டினேன். பத்துவிரல்களுக்கும் கால்விரல்களுக்கும் நகம் வெட்டினேன். அப்போது ஏனோ நான் புன்னகைசெய்துகோண்டிருந்தேன். தான் செய்யப்போவதை எவருமே ஊகிக்க முடியாதென எண்ணி ஒரு சிறுவன் கொள்ளும் கள்ளச்சிரிப்பு அது. வெட்டிமுடித்த கால் நகங்களை கையால் மெல்ல வருடியபின் அவற்றைச் சுரண்டிச் சுரண்டி மென்மையாக்கினேன்.

தூரத்தில் எங்கோ கடிகாரம் டிங் என்றது. சரி என்பது போல. அதற்கு அடிபணிபவன் போல கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டேன். என் இடதுகைமணிக்கட்டை இறுகப்பற்றி நீல நரம்புகளைப் பார்த்தேன். அதில் கத்தியை வைத்தேன். குளிரின் ஒரு சிறு கீற்று என் சருமத்தைத் தொடுவதுபோலிருந்தது. பற்களைக் கடித்து கண்களை மூடி ஒரே இழுப்பாக இழுத்தேன். சிறிய எரிச்சல். ரத்தம் சூடாக வழிந்து விரல்களை மூடி சொட்டியது. மறுகையால் விளக்கை அணைத்தேன்

இருளில் ரத்தம் சொட்டும் ஒலியைக்கூட என்னால் கேட்க முடிந்தது. ஒருவேளை பிரமையாக இருக்கலாம். மெல்லிய முத்தத்தின் ஒலிகள் போல. இல்லை ஒரு சிறுபறவை இருட்டுக்குள் மெல்ல நடப்பது போல. அல்லது ஒரு கடிகாரத்தின் டிக் டிக் டிக். ரத்தம் இருட்டுக்குள் நிறமற்று இருந்தது. அல்லது அதன் நிறம் இப்போது கருமையா? நல்ல வீச்சம் அதற்கு. உப்பு கலந்த வீச்சம். அதை வாயில் வைக்க வேண்டும் போலிருந்தது. ரத்தம் ஒரு வகையான நெருப்பு. மனிதனுக்குள் அது எந்நேரமும் தழல் விட்டு எரிகிறது. இப்போது என்னுள் எரிந்த தழல் மெல்லமெல்ல அணைந்துகொண்டிருக்கிறது

அந்தச் சொட்டுகள் வழியாக காலம் நகர்ந்தது. என்னுள் இருந்து எல்லா சக்திகளும் வழிந்து சென்றன. என் பதற்றத்தின் சிறகடிப்பு என் துயரத்தின் எடை எல்லாம் வெளியேறின. சுசி, அந்தக் கணத்தில் கண்ணாடிக்கதவுகளில் அலைபாயும் பிம்பங்களாக வந்து வந்து வந்து என்னருகே திரண்டு ஒன்றாகி பெண்ணென நின்றாய் நீ. உன் செவ்விதழ்கள் மெல்லக்குவிந்து ‘அருண்’ என்றன. மெல்ல, பனியிருகிவிழும் குளிர்த்துளியாக…. உன்னால் மட்டுமே என்னை அப்படி அழைக்கமுடியும் சுசி.

[2]

பூக்கள் எப்போது எப்படி மலர்கின்றன என்று எண்ணி வியக்காத குழந்தைப்பருவம் ஒன்று உண்டா சுசி ? இன்று என் மீது படர்கிறது நீ விடிகாலையில் என் பிம்பம் தெரிந்த கண்ணாடிக்கதவைத்திறந்து நீரிலிருந்து எழும் பொன்மீன் போல வெளிவந்து மெல்ல விழிவிரிந்து புன்னகைசெய்து ”அருண்?”என்ற அந்தக் தருணம்.

”யா”என்றேன்.

”ஐ கெஸ்டு…” என்றாய்.

நான் உன் மீதிருந்து கண்களை எடுக்கமுடியாமல் ”வெல்கம் டு சென்னை…”என்றேன். என்குரலையே வேறாகக்கேட்டேன்.

”தேங்க் யூ” என்று என்னருகே வந்து ”லக்கேஜ்லாம் வர லேட்டாகுமா?”என்றாய். பட்டுபோல பளபளத்த இறுக்கமான நீலநிறப் பாண்டும் மார்புகள் திமிறும் வெண்ணிற டி ஷர்ட்டும் அணிந்து குட்டிக்குதிரை போல என்முன் நின்றாய். கலைந்த குட்டைக் கூந்தல். சிறிய் பற்கள் தெரியும் சிரிப்பு. சுசி, அக்கனம் உன்னை நான் ஆரத்தழுவ எண்ணினேன். கன்றுக்குட்டியை, அம்மணக்குழந்தையை மார்பொடு அள்ள

எண்ணும் விழைவு போல. துள்ளியோடும் நீரோடையில் இறங்கி நீரள்ளி முகம் கழுவும் துடிப்பு போல.

”இங்கே எல்லாம் கொஞ்சம் லேட்டாகும்” என்றேன். ”பாதிவிஷயம் இப்பவும் மேனுவலாத்தானே நடந்திட்டிருக்கு…”

”அருண் நான் ஒரு ஐஸ்கிரீம் சாப்பிடணுமே”

நான் ஆச்சரியத்துடன் ”ஏன்?”என்றேன்.

”நான் •ப்ளைட்ல  ஐஸ்கிரீமே சாப்பிடல்லை தெரியுமா? ஐஸ்கிரீம் கேட்டா கேண்டிதான் கொண்டாந்து குடுத்தா அந்த வெள்ளைகாரி....அவளும் அவ உருளைக்கெழங்கு மூஞ்சியும்....ஐ வாண்ட் ஐஸ்கிரீம் நவ்”

”சரி...வா”என்று அழைத்துச்சென்றேன்.

தலையை சிலுப்பி ஒரு ஸ்பிரிங்கை எடுத்து நெற்றிவழியாக போட்டு முடியை அடக்கியபின் ”யூ நோ, நான் மூணுநாள் ஐஸ்க்ரீம் சாப்பிடாம இருந்ததே கெடையாது”  என்றாய்.

”ஏன்?”

”ஏன்–னா?” என்றாய் புரியாமல்.

”இல்ல, ஐஸ்கிரீம் சாப்பிடாட்டி உனக்கு ஒடம்புக்கு ஏதாவது ஆயிடுமா?”

”இல்லியே....”என்றாய, நான் கேட்டதொனியை சற்றும் புரிந்துகொள்ளாமல். பெரும்பாலான கிண்டல்களை நீ

புரிந்துகொள்வதேயில்லை என்று பின்பு தெரிந்துகொண்டேன். சுசி, ஆணுக்கும் பெண்ணுக்குமான அந்த வேறுபாடு அப்போது எனக்குப்புரியவில்லை– அவர்கள்  சிரிப்பது வெவ்வேறு விஷயங்களுக்காக என்று.

”ரெண்டு ஐஸ்கிரீமுக்கு மேலே போனாத்தான் சளிபுடிக்கும்…”என்றாய்

கடையருகே சென்றதும் உன்னிடம் ”என்ன ஐஸ்கிரீம்?” என்றேன்

”வனிலாதான்…ஐஸ்கிரீம்னாலே வனிலாதான். மிச்சமெல்லாம் சும்மா”

நான் உனக்கு ஐஸ்கிரீமை வாங்கிக் கொடுத்தேன்.

”உனக்கு அருண்?”

”எனக்கு பிடிக்காது”

”வை?”என்றாய் கண்கள் விரிய. ”வை?”

”பிடிக்காது, அவ்ளவுதான்…”

”ஓ நோ…”என்று சொல்லி தலையாட்டிவிட்டு
நக்கிவிட்டு ”சின்னவயசிலே கூட சாப்பிடமாட்டாயா?”

”ரொம்ப சாப்பிடுவேன்...அப்றம் ஒரு மாதிரி இருந்திச்சு”

”எப்டி?”

”நக்கியெல்லாம் சாப்பிடுறது...சின்னப்பிள்ள மாதிரி...”

”அதுசரி... யூ பிகம் மேன்லி....” தலையை சிலுப்பி சிரித்தாய்

நான் உன் சிறிய உதடுகள் ஐஸ்கிரீமைச் சுவைப்பதை , சட்டென்று சிவந்த நாக்கு அந்தரங்கமாக வந்து மேலுதட்டை வருடிச்செல்வதை பார்த்தவாறிருந்தேன்.”யூ ஆர் ஸ்டேரிங் மி” என்றாய்.

கண்களை தழைத்து ”ஐ யம் ஸாரி” என்றேன்.

”இட் இஸ் ஓக்கே...”என்று நக்கியபின் ”இந்தியாவிலே ஆண்கள் எல்லாருமே நேரா பிரெஸ்டைத்தான் பாக்கிறாங்க. அப்றம் நாம கவனிச்சதுமே கண்களை திருப்பிக்கிறாங்க. அப்றம்கூட கள்ளத்தனமா பாத்துட்டே இருக்கிறாங்க... யூ பீப்பிள் ஆர் ஸோ அப்ஸெஸ்ட் வித் பிரஸ்ட்ஸ்...” என்றாய்.

”ஸ்டுப்பிட்” என்றேன் கோபத்துடன்

”இல்லை நான் கண்டுபிடிச்சாச்சு..இந்தியாவிலே எல்லாருக்கும்

பெண்களோட மார்புகள்தான் ரொம்ப புடிச்சிருக்கு…ஐ நோ”

”சும்மா வரியா..ஸில்லி”

”ஏன் கோவிச்சுக்கிறே?”

”இந்தியாவிலே இப்டியெல்லாம் பேசமாட்டாங்க?

”வை?”

நான் பேசாமல் வேறுபக்கம் பார்த்தேன்.

ஐஸ்கிரீமை சாப்பிட்டு முடித்து கப்பை மேலே தூக்கிப்போட்டு இன்னொரு கையால் அடித்து குறிபார்த்து குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு ஹை! என்று கைகொட்டி குதித்துச் சிரித்தாய்.

உன் இளமார்புகள் குலுங்குவதைப் பார்த்தேன். நீ கண்கள் என் கண்களைச் சந்தித்தன.

நான் முறைப்புடன் ”கமான்”என்றேன். ”லக்கேஜ் வந்திருக்கும்” என்று முன்னால் நடந்தேன்

பின்னால் வந்தபடி ”அருண்…நான் ஒண்ணு சொல்லட்டுமா?”

”சொல்லு”

”நீ இப்ப என் பிரஸ்டைப் பார்த்தேல்ல?”

நான் மூச்சுத்திணறினேன்

”பாக்கணும்னா பார்த்துக்கோ... ஏன் வெக்கப்பட்டு கண்ணை திருப்பிக்கிறே? தேட் வாஸ் நாட் மேன்லி”

நான் கடும் கோபத்துடன் ”நான் ஒண்ணும் பாக்கல்லை”என்றேன்

”பார்த்தே...நான் பாத்தேனே”

”ஸில்லி...ஸ்டுப்பிட்” என்று சீறிவிட்டு நான் முன்னால் ஓடினேன். நீ பின்னால் வந்தாய்

நான்கு பெட்டிகள் மட்டும் சுழல்பாதையில் ஒன்றை ஒன்று பின்தொடர்ந்தன. இரண்டு வெள்ளையர்களும் ஒரு வயதான அம்மாவும் அருகே நின்று பெட்டிகளை எடுத்தார்கள். வயதான அம்மாவால் பெட்டிகளை எடுக்க முடியவில்லை. ஆனால் அவரே எடுக்க விரும்பினாரென்று தெரிந்தது.

”அந்த ரெட் சூட்கேஸ்...”என்றாய் கைநீட்டி, குதித்தபடி.

சிறியபெட்டிதான். அதை நான் தூக்கி வைத்தேன்

‘ஐ யம் ஸாரி” என்றாய்

”தள்ளிப்போ”என்றேன்

அதை சக்கரவண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு சென்றபோது நீ பின்னால் வந்தாய்

”அருண், ஸாரி”

நான் ஒன்றும் சொல்லவில்லை. பெட்டியை வெளியே கொண்டுசென்று காரை நோக்கிச்சென்றேன்.

”அருண்  நீ ரொம்ப மேன்லியா இருக்கே… ஓரக்கண்ணால பாக்கிறப்ப மட்டும் அப்டி இல்ல .அதான் சொன்னேன்…”

”சரி நான் இப்ப என்ன பண்ணணும்?”

”சூட்கேஸை காரில வை.. ஏன்?”

”இல்ல. உன் பிரஸ்டைப் பாக்கட்டுமா?”

”ஓகே....இ•ப் யூ வாண்ட்”

நான் அவளை நேரடியாகப்பார்த்தேன். நீ என் கண்களைப் பார்த்து சட்டென்று சிரிப்பை அடக்கமாட்டாமல் சிரித்துக் குலுங்கினாய் .”ஓகே ஓக்கே யூ ஆர் மேன்லி...ஐ அக்ரீட்”

நானும் சிரித்துவிட்டேன். ”கமின்”

”இந்தக்கார் ஜப்பான் மேடா?”

”இல்லியே. இந்தியாதான்”என்றபின் சிந்தித்து ”யெஸ், சரியாச்சொன்னா ஜப்பான் தான்.மாருதி சுஸ¤க்கி... கொலாபரேஷன்...”

”க்யூட்டா இருக்கு...இந்தியாவிலே அம்பாசிடர் கார்மட்டும்தான் உண்டு, கனமா நீளமா இருக்கும்னு டேட் சொன்னார்”

”அது அவரு சின்னப்பையனா இருக்கிறப்ப...இப்ப இங்க தெருவிலே பி.எம்.டபிள்யூ, •பெராரி எல்லாமே ஓடுது”

கார் சீறி சாலையில் சென்றது.

”ரோடெல்லாம்கூட பெரிசாத்தான் இருக்கு”

”உன்னை ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டுக்கு கூட்டிட்டு போறேன்...இந்தியாவைப்பத்தி உங்க அப்பா சொன்னதை மறந்திருவே...”

”எங்கப்பா உன்னோட மாமா...”

”ஆமா...ஆனா நான் அவரை நேரில மாமான்னு கூப்பிட்ட ஞாபகமே இல்லை...”

”யா... டேட்  லண்டனுக்கு ரொம்ப அடாப்ட் ஆயிட்டார்....அங்கதான் அவரால நிம்மதியா இருக்க முடியுது...”

”அம்மாதான் எப்ப பார்த்தாலும் அண்ணா அண்ணான்னு சொல்லிட்டே இருக்கா”

”அத்தை எப்டி இருக்காங்க?

”ஷி இஸ் நைஸ்...”

”இப்ப வேல பாக்கிறாங்களா?”

”போன வருஷம் ரிட்டயர் ஆயிட்டாங்க”

காரை நோக்கி வந்த பூத்த கொன்றை மரங்களைப்பார்த்துக் கொண்டிருந்தேன். சாலையே பூத்திருப்பது போலிருந்தது. புதிய வெயிலில் நீராடிய பெருநகரம் என்னை நோக்கி பெருகி வந்தது. ஸ்டீரிங்கில் கை இருக்கும்போது எனக்கு ஏற்படும் தன்னம்பிக்கை என்னை ஆட்கொண்டது. இசையை போட்டேன். மெல்ல தாளமிட்டபடி வேகத்தைப் பெருக்கினேன்.

”இப்ப நீ சொன்னியே ஐ கெஸ்ட் அப்டீன்னு…என்ன ஊகிச்சே?”

”நீதான்னு”

”எப்டி?”

”ம்ம்…பூனைமீசை… புகைபடிஞ்சதுமாதிரி தாடி…சிவப்பா உதடு, லேசா கலைஞ்ச தலை..ஓவல் மொகம்…நான் உன் ·போட்டோவையே பாத்திட்டேனே…”

”அம்மா அனுப்பினாங்களா?”

”ஆமா…நீதான் எங்க கிட்ட சேட்லயே வரதில்லியே…”

”நான்கூட உன்னை ·போட்டோவிலே பாத்ததுதான்…”

”யூ ஆர் மேன்லி, யூ நோ”

நான் புன்னகையுடன் ”தேங்க் யூ” என்றேன். ”அது இப்ப உன் பிரஸ்டைப் பார்த்தேன்ல அதிலேருந்துதான்....”

நீ ”யூ”என்று என் கையை அடித்தாய்.

நான் அக்ஸிலேட்டரை மிதித்தேன். கார் நூற்றுப்பத்து கிலோமீட்டர் வேகத்தில் பீரிட்டது. இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தடுமாறின.

நீ , ” அருண்...ரொம்ப ரேஷா ஓட்றே...இந்த ரோட்ல இந்த ஸ்பீட் ரொம்ப ஜாஸ்தி...”என்றாய்

”ஸ்பீடு மனசிலேதான் இருக்கு....தெரியும்ல?” என்றேன். எதிரே வந்த லாரிக்கு வழிவிட்டு திருப்பியபோது கார் அலைபாய நீ என்மீது சாய்ந்தாய்.

”இப்ப நான் பாக்க வேண்டியதில்லை”என்றேன்” •பீல் பண்ண முடியுது”

”எதை?”என்ற பின்பு ஊகித்து ”யூ நாட்டி”என்று என் கையை அறைந்தாய்

நான் உரக்கச்சிரித்தேன்.

அம்மா வாசலுக்கே ஓடிவந்து வரவேற்றாள். சுசி  நீ காரை விட்டிறங்கி

ஓடிப்போய் அம்மாவை கட்டிப்பிடித்து சுற்றி தூக்கி கூவிச்சிரித்த காட்சியை இப்போதும் காண்கிறேன். புதிய காலகட்டத்தின் ஓர் அலை வந்து அம்மாவை அடித்து சுழற்றியது போல அந்தக்காட்சி.  ”அய்யோடி விடு விடுடீ…விழுந்திருவேண்டீ”என்று அம்மா சந்தோஷமாகக் கூவினாள்.

நான் காரை பூட்டிவிட்டு இறங்கி வந்தேன். சீ அம்மாவை மாறி மாறி முத்தமிட்டாய். ”அருண் யூ நோ அத்தை எவ்ளவு அழகா இருக்காங்க தெரியுமா?”

நான் திடுக்கிட்டு ”அப்டியா?” என்றேன்.

”போடா”என்றாள் அம்மா சிரித்தபடி கையை ஓங்கினாள்.

”ஷி லுக்ஸ் ஸோ யங் யூ நோ”

”உள்ள வாடீ”என்றாய் அம்மா. நான் டிக்கியிலிருந்து பெட்டியை எடுத்துக்கொண்டு  பின்னால் சென்றேன்

”என்னடி ஒரே பெட்டிதானா?”

”எதுக்கு பெரிய பெட்டி? டிரெஸ்லாம் வேணுமானா இங்கேயே வாங்கிக்கலாமே…” என்றாய் ”ஆண்ட் ஐ ஹேட் யூரோப்யன் காஸ்ட்யூம்ஸ்…”

”அது சரிதான், காலையும் கையையும் வெளிய காட்டிட்டு...பையன்க போடுறது மாதிரி நல்லாவா இருக்கு....உள்ள வாடி”

அவர்கள் உள்ளே சென்றதைப் பார்த்துவிட்டு நான் என் அறைக்குச் சென்று சட்டையைக் கழற்றினேன். கண்ணாடியில் தெரிந்த என்னைப் பார்த்து புன்னகைசெய்தேன்.

லுங்கிக்கு மாறி டி ஷர்ட் போட்டுக்கொண்டு சமையலறைக்குச் சென்றேன். சமயலறையில் அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டு நீ செல்லம் கொஞ்சிபேசிக்கொண்டிருக்க அம்மா உன் தலையை அளைந்தபடி கேட்டுக்கொண்டிருந்தாள்.

நீ என் காலடி ஓசைகேட்டு எழுந்து அமர்ந்து சிரித்தாய்.

”என்னடா?” என்றாய் அம்மா.

”ஒண்ணுமில்ல... டிபன் ஏதாவது உண்டா, இல்ல ஓட்டலுக்குப் போகணுமா?”

”போகணுமானா போ...தோசை மாவு இருக்கு ஊத்தித்தர எவ்வளவுநேரம்?”

”அத்தை, நான் தோசை சுடவா?”

”வேண்டாண்டி கண்ணு...நீ என்ன கண்டே தோசையும் இட்லியும்...”

”நல்ல கதை....அத்தை எங்கப்பா லண்டன்ல சைவ ஓட்டல் வச்சிருக்கார்னு ஞாபகம் இருக்கா இல்லியா? நான் சுடாத தோசையா? நான் வெங்காயச் சட்னி அரைச்சா எங்கப்பாவே நாக்கை சுழட்டிகிட்டு பின்னால வருவார்” நீ எழுந்து ”எங்க கிச்சன்?”என்றபடி உள்ளே சென்றாய்.

”உங்கப்பனாடி சமைக்கிறது?” என்று ஆச்சரியமாகக் கேட்டபடி அம்மா பின்னால் சென்றாள்.

”அப்பாவும் சமைப்பார். கணேசய்யரும் சமைப்பார்.நானும் டைம் கெடைச்சா சமைப்பேன்...”

”பெரிய ஓட்டல்னு நெனைச்சேன்...”

”இல்ல அத்தை. சின்ன ஓட்டல்தான். ஸ்பெஷாலிட்டி ஓட்டல்னு சொல்லுவாங்க....இந்தமாதிரி ஜப்பானீஸ் சயாமீஸ் ஓட்டல்லாம்கூட நெறைய இருக்கு அங்க... மாவு எங்க இருக்கு? ”

”•ப்ரிட்ஜிலடீ...இரு நான் எடுத்து தரேன்....” அம்மா உள்ளே சென்று ”உங்கப்பன் பெரிய கார் பங்களால்லாம் வச்சிருக்கான். ஊருக்குவந்தா நம்மவீட்டுல வசதி பத்தாதுன்னு ஸ்டார் ஓட்டலில தங்கறான்?”என்றாள்.

”ஏன் சின்ன ஓட்டல் வச்சா அவ்ளவு சம்பாதிக்க முடியாதா? லண்டன்ல ஸ்பெஷாலிட்டி ஓட்டலிலேதான் அத்தை நெறைய லாபம்....

மாவை •பிரிட்ஜில வைக்கவே பிடாது....டேஸ்ட் சேஞ்ச் ஆயிடும்... நாங்க எல்லவுமே •பிரெஷ் மாவுதான்...”

அவர்கள் பேசியபடியே சமைப்பதை டைனிங் டேபிளில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது நீ லண்டனில் பிறந்துவளர்ந்தவள் போல தோன்றவில்லை. பட்டிக்காட்டுச் செல்லப்பெண் போலவே இருந்தது உன் தலையாட்டலும் செல்லமான உதட்டுச் சுழிப்பும். அம்மா ஏதோ சொல்ல நீ வெட்கப்பட்டு உதட்டைக் கடிக்கிறாய். அய்யோ என்கிறாய். உன் உடல் வழியாக ஒவ்வொரு கணமும் புத்தம் புதிதான பேரழகுடன் நிகழ்ந்துகொண்டிருந்தாய். ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு பெண்ணை உன் உடலில் கண்டபடி கண்கள் மட்டுமே நானாக பிரமித்து அமர்ந்திருந்தேன். சுசி, எத்தனை நூறு அழகுபாவனைகளின் தொகுப்பு பெண்!

”என்னடா முழிச்சிட்டிருக்கே?”என்றபடி அம்மா வந்து என் அருகே அமர்ந்தாள்.

”ஒண்ணுமில்லியே” என்று சுதாரித்தேன்

”எவ்ளவு தங்கமான பொண்ணு இல்ல? துருதுருன்னு இருக்கா...ஒரு பாசாங்கு கெடையாது...”

நான் புன்னகைத்தேன்

”இப்ப வாயப்பொளந்து பாத்துட்டே இருக்கல்ல.... லண்டன்லேருந்து வரா, கூட்டிட்டுவாடான்னு சொன்னப்ப ஒரேயடியா குதிச்சே....அவ மூஞ்சியப்பாத்தா முஞ்சூறு மாதிரி இருக்குன்னு சொன்னே...”

நான் சற்றே வெட்கிச்சிரித்து ”இல்லம்மா…இப்டி வளந்திருப்பான்னு நெனைக்கல்லை” என்றேன்.

”பொம்பிளைபுள்ளை வளர்ச்சியே அப்டித்தானே” குரலைத்தாழ்த்தி ” அவ அப்பன் அங்க ஒரு வெள்ளைக்காரிய வச்சிருக்கானாம் . இப்ப சொல்றா” என்றாய்

”நிஜம்மாவா?”

”முன்னாடியே அவன் அப்டித்தானாமே. பாவம் ராஜி, மனசு நொந்துதான் போயிச்சேந்திருப்பா… என்ன சொல்றது.. அம்மா பேரைச் சொன்னாலே இப்பகூட அப்டியே கண்ணில தண்ணி வந்திருதுடா இவளுக்கு…பாவம்….அனாதைப்பொண்ணா இதுவரை வளந்திருக்கா. இனிமே அவளை நான் லண்டனுக்கு விடப்போறதில்லை….அண்ணா என்ன சொன்னாலும் சரி…”

”சொத்தை தரமாட்டேன்னு சொல்லிட்டா?”

”நல்லாருக்கே…சொத்துக்காகவா யோசிப்பாங்க?” அம்மா என் கண்களைச் சந்தித்து ”…சொத்தைப்பத்தி நான் யோசிச்சேன்…இல்லேன்னு சொல்லல்லை. ஆனா இப்ப இவதாண்டா பெரிய சொத்துன்னு தோணுது… தேவதை மாதிரில்ல இருக்கா…”

”அத்தை, தோசை..”என்றாய் உள்ளே.

தோசை மிக அற்புதமாக இருந்தது. மென்மையும் முறுகலும் சரியான விகிதத்தில் அமைந்து பொன்னிறமாக. நான் பிய்த்து தின்றேன்.

”எப்டிரா இருக்கு?”

”ம்ம்” என்றேன்

”வாயத்தெறந்து சொல்லாதே…நல்லாத்தான் இருக்கும். மணமே தூக்குதே”என்றாள் அம்மா.

வாசலில் ஸ்கூட்டர் வந்து நிற்கும் ஒலியைக் கேட்டேன். என் மனம் திடுக்கிட்டு படபடவென்றது. எஞ்சிய தோசையை பிய்த்து வாயில் போட்டுக்கொண்டு எழுந்தேன்.

”உக்காந்து இன்னொரு தோசை சாப்பிடுடா”

”போரும்” என்று கை கழுவினேன்.

”அவ வந்தாலே இப்டித்தான்…போய் ஒளிஞ்சுக்குவான்…என்ன வெக்கமோ”

சந்திரா கையில் ஹெல்மெட்டுடன் கறுப்புக்கண்ணாடி அணிந்தவளாக உள்ளே வந்து செருப்பைக் கழற்றியபடி ”என்ன ஜி.எஸ் மருமக வந்திட்டாளா?” என்றாள்.

”வாடி...இன்னைக்கு என்ன காலேஜ் போகலியா?”

”லீவு....கொஞ்சம் வீட்டுவேலை இருந்தது...மத்தியான்னம் படுத்து ஒரு தூக்கம் வேற போடணும்...”என்றபடி ஹெல்மெட்டை டீபாயில் வைத்துவிட்டு கண்ணாடியைக் கழற்றினாள். அதையும் டீபாயில் வைத்துவிட்டு நடந்து வந்தபோது அவள் கண்கள் என் கண்களைச் சந்தித்தன. நான் பார்வையை விலக்கிக் கொண்டு என் அறை நோக்கி நடந்தேன்.

”அருண் என்ன ஒரே ஜாலியா இருக்கானா? மொறைப்பொண்ணுல்ல வந்திருக்கா?” என்றாள் சந்திரா

”ஆமா, இருக்கான்... எண்ணையக்குடிச்ச எருமைமாதிரி மூஞ்சிய வச்சுட்டு... உக்காருடீ”என்றாய் அம்மா

உள்ளிருந்து நீ வந்தாய். சந்திராவின் கண்கள் உன்னை அளவிடுவதை நான் நிலைக்கண்ணாடியில் கண்டேன்.

”இது சந்திரா...என் காலேஜ்லதான் வேலபாக்கிறா. என்னைவிட பதிமூணுவருஷம் ஜூனியர். ஆனா இவதான் எனக்கு ஒரே •ப்ரண்டு...” என்றாய் அம்மா

”ஹாய் ஆன்டி”

”ஹாய்! யூ லுக்ஸ் வெரி க்யூட்”

”அதை நான் சொல்லணும்...நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க...நெஜம்மா...அத்தை அவங்களோட ‧ப்ரண்டுன்னு உங்களைப்பத்தி சொன்னப்ப ஆச்சரியமா இருந்தது...இப்ப உங்களுக்கு என்ன வயசாச்சு?”

”முப்பத்தொன்பது...”என்றாள் சந்திரா சிரித்தபடி

”வேணும்னெ வயசைக் கூட்டிக்காட்டணும்னு கண்ணாடி போட்டு கொண்டை வச்சுக்கறா...இல்லேன்னா இருபத்தெட்டுன்னுதான் சொல்லுவாங்க...எங்க ரெண்டுபேருக்கும் காலேஜ்ல அப்டி ஒரு ஒத்துமை தெரியுமா...இவ இங்க்லீஷ் லிடரேச்சர் நான் காமர்ஸ்...போரும்னு நான்  அம்பது வயசிலேயே விஆரெஸ் குடுத்துட்டேன்... இவதான் இப்ப டிபார்ட்மெண்ட் ஹெட். புரபஸர் சந்திரகலான்னு சொல்லி அறிமுகம் செஞ்சு வச்சிருக்கணும்...” என்றாய் அம்மா.

”நான்கூட லிடரேச்சர் ஸ்டுடெண்ட்தான் ஆன்டி”

”அப்டியா? இங்க ஸிலபஸ் ரொம்ப ஈஸி...”

”இவளை இங்கியே சேத்துடலாம்னுகூட தோணுது சந்திரா”

”ஜி எஸ்னா என்ன ஆன்டி?”

”ஜி.சிவகாமி…அக்காவோட பேரு அதான் காலேஜ்ல…அப்டியே வாய்ல நெலைச்சுப்போச்சு. அக்கான்னு கூப்பிடலாம்…வராது”

நான் கண்ணாடியில் அவர்களைப் பார்த்தபடி விலகிச் சென்றேன். அறைக்கு திரும்பும்போது என் கண்களை சந்திராவின் கண்கள் கண்ணாடியில் வந்து சந்தித்து மீண்டன.

நான் என் அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தேன். மேலே ஓடும் மின்விசிறியையே பார்த்துக் கொண்டிருந்தேன். வெளியே சிரிப்பொலிகள். பேச்சுகள். ஓயாத பேச்சுகள்.

எழுந்து ஒரு புத்தகத்தை எடுத்து பிரித்து வைத்துக் கொண்டேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. நான் எதையுமே வாசிக்கவில்லை. என் மனம் எதை நினைத்துக்கொனிருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நிழலாட்டம் கண்டதுமே தெரிந்துவிட்டது. நான் தலையை திருப்பவில்லை. என் உடலே கண்ணாகவும் காதாகவும் மாறிவிட்டது.

”பொண்ணு ரொம்ப அழகா இருக்காடா ”என்றாய் சந்திரா.

நான் மெல்ல சிலிர்த்தேன்.

”இவ்ளவு அழகா இருப்பான்னு நான் நெனைக்கவேயில்லைடா…

அக்காதான் சொல்லிட்டே இருந்தா…நைஸ்”

”ம்” என்றேன்.

”முதல் பார்வையிலேயே அப்டியே சொக்கிப்போயிட்டே போலிருக்கு ?”

நான் திரும்பி ”அதெல்லாம் ஒண்ணுமில்லை”என்றேன். அவள் கண்களைச் சந்தித்து மீண்டேன். அக்கணத்தின் அவள் முகத்தை மறுகணமே என் மனதுக்குள் இன்னும் துல்லியமாகக் கண்டேன். என் அகம் மெல்லிய அச்சத்தால் விரைப்படைந்தது.

”பேசாதே…உன் மூஞ்சியப்பாத்தாலே தெரியுதே…”

”சும்மா ஏதாவது சொல்லாதே…அவ ஒரு பாவம் பொண்ணு”

”மத்தியான்னம் வர்ரியா?” என்று என் கண்களை கூர்ந்து பார்த்தாள். அக்கேள்வியில் அவள் குரல் கனத்ததாக ஆகியது. அப்போது அவளில் இன்னொருவர் குடியேறுவது போல…அந்த இன்னொருவரை நான் நன்றாக அறிவேன். நான் மெல்ல தலையசைத்தேன்.

”எப்டி இருக்கான்னு பாத்துட்டு போகலாம்னுதான் லீவுபோட்டேன்… அதோட ஒரே தலைவலி. நேத்து நைட் சுத்தமா தூங்கவேயில்லை தெரியுமா?”

”ஏன்?”

சுசி, சொல்லத்தெரியாத நுண்கணங்களில் மட்டுமே நாம் நமக்குள்ளும் வெளியிலும் இருப்பனவற்றை அறிகிறோம். தீச்சுடும் கணங்கள். முள்முனையில் யானை அமரும் கணங்கள். பெருவெளி சுழன்று புளியாகும் கருந்துளைக்கணங்கள்..சுசி...சுசி...நீ என்சொற்களை எப்படிப்புரிந்துகொள்வாய்...?

அக்கணத்தில் நீ கதவருகே வந்து சாய்ந்து நின்றாய் .”ஆண்டி....டு யூ வான்ட் சம்திங் டு ஈட்?” என்றாய் நீ.

”நீயே பண்ணினியா?”என்றாள் சந்திரா

”யா”

”நெய்யோ எண்ணையோ இனிப்போ இல்லேன்னா சாப்பிடுறேன் ”

”யூ ஆர் டூ டயட் கான்ஷியஸ்...” என்று சிரித்தாள் ”இதிலே அதெல்லாம் இல்லை” சுசி, நீ வேறெங்கோ இருந்தாய். சஞ்சலங்கள் எதுவுமே வந்து தீண்டமுடியாத அதிதூய வெளி ஒன்றில்....சுசி,நான் இங்கிருந்து தப்பி ஓடி அங்கே உன்னிடம் வந்துஅடைக்கலம் தேட விரும்பினேன் அப்போது...

தட்டிலிருந்து ஆவிபறந்த அப்பத்தை எடுத்தபடி சந்திரா ”’உனக்கு ஒரு சின்ன கி•ப்ட் வாங்கிட்டு வந்தேன் சுசி” என்றாள்

”அய்யோ…எங்க அது?”

”கமான்…காட்டுறேன். என்னை ஆன்டின்னு
அழைக்கவேண்டாம்..சந்திரான்னே கூப்பிடு”

நான் எழுந்து வெளியே சென்றேன். ஒரு வார இதழை எடுத்தபடி
கவனித்தேன்.

சந்திரா கொடுத்த பொட்டலத்தை நீ உடனே பிரிக்க ஆரம்பித்தாய்.
உள்ளே ஒரு சுடிதார்.

”மை குட்னெஸ்….ஆன்டி — ஐ யம் ஸாரி– நிஜம்மாவே நான் சுடிதார்
வாங்கணும்னு நெனைச்சிட்டிருந்தேன்…ஐ ஜஸ்ட் லைக் திஸ்
டிரெஸ்…வாவ்…”

”டைம் கிடைக்கிறப்ப வீட்டுக்கு வா… ”என்னை நோக்கி திரும்பி ”அருண்
கூட்டிட்டு வருவான்”என்றாள் சந்திரா .என்னிடம் ” என்னடா?” என்று
செல்லமாக அதட்டினாள்.

சுசி , பெண்மையின் முடிவிலா ஜாலங்களில் சிக்கி அழிவதையே
ஆணுக்கு இன்பமென வைத்திருக்கிறான் உலகியற்றிய முட்டாள்.

சந்திரா கிளம்பும்போது அம்மாவுடன் நீயும் பின்னால் சென்றாய். நான்
கூடத்து சோபாவில் அமர்ந்து அந்த வார இதழைக் கவனமில்லாமல்

புரட்ட ஆரம்பித்தேன். என் கண்கள் உங்களையே நோக்கின.

பற்களும் கண்களும் ஒளிரும் உங்கள் சிரிப்புகள், காதுகளில் தொங்கட்டான் ஆடும் தலையாட்டல்கள். கெக்கலிப்புகள். தழுவல்கள். கொஞ்சல்கள்...மூன்று பெண்கள். சுசி, மூவரில் யார் என் அகத்தை அலைக்கழிக்கும் பெண்? யாரை நான் உள்ளாழத்தில் ஒவ்வொரு கணமும் எண்ணிக்கொண்டிருக்கிறேன்? யார் எனக்கு மிகமிக முக்கியம்? யாரை அதிகமாக எண்ணிக்கொண்டிருக்கிறேன்? யாரை அஞ்சிக்கொண்டிருக்கிறேன்? யாரை நேசித்துக்கோண்டே இருக்கிறேன்?

சுசி, அது என் அம்மாதான் என்று அப்போது அறிந்தேன்.

[3]

பாண்டிபஜாரில் நீயும் நானும் நடந்துகொண்டிருந்தபோது சந்திராவின் முதல் அழைப்புவந்தது. எடுத்துப்பார்த்துவிட்டு அப்படியே வைத்துவிட்டேன். உனக்கு பாண்டிபஜாரின் பரபரப்பும் நெரிசலும் மிக உற்சாகமாக இருந்தது. ”நெஜமாவே ரொம்ப நல்லாருக்கு அருண்…ஐ ஜஸ்ட் லவ் திஸ் பிளேஸ்” என்றாய். சந்திரா கொடுத்த சுடிதார் அணிந்திருந்தாய்.

”மெட்ராஸிலே பாதித்தெரு இதுமாதிரித்தான் இருக்கு…ஒரே நெரிசல்…”

”ஏன், நெரிசலா இருந்தா நல்லாத்தானே இருக்கு…எவ்வளவு ஜனங்கள்…விதவிதமா… எவ்வளவு உற்சாகமா இருக்கு”

”ஜனங்கள் நெரிஞ்சு பிதுங்கறதா?”

”ஏன், இங்கெல்லாம் நெறைய மரங்களா இருந்தா உனக்குப் பிடிக்கும்ல?”

”ஆமா. ஆனா–”

”மனுஷங்கன்னாதான் பிடிக்காது இல்ல? எனக்கு மனுஷங்கன்னாலும் பிடிக்கும்…”

”அப்ப உன்னை திநகருக்கு கூட்டிட்டுப்போறேன். அது இதவிட கூட்டமா இருக்கும்”

”அருண், எனக்கு நெறைய சுடிதார் வாங்கணும்... யூ நோ ஒன் திங்? இப்ப துப்பட்டாவால மறைச்சாக்கூட ஆண்கள்லாம் என்னோட பிரெஸ்டைப் பாக்கிறாங்க”

”சும்மா வா”

”நெஜம்மா அருண். இந்த துப்பட்டா நழுவுதுல்ல உடனே கை அதை சரிபண்ணுது. அந்த மோவ்மெண்டைப்பாத்ததுமே ஆண்களோட கண்ணு இங்க வந்திருது...”

”நீ எதுக்கு இதையே நெனைச்சிட்டிருக்கே”

”ஏன்னா எல்லாரும் என்னைப் பாக்கிறது எனக்கு பிடிச்சிருக்கே.... ”

”கிறுக்குமாதிரி பேசாதே”

என் பின்னல் ஓடிவந்தபடி ”நான் இந்த ஊர்ல ரொம்ப அழகுதானே? சந்திரா ஆன்டி சொன்னாங்க. லண்டன்ல என்னை இவ்ளவு கூர்ந்தெல்லாம் பாக்க மாட்டாங்க. பிளாக் பசங்கதான் சும்மா விசில் அடிப்பாங்க. பட் ஐ ஹேட் தெம். மொரட்டுப்பசங்க. இங்க பாத்தியா க்யூட்டான பசங்கள்லாம்கூட என்னை பாத்துடே போறாங்க”

”உனக்கு பைத்தியம்தான் புடிக்கப்போகுது” உண்மையில் எனக்கு பைத்தியம் பிடிக்கப்போவதுபோல இருந்தது.

”நோ.ஐ யம் ஹேப்பி அருண்…ஐ யம் ரியலி ஹேப்பி…ஹாய்” என்றாய், ஒரு பையனிடம். அவன் பதறி நான்குபக்கமும் பார்த்தபின் வேகமாக சென்றான். எங்காவது தடுக்கி விழுந்துவிடுவான் போலிருந்தது.

”அய்யோ” என்று பதறினேன் ”இங்கபாரு..இங்கெல்லாம் அப்டிச் சொல்லக்கூடாது…”

”ஏன்? ஹாய் சொன்னா என்ன? அவன் தானே என்னை பாத்தான்?”

”இங்க அப்டிச் சொன்னா அவனே உன்னை இம்மாரல் கேர்ல்னு தப்பா நெனைப்பான்”

”ஏன்?”

”ஏன்னா அது இங்க உள்ள கல்ச்சர்..”

”எதுக்காக அப்டி?”

‘அப்டீன்னா அப்டித்தான். சும்மா வருவியா மாட்டியா?”என்றேன் கோபத்துடன்

”ஐ யம் ஸாரி” என்று என் பின்னால் ஓடிவந்தாய். ”ஐ யம் ஸாரி அருண்...ஏன் கோவிச்சுக்கறே?”

”பின்ன, உளறிட்டே இருந்தா?”

”நான் என்ன உளறினேன்? நீதான் சும்மா கோவிச்சுக்கறே...உனக்கு பொறாமை...அந்தப்பையனுக்கு நான் ஹாய் சொன்னது உனக்கு புடிக்கல்லை”

”சரி அப்ப அவன் கூடவே போ...போடி...” என்று கோபத்துடன் உன் தோளைப்பிடித்து தள்ளினேன்.

”அருண்...டோன் பி ஸில்லி...”என்று நீ திமிறினாய்

நான் வேகமாக நடக்க நீ பின்னால் வந்தாய். ”ஐயம் ஸாரி அருண்...ஐயம் ஸாரி”

நான் ”பேசாம வா”என்றேன்

”நீ கோவிச்சுக்கறது எனக்கு பிடிச்சிருக்கு”என்று சிரித்தாய். ”உனக்கு ஜெலஸி தோணுதுல்ல”

”ஒரு மண்ணும் இல்ல..”

”ஜெலஸ்தான்... ஜெலஸ்தான்...இப்ப இந்த பையனைப்பாத்து ஹாய் சொல்லப்போறேன்”

”ஓங்கி அறைஞ்சிருவேன்..”என்றேன்

”யூ ஆர் ஜெலஸ் யூ ஆர் ஜெலஸ்” என்று சிரித்து கைகொட்டி துள்ளினாய். தெருவே திரும்பிப் பார்த்தது.நான் சிரித்துவிட்டேன்.

”சரி ஜெலஸ்தான்...வா பேசாம”

நீ என் கையுடன் கைகோர்த்துக் கொண்டு ”சென்னை இஸ் எ நைஸ் பிளேஸ் அருண்...எங்கபாத்தாலும் ஜனங்க ஸ்மைல் பண்ணிட்டே இருக்காங்க”என்றாய்

”அது உன்னைப்பாத்து ஸ்மைல் பண்றது...”

”ஏன்?”

”பைத்தியம் மாதிரி இருக்கேல்ல?”

”யூ...”என்று அடித்தாள். போர்டைப்பார்த்து ”அருண் ஐஸ்கிரீம்ஸ்! வாவ், உன் பேரிலேயே ஐஸ்கிரீம். அருண் ஐ வாண்ட் திஸ் ஐஸ்கிரீம்” என்று கைநீட்டி துள்ளினாய்.

ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சந்திராவின் இரண்டாவது அழைப்பு வந்தது. நான் அதையும் தவிர்த்தேன்.

”யூ ஹெவ் அ கால்” என்றாய்

”ஒரு •ப்ரெண்ட்” என்றேன்.

”ஐஸ்கிரீம் சாப்பிடறதுக்குன்னே இருக்கிற நாடு இது...இந்த வெயில், புழுக்கம் எல்லாமே இதுக்காகத்தான்...ஏன் அருண் இங்கயுள்ள ஜனங்கள்லாம் நெறைய ஐஸ்கிரீம் சாப்பிடுவாங்கள்ல? அப்றம் ஏன் ஐஸ்கிரீம் பார்லர்லாம் அதிகமாக் கண்ணுலயே படுறதில்ல?”

”ஆ? அவங்கள்லாம் வீட்டுலயே செஞ்சு சாப்பிடுவாங்க”

”நெஜம்மாவா? மை குட்நெஸ்...எப்டி?”

”கேழ்வரகு இருக்குல்ல... கேப்பை?”

”தெரியுமாவா? நாங்க லண்டன்ல...”

”ஸ்பெஷாலிட்டி ஓட்டல் நடத்துறீங்க, தெரியும்....அந்த கேப்பையை எடுத்து நைஸா மாவு மாதிரி அரைச்சு கொதிக்கிற தண்ணியில போட்டு நல்லா காய்ச்சிடுவாங்க”

”ஓ..நைஸ்”

”அப்றம் அதை அப்டியே மண்பானையில ஊத்தி மூடி வச்சிருவாங்க…ஒருநாள் அப்டியே இருக்கும். மறுநாளைக்கு எடுத்து உப்பு போட்டு கலக்கி குடிப்பாங்க…. கேப்பை ஐஸ்கிரீம்”

”உப்பு போட்டா? அய்யோ நல்லாருக்குமே” என்றாய் ”எப்டி ·ப்ரீஸ் பண்றாங்க?”

”மண்பானை ஒரு ·ப்ரீஸர்தானே? வெயில் ஏறினாலே அது ஜில்லுன்னு ஆயிடும்”

”லவ்லி… அந்த ஐஸ்கிரீம் இங்க கெடைக்குமா?”

”அதை நான் அப்றம் வாங்கித் தரேன்”

”நைஸ்!”

சுசி, நீ ஒரு துள்ளல். கனறுக்குட்டியைத் துள்ளச்செய்வது எது? அதன் புத்தம் புதிதான தன்மை. அது புதியது என்பதனால் பிரபஞ்சமே புதிதாக இருக்கிரது….ஆச்சரியம்தான். அது பார்ப்பது என்ன? பாலிதீன் உறைகழற்றி ·பேக்டரி பெயிண்ட் வாசனையுடன் வெளியே எடுத்து வைக்கபப்ட்ட புத்தம்புதிய உலகத்தை….சுசி, உனக்குப்பிடிக்காத எதுவுமே உலகில் இல்லை என்பதை அறிந்தேன். ஏனென்றால் உன்னை உனக்குப் பிடித்திருக்கிறது.

உன்னை பக்கவாட்டில் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். உன் சிவந்த பருப்புள்ளிகள் கொண்ட கன்னங்களின், செம்பருத்தி போன்ற உதடுகளின், வெங்காயத்தோல் போன்ற கண்ணிமைகளின், பாளைபோல வரியோடிய கழுத்தின் அதி தூய மென்மை... அழியாத ஏதோ ஒன்று மலருக்குள் இருக்கிறது. அதன் அழியாமையைச் சொல்லவே அதை நாளும் மலர்ந்து மாலையில் உதிர்வதாக அதைப்படைத்தான்.

அப்படிபப்ட்ட ஒரு வயது எனக்கும் இருந்தது. கிரிக்கெட் ஆட்டங்கள், பாப் ஆல்பங்கள், ரொம்பவும் துணிந்துவிட்டால் நண்பர்களுடன் பப்பில் நுழைந்து ஒரு பீர்.அதன் பின் ஒரு சிகரெட்... சாலையில்செல்லும் பெண்கள்...அவர்களை பின்னால் தொடர்ந்து சென்று தாளமுடியாத உவகையுட தாண்டிச்செல்லும் கணங்கள். சில்லறைப்பொறுக்கித்தனங்கள் ... அங்கிருந்து வெகுவாக விலகிவந்துவிட்டேன்.

ஒரு மர்மமான புள்ளி இருக்கிறது. இது அதுவாக ஆகும் புள்ளி. நிகழ்ந்து முடிந்தபின்னர் மட்டுமே மாற்றத்தை உணரமுடியுமளவுக்கு நுட்பமானது. ஆனால் அத்தகைய புள்ளிகளை வைத்து வரையபப்ட்ட கோடுதானா வாழ்க்கை? சுசி, நான் பலசமயம் சிந்தனைக்குள் புலம்ப ஆரம்பித்துவிடுகிறேன். உன்னைப்போல் சிந்தனையிலும் சிரிப்பவர்கள் ஆசீர்வதிக்கபப்ட்டவர்கள்.

திநகரில் நீ சுடிதாரில் மூழ்கிப்போனாய். கண்ணாடியில் திரும்பித்திரும்பி அழகுபார்ப்பதும் இன்னொன்றை எடுக்க திரும்பி ஓடுவதுமாக புற நினைவே இல்லை. அடிக்கடி என்னிடம் திரும்பி ”ஈஸ் இட் நைஸ்?”என்றாய். விழி விரிய இன்னொரு சுடிதாரை சுட்டிக்காட்டினாய். உன் பரவசத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

”ஏன் சிரிக்கிறே?”

”இல்ல....உன்னோட பரவசத்தைப் பாத்தேன்”

”எஸ், ஐ யம் ஹேப்பி”

”இந்தமாதிரி நான் பரவசப்படணும்னா எனக்கு ஒரு பெரிய வைரச்சுரங்கம் தேவைப்படும்”

”நீ எப்பவுமே மேன்லியா இருக்கிறமாதிரி காட்டிக்கிடறே”

”யூ நோ...ஐ யம் மேன்லி” என்றேன்

”பூ” என்று உதட்டைச் சுழித்தபடி சுடிதார்மலை நோக்கி திரும்பினாய். கடையில் அனைத்துக்கண்ணாடிகளிலும் பலவிதமான கோணங்களில் நீ தெரிந்துகொண்டிருந்தாய். நான் எப்படி திரும்பினாலும் நீயே தெரிந்தாய். நீ மட்டுமே கொண்ட ஒரு பொதுக்கூட்டம். ஓர் ஊர்வலம்...

சந்திராவின் செல் அழைப்பு. நான் எடுத்தேன். என் விரல்கள் நடுங்கி செல் விழுந்துவிடும்போலிருந்தது

”எங்க இருக்கே?” என்று கறாரான குரல் கேட்டது.

”தி நகர்ல…ஒரு வேலையா…அர்ஜெண்டா”

”சுசி கூட, இல்ல?”

நான் மௌனமாக இருந்தேன்.

”நான் உன்னை இங்க வரச்சொன்னேன்”

”அம்மா–”

”அம்மா பேச்சை கேட்டுட்டு இருக்கிற புள்ளை இல்ல நீ…வர்ரியா இல்லியா?”

”இவளை கொண்டு விட்டுட்டு வந்திடறேன்”

”சீக்கிரம் வா…நான் வெயிட் பண்றேன்…”

நீ சுடிதார் எடுத்து முடிக்க மதியம் ஆகிவிட்டது. சாலைக்கு வந்தோம். எதிரே ஒரு பைக்கின் பின்னால் இருந்து ஜோ கையைத்தூக்கி ”டேய் , டேய் அருண்…” என்று கூவினான். நான் அவனைப்பார்த்ததும் ஒருகணம் தயங்கினேன். அவனை அப்போது சந்திக்க விரும்பாதவனைப்போல

ஜோ இறங்கிவந்து பைக் நண்பனிடம் ”ஸீ யூ” சொல்லிவிட்டு ”இங்க என்னடா?”என்றபின் உன்னைப்பார்த்தான். ”இவதானா? ஹாய் சுசி..ஐயம் ஜோ…இவனோட எதிரி”என்றான்

நீ சிரித்து ”ரியலி?”என்றாய்

”நான் இவன் செய்றது எதையுமே செய்ய மாட்டேன். இவன் படிக்கிற எதையுமே படிக்க மாட்டேன். வேற மாதிரியான ஆளு…இன்னைக்குதான் வந்தியா?”

”யா” என்றாய்

நான் ”இவன் ஒருமாதிரி ஒரு நட் கிராக். •பிலாச•பி, பாப் சங்கீதம்…”’என்றேன்.

”… கிறுக்கா இருக்கிறதில உள்ள சந்தோஷங்களே வேற…” என்றபின் ”சரிடா வரேன். இங்க மேலே ஒரு மியூசிக் ஷாப் இருக்கு. ஒருத்தனை நான் அங்க சந்திக்கணும்….” என்றபின் ”பாத்து சுசி, இவன் இப்பவே ஒருமாதிரி ரொமாண்டிக் லவ்ல விழுந்தாச்சுன்னு நெனைக்கிறேன். ஊட்டி கொடைக்கானல்னு லவ் டூயட் பாட கூப்பிட்டிருவான்.. டேக் கேர்”

அவன் கூட்டத்திற்குள் புகுந்து செல்வதைப்பார்த்தபி ”நைஸ் கை”என்றாய்.

நான் ” வேற மாதிரி சிந்திப்பான். யாருமா சிந்திக்காத மாதிரி ஏதாவது

சொல்வான்.”

அம்மா •போனில் அழைத்து ”ஏண்டா சாப்பிட வர்ரியா?” என்றாள்

”’இல்லம்மா இனிமே லேட்டாகும்...சரவணபவன்லே சாப்பிடட்டுமா? ”என்றேன்

”சரிடா...வெயிலிலே சுத்தாதீங்க”

சாப்பிட்டபின் நீ ஒரு சினிமா பார்த்தாகவேண்டுமென அடம்பிடித்தாய். பெரிய பெண் முகம் குங்குமப்பொட்டுடன் கண்ணீர் வழிய ஆவேசமாக பார்த்த போஸ்டர் நடப்பட்டிருந்த கமலா தியேட்டர் முன்னாலிருந்து வரமாட்டேன் என்றாய். எரிச்சலுடன் நான் கையைப்பிடித்து இழுக்க நீ கம்பியைப்பிடித்துக் கொண்டாய்.

”இது ஒருமாதிரி தாலிசெண்டிமெண்ட் கதை... உக்காந்தா பத்துபேர் சுத்தி நின்னு மாறிமாறி கிள்ற மாதிரி இருக்கும்...”என்றேன்

”எனக்கு இந்தமாதிரி படம்தான் பிடிக்கும்...”

”இது சீப்பான படம் சுசி”

”ஒண்ணுமில்லை. இட் இஸ் அ கல்ச்சுரல் டிராமா...ஐ நோ”

”கல்சுரல்...மண்ணாங்கட்டி...வர்ரியா இல்லியா?”

”நோ”

ஒருகணம் உன்னை முறைத்துப் பார்த்தேன். உன் பிடிவாதமான சிறிய உதடுகளைப் பார்த்ததும் என்னைமீறி சிரிப்பு வந்துவிட்டது. தலையில் அடித்தபடி ”சரி வா... ” என்று உள்ளே சென்றேன்.

ஒரு சாதாரணமான கிராமத்துக்காதல் கதை. காதலி மிட்டாய்நிற கண்டாங்கிச்சேலை அணிந்து கம்மாய்கரையோரம் துள்ளி ஆடினாள். கையில் கோலுடன் கச்சைவேட்டி கட்டிய வெற்றுடம்புக் காதலன் கட்டைக்குரலில் உச்ச ஸ்தாயியில் பாடினான். மாட்டுவண்டிவரிசைகள், அரிவாள்கள், சட்டைபோடாத அப்பத்தாக்கள், சவால்கள், பஞ்சாயத்துக்கள்... கடைசியில் காதலர்கள் தப்பி ஓட ஊரே துரத்த...நான் சாய்ந்து அமர்ந்து என் செல்போனை நோண்டிக்கொண்டிருந்தேன். எட்டு எஸ்எம்எஸ் வந்திருந்தது சந்திராவிடம் இருந்து.

ஒரே அழுகை ஆரவாரத்துடன் படம் முடிந்தபோது கைக்குட்டையால் சிவந்து கலங்கிய கண்களை துடைத்து மூக்கைச் சிந்தியபடி நீ எழுந்தாய். ”வா போலாம்”என்றேன். மெல்ல விசும்பியபடியே வந்தாய். வெளியே வந்து காரை எடுத்தேன். நீ உள்ளே ஏறிக்கொண்டாள்.

மூக்கு உறிஞ்சும் ஒலி கேட்டு நான் திரும்பிப்பார்த்து ”ஸ்டுப்பிட்...என்ன இது?”என்றேன்.

”ரொம்ப பாவம் இல்லை அவ?”

”எவ?”

”சிவனுத்தாயி?”

”யாரவ?”

”வெளயாடாதே அருண்.. அவளைத்தானே கொன்னுட்டாங்க”

”அந்தக் குண்டச்சியா? திங்கு திங்குன்னு குதிச்சு கும்மியடிச்சாளே...ஜாக்கெட் போடாம?”

”நீ வேணும்னே பெரிய இவனாட்டம் பேசுறே... பெரிய மேச்சோ மேன்னு காட்டிக்கறே” என்றாய் கோபத்துடன் ”ஐ ஹேட் யூ..ஐ ஹேட் யூ”

”ஆமாண்டீ...இந்த பஞ்சாயத்துப்படத்தைப்பாத்து நான் கண்ணீருவிட்டு கதறணும்...அப்பதான் உன்னைமாதிரி என்னையும் பைத்தியமுன்னு ஊரு நெனைக்கும்”

”படத்தப்பாக்காம நீ செல்போனை நோண்டிகிட்டிருந்தே... இந்தியாவிலே எல்லாருமே என்னமோ பொதையல் மாதிரி செல்போனை கொஞ்சிட்டே இருக்காங்க...நான்சென்ஸ்”

நான் காரை நிறுத்தினேன் ”ஆமாடீ நாங்கள்லாம்

நான்சென்ஸ்தான்…நீங்கதான் நாகரீகமானவங்க…அப்றம் எதுக்கு இங்க வந்தே?”

”தெரியாம வந்திட்டேன்…உன்னைமாதிரி கொரங்குக் கெரில்லாக்கிட்ட மாட்டிக்குவேன்னு தெரியாம வந்திட்டேன் போருமா”

”சீ எறங்குடி…  என் வண்டிய விட்டு எறங்கு. இப்ப எறங்கப் போறியா இல்லியா?”

நீ கதவைத்திறந்து இறங்கி நேராக நடந்தாய். நான் காரைக் கிளப்பி வேகமாகச்சென்றேன். சில நூறடிகள்தான். என்ன இது அசட்டுத்தனம் என்று தோன்றியது. உன்னைவிட நான் அசடாக இருக்கிறேனா? சுசி, பின்னர் உணர்ந்தேன், என் வயது அப்போது மிகமிக குறைந்துவிட்டிருந்தது என்று.

திரும்பிவந்தேன். கதவை திறந்து ”ஏறு” என்றேன்

”வேணாம்..”

”ஏறுன்னு சொல்றேன்ல?”

”.எங்கிட்ட பணம் இருக்கு. நான் டாக்ஸியிலே வந்துக்கிடறேன்”

”இங்கபாரு, உன்ன விட்டுட்டு நான் எப்டி போறது? அம்மா என்ன

சொல்வாங்க?”

”அம்மா சொல்றதுதானா உனக்கு முக்கியம்? அப்ப போயிடு”

நான் சிரித்தேன் ”இல்ல நீதான் முக்கியம். நீ மட்டும்தான் முக்கியம். நீ ஒரு பேரழகி…உன் மனசு சொக்கத்தங்கம். நீ போட்டிருக்கிற சுடிதார் ரொம்ப அழகு…நீ பாத்த படம் ஒரு காவியம்…போருமா? ஏறிக்கறியா?”

நீ சிரித்தாய். நானும் சிரித்தேன். கதவைத்திறந்து ஏறி அமந்தபின் ”நெஜம்மாவே அது நல்ல படம் அருண்…மெட்டிஒலி சீரியல் மாதிரியே இருந்திச்சு”

”அப்டியா?நீ அதையெல்லாம் பாப்பியா?”

”பின்ன?”

”நீ லண்டன்ல வேற புரோக்ராம்ஸ் பாப்பேன்னு நெனைச்சேன்”

”அங்கயும் இதேமாதிரி ஸோப்ஸ்தானே வருது? அதைப்பாக்கிறதுக்கு இதைப்பாத்தா நம்ம ஊரையாவது பாக்கலாமே”

”எனக்கு தமிழ்ப்படமே பிடிக்காது…”

”பின்ன?”

”ஹாலிவுட் படம்தான்”

”சட்டைபோடாத ஹீரோ கைமுண்டாவைக் காட்டிக்கிட்டு தன்னந்தனியா போயி உலகத்த காப்பாத்துவாரு... நிலாவில போயி அங்கேருந்து ஒரு ராக்கெட்டை விட்டு ஒரு பிளானெட்டையே ஒத்தை ஆளா உடைச்சு தள்ளிடுவார்...அந்தமாதிரி படம் இல்ல?”

”வெளயாடாதே...வேற படம் இல்லியா என்ன?”

”அப்ப கிரா•பிக்ஸ் மிருகங்க? ஏலியன்ஸ்...”

”ஏய்..”

”இல்லேன்னா சைக்கோ கதைகள். பொம்பிளைங்களை கண்டம்துண்டமா வெட்டி டப்பாவில போட்டு ஊறவச்சு உப்பு பச்சமிளகா போட்டு திங்கிறது மாதிரியான கதைகள்...”

”டாமிட்..நீ என்னை என்ன நெனைச்சே?” எனக்கு உண்மையிலேயே கோபம் வந்தது

”மேச்சோ மேன்.... ஏகே •பாட்டிஸெவென் வச்சு டப்டப்டப்னு சுட்டுட்டே போவீங்க”

நான் காரை பிரேக் பிடித்து கிரீச்சிட நிறுத்து ”நான் பாத்துட்டே வரேன் நீ என்னை சீண்டிட்டே இருக்கே”

”நீதான் என்னை சீண்டறே”

”நான் இப்ப என்ன சொன்னேன்?”

”நீதான் எப்பவும் என்னை திட்டறே”

”அப்ப எங்கிட்ட பேசாதே”

”நீ மொதல்ல எங்கிட்ட பேசாதே”

”வாய மூடு”

”நீ வாய மூடு...”

நான் கோபமாக காரைக் கிளப்பினேன். சற்றுநேரம் கழித்து புன்னகைசெய்து ”எதுக்கு நாம சண்டை போட்டுக்கணும்?நான் உன்னை சந்திச்சு ஒருநாள்கூட ஆகலை”என்றேன்.

”ஒருவேளை நாம ஒருத்தரை ஒருத்தர் லவ் பண்ண

ஆரம்பிச்சிட்டோமோ?”

”சண்டைபோட்டா லவ்வா?”

”ஆமா…லவ்வர்ஸ்தான் எப்பவும் சண்டைபோட்டுட்டே இருப்பாங்க…”

”கல்யாணம் பண்ணிட்டு வாழரதுக்கு ரிகர்சல் பாக்கிறாங்களோ”

நீ பதில் சொல்லவில்லை. நான் ஓரக்கண்ணால் பார்த்தேன். சிறிய உதடுகள் அழுந்தியிருந்தன. முகம் கவிழ்ந்திருந்தது.

”என்ன?”என்றேன்

”ம்ம்ஹ¥ம்”

‘என்ன ஒருமாதிரி இருக்கே?”

நீ நிமிர்ந்தபோது இமைப்பீலிகளில் கண்ணீர் சிதறல்கள். ”டேட் எப்பவுமே  அம்மாகிட்ட சண்டைதான்…ரொம்ப அடிப்பார். ஒருவாட்டி சேரைத்தூக்கி மண்டையில அடிச்சு ஒரே ரத்தம்…”

”அப்டியா?”

”கல்யாணம் பண்ணிகிட்டா சண்டைபோடாமல் இருக்கமுடியாதா?”

”ஏன், எவ்ளவோபேரு சந்தோஷமா இருக்காங்களே”

”அருண், எனக்கு ஒரு சந்தோஷமான குடும்பம்தான் வேணும்.....” என்றாய் .பின்னர் ”இந்தியாவிலேகூட சண்டைபோட்டுக்குவாங்களா?”

”எல்லா இடத்திலயும் மனுஷங்க ஒண்ணுதானே...ஆனா இங்க ரொம்ப அளவுக்கு பொறுத்துட்டு போவாங்க...”

”அதான் நான் இந்தியாவுக்கே வந்தேன் அருண்...அங்கெல்லாம் எதுக்கெடுத்தாலும் டிவோர்ஸ்...எனக்கு அதை நெனைச்சாலே பயம்...டிவோர்ஸ் பன்றவங்க அவங்க பிள்ளைங்களைப்பத்தி நெனைக்கிறதேயில்லை...”

கைக்குட்டையால் முகத்தை அழுத்தி துடைத்தாய் .பின்பு மெல்ல சமநிலைக்கு வந்தாய். ”அதான் எனக்கு சந்திரா ஆன்டியை ரொம்ப பிடிச்சிருக்கு. அவங்க ஹஸ்பெண்ட் செத்துப்போய் ஒன்பதுவருஷமாச்சு. ஆனா அவங்க திரும்ப கல்யாணமே பண்ணிக்கல்லை. அதான் மொராலிட்டி..”

கார் திடுக்கிட்டு திரும்ப நான் ஒடித்து சீர்ப்படுத்தினேன் ”ஏன் என்ன ஆச்சு?” என்றாய்

”ரோட்ல என்னமோ பள்ளம்”என்றேன்

அதன்பின் நான் பேசவில்லை. சாலையில் இருந்து கண்களை எடுக்காமல் ஓட்டிக்கொண்டிருந்தேன்.

[4]

சுசி, ஏற்கனவே இறந்துவிட்ட ஒருவனின் வாக்குமூலம் இது. அவன் தன்னைச் சூழ்ந்தவர்களால் முற்றிலும் புரிந்துகொள்ளப்படாதவனாக இருந்தான். ஏனென்றால் அவனை அவனே புரிந்துகொள்ளவில்லை. ஒவ்வொருகணமும் அவன் அஞ்சியது அவனால் புரிந்துகொள்ள முடியாத ஒருவன் அவனிலிருந்து வெளிப்படும் தருணங்களையே.

சந்திராவின் •ப்ளாட்டுக்கு முன் பைக்கை நிறுத்திவிட்டு லி•ப்டில் ஏறினேன். என் மனம் படபடத்தது. ஒருநாளும் உணராத பதற்றத்தில் கண்பார்வையே மங்கலாகி வருவதுபோலிருந்தது. நேராக எட்டாவது மாடிக்குச் சென்றுவிட்டேன். பின்பு மீண்டும் லி•ப்ட் பித்தானை அழுத்தி இம்முறை தரைக்கே வந்துவிட்டேன். தலையில் அடித்துக்கொண்டபடி மீண்டும் ஏறி ஆறாவது மாடிக்கு வந்தேன். லி•ப்ட் திறப்பதற்கு முன் என் முகத்தை கண்ணாடியில் பார்த்தேன். சட்டையை சரி செய்துகொண்டேன். புன்னகையை வரவழைத்தேன். நெஞ்சில் இல்லாத புன்னகையை முகத்தில் வரவழைப்பதென்பது எத்தனை சிரமமானது…

வெளியே வரும்போது ராஜம்மா கிழவியின் முகத்தைத்தான் பார்த்தேன். பக்கத்துவீட்டு வம்புக்கிழம். தொங்கிய தாடைச்சதைகள். கண்கள் மேல் தொங்கும் மேலிமைகள். ஐயத்தால் சரிந்த பார்வை.. ”என்ன இப்ப வாறே?”என்றாள் என்ன அர்த்தமில்லாத கேள்வி.

எரிச்சலுடன் ”நவீன் கிட்ட ஒரு விஷயம் பேசணும்..”என்றேன்

”ஆ”என்றாள். அவளுடைய பார்வை குரல் அனைத்திலும் ஒரு அழுத்தம்.

அழைப்புமணியை அழுத்திய என் விரல் நடுங்கியது. கதவு திறந்து நவீன் சிரித்தபடி வெளிப்பட்டான். ”ஹாய் அருண்” என்றான். டென்னிஸ் சீருடை அணிந்திருந்தான்.

”ஹாய் நவீன்…எங்கடா உங்க ஆத்தா?”

”உள்ள படுத்திருக்காங்க…அவளுக்கு தலைவலி…” என்றான் ”கம் இன்”

”வெளயாடப்போறியா?”

”இல்ல , இப்பதான் ஆடிட்டு வந்தேன். டிரெஸ்சை கழட்டலை. இ.எஸ்.பி.என்னிலே யு .எஸ் ஓபன் போய்ட்டிருந்தது, பாத்தேன். என்ன இன்னைக்கு லீவா?”

”இன்னிக்கு போகல்லை. லண்டனிலேருந்து சுசி வந்திருக்கா…”என்றபடி அமர்ந்தேன். நவீன் பத்துவயதான பையன் என்றாலும் தோற்றமும் தோரணையும் பெரிய பையன் மாதிரித்தான். நல்ல குண்டு. குண்டான பையன்கள் ஒரு கட்டம்வரை கைக்குழந்தைபோல இருக்கிறார்கள் . சட்டென்று பெரிய மாமாக்கள் ஆகிவிடுகிறார்கள். பையன்பருவமே அவர்களுக்கு கிடையாது.

”ஜஸ்ட் எ மினிட்”என்றபடி உள்ளே போனவன் உள்ளே ”அருண் அண்ணா வந்திருக்கான்”என்று சொல்வது கேட்டது

நான் பதற்றமாக கைவிரல்களால் தாளமிட்டேன். சோ•பாவில் அமர்ந்து அழுந்திக்கொண்டு டிவியில் ஓடிய உருவங்களை அர்த்தமில்லாமல் பார்த்தேன். என் பதற்றத்தை நானே உணர்ந்து அதை வெளியேற்றுபவன் போல மெல்ல மூச்சுவிட்டேன். எண்ணங்களை திசைதிருப்ப விரும்புபவன் போல ஒரு இதழை எடுத்தபின் அதை மீண்டும் வைத்தேன். என்னால் அமர்ந்திருக்க முடியவில்லை. பதற்றம் மிக்க மனத்துடன் உட்கார்ந்திருப்பது ஹீலியம் வாயு நிறைந்த உடலுடன் அமர்ந்திருப்பது போன்றது....

மெல்லிய காலடி ஓசை...அவள்தான். அவள் காலடி ஓசையை நான்மாத்தனை துல்லியமாக அறிவேன். மெல்லக் கேட்கும்தோறும் ஓசைமிக்கதாக ஆகும் காலடி ஓசை...

கூந்தலை அள்ளி சுழற்றியபடி மெல்லிய பட்டு நைட்டி அணிந்தவளாக சந்திரா வந்தாள். புன்னகையுடன் ”இப்பதான் வந்தியா? எனக்கு தலைவலி...அதான் படுத்திருந்தேன்...”என்றாள். தூங்கி எழுந்தவள்போல முகம் வீங்கியிருந்தது.

”கொஞ்சம் லேட்டாயிடுச்சு..வெளியே போயிருந்தேன்...”

”அம்மா , உனக்கு காபி வேணுமா?”என்றான் நவீன் உள்ளே

”அரை டம்ளர் குடுடா...நீ சாப்பிடறியா?”

”ம்” என்றேன்

சந்திரா ”…அருண் அண்ணாவுக்கும் காபி”என்றபின் என்னைக் கூர்ந்து நோக்கினாள். நான் தலைகுனிந்தேன்.

மெல்லிய குரலில் ”இப்ப வந்திருக்கே?”என்றாள்

”நேரமாயிடுச்சு”என்றேன்

மெல்ல கூர்ந்து நோக்கி தலையசைத்தாள். ”சினிமா போயிருந்தியோ?”

நான் நிமிர்ந்து நோக்கினேன்

”சினிமாபாத்தா உன் கண்ணு உள்ள போயிடுது…”

பார்வையை விலக்கி ஆமாம் என்று தலையசைத்தேன்

காபியுடன் நவீன் வந்தான். பெர்முடா டி ஷர்ட்டுக்கு மாறியிருந்தான். நான் காபி எடுத்துக் கொண்டேன். நவீன் காபியுடன் எதிரே சோபாவில் அமர்ந்து டிவியைப்போட்டான். காபியை உறிஞ்சியபடி ”பாக்கிறியா?” என்றான்

”மூட் இல்லை”என்றேன். மிக நெருக்கமாக ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட கணங்கள். பின்னால்செல்லும் ஆட்டை முட்டி முன்னால்தள்ளி நகரும் ஆட்டுமந்தைபோல காலம்…

சந்திரா காலிக்காபி கோப்பைகளுடன் எழுந்து உள்ளே சென்றாள்.

நவீன் டிவியை விட்டு பார்வையை எடுக்காமலேயே ”எங்க ஸ்கூல் டீமிலே என்னைச்சேக்கலை. வெயிட் ஜாஸ்திங்கிறான். எதுக்கு வெயிட்டைப்பாக்கணும், ஸ்டாமினா இருக்கான்னு பாத்தா போதாதா? நான்சென்ஸ்” என்றான் ஒரு சிப்ஸ் பொட்டலத்தைபிரித்தபடி

”பொட்டட்டோ சிப்ஸை நீ விடாதவரைக்கும் வெயிட் குறைய சான்ஸே இல்லை” என்றேன்.

”ஐ டோண்ட் கேர்”என்றான். சிப்ஸ¤டன் அவன் டிவியில் மூழ்கியிருந்தான். நான் ஹாலில் இருந்த மாலைபோடப்பட்ட குமார்மாமாவின் படத்தையே பார்த்தேன். அவருக்கு நவீன் சாயல் இருந்தது. பொதுக்கான உடம்பு.

”அருண்” என்றாள் சந்திரா.

”கூப்பிட்டியா?” என்றேன்

”அங்க டிரே இருக்கா? இங்க எடுத்திட்டுவரியா?”

நான் டிரேயுடன் உள்ளே சென்றேன். சமையலறையில் சந்திரா கோப்பைகளை கழுவிக் கொண்டிருந்தாள். நான் மெல்லச்சென்று அருகே நின்றேன்.

”நீ வரமாட்டேன்னு நெனைச்சேன்…” என்றாள் என்னைப்பார்க்காமலேயே. ”ஆனா நீ ரொம்ப புத்திசாலி. நவீன் வீட்டில இருக்கிற நேரம் பாத்து வந்திருக்கே” அவள் குரலின் கனத்த அடங்கிய தன்மை என்னை எப்போதுமே கிளரச்செய்வது. கெட்டியான தேன் கனத்துத் தயங்கி விழுவது போல. சூடான தேன்…

நான் ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் அவளே ”போதும். பொய்யெல்லாம் சொல்ல ஆரம்பிக்க வேண்டாம்”என்றாய்

”நான் இப்ப என்ன தப்பு பண்ணினேன்?” என்றேன் மெல்ல

”தப்பு பண்ணப்போறே…அதான்”

”என்ன தப்பு?”

அவள் நிமிர்ந்து என் கண்களைப்பார்த்தாள் ”என்ன தப்பு தெரியல்லை?”

”இல்லியே” அந்த நிலையிலும் நான் இரண்டாகப்பிரிந்தேன். ஒரு நான் அவள் உடலை என் இருப்பே கண்களாக ஆகி பார்த்துக்கொண்டிருந்தேன். வெண்மையான கழுத்தின் சருமத்தில் ஒட்டியிருந்த கூந்தலிழைகளை சேலையின் விலக்கத்துக்குள் அவள் மார்புப்பிளவு மூச்சில் மெல்ல அசைவதை அவள் கன்னத்தில் புதிதாக முளைவிட்டிருந்த மெல்லிய சிவந்த பருவை எனக்கு எப்போதுமே பிடித்தமான நெற்றிமுனையின் வெடுக்காய வடுவை….

அவள் கோபத்தில் சிவந்த முகத்துடன், ”அந்தப்பொண்ணை நீ லவ் பண்ணப்போறே. அதான். உன் முகத்திலயே தெரியுது தேன்குடிச்ச நரி மாதிரி ஒரு இளிப்பு”

”சத்தியமா இல்ல..”

”பொய் சொல்லாதே…இதாலேயே போட்டிருவேன்”என்று கரண்டியை காட்டினாள்.

”அவளே இன்னைக்குதான் வந்திருக்கா…”

”ஒரு நாள் எதுக்கு? ஒரு நிமிஷம்போதும்…ஒண்ணுமட்டும் தெரிஞ்சுக்க உன் மனசை நீ என்கிட்டேருந்து மறைக்க முடியாது…ஏன்னா நான் அதை அப்டி கவனமா உத்து பாத்திட்டிருக்கேன்.. ” அவள் கண்கள் ஒளிவிட்டன ”உன்னை ஓவ்வொரு செகண்டும் நெனைச்சிட்டிருக்கேன்…முழிச்சிட்டிருக்கிறப்ப எல்லாம் உன்னைத்தான் பார்த்துட்டிருக்கேன்..நீ என் கண்முன்னாடி இல்லாதப்பகூட நான் உன்னைத்தான் பார்த்திட்டிருக்கேன்.. ”

சட்டென்று என் கன்னத்தில் படீரென அடித்தாள் ”இப்ப நீ என்னைவிட்டு வெலகிப் போய்ட்டிருக்கே..” அவள் கண்களில் சட்டென்று ஈரம் படரந்தது. மூச்சு எழுந்தடங்கியது. மூக்கு காய்ச்சிய உலோகம் போலச் சிவந்தது. ஆம், நான் அவள் உடலை பார்க்கும் இன்னொருவனாக நின்றிருந்தேன். அவளருகே அவள் உஅலைப் பார்க்காமல் நான் இருந்த ஒருகணம் கூட இல்லை…

”நீ எதையாவது கற்பனைசெஞ்சுட்டு சொன்னா நானா பொறுப்பு?”

என்றேன் வலிந்த கோபத்துடன்.

”டேய் என் கண்ணைப்பாத்துச் சொல்லு, நீ அவளை விரும்பலைன்னு...சொல்லுடா பாக்கலாம்”

நான் கண்களை திருப்பினேன்.

அவள் என் தோளைத்தொட்டு முரட்டுத்தனமாக திருப்பினாள். ”குமார் செத்துப்போய் ஏழுவருஷம் நான் அவரையே நெனைச்சுட்டு இருந்தேன்... மறுகல்யாணம் பண்ணிக்கச் சொல்லி எத்தனையோ பிரஷர் வந்திச்சு... நவினுக்காகத்தான் வேணாம்ணு இருந்தேன்...”

”மெல்ல... அவன் கேக்கப்போறான்...”

”...என்னை மாத்தினவன் நீ...நான் உன் பின்னால வரல்லை...நீதான் என் பின்னால வந்தே...என்னை கொஞ்சம் கொஞ்சமா கரைச்சே...” அவள் குரல் கிசுகிசுப்பாக இருந்தது.

நான் நவினுக்குக் கேட்கிறதா என்று பார்த்தேன். அவள் அதைப்பொருட்படுத்தவேயில்லை

”இப்ப நான் உனக்கு அடிமை...நீ இல்லாம வாழ்க்கையே இல்லைன்னு ஆயிட்டுது எனக்கு... இனிமே உன்னை என்னால விட முடியாது. நீ எனக்கு வேணும்....நீ எனக்குமட்டும்தான்...என்னை விட்டுட்டு போக விடமாட்டேன்” அவள் குரலில் ஏறி ஏறி வந்த அந்த மந்திர உச்சாடனத்தன்மை எப்போதுமே எனக்கு அச்சமூட்டுவது. அவள் வீங்கி

வீங்கி பலமடங்கு பெரிதாக ஆகிவிடதுபோலத் தோன்றும்.

”இப்ப என்ன ஆச்சு?” என்றேன் , அவள் கண்களைச் சந்திக்காமல்.

”ஒண்ணும் ஆகல்லியா? நெஜமாத்தானா?” என்று கூர்மையான கண்களை என்மீது நாட்டி கேட்டாள்.

”நெஜம்தான் சந்திரா...சத்தியமா ஒண்ணும் ஆகல்லை” என்றபோது என்னால் அவளைப் பார்க்கமுடியவில்லை.

”என் செல்லமே” என்று மூச்சிரைக்க கூவியபடி அவள் என்னை ஆரத்தழுவிக்கொண்டாள். அக்கணத்தில் அதை நான் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருந்ததை அறிந்தேன். அவளை அள்ளி இறுக்கி என் உஅலுடன் சேர்த்துக் கொண்டேன்.

என்னை தன் மார்புகளோடு இறுக்கி மாறி மாறி ஆவேசமாக முத்தமிட்டாள். அவள் மார்புகளின் திண்மையையும் மென்மையையும் என் நெஞ்சில் உணர்ந்தேன். எனக்குக் கீழே அவளுடைய மென்மையான கழுத்துக்குழி மெல்லிய இதயத்துடிப்பால் அதிர்ந்துகொண்டிருந்ததை குனிந்து பார்த்தேன்.

மிக அருகே ஒரு பெண் உடல். கை வளையம் நிறைந்து திரண்ட பெண் உடல். என் கைகளுக்குள் ...என் ஆளுகைக்குள்...ஆனால் மிக மிக அப்பால் இருப்பதுபோலவே எப்போதும் பிரமைகொள்ளச்செய்யும் மாயம் கொண்டது அது. என் கைகளுக்குள் இருக்கும்போதுகூட அதை என்னால் நம்பமுடியாதது போல. முதிரா இளமையின் ஒரு கிளர்ச்சியூட்டும் கனவு போல... ஒரு பெண்தான்...ஓர்

உடல்தான்...உடல்...அதை எத்தனை சாதாரணமாகச் சொல்லிவிடுகிறோம் சுசி...அது எத்தனை வல்லமை மிக்கது. எத்தனை மகத்தானது...

அக்கணம் அவளை இழுத்து என்னுடன் இணைத்துக்கொள்ள, இரு உடல்களும் இரண்டில்லாமல், ஆக விரும்பினேன். என் உடல் என்னைச்சூழ்ந்து மூடி இறுக்கியது. கடும்புழுக்கத்தில் உடைகளை களைந்து வீசுவதுபோல இவ்வுடலை களைந்துவீசி விட்டு அவளுக்குள் சென்று , அவள் கருவறைக்குள் புகுந்து கதவைச்சாத்திக்கொள்ள வேண்டும்...

சுசி, நீ என்னை மன்னிக்கவே வேண்டாம். அக்கணம் நான் உன்னை வெறுத்தேன். உன்னைச் சந்தித்தமைக்காக மனம் கசந்தேன். உன்னை முற்றாக என் நெஞ்சிலிருந்து ஒதுக்கிவிட எண்ணினேன்.

கூடத்தில் கோல் விழுந்த ஒலி. நான் திணறலுடன் விடுவிக்க முயன்றேன். அவளுடைய ஆவேசத்தை என்னால் தடுக்க முடியவில்லை. முத்தமிட்டு முத்தமிட்டு மூச்சுவாங்க மெல்லமெல்ல அவள் தணிந்தாள். முகமெங்கும் கண்ணீர் வழிந்தது. உதடுகளும் மூக்கும் சிவந்து தீபட்டவைபோலிருந்தன. இணைந்து ஒட்டிய கனத்த மார்புகள் ஏறியிறங்கின. அவற்றின் இடுக்கில் வியர்வை பொன்சருமத்தை பளபளக்கச்செய்தது.

என் காமத்தை தழல்விடச்செய்யும் அவளுடைய தோள்கள். அவற்றின் மென்மையான சருமத்தின் வரிகள் ரோமங்கள். அவளுடைய மார்பகங்கள்.... நான் அவளை என் கைகளால் தூக்கி அவளுடைய மார்புகளுக்குள் என் முகத்தைப்புதைத்துக்கோண்டேன். பின்பு வெறியுடன் அவள் மேலாடையை விலக்கி மார்புகளின் மேல் என் முகத்தை அழுத்தினேன். அவள் அதை அனுமதித்தாள். ஒருபோதும்

அவள் அப்படி அபாயகரமாக அனுமதிப்பதில்லை.

அவள் கதவுகளை விலக்கி விலக்கி என்னைக் கொண்டுசெல்வதுபோலிருந்தது .நான் இடம் காலம் எல்லாவற்றையும் மறந்து அவள் மார்புகள் அன்றி எண்ணமற்றவனாகி அவள் உடைக்குள் இருந்து அவள் இடமார்பகத்தை அள்ளி வெளியே எடுத்தபோது சட்டென்று அவள் என் மார்பில் கைவைத்து உந்தி பின்னுக்குத்தள்ளி மேலாடையை அள்ளி போட்டுக்கொண்டாள்

என்னை என் எல்லா கவசங்களையும் கழற்றி வைத்து விட்டு அவள் மட்டுமே கோலோச்சும் ஒரு வெட்டவெளியில் நிற்க வைத்துவிட்டாள் என உணர்ந்தேன். வெறுமொரு மிருகமாக அங்கே நின்றேன். என் முகம் அப்போது காமம் கொண்ட ஆதிக்குரங்கின் முகமாக இருந்திருக்கும். நான் அவளை எட்டிப்பிடிக்க முன்னகர்ந்தேன்.

”நோ”என்று அவள் கடுமையான குரலில் சொன்னாள். டீச்சர்களுக்கே உரிய முகபாவனை. நான் தணிந்தேன். சரசரவென என் உடலில் இருந்து ஆற்றல்கள் அனைத்தும் வெளியேறின. நான் பெருமூச்சு விட்டேன்.

”செத்திருவேன்…நீ இல்லேன்னா செத்திருவேன்..”என்று சொல்லி என் காதுகளைப் பிடித்து உலுக்கினாள்.

நான் அவள் முகத்தைப்பார்த்தேன். கன்னங்களின் மீது கண்ணீர் வழிந்ததை மிக அருகே கண்டேன். காதோர மயிர்க்கற்றைகள் கண்ணீரில் ஈரமாகியிருந்தன. உதடுகள் துடித்தன. தாளமுடியாத ஏக்கம் கொண்ட சின்னஞ்சிறுமிபோலிருந்தது அவள் முகம்.

என் மனம் ஆதரவுதேடும் சிறுவனின் நிலையில் இருந்து ஒரே பாய்ச்சலில் ஆண்டு அரவணைக்கும் ஆண்மகனாக மாறியதை நானே வியப்புடன் கவனித்துக்கொண்டிருந்தேன். எத்தனை எத்தனை பாவனைகள் வழியாக காமம் தன்னை நடத்திக் கொள்கிறது!

அல்லது இவை ஒவ்வொன்றும் வேறு வேறு மனிதர்கள்தாமா? நூறு நூறு சந்திராக்களும் அருண்களும் ஒருவரை ஒருவர் நெருங்கியும் விலகியும் கவர்ந்தும் வெறுத்தும் வேவுபார்த்தும் கண்ணீர் வாரத் தழுவிக்கொண்டும் சலிக்காது ஆடும் ஒரு மாபெரும் மேடை.. என்ன எண்ணங்கள். காமத்தை கூர்ந்து கவனிப்பவன் அபத்தத்தின் பேரழகுள்ள கவித்துவங்களை மட்டுமே கண்டுகொள்கிறான் சுசி..

நான் அவளை இறுகப்பிடித்து அடக்கினேன் ”என்ன இப்ப..? .இங்கபார்...”என்றேன். அவள் கழுத்தைப்பற்றி முகத்தை மேலேதூக்கினேன். அவள் கன்னத்தில் இமைமுடி கண்ணீரின் பசையில் ஒட்டியிருந்தது.

”எனக்குப் பயமா இருக்கு...எனக்கு ரொம்ப பயமா இருக்கு...” என்று அவள் விசும்பினாள்

”சும்ம எதையாவது நெனைச்சுக்காதே...ப்ளீஸ்”

”என்னை விட்டுரமாட்டியே? சொல்லு” என் கைகளைப் பற்றினாள்.

”கண்டிப்பா இல்லை..சத்தியமா” என்று அவள் தலையை தொட்டேன்.

”உன் அம்மா மேல சத்தியமா சொல்லு”

அம்மா என்ற சொல்லில் நான் அதிர்ந்து அவள் மீதிருந்த பிடியை தளர்த்தினேன். அவள் என்னை மேலும் இறுக்கி என்னை நோக்கி முகம் தூக்கி ”சொல்லு…”என்றாள்

”அம்மா மேல சத்தியமா மாட்டேன்…போருமா”

அவள் சட்டென்று உடைந்து அழுதபடி என் தோளில் சாய்ந்தாள். அவள் உடல் குலுங்கியது. அவள் அழுதுகொண்டிருப்பதை வெறுமே பார்த்தேன். தன் மேல் சாய்ந்து அழும் ஒரு பெண்தான் ஆணை முழு ஆண்மகனாக உணர வைக்கிறாள்…

நான் அவளை மெல்ல தட்டினேன். அவள் பின்பக்கத்திரட்சியை கைகளால் கவ்வி இறுக்கி அவளை கழுத்திலும் சாய்ந்த இடது கன்னத்திலும் மென்மையாக முத்தமிட ஆரம்பித்தேன். அவள் மெல்ல பெருமூச்சுவிட்டாள். முகம் மலர்ந்தது. அழுகையும் பெண்களுக்கு ஓர் உறவுச்சம் போன்றது

பின்பு மெல்ல அழுகையடங்கி என் மார்பிலேயே முகம் சேர்த்து நின்றிருந்தாள்.நான் அவளை மெல்ல விலக்க எண்ணினேன். அந்த எண்ணம் என் உடலில் எபபியோ வெளிபப்ட அவள் என்னை மேலும் இறுக்கிக் கொண்டாள்.

”தள்ளிப்போ…நவீன் வந்திரப்போறான்” என்றேன் ரகசியமாக.

”நீ எனக்கு ஒரு கிஸ் குடு..அப்பதான்”

”வெளயாடாதே”

”குடுக்கிறியா இல்லியா” என்று அடம்பிடிக்கும் குழந்தைபோலக் கேட்டாள். கன்னத்தில் அந்த இமைமயிரை கையால் எடுத்தேன். மிக மெல்ல… பெண்சருமத்தின் மென்மைக்கு ஈடுஇணையே இல்லை

”கிஸ் மீ”

”இத்தனைநேரம் அதைத்தானே செய்தோம்”

”கிஸ்மீ” என்று பெருமூச்சுவிட்டாள்.

”என்ன இது?”

”எனக்கு வேணும்”

நான் அவளை அணைத்து உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்டேன். அவள் தாபத்துடன் முனகினாள். ‘ஐ லவ் யூ ஐ லவ் யூ” என்றாள். அது வேறு முத்தம். உதடுகள் சுடாகி உருகி இணையும் முத்தம். சூடு உடலெங்கும் பரவும் முத்தம்.

கனவிலிருந்து விடுபடுவதுபோல சட்டென்று பிடியை விட்டுவிட்டு நான் ஹாலுக்கு வந்தேன். நவீன் டிவியில் மூழ்கியிருந்தான். அவனைப்பார்த்தபோது சற்றே சங்கடமாக இருந்தது. சமீபநாட்களாக உருவாகிவரும் சங்கடம் அது.

”கௌம்புறியா? வை? ”என்றான் நவீன்

”ஆமாடா...போய் அர்ஜெண்டா ஒரு வேலை இருக்கு”

உள்ளிருந்து சந்திரா தலைமுடியை முடிந்தபடிசாவகாசமாக வந்து ”அக்கா கிட்டே நான் முடிஞ்சா நாளன்னிக்கு வரேன்னு சொல்லு. நாளைக்கு மிட் செமஸ்டர் டெஸ்ட் ஒண்ணு இருக்கு...”என்றாள்.

”சரி”என்றபடி வெளியே இறங்கினேன். நேராக லி•ப்டில் நுழைந்தேன். லிப்ட் இறங்கும்போது சட்டென்று எழுந்த மனவேகத்துடன் என் மண்டையில் ஓங்கி ஓங்கி அறைந்தேன்.

பின்பு திரும்பி கண்ணாடியில் தெரிந்த என்னைப் பார்த்தேன். அந்த அன்னியன் என்னுடன் நின்றிருந்தான், என்னை வியப்புடன் கசப்புடன் சலிப்புடன் பார்த்தபடி. ஓங்கி அறைந்து அவனை உஜக்கவேண்டும் போலிருந்தது. பின்பு நான் சோர்ந்து கண்ணாடியின் குளிர்பரப்பில் கன்னம்சேர்த்தேன். லி•ப்ட் இறங்கியது. மூழ்கி மூழ்கி நேராக பூமியின் ஆழத்துக்கே சென்று விடுவதுபோல.

பைககை நிறுத்திவிட்டு என் அறைக்குள் கதவைத்தட்டினேன். அம்மா

திறந்து ”சாப்பிடறியாடா?”’என்றாள்.

”வெளியே சாப்பிட்டுட்டேன்” என்றபடி உள்ளே சென்றேன்.

”சுசி சாப்பிட்டுட்டா...அவளுக்கு ஜெட்லாக் இருக்குபோலிருக்கு...தூங்கிட்டா”

நான் அம்மாவைப்பார்க்காமல் என் அறைக்குச் சென்று உடைகளைக் களைந்தேன். லுங்கியைக் கட்டிக் கொண்டு முகம் கழுவிவந்தேன். அம்மா என் அறைக்குள் நின்றிருந்தாள்.

”ம்?”என்றேன்

”ஒண்ணுமில்ல...”

நான் அவளை பார்க்கவில்லை. ஏதோ சொல்ல விரும்புகிறாள்

சட்டென்று தொடங்கினாள் ”சுசி தங்கமான பொண்ணுடா....இந்தமாதிரி ஒரு செல்லம் கெடைக்கிறதுக்கு கொடுத்துவச்சிருக்கணும்”

நான் ஒன்றும் சொல்லவில்லை

”அவளுக்கு மனசு கோணாதபடி நடந்துக்க...அவ்ளவுதான் நான் சொல்றது...”

”அப்டீன்னா?”

”சும்மா சொன்னேண்டா.... தாயில்லா பொண்ணு...அவளுக்கு இனிமே ஒரு மனக்கஷ்டம் வரப்பிடாது... ”

”இப்ப நான் என்ன செய்யணும்கிறே? அவளை தலையில தூக்கி வச்சுகிட்டு ஆடணும்கிறியா?”

”நான் பொதுவா சொன்னேண்டா”

”பொதுவா என்ன சொல்றது? வந்து இருபத்துநாலு மணி நேரம் ஆகல்லை, அதுக்குள்ள என்ன உபதேசம்?”

”டேய் நான்–”

”பேசாமப்போறியா இல்லியா? சும்மா வந்து தொணதொணண்ணு”

”நான் என்ன சொன்னாலும் உனக்கு வேப்பங்காயிதான்...நான் செத்தாத்தான் தெரியும் சொல்றதுக்கு அர்த்தம்.... இப்டி உன் வாயிலேருந்து பேச்சு கேட்டுட்டு எதுக்கு உசிரோட இருக்கணும்? செத்து தொலைஞ்சா போரும்”

”இப்ப எதுக்கு சாவு அது இதுண்ணு பேசுறே? அதுக்கு இங்க என்ன

நடந்துச்சு?”

”ஒண்ணும் நடக்கலை...உனக்கு இப்பல்லாம் என்னைக் கண்டாலே பிடிக்கிறதில்லை. என்னமோ ஜென்ம விரோதிமாதிரி பாக்கிறே. உன்ன மட்டும் நம்பி இருபதுவருசம் தனிமரமா வாழ்ந்தவ நான்... இப்ப நான் இருக்கிறதே உனக்குப் பிடிக்கலை”

கண்களை துடைத்தபடி அம்மா வெளியே சென்றாள். நான் எழுந்து பின்னால்சென்று அம்மா என்று கூப்பிட எண்ணி, அவ்வெண்ணத்தையே கூசி, தயங்கி அப்படியே நின்றேன்.

பின்பு விளக்குகளை அணைத்து கதவை மூடிவிட்டு கட்டிலில் வந்து படுத்து கண்களை மூடிக்கொண்டேன். இமைகள் துடித்துக்கொண்டே இருந்தன. தலையை தலைய¨ணையில் வைத்து உரசினேன். பின்பு எழுந்தமர்ந்து இருளில் ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். நெடுநேரம்

ஒரு தீவிரமான உலுக்கலுடன் சந்திரா என்னுள் நிகழ்ந்தாள் அப்போது. அக்கணம் நான் இருந்தது நான் உருவாக்கிய பிறிதொன்றிலாத பிரபஞ்சத்தில். அதில் அவளுடைய நிர்வாண உடலும் அதன் ஆயிரம் நளின அசைவுகளும் மட்டுமே எஞ்சியிருந்தன. சுசி நீ துள்ளல் என்றால் அவள் நிதானம். மண் அலுங்காமல் காடுகுலையாமல் பஞ்சுப்பொதியெனக் கால் தூக்கி வைத்துச் செல்லும் காட்டுயானையின் நிறைவு அவள். இருகரை நிரப்பி ஆழ்ந்த நீரோட்டத்தை மேல்பரப்பின் மென்மையான ஒளியால் மறைத்து ஓடும் பெருநதியின் முழுமை அவள்.

அன்றிரவு என்னுடன் அவள் இருக்க நீ ஒரு குற்றவுணர்வாக எங்கோ

நின்று என்னை பார்த்துகொண்டிருந்தாய், சுசி.

[5]

சுசி, ஒருகணம் பிளந்து பிளந்து பிளந்து பின்பு முடிவிலாத காலமேயாக ஆன இப்போது , என்னைச்சுற்றி சிரித்தும் சினந்தும் அழுதும் ஆர்ப்பரித்தும் சூழும் உன் ஆயிரம் கண்ணாடிப்பிம்பங்களை நோக்கி நான் சொல்லும் அழியாத வாசகம் இது, நான் உன்னைக் காதலிக்கிறேன்.

உன்னுடன் நகரைச் சுற்றிவந்த அந்நாட்களில் என்னுடன் எப்போதுமிருந்த என் மனத்தை அந்த ஒற்றைச் சொற்றொடராக வரையறை செய்துவிடலாம் சுசி. ஒவ்வொரு கணமும் நான் அதைச் சொன்னபடி உன்னுடன் இருந்தேன். நீ என்னருகே இல்லாதபோதுகூட நான் உன்னருகே இருந்துகொண்டிருந்தேன்.

காதல் என்றால் என்ன என்று என்னையே கேட்டுக்கொள்கிறேன். நம் ஆளுமை திரவமாக கரைந்து, புகையாக  உருவிழந்து இன்னொருவரை முழுமையாகச் சூழ்ந்துகொள்ளுதல் என்று சொல்வேன். ஆணவம் அழிந்து, தன்னிலை கரைந்து பிறிதொருவருக்காகவே ஒவ்வொரு கணமும் வாழ்ந்துகொண்டிருத்தல் என்பேன்.

சுசி நீ அதைப் புரிந்துகொள்வாயா? பெண்களுக்கும் காதல் என்றால் அப்படித்தானா? தெரியவில்லை. ஏன் என்னுடைய உணர்வுகள்தானா பிறருக்கும்? என்னுடையது ஒரு மனச்சிக்கலா? நான் சறுக்கிச் சென்று கொண்டே இருந்த என் பாதையை அஞ்சி உன்னை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டேனா? சமநிலையிழந்த  எந்த சிந்தனைகளையும் மனச்சிக்கல் என்று சொல்பவர்கள் உண்டு.  அப்படியானால் இதுவும் ஒரு மனச்சிக்கல். ஒரு மனநோய்

ஜோ என்ன சொல்வான்? காமம் என்று சொல்வான். அவனைப்போன்ற அறிவுஜீவிகள் எதையும் திட்டவட்டமாகப் புரிந்துகொள்ள முயல்பவர்கள். எல்லாவற்றையும் திட்டவட்டமாக ஆக்கிக் கொள்ள முடியாதென்பதையே அறியாதவர்கள். திட்டவட்டமாக ஆக்கிக் கொள்ளும் போது ஒவ்வொன்றும் எளிமைப்படுத்தப்படுகின்றன, நிலைக்க வைக்கப்படுகின்றன என்பதை அறியாதவர்கள். நீரை கையில் எடுக்க அதை பனிக்கட்டியாக உறைய வைக்க வேண்டும்....

காமமா? இருக்கலாம் சுசி... நீயும் அதையே சொல்லலாம். ஆனால் இல்லை இல்லை இல்லை என்றே நான் ஆவேசமாகக் கூவுவேன். காமத்தை நான் அறிந்திருக்கிறேன். காட்டுத்தீபோன்று சூழ்ந்தெரியும் காமத்தை. கடந்த மூன்று வருடங்களாக அதன் அனல்காற்றின் வெம்மையில்  ஒவ்வொரு கணமும் வாழ்ந்துகொண்டிருப்பவன் நான்.

காமத்தில் சுயசமர்ப்பணம் இல்லை. காமத்தில் தியாகம் இல்லை. காமத்தில் நாம் ஒரு கணம் கூட இல்லாமலாவதில்லை சுசி. காமத்தில் நாம் எதையுமே கொடுப்பதில்லை. அதில் நாம் ஒவ்வொரு கணமும் நம்மையே பார்த்துக்கோண்டிருக்கிறோம். சதுரங்கம் விளையாடும் ஆட்டக்காரன் இம்மியேனும் தன்னை மறப்பானா என்ன? அவன் முன் பரப்பப்பட்டிருக்கும்  சதுரங்கக்காய்கள் உண்மையில் பருவடிவம் கொண்ட அவனுடைய மனம்தான் அல்லவா?

காமம் ஒரு முடிவிலாத போர். அங்கே வெலவது ஒன்றே இலக்கு என இரு உடல்கள் போராடுகின்றன. உள்ளத்தை ஆயுதமாக ஆக்கி உடல் நிகழ்த்தும் சமர் அல்லவா அது? காமத்தில் முன்வைக்கபப்டும் ஒவ்வொன்றும் பிறிதொன்றே. காமத்தில் சொல்லபப்டும் ஒவ்வொன்றும் சொல்லப்படாத ஒன்றே. சுசி, பாம்பு எடுக்கும் படத்தை நம் ஏன் அஞ்சுகிறோம்? அது அழகானதுதான். ஆனால் அது விஷம் என்பதன் வேறு ஒரு தோற்றம்... காமத்தின் உச்சத்தில் நம் அகங்காரம் மட்டுமே மலைச்சிகரநுனி மீது தன்னந்தனிமையில் நிற்கக்

காண்கிறோம்… ஆனால்–

சுசி, நான் கற்ற கல்வியும் நான் வாசித்த நூல்களும் என்னை கைவிடுகின்றன. நான் சொல்லிச் சொல்¢ வந்து என்ன சொல்கிறேன் என்ற திகைப்பின் முனையில் நின்று கொண்டிருக்கிறேன். சுசி, இதை மட்டும் சொல்கிறேன். காமம் வண்ண ஆடைகளில், மின்னும் அணிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது. காதல் அம்மணக்குழந்தை போல களங்கமில்லாத அப்பட்டம்…

சுசி, அந்த நாட்களில் நான் உன்னை பின் தொடர்ந்துகொண்டிருந்தேன். உன் இடுப்பில் இருக்கும் குழந்தைபோல என்னை உணர்ந்துகொண்டிருந்தேன். உன் இடுப்பிலிருக்கும்போது குழந்தை உன்னை ஏதேனும் வகையில் பற்றியிருக்கிறது. உன் கூந்தலை உடை நுனியை…. நீ விட்டுவிடமாட்டாய் என அது அறியும். ஆனாலும் அதன் பலவீனத்தின் அச்சம் அப்படி பிடிக்கச் செய்கிறது.

நானும் உன்னை அப்படித்தான் பற்றியிருந்தேன். ஆனால் அதை என்னிடமிருந்தே மறைக்க ஆண்மகனின் மிடுக்கை நடித்துக் கொண்டிருந்தேன். அதை உணர்ந்து பெண்ணின் பேதமையை நீ நடித்தாய்….நாம் மிக நேசிக்கும் ஒருவருக்கு நாமளிக்கும் ஆகச்சிறந்த பரிசே அவர் மிக விரும்பும் ஒரு நடிப்பைத்தான் இல்லையா?

உன்னை நான் மகாபலிபுரத்துக்குக் கூட்டிச்சென்றேன். காலமேயாகி நின்ற சிற்பங்களின் நடுவே உன் பறக்கும் துப்பட்டா என்னை தொட்டுத்தொட்டு வருடிச்செல்ல உன்னுடைய நிழல் என்மேல் விழுந்து என்னை அணைத்துக்கொள்ள நடந்தபோது அக்கணத்தில் அதை என் உயிர்ச்சாரமாக உணர்ந்தேன். அப்போதே அதைச்சொல்லவேண்டுமென்று துடித்தேன். நூறுமுறை வாயெடுத்தேன்

”என்ன?”என்றாய்

”ஒண்ணுமில்லை”

”நீ என்னமோ சொல்ல வர்ர மாதிரி இருந்தது”

”இல்லியே”

நான் எதை அஞ்சினேன்? எதற்காக நான் உன்னைச் சரணடைந்தேன்? ஆனால் உன்னில் நான் உணர்ந்த ஓர் அபாரமான தூய்மை என்னை அஞ்சவைத்தது. உன்னை நெருங்க முடியாமல், விலகவும் முடியாமல், உன்னுடனேயே வந்து கொண்டிருந்தேன். சுசி, அப்போது நீ என்னைத் தொட்டிருந்தால் நீர்த்துளி சிறு தொடுகையில் உருவழிவதுபோல் நான் உடைந்திருப்பேன்.

காரில் திரும்பிவரும்போது நீ உன் தனியுலகில் கண்ணிமைகள் சரிய அமர்ந்திருந்தாய். பெருமூச்சில் உன் மார்புகள் ஏறி இறங்கின.

நான் ”என்ன?” என்றேன்

”’என்ன?’ என்றாய், சிறு எரிச்சலுடன். மிக அந்தரங்கமான ஓர் அறைக்குள் என் குரல் புகுந்துவிட்டதென...

”இல்லை…சட்டுன்னு வால்ட்டேஜ் குறைஞ்சிட்ட மாதிரி இருக்கு”

”ஒண்ணுமில்லியே”

”அப்டீன்னா சரி”

சற்றுநேரம் கழித்து ”அருண், காரை கடல்ஓரமா கொண்டுபோய் நிப்பாட்டுறியா?” என்றாய்

நான் காரை ஓரமாகக் கொண்டுபோனேன். அணைத்துவிட்டு கதவில் கையை வைத்தேன்.

”நோ…பிளீஸ்”என்றாய் ”நான் உங்கிட்ட பேசணும்”

நான் மனம் படபடக்க பெருமூச்சுவிட்டேன். நீ என்னை நிராகரிக்கப்போகிறாய் என்றுதான் அக்கணம் என் நெஞ்சு கற்பனை செய்தது. சுசி, அது சரிதான் என்று எண்ணி என் அகம் ஆறுதல் கொண்டதுஎன்பதை அறிவாயா? ஆம், நீ என்னை நிராகரிக்கவேண்டுமென அப்போது ஆசைப்பட்டேன். அதன்பின் நான் எந்த தடையும் இல்லாமல் சந்திராவிடம் திரும்பிச்செல்ல முடியும். அங்கே இயல்பாக இருக்க முடியும். முன்பு போல… சுசி, மனம் என்பது ஓயாது மாறும் பாவனைகளின் பெருக்கு மட்டும்தானா?

நான் காரின் கண்ணாடியை தாழ்த்தினேன். கடற்காற்றில் உன் கூந்தல் பறத்து அலைந்தது. கையால் அதை மெல்ல பற்றியபடி நீ பேசாமலேயே அமர்ந்திருந்தாய்

நான் கணங்களாகக் காத்திருந்துவிட்டு மெல்ல ” என்ன?”என்றேன்

நீ முகம் தூக்கியபோது உன் இமைகளில் கண்ணீரின் பிசிறுகள் மின்னுவதைக் கண்டேன். நான் கனிந்து உன்னை நோக்கிச் சரிந்தேன்.”என்ன சுசி?”

நீ மெல்ல விசும்பி அழ ஆரம்பித்தாய். உன்னை என் மனதால் அணைத்துக்கொண்டவனாக கைகள் ஸ்டீரிங்கில் நடுங்க நான் அமர்ந்திருந்தேன் ‘சுசி.. ப்ளீஸ்…சுசி ப்ளீஸ்…”

நீ அழுகையை அடக்கும்போது உன் கழுத்து குழிந்து மூச்சு விம்மி நெஞ்சு எழுந்தமர்ந்தது. டாஷ்போர்டில் இருந்து எடுத்த காக்கிதக் கைக்குட்டையால்  கண்ணையும் முகத்தையும் துடைத்தாய்

”ப்ளீஸ்.. சுசி” என்றேன்

”நான் நேத்தெல்லாம் தூங்கவேயில்லை ”என்றாய்

”ம்?”

”நான் திருப்பி லண்டன் போக விரும்பலை அருண்”

”சரி இங்க இரு..இங்கியே படி…இந்த ஊர் உனக்கு ரொம்ப

பிடிச்சிருக்கே...அப்றமென்ன?”

நீ மௌனமாக ஒருகணம் இருந்துவிட்டு ”நான் உங்கிட்டே நேரடியாகவே கேக்கிறேனே...கேக்காம என்னால இருக்கமுடியல்லை...என்னை நீ தப்பா நெனைக்க மாட்டியே”

என் முகம் வலிப்பு கண்டவன் போல விகாரமடைந்தது என நான் உணர்ந்தேன். அந்தக் கணத்தில் சட்டென்று கார்க்கதவைத் திறந்து நான் ஏன் வெளியே ஓடவில்லை என்றால் என் உடல் செயலற்றிருந்ததனால்தான்.

”ஏன் அருண்?”

”என்ன?” என் குரல் கிசுகிசுப்பாக இருந்தது.

”ஏன் அப்டி ஒருமாதிரி ஆயிட்டே?”

”ஒண்ணுமில்லியே...சொல்லு”

”நான் நேரடியா கேக்கிறேனே” என்றாய். ஆனால் துப்பட்டாவை கைகளால் சுழற்றியபடி பிய்த்தபடி சில நிமிடங்கள் தவித்தபின் சட்டென்று தலை தூக்கி ”அருண் உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?”என்றாய்.

நான் என் அலைகள அனைத்தும் அடங்கி அப்படியே விழி பிரமித்து

உன்னையே பர்த்திருந்தேன். காலம் அறியாத ஒரு கருங்கற்சிற்பம்…

”ப்ளீஸ்…” என்ற நீ சட்டென்று உடைந்து ”புடிக்கல்லைன்னு சொல்லிடாதே அருண்.. ப்ளீஸ்” என்றாய்

நான் என் கையை உன் தோளைத்தொடுவதற்காக நீட்டினேன். நீ அப்படியே பாய்ந்து என்னை கட்டிக்கொண்டு என் முகத்தில் வெறியுடன் முத்தமிட்டாய். உன் முத்தங்களில் நான் மூச்சுத்திணறினேன். உன் மெல்லிய கரங்கள் கொடிபோல என் தோளை சூழ்ந்திருந்தன.

உன்னை பிடித்து விலக்கினேன். என் கன்னங்களும் கழுத்தும் உன் கண்ணீரால் நனைந்திருந்தன. சுசி, சந்திரா என்னைத்தொடும்போதெல்லாம் அவள் உடலையன்றி எதையும் நான் அறிவதில்லை. ஆனால் அக்கணத்தில் நான் உன் உடலை அறியவேயில்லை.

”என்ன இது? இது ரோடு…யாராவது பாத்தா…”என்றேன்.

”ஏன்? நாம லவர்ஸ்தானே?” என்றபடி துப்பட்டாவால் மூக்கையும் கண்களையும் துடைத்துக் கொண்டாய்.

எனக்கு சிரிப்பு வந்தது. ”இந்தியாவிலே லவர்ஸ் தவிர வேற யாருவேணுமானாலும் சேந்து இருக்கலாம்” என்றபின் காகிதக் கைக்குட்டையை எடுத்து என் முகத்தை துடைத்தேன் . உன்னிடம் ”கண்ணீர்”என்றேன்

”நீயும் அழுதியா?” என்றாய்.

”உன்னோட கண்ணீர்”

சட்டென்று மலர்ந்து சிரித்தாய். உன் சிரிப்பு என்னையும் மலரச்செய்தது.

அப்போது ஒன்றை உணர்ந்தேன். உன்னை முதலில் கண்ட தருணம் முதல் நான் உன்னை போதிய அழகில்லாதவளாகவே எண்ணிக் கொண்டிருந்தேன் என. உன் இளமைதான் என் கண்களை நிறைத்தது. அதுதான் என்னை உன்னுடன் சேர்ந்து துள்ளச் செய்தது…ஆனால் உன் உடல் குறித்த ஓர் ஏமாற்றமும் அதனுள் இருந்துகொண்டே இருந்தது. உன் தோள்களும் புஜங்களும் சிறுமிகளைப்போலிருந்தன. உன் மார்பகங்கள் மிகச்சிறியவை. உன் பின்பக்கமும் தொடைகளும் எல்லாமே சிறியவை. மாநிறத்தில் ஒரு ஒடுக்கமான மரப்பொம்மை போல…

அசைவிலாது நீ இருக்கும்போது உன் அழகெல்லாம் வடிந்துபோய் மிகச் சாதாரணமாக ஆகிவிடுகிறாய். ஆனால் நீ அப்படி இருக்கும் கணங்களே குறைவு. துள்ளும்போது சிரிக்கும்போது கொஞ்சும்போது உன்னுள் இருந்து ஓர் ஒளி எழுந்து உன் கண்களில் சிரிப்பில் முகத்தில் பரவுகிறது. உன் கரங்களின் அசைவில் கழுத்தின் நளினத்தில் பேரழகு ஒன்று குடியேறுகிறது. சுசி, உன் சிரிப்பில் ஜொலித்து என் முன் நின்றாய். அப்போது அதுவே அழகு அது மட்டுமே பெண்ணழகு என்று எண்ணிக் கொண்டேன்…

என் பார்வையை உணர்ந்து ஒரு கணம் நாணி வாய்க்குள் சிரிப்புடன் நீ பார்வையை விலக்கிக் கொண்டாய். நான் பெருமூச்சுடன் என் உஅலை இலகுவாக்கிக் கொண்டேன். கையில் காரின் சாவி இருந்தது, ஏனோ

அதைப்பிடுங்கி விரல்களால் உருடிக்கோண்டிருந்திருக்கிறேன். சாவியை திருப்பி செலுத்தினேன்.

சுசி , அப்போது நான் தெளிவிலாது யோசித்ததை பின்னர் பலமுறை சிந்தனைசெய்து வகுத்துக் கொண்டிருக்கிறேன். பெண்ணின் அழகு என்பது ஆணின் கண்களால் உருவாக்கப்படுவது. பார்த்ததுமே நம்மைக் கவரும் பெண்ணின் அழகு மெல்ல மெல்ல நம் கண்ணில் குறைய ஆரம்பிக்கும். அந்த அழகு பிறரால் உருவாக்கப்பட்டு நமக்கு அளிக்கப்படுவது. பார்த்ததுமே நம்மைக் கவராத பெண்ணை நாம் விரும்பி அவ்விருப்பத்தாலேயே அவளில் மெல்ல மெல்ல கண்டடையும் அழகு அப்பிரியத்துடன் சேர்ந்து வளரக்கூடியது. அது நாம் மட்டுமே அறிந்தது. நம்மாலேயே உருவாக்கப்படக்கூடியது.

சுசி, இப்பூவுலகில் இதுவரை மலர்ந்த பெண்களிலேயே நீதான் பேரழகி என்று சற்றும் ஐயமின்றி நான் உணர்ந்த தருணங்கள் எனக்காக உருவாகிக் கொண்டிருந்தன அப்போது...

”அருண் ஐ யம் ஹேப்பி...ஐ யம் வெரி வெரி ஹேப்பி டுடே...” என்றபடி என்னருகே வந்து என் தோளில் சாய்ந்துகொண்டாய் ”அருண் இனிமே எனக்கு ஒண்ணுமே கவலை கெடையாது... இன்னிக்கு என் லை•ப்லே ஒரு கோல்டன் டே ..ரியலி”

நான் உன்னை மெல்ல அணைத்து உன் உதடுகளில் முத்தமிட்டுவிட்டு விட்டு காரைக் கிளப்பினேன். உன் உதடுகள் மிகச்சிறியவையாக , மன எழுச்சியால் அதிர்ந்துகொண்டிருப்பவையாக இருந்தன. உன் மூச்சுக்காற்றில் மெல்லிய உப்புமணம். உன் கன்னங்களில் கண்ணீரின் அப்சை ஒட்டியது.

”பேசிட்டு போலாமே” என்றாய். சுதி தாழும்போது உன் குரல் பேதைக்குழந்தையின் மழலையாக ஒலிக்கிறது.

”இல்ல இருட்டிட்டுது… ” கார் சீறி அதிர்ந்து திரும்ப, ஒளிபட்ட மரங்கள் விலகி வழிவிட்டன.

காரில் செல்லும்போது நீ பெருமூச்சுடன் ”மகாபலிபுரத்துலே கடற்கரையிலே நடக்கிறப்ப நான் என்னென்னமோ நெனைச்சுட்டேன் தெரியுமா “என்றாய்

”என்ன?”

”உனக்கு என்னைப்புடிக்கல்லைன்னு…”

”ஏன்?”

”நீ என் கூட வர்ரப்ப அப்டியே வேற எங்கோ போய்ட்டது மாதிரி இருந்தது. சங்கடமான எதையோ நெனைச்சுக்கிடறதுமாதிரி.. எனக்குப்பிடிக்காத எதையோ சொல்லவந்தே…சொல்லல்லை.”

”அதெல்லாம் ஒண்ணுமில்லை” என்றேன். என் முகத்தை அவள் பார்க்கமுடியாத அரை இருள்.

”நீ வேற ஏதோ பெண்ணை நெனைச்சுக்கிட்டேன்னு நான் கற்பனை பண்ணினேன்”

என் முகத்தை என்னிடமிருந்தே மறைக்க விரும்பினேன். எதிரே ஒரு லாரி பேரோலத்துடன் கடந்து சென்றது.”நீ என்னென்னமோ கற்பனை பண்றே” என்றேன்.

”என்னை சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கோ அருண்…படிக்கறதெல்லாம் ஒண்ணும் எனக்கு பிடிக்கல்லை. நல்ல ஒரு ஹவுஸ் வை•பாத்தான் இருக்கப் புடிச்சிருக்கு எனக்கு. கொழந்தையெல்லாம் பெத்துகிட்டு குங்குமம்லாம் வச்சுகிட்டு…”

”மெட்டி ஒலி?”

”சீ போ”என்று என்னை அடித்தாள் ”அது ரொம்ப நல்ல சீரியல்…உனக்கு என்னமோ புடிக்கலை”

”நான் எங்க அதைப் பாத்தேன்?”

”பின்ன உனக்கு எதில இண்ட்ரெஸ்ட்?”

”என்னோட டிராவல் பிசினஸ்.. ”

”பிசினஸா?

”பின்ன தொடங்கியே ஒண்ணரைவருஷம்தான் ஆகுது…அம்மாகிட்ட

வாங்கின பணத்திலே வண்டி ஒடுது... இண்ட்ரெஸ்ட் இல்லேன்னா என்ன பண்றது?”

”நான் உனக்கு டௌரி தரேனே”

”’அது சரி.. சீர் செனத்தி...தம்பளத்துல பூ பழம் பூசணிக்கா...எல்லாம்...”

”ஹௌ நைஸ்! ஒரு பொண்ணு அவ ஹஸ்பெண்டுக்கு பணம் குடுக்கிறதுன்னா...”

”உன்னோட சிந்தனையே ஒருமாதிரித்தான் இருக்கு”

”நான் போனதுமே அத்தைகிட்டே கிட்டே சொல்லிடுவேன்...”

”அய்யோ அப்ப நாளைக்கே கல்யாணமா?” என்றேன்.

கூந்தலை ஒதுக்கியபடி பின்னால் சாய்ந்து சிரித்தாய். சிரிப்பை உன்னால் அடக்கவே முடியவில்லை.

அன்றிரவு வீட்டில் சிரிப்பாக நுரைத்துக்கொண்டிருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததுமே அம்மா நாம் இருவரையும் பார்த்துவிட்டு புன்னகையுடன் உள்ளே சென்றாள். நீ சமையலறைக்குள் சென்று  அக்கணமே சொல்லிவிட்டாய் என்று தெரிந்தது. ஆம், அம்மாவிடம் பேசிவிட்டுத்தான் நீ வந்திருந்தாட்

அம்மா உன்னைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டாள். இழுத்துச்சென்று பூஜையறைக்குக் கொண்டுபோய் திருநீறு போட்டுவிட்டாள். அவள் பதறிக்கொண்டிருப்பது போலிருந்தது.

மிக நுட்பமான ஒரு பதற்றம் என்னையும் ஆட்கொண்டிருந்தது. நான் என் அறைக்குச் சென்று உடைமாற்றினேன். அறையின் விளக்கைப் போடவில்லை. வெளியே உங்கள் இருவரின் சிரிப்புகள் விளங்காத பேச்சொலிகள். என் மனம் தவில் ஒலியில் சுவர்கள் போல இனம் புரியாத அதிர்வை உணர்ந்து கொண்டிருந்தது. அறைக்குள் இருளிருந்ததனால் நான் ஒளிந்திருப்பது போலிருந்தது. விளக்கைப் போட்டால் என்னை நானே பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும்....

அப்போது சந்திராவின் அழைப்புவந்தது. அதன் முதல் ஒலித்துளியைக் கேட்டதும் அதைத்தான் நான் எண்ணி எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் என உணர்ந்தேன்.

மேஜைக்கண்ணாடிப் பரப்பில் ஒளிவிட்டு அதிரும் செல்போனையே பார்த்துக்கொண்டு செயலிழந்து நின்றேன். பின் மெல்ல எடுத்து கம்மிய குரலில் ‘ஹலோ”என்றேன்

”என்ன இன்னைக்கு •போனையே காணும்?” என்று சந்திரா உற்சாகக்குரலில் கேட்டாள்.

”வெளியே போயிருந்தேன்...”

”அவ கூடயா?” என்று சந்திராவின் குரல் இறுகியது

”இல்ல...பிஸினஸ் விஷயமா...”

”ஓ” அந்த இறங்கும் தொனியை நான் நன்றாக அறிவேன். என் குரலில் இருந்து சந்திரா அறிந்துகொள்ள முடியாத எதுவுமே இல்லை.

”நான் அங்க வரேன், நாளைக்கு”

”ம்”

மேற்கொண்டு என்ன பேசுவதென புரியவில்லை. ”நவீன் இருக்கானா?” என்ன அற்பமான கேள்வி ”இன்னைக்கு ஒரே அலைச்சல்...” என்ன பேசுகிறேன்... ”இன்னைக்கு காலேஜ் போகலையா?”

”இல்லை...”

”ஏன்?”

”தலைவலி”

சொற்களில்லாமல் இரு தொலைபேசிகளுக்கு  அப்பாலும் இப்பாலும் சில கணங்கள் நின்றிருந்தோம்.

”வச்சிடவா?”

நான் ”ம்ம்” என்றபின் அவசரமாக ”இப்பதான் வந்தேன், சாப்பிடல்லை” என்றேன்

”ம்ம்” என்றாள்

சந்திராவுடனான என் தொலைபேசி உரையாடல்கள் எல்லாமே அப்படித்தான் ஆகிக்கொண்டிருக்கின்றன என்பதை அப்போது எண்ணிக்கோண்டேன். ‘ம்ம்’ தான் அதிகமும் பேசும் வார்த்தை. ஆரம்பநாட்களில் சொற்களை அள்ளி இறைத்து பேசிக்கொண்டவற்றை விட அதிகமான விஷயங்களை அந்த எளிய முனகலோசை இப்போது தெரிவிக்கிறது… அப்போது பேசியவை எல்லாம் உரையாடல்களே அல்ல. சொற்களின் மணலுக்குள் சொல்ல வேண்டியதை புதைத்து வைத்து தேடி எடுத்துக்கொள் என்று சொல்லும் விளையாட்டு மட்டுமே..

அறைக்கு வெளியே அம்மா உன்னை அழைத்துவந்தாள். பளபளக்கும் காஞ்சிபுரம் பட்டு உடுத்து நகைகளும் பூவுமாக. உன் குழந்தை முகம் மட்டும் அப்படியே இருந்தது. கண்களில் சிறுமிகளுக்கு மட்டுமே சாத்தியமான உற்சாக ஒளி…

நான் ”கூப்பிடறேன்”என்று மெல்லச் சொன்னபடி செல்லை அணைத்துவிட்டு எழுந்தேன்

”எப்டிடா இருக்கா?” என்றாள் அம்மா ”மகாலட்சுமி மாதிரி இருக்கா

இல்ல?”

நான் புன்னகை செய்தேன். நீ என்னை கண்களைத்தூக்கிப் பார்த்தாய். உன் சிரிப்பை அடக்க உதடை உள்ளே மடித்திருந்தாய்.

”கண்ணுசுத்தி போடணும்…”என்று அம்மா சொன்னாள் ”நாளைக்கு காலம்பற கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போய்ட்டு வரணும்டா”

”சரி” என்றேன்.

செல் மீண்டும் அதிர்ந்தது. அம்மாவின் கண் அரைக்கணம் அதை வந்து தொட்டுச் சென்றது. அதை எடுத்து சைலண்ட் மோடில் போட்டேன்.

”குளிச்சிட்டுவா…சாப்பிடணும்ல?” என்றாள் அம்மா

நான் பெருமூச்சுடன் குளிக்கச் சென்றேன். நீரை திறந்து விடு ஷவரின் கீழே நின்றுகொண்டிருந்தேன். எத்தனை நேரம் தெரியவில்லை. பின்பு அவசரமாகக் குளித்து வெளியே வந்தேன்.

அம்மா கதவருகே வந்து ”சாப்புடுறியாடா?”என்றாள்.

திரும்பாமல் ‘ம்’ என்றபின் தலை துடைத்த துவாலையை நாற்காலிமீது போட்டேன். அம்மா வந்து அந்த துண்டை எடுத்துச் சென்றாள். லுங்கியையும் ஜிப்பாவையும் அணிந்துகொண்டேன். செல் •போனில்

எட்டு மிஸ்டு கால் இருந்தது.

நான் டைனிங் டேபிளுக்குச் சென்றபோது உள்ளே நீ சமைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

”ஏன் அவளுக்கு உங்க சமையல் புடிக்கலியா? அவளே சமைச்சுக்கிறா?”

”புருஷனுக்கு தன் கையாலேயே சமைக்கணும்னு நெனைக்கிறா…. அதென்ன தப்பா?” என்றாள் அம்மா. அம்மா அப்படி வேடிக்கையாக பேசும் வழக்கமே இல்லை. ஆகவே அது செயற்கையாக இருந்தது. நான் புன்னகையுடன் டைனிங் டேபிளில் அமர்ந்துகொண்டேன்.

நீ பெசரெட் கொண்டுவந்து போட்டாய். அது சூடாக மணமாக இருந்தது. நான் உன் சிரிக்கும் கண்களைப் பார்த்தேன்

”உங்க ஓட்டலிலே ஆந்திர ஐட்டம்லாம் உண்டா?”

”சௌத் இண்டியன் ஐட்டம் எல்லாமே உண்டு…கேரளா வெள்ளையப்பம் ஒருவாட்டி செய்யறேன். ஸ்ட்யூ சேத்து சாப்பிட்டா பிரமாதமா இருக்கும்”

இனிய சிறி பேச்சுகள். சிரிப்புகள். ஆனால் என் நினைவின் ஒரு பகுதி என் அறைக்குள் அதிர்ந்து கொண்டே இருந்த என் செல்போனில்தான் இருந்தது.

சாப்பிட்டு கைகழுவி என் அறைக்கு வந்தபோது நீ அம்மா மடியில்

படுத்துக்கொண்டு டிவி பார்ப்பதைப்பார்த்தேன். என் அறைக்குள் சென்று கட்டிலில் படுத்துக்கொண்டு ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டேன். செல்போனை மறந்தவன் போல பாவனைசெய்துகொண்டேன்.

மீண்டும் செல்போன் ஒளிவிட்டது. அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். பின்பு விளக்கை அணைத்து இருளில் படுக்கையில் படுத்துக் கொண்டேன். அதன் ஒலி வேறு எங்கிருந்தோ வருவது போலிருந்தது.

இருளில் செல்போன் பிடிவாதமாக சுடர்ந்தது. அதன் வைபரேட்டர் அதிர டீபாயில் வண்டுபோல பின்பக்கமாக நகர்ந்து மெல்லச் சுழன்றது. அது நின்றபோது நான் நிம்மதியுடன் கண்களை மூடிக்கொண்டேன். மீண்டும் அதன் அழைப்பு. மீண்டும் மீண்டும்.

பொறுமை இழந்து எழுந்து அதை எடுத்தேன். ஒருகண நேரத்து தயக்கத்துக்குப்பின் அதை அணைத்தேன். அதை சோபாமேல் விட்டெறிந்துவிட்டு மெத்தை மீது பாய்ந்து படுத்துக்கொண்டேன். பின் தலையணையை எடுத்து முகத்தின்மீது வைத்துக் கொண்டேன். கரகரவென்று மின் விசிறி என் மீது சுழன்றுகொண்டிருந்தது போல் உணர்ந்தேன்.

[6]

சுசி, காலையில் நான் எழுந்தபோது நீயும் அம்மாவும் கோயிலுக்குச் சென்றுவிட்டிருந்தீர்கள். அம்மா டேபிள் மீது குறிப்பு வைத்திருந்தாள்.நான் ஸிட்-அவுட்டில் லுங்கியுடன் அமர்ந்து பிளாஸ்கில் இருந்த காபியை குடித்துக் கொண்டு ஹிண்டு வாசித்துக்கொண்டிருந்தபோது கார் வந்து உள்ளே நுழைந்தது. நீ ஓட்டிவர அம்மா அருகே இருந்தாள். இருவரும் இறங்கி என்னை நோக்கி வந்தீர்கள். நீ பட்டுப்புடவையுடன் இருந்தாய். நெற்றியில் விபூதி

அம்மா ”திவ்யமான தரிசனம்டா” என்றபடி என்னருகே வந்து என் நெற்றியில் விபூதி போட்டாள். நான் உன்னைநோக்கி புன்னகைசெய்தேன். சுசி, தன் அம்மாவையும் மனைவியையும் ஒரே சமயம் சேர்ந்து காணும்போது ஆண் ஒரு விசித்திரமான மனக்குழப்பத்தை அடைகிறான். அதை என்னால் உனக்கு விளக்க முடியாது…

”என்ன மாதிரி சாமி கும்பிடுறா தெரியுமா? அப்டியே எவ்வளவு நேரம் பிரார்த்தனை பண்ணினா….லண்டன்லே வளந்த பொண்ணு மாதிரியா இருக்கா?” என்றபடி அம்மா சூரல் நாற்காலியில் அமர்ந்தாள்.

”ஆமா, செவத்தம்பட்டிக் கருப்பாயி மாதிரி இருக்கா” என்றேன். ஏனென்றால் அந்தக்கணம் நான் அதைத்தான் சொல்லவேண்டும் என அம்மா விரும்புகிறாள் என அத்தனை துல்லியமாக நான் அறிந்திருந்தேன்.

”அது யாரு?” என்று ஆவலாகக் கேட்டாய்

”என்னோட ஒரு மொறைப்பெண்…அவளை விட நீ பெட்டர்னு படுது” என்றேன்

நீ புரிந்துகொள்ளாமல் ”அருண்…கோயிலிலே பெண்கள்லாம் தாலிய தொட்டு கும்பிட்டு குங்குமம் எடுத்து தலியிலே வச்சுகிடறாங்க…எனக்கு அதைப்பாக்க ரொம்ப புடிச்சிருக்கு…”

நான் அம்மாவைப்பார்க்க அம்மா மெல்லிய புன்னகையுடன் மெல்ல உள்ளே சென்றாள்

”நானும் அதேமாதிரி வச்சுகிடணும்”என்றாய் அந்தரங்கமாக. உன் முகம் சுடர் போலிருந்தது.

”இதெல்லாம் இப்ப இப்டித்தான் இருக்கும்….அப்றம் தெரியும்”

”என்ன தெரியும்? அருண் என்னைப்பொறுத்தவரை ஹேப்பி மேரீட் லை·ப் மட்டும்தான் எல்லாமே…வேற எதுவுமே முக்கியம் கெடையாது”

நான் புன்னகைசெய்தேன். பின்பு ”இன்னிக்கு உன்னை ஒரு முக்கியமான எடத்துக்கு கூட்டிட்டுப்போகப்போறேன்”என்றேன்.

”எங்க?”

”வா சொல்றென்” என்றபின் ”அம்மா கிட்டே சும்மா என்கூட வர்ரதா மட்டும் சொல்லு”என்றேன்.

”ம்” என்றாய். ”காபி சாப்பிட்டீங்களா?”

‘ங்களா’ என்ற உன் அழைப்பை உணர்ந்து நான் உன் கண்களைச் சந்தித்து அவ்ங்கே வைரங்கள் போலச் சுடர்ந்த சிரிப்பை எடுத்துக் கொண்டேன் ”ம்ம்” என்றேன்

”டிபன் இப்ப ரெடிபண்ணிடறேன்…” என்று உள்ளே சென்றாய்

காரில் சிந்தாரிப்பேட்டையின் சிறிய சந்துகள் வழியாக ஊடுருவிச்சென்றேன். நீ வெளியே பார்த்துவிட்டு ”ஏன் அருண் இவ்ளவு நேஸ்டியா இருக்கு?”என்றாள்.

”மெட்ராசிலே முக்காவாசி எடம் இதுமாதிரித்தான் இருக்கும்” என்றேன்.

”நாம இங்க யாரைப்பாக்கப்போறம்?”

”சொல்றேன்”

காரை நிறுத்தி பூட்டிவிட்டு அவளிடம் ”வா ”என்று சொல்லிவிட்டு நடந்து சென்றேன். அவள் என் பின்னால் சாக்கடைகளில் கால்படாமல் தாவித்தாவி வந்தாள். மனிதர்கள் தோள்கள் முட்டும் நெரிசலில் ஒருவரை ஒஉவர் தாண்டிக்கொண்டிருந்தார்கள்.

பராமரிப்பில்லாத மாடிவீட்டின் பக்கவாட்டில் மேலேசென்ற சிறிய படிகளில் ஏறியபோது நீ என் பின்னால் வந்தாய்.

”அருண் இங்க நாம யாரை பாக்கப்போறம்?”

”உன் மாமனாரை…”என்றேன்.

”என்னது?” என்றாய். நான் உன்னிடம் இன்னும் அதிர்ச்சியை எதிர்பார்த்திருந்தேன்.

”என் அப்பாவை” என்ற படி நான் உன்னை கூர்ந்து பார்த்தேன்.

”மாமா உயிரோடவா இருக்கார்?” என்றாய் குழப்பத்தில் கண்கள் சுருங்க.

”ஆமா” என்றேன் ”அதனாலதானே அம்மா பூவோட பொட்டோட இருக்கா”

”இங்க ஏன் இருக்கார்?”

”அம்மாவை அவர் பிரிஞ்சிட்டார்…சொல்லப்போனா அம்மா அவரை பிரிஞ்சிட்டா…”

”ஏன்?”

”காலேஜ்ல இருந்து மத்தியான்னம் வீட்டுக்கு வந்திருக்காங்க... வேலைக்காரிகூட அப்பா படுத்திருக்கிறதைப் பாத்துட்டாங்க. அந்த நிமிஷமே வெளியே போகச்சொல்லிட்டாங்க. அதுக்கப்றம் அப்பா மொகத்திலேயே முழிக்கலை. யார்யாரோ என்னென்னவோ சமாதானம்லாம் சொல்லிப்பாத்தாங்க. அம்மா மசியலை. அப்ப எனக்கு நாலு வயசு...அதிலேருந்து அம்மா தன்னந்தனி தான். தனியாத்தான் வேலைபாத்து சம்பாதிச்சு என்னை வளத்தாங்க”

”சொந்தக்காரங்க?”

”அம்மா அப்பா ரெண்டுபேரும் லவ் மேரேஜ். அப்பா வேற ஜாதி”

நீ பெருமூச்சுவிட்டாய். ”அருண், நாம திரும்பிப் போயிடலாமே”

”ஏன்?”

”எனக்கு இப்ப இவரைப்பாக்க புடிக்கல்லை...ப்ளீஸ்...”

”இல்ல, வந்தாச்சு பாத்திட்டு போயிடலாம்”

”நோ...”என்று சீறினாய். உன் முகம் தீயைப் பிரதிபலித்தது.. ”நோ

அருண்.. நான் இவரைப்பாக்க விரும்பல்லை....தன்னை நம்பி வந்த ஒருத்திக்கு துரோகம்செய்றதுன்னா...மனுஷனா இவரு? நான் வரமாட்டேன்”

”நீ வர்ரே...”என்றேன் திடமாக. ”நான் சொன்னா கேக்கிறதுதான் எனக்குப் பிடிக்கும்...”

நீ கண்களைத்தாழ்த்தி ”சரி” என்றாய். என் பின்னால் மெல்லிய காலடிகளுடன் கடுத்த முகத்துடன் வந்தாய்.

கட்டிடத்தின் மூன்றாம் மாடியில் உள்ளே சென்ற வராந்தாவின் முடிவில் அப்பாவின் வீடு இருந்தது. நான் சென்று கதவை மெல்ல தட்டினேன்

பழைய புடவை மீது அவசரத்துக்கு எஉத்துப்போட்ட டர்க்கிடவலுடன் சித்திவந்து கதவை திறந்தாள். ஒரு கணம் உன்னைப்பார்த்துவிட்டு ”வாப்பா” என்றாள்.

நான் உள்ளே நுழைந்தேன். நீ சுரைப்பற்றி ஒற்றைக்காலில் நின்று குதிகாலுயரச் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே வந்தாய். உன் வளையல்கள் குலுங்கும் ஒலி மட்டும் மௌனத்தில் ஒலித்தது. சித்தியின் கண்கள் உன் மீது பதிந்திருந்தன.

கீழ்நடுத்தரவற்கத்துச் சிறிய அறை. சென்னையில் அப்படிப்பட்ட அறைகளுக்கு என்றே ஒரு தோற்றம் உண்டு. பலவகையான பொருட்கள் கிடைத்த இடத்தில் எல்லாம் அடைந்திருக்கும். அங்கு வாழ்பவர்கள் அவற்றினூடாக உள்ள இடத்தை மடுமே காண பழகியிருப்பார்கள். வருபவர்களின் மனம் அங்கே உள்ள பொருட்களில் முட்டிக்கொண்டு

தடுமாறும்....

அடுக்கி வைக்கபப்டிருந்த பிளாஸ்டிக் நாற்காலிகளை எடுத்துப்போட்டு அமரச்சொன்னாள் சித்தி. டிவி மீது ஒரு பொம்மை நாய் இருந்தது. பூவேலை செய்யப்பட்ட படுதா தொங்கிய உள் அறைக்குள் இருந்து சுபாவும் ராணியும் வந்தார்கள். பழைய சுடிதார் அணிந்த மெலிந்த தோள்கள் கொண்ட சாதாரணமான பெண்கள் அவர்கள். சுசி, அவர்கள் உன்னைக் கண்டதும் அடைந்த தாழ்வுணர்ச்சியையும் கூச்சத்தையும் உணர்ந்தேன்.

அவர்கள் வெட்கி சுவரோடு சேர்ந்து நின்றார்கள். நீ உள்ளே வந்து அவர்களை விரிந்த கண்களுடன் பார்த்து நின்றாய். ”இது சுபா, சின்னவ ராணி”என்றேன். ”மூத்தவ பிளஸ்டூ படிக்கிறா.சின்னவ எட்டாம்கிளாஸ்”

”இதான் சுசீலாவா அண்ணா?”என்றாள் ராணி

”ஆமா” என்று சொல்லியபடி நீ அருகே சென்று அவர்களை அணைத்துக்கொண்டாய். ”இன்னைக்கு ஸ்கூல் இல்லியா?”. நான் உன்னிடம் அந்த பெருந்தன்மையை எதிர்பார்த்திருந்தேன். நீ அப்படித்தான் நடந்துகொள்வாய் சுசி

”ஸ்கூல் லீவு” என்று சொன்ன ராணி ”நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க அண்ணி”என்றாள்

சுசி சிரித்தபடி அவள் கன்னத்தைக் கிள்ளி ”நீ கூடத்தான் அழகா இருக்கே”என்றாள். ”ஸாரிடீ இங்க வர்ரதா சொல்லவே இல்லை. அதான் நான் ஒண்ணுமே வாங்கிட்டு வரல்லை”

”பரவால்லை அண்ணி” என்றாள் சுபா

உள்ளிருந்து சித்தி வந்தாள். இரு டம்ளர்களில் டீயுடன். ”இப்பதான் முழிச்சாரு தம்பி....டீ சாப்பிடு...சாப்பிடு பாப்பா” பாப்பா என்று நம் சாதியில் சொல்வதில்லை. அந்த அழைப்பு உனக்குப் பிடித்திருந்ததை கவனித்தேன். சுசி, சொந்தமாக யார் என்ன அழைத்தாலும் உனக்கு அது பிடித்திருக்கிறது.

நீ டீயை எடுத்துக்கொண்டாய். ”.... ஸ்கூல் பக்கம்தானா?” என்று சுபாவிடம் கேட்டாள்

”கொஞ்ச தூரம்..பஸ்ல போவோம்” என்றாள் சுபா. அவள் கண்களின் வெட்கமும் குழப்பமும் என்னை சுவரை நோக்கி புன்னகைபுரியச் செய்தன.

சுபாவின் காதில் கிடந்த தொங்கட்டானைப் பிடித்துப்பார்த்து ”நைஸ்..ரொம்ப நல்லா இருக்கு” என்றாய்

”அண்ணா வாங்கித்தந்தது”என்றாள் சுபா ”வளையல் செயின் எல்லாம்கூட இருக்கு”

”அப்டியா?”என்ற பின் ”நான் உனக்கு இன்னும் நல்ல தொங்கட்டான் வாங்கித்தறேன் ”என்று ராணியிடம் சொன்னாய். அவள் வெட்கமும் மகிழ்ச்சியுமாக வளைந்து ஓரக்கண்ணால் என்னைப் பார்த்தாள்.

உள்ளே இருமல் ஒலி கேட்டது. அப்பா சித்தியின் தோள்பற்றி மெல்லமெல்ல வந்தார். முகமும் கால்களும் வீங்கியிருந்தன. முகத்தில் இரண்டுவார வெள்ளைத்தாடி.

இருமியபடி மெல்ல நாற்காலியைப்பிடித்து அதில் அமர்ந்து கொண்டார். மெல்லிய முனகல்களுடன் சரிந்து அமர்ந்து பழுத்த கண்களால் என்னைப் பார்த்தார். வெளிறி உலர்ந்த உதடுகள் அசைந்தன ”எப்ப வந்தே?”

”இப்பதான்...அப்பா இவதான் –”

சுசி, நீ அப்போது நடந்துகொண்ட முறைக்காக உன்னை நான் பல்லாயிரம் தடவை என் நெஞ்சுக்குள் முத்தமிட்டேன். நீ சென்று குனிஅது அப்பாவின் கால்களை தொட்டு வணங்கினாய். அப்பா மெல்ல நடுங்கும் கரத்தை உன் தலை மேல் வைத்து ஆசீர்வாதம் செய்தார்.

”டாக்டர்ட்ட போனீங்களா?” என்றேன்

”என்னத்தைப் போறது? எல்லாம் கணக்குதான்...கடைசியா சாப்புட்ட மாத்திரைக்கு சைட் எஃபக்ட் வந்திருக்குன்னு சொல்றார்...என்னமோ போ” என்றார். அவரது தலை வெட்டுக்கிளியின் தலைபோல ஆடிக்கொண்டிருந்தது.

அவரிடம் எனக்கு பேச எதுவுமே இருப்பதில்லை சுசி. நான் அவரது சாவுக்காகக் காத்திருந்தேன். அவரது உபாதைகளின் முடிவு அதுமட்டுமே என்பதனால்மட்டுமல்ல அது. அவர் மீது நான் கொண்டிருந்த குற்றவுணர்வும் கடமையுணர்வும் கலந்த பொறுப்பு அப்போதுதான்

முடியுமென்பதனாலும்தான். அந்த மட்கிக்கொண்டிருக்கும் மனிதனின் விந்துவே என்னை உருவாக்கியது என்பதனால் மட்டும் நான் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் என்னைப்போல் ஒரு ஆண் என்பதனாலும்தான் என்று இப்போது அறிகிறேன். காமத்தால் அலைக்கழிக்க விதிக்கப்பட்ட ஆணை அனைவருமே மன்னிக்கத்தான் வேண்டும் சுசி.

நான் அவர் முன்னால் என்ன செய்வதென அறியாமல் அமர்ந்திருந்தேன். ”அந்த கறுத்த பையன் என்ன செய்றான்?” என்றார். நான் ஜோவுடன் அங்கே வந்திருக்கிறேன். இப்போது ஏன் அவனை நினைவுகூர்கிறார்? பேச விரும்புகிறார்…

”அவன் இப்ப வேற வேலைக்குப் போய்ட்டான்…” என்றேன்

”ம்ம்ம்…” என்றார். மெல்லிய இருமலுக்குப் பின்னர் ” டிவியிலே ஒரு பையன் பாக்க அவனை மாதிரியே இருக்கான்…இவ கிட்ட சொல்லிட்டிருந்தேன்…”

”இப்பல்லாம் பெரும்பாலும் டிவிதான்….”என்றார்

அப்பா ”என்னத்த பண்றது? பொழுது போகணுமே….சாவுற வரைக்கும்…” என்றார்

சித்தி சிரித்தபடி ”ஒரு சீரியல் விடுறதில்லை”என்றாள்.

நான் அப்பாவின் முகத்தை ஒருகணம் பார்த்தேன். சுசி, அப்பா என்ன

பார்க்கிறார் என்று எனக்கு உடனே புரிந்தது. அதில் வரும் பெண்களைத்தான். பல வயதுகளைச் சேர்ந்த பல வகையான பெண்களை. அதை அத்தனை உறுதியாகப்புரிந்துகொண்டேன், ஏனென்றால் அவர்தான் நான்..

நான் உணர்ந்ததை அப்பாவும் புரிந்து கொண்டாரா என்ன? அவர் மெல்ல இருமி ”மாத்திரை சாப்புட்டு வாயெல்லாம் புண்ணு... எல்லா எடத்திலயும் புண்ணு”என்றார்

”டாக்டரிட்ட காட்டுவோம்...”

”ஒண்ணும் புரியல்லைண்ணா எழுதிக்குடுக்கிறதுக்குண்ணே நூறு மாத்திரை வச்சிருப்பான் போல” என்றார் அப்பா மெல்ல சிரித்தபடி. அப்போது அவர் ஒரு கண் மெல்ல விரிந்து முகத்தில் ஒளி பரவியது. அந்த தருணத்தில் அப்பா மீது எனக்கிருந்த கசப்பும் விலகலும் மறைந்தது. அவர் எனக்கு மிக நெருக்கமானவராக ஆனார்.

அப்பாவுக்குள் இப்போது அடிக்கடி வெளிப்படாத ஒரு ஆளுமை இருந்தது என்பதை நான் எப்போதுமே உணர்ந்துகொண்டுதான் இருந்தேன் சுசி. நகைச்சுவை உணர்ச்சி என்று அதை சொல்லலாம். ஆனால் நுட்பம், புத்திசாலித்தனம், புதுமைக்கான தேடல், மீறிச்செல்லும் துருதுருப்பு என்றெல்லாம் அதைச் சொல்லலாம். அவையெல்லாம் ஒன்றுதான்.

அம்மாவிடம் எப்போதுமே நகைச்சுவை இருந்ததில்லை. கண்டிப்பு மட்டுமே உயர்ந்த குணம் என்று நம்பி வளர்ந்து வந்தவள். கணிப்பு என்பது என்ன? தன் எல்லைகளை தானே உறுதியாக உருவாக்கிக் கொண்டிருப்பதுதானே அது? அந்த எல்லைக்குள் தன்னை

வைத்துக்கொள்ள ஒவ்வொரு கணமும் முயல்வது....

அப்பா சித்தியிடம் எதைக் கண்டார் என்று எண்ணிக்கொண்டேன். அவர் அறிந்த பெண்ணுக்கு முற்றிலும் மாறான ஒரு பெண்ணை. சாதியில், கல்வியில், சமூக இடத்தில், தோற்றத்தில், மனநிலையில்...ஐப்போது அவர் உள்ளூர மீண்டும் ஓர் உயர்சாதிப்பெண்ணை விரும்புகிறாரா? மிக நுட்பமாக அவரை வேவுபார்க்க விரும்பினேன். ”என்ன சீரியல் பாக்கிறார், அரசியா?” என்றேன்

சுசி, நான் அப்போது ஒன்றை உணர்ந்தேன். அப்பா நான் எண்ணுவதை புரிந்துகொண்டுவிட்டார். ஆம், அதை அத்தனை உறுதியாக உணர்ந்தேன். அப்பா திடீர் எரிச்சலுடன் ” கொஞ்சம் வெந்நி குடேன்...கேட்டுண்டே இருக்கேன்ல?” என்றார்

சித்தி அந்த திடீர் மாற்றத்தால் சற்றே புண்பட்டு ஒரு கணம் என்னைப் பார்த்து விட்டு உள்ளே சென்றாள். நான் உள்ளூர குதூகலம் கொண்டேன். அவரை சீண்டுவதற்கான ஒரு பொருள் கையில் கிடைத்திருக்கிறது ”... இப்பல்லாம் எல்லா சீரியலும் ஒரே மாதிரித்தான் இருக்கு”

அப்பா ”ம்ம்” என்றார் என்னைப்பார்க்காமல்.

”ஒரே அழுகை...எப்ப பார் ஞொய் ஞொய்னு...”

அப்பா பேசாமல் இருந்தார். நான் இன்னும் துணிவுகொண்டு அவரை மெல்ல அபாயகரமான இடத்துக்கு இழுத்தேன் . ”அங்க அம்மாவுக்கும் இதான் வேல...அந்தியானா தொடர்ச்சியா சீரியல்...”

அப்பா தன் பழுத்த கண்களால் என்னைப் பார்த்தார். கண்களாலேயே என் கால்களைப் பற்றிக்கொண்டார். நான் அவர் பார்வையைத்தவித்தேன். பரிதாபம் ஏற்பட்டது. கூடவே வன்முறைக்காக மனம் இன்னும் இன்னும் என்று தாவியது. இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். அம்மாவைப்பற்றி...எதையாவது. எதை....அம்மா சொன்ன எதைச்சொன்னாலும் அங்கே அது முள்தடிபோல குரூரமான ஓர் ஆயுதம் தான். ஆனால்...இல்லை சொல்வேன்...இதோ–

சித்தி சுடுநீருடன் வந்த அசைவால் அந்தக்கணம் தப்பித்தது. மன இறுக்கம் உச்சத்துக்குச் செல்லும் கணங்களில் ஓர் அசைவு நம்மை மீட்டுவிடுகிறது. அந்த அசைவு நம்மிடம் என்ன சொல்கிறது? மண்மீதிருப்பது மனம் மட்டுமல்ல , உடம்பும் கூடத்தான் என்றா?

அப்பா வெந்நீரைக் குடித்தார். பின்பு ”சித்த படுத்துக்கறேன்...முதுகு வலிக்குது” என்றார்

சித்தி அப்பாவை மெல்ல தூக்கி உள்ளே கொண்டுசென்றாள். நான் அவர் தளர்ந்த நடையுடன் ஒருகையால் வேட்டியை பிடித்தபடி செல்வதை பார்த்தேன். என் மனதில் உணர்ச்சிகளே இல்லை. வெறுமைதான்.

சித்தி சாப்பிட்டபின்புதான் போகவேண்டும் என்று சொல்லிவிட்டாள். நீ சுபாவுடனும் ராணியுடனும் உள்ளே போய் சிரித்து அரட்டையடிக்க நான் வார இதழ்களையும் தொலைக்காட்சியையும் ஓரக்கண்னால் பார்த்தபடி எண்ணங்களை தொட்டுத் தொட்டு தொடர்ந்தபடி அமர்ந்திருதேன். பின்பு எழுந்து வெளியே சென்று சாலையைப்பார்த்துக்கொண்டிருந்தேன்.

எளிமையான சாப்பாடு. ஒரு குழம்பு ரசம். சித்தி என்னிடம் ”சைவம்தானே அவ?” என்றாள் . நீ ”ஆமா அத்தை, சுத்த சைவம்…லண்டன்ல கூட நான் நான் வெஜ் சாப்பிறதில்லை” என்றாய். சித்தி புன்னகைசெய்தாள்

சாப்பிட்டுவிட்டு உடனே கிளம்பலாம் என்றேன். என் மனம் அம்மாவை அஞ்சிக் கொண்டிருந்தது. அம்மா ஊகித்துவிடுவாள் என்று. ஒருவரை நம் மனம் நுட்பமாக பின் தொடர்ந்துகொண்டிருந்தது என்றால் அவர்கள் போகும் இடத்துக்கெல்லாம் நம்மால் மானசீகமாகவே கூடப்போக முடியும்

”கெளம்பறேன் சித்தி…”

”ஏன் கொஞ்ச நேரம் இருந்திட்டு போறது”

”இல்ல…ஆ•பீஸ்ல வேலை இருக்கு…”

”அண்ணா நீ ரொம்ப வேலைசெய்யாதே…நஷ்டத்தில ஓடுற ஆபீஸ்ல ஜாஸ்தி வேலைசெஞ்சா நஷ்டமும் ஜாஸ்தியாயிடும்” என்றாள் ராணி. நீ அவர்களுடன் சேர்ந்துகொண்டு சிரித்தாய்

”போடி” என்றேன்.

”அடிக்கடி வா கண்ணு” என்றாள் சித்தி

அவர்கள் ஒவ்வொருவரிடமும் சொல்லிக்கொண்டு சுபாவை தழுவி ராணியை முத்தமிட்டு நீ கிளம்பும்போது நான் உன்னிடம் வேறு ஒன்றை எதிர்பார்த்தேன். ஆனால் நீ ஆழமான மௌனத்தில் நடந்துவந்தாய்.

சாலையில் நடக்கும்போது நான்வேறு எங்காவது பேச்சை தொடங்க எண்ணினேன். ஆனால் வாயே தன்னிச்சையாக பேசிவிட்டது. ”அப்பாவைப்பாத்த விஷயத்தை அம்மாகிட்டே சொல்ல வேண்டாம்”என்றேன்

”அத்தைக்கு தெரியாதா?”

”தெரியும்… ஆனா நான் வந்துபோற விஷயம் தெரியாது…” என்றேன் ”தெரிஞ்சா அவளாலே தாங்கமுடியாது. முப்பதுவருஷமா அவ மனசிலே அந்த வன்மம் அப்டியேதான் இருக்கு…அப்பான்னு சொல்றதே பிடிக்காது”

நீ ஒன்றும் சொல்லவில்லை. காரில் ஏறிக்கொண்டதும் ”ரொம்பப் பரிதாபமாத்தான் இருக்கார்…என்ன இருந்தாலும் உங்க அப்பா…ஆனா— ”

”ஆனான்னா?”

”அவரை என்னால ஏத்துக்கவே முடியல்லை.என் மனசு அத்தைபக்கம்தான் நிக்குது….துரோகம் துரோகம்தான்….என்னைக்கிருந்தாலும்.” அந்தக்கணம் நான் எதிர்பார்த்திருந்தது என்ன என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது. நீ உன் உள்ளுணர்வால் என் அப்பாதான் நான் என்பதை

உணர்ந்துகொண்டிருப்பாய். என்னை அவரது நீட்சியாக வைத்துப்பார்த்து உன் மனம் உள்ளே சிராய்ப்பு கொண்டு எரிந்து கொண்டிருக்கிறது.

”தப்பு எல்லாரும் பண்றதுதானே…அதுக்குண்டானதை அவர் அனுபவிச்சிட்டார்”என்றேன். நான் சொல்ல வேண்டிய சொற்கள் அவை அல்ல என்ற எண்ணம் உள்ளூர ஓடியது

”என்ன பேச்சு அது? தப்பு எல்லாரும் பண்றதா? நான்சென்ஸ்” என்றாய். சுசி நீ நான் அப்போது உன்னை தீவிரமாக ஆதரிக்க வேண்டுமென, உன் மீதான காதலை அறிக்கையிட்டு பிற பெண்ணே என் வாழ்க்கையில் இல்லை என்று சொல்லவேண்டுமென, நீ எதிர்பார்த்தாய் என்பதை நான் உணர்ந்தேன். சுசி உன் ஈரக்கண்களில் அந்த மன்றாடல் இருந்தது…

நான் என் மனத்தின் ஜாலங்களை எண்ணி வியந்தேன். சுசி, நீ என்னுடன் படி இறங்கும்போது நான் என்ன எண்ணிக்கொண்டு வந்தேன் தெரியுமா? என் அப்பா அல்ல நான் என்று உன்னிடம் நிறுவ வேண்டும் என்று. அதன்பொருட்டு என் அப்பாவை முற்றாக நிராகரித்து உன்னிடம் அவரைப்பற்றிய கசப்பைக் கொட்ட வேண்டும் என்று. அதற்காக உண்மையான உணர்ச்சிகளை அடையும்பொருட்டு நான் அவரை அந்தக் கணங்களில் வெறுத்தேன். வெறுப்பை திரட்டித்திரட்டிச் சொற்களை உருவாக்கிக் கொண்டேன்

ஆனால் அப்போது அவையெல்லாம் என்னை மீறி மறைந்தன. நான் முற்றிலும் மாறான உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டேன். காரை நிறுத்தினேன். ”வெளியே பாரு… இங்க போற ஆம்பிளைங்களிலே ஆயிரத்தில ஒருத்தன் கூட ஏகபத்தினிவிரதனா இருக்க மாட்டான். அதான் மனுஷ இயல்பு…ஆம்பிளையோட உடம்பையும் மனசையும் அப்டித்தான்

படைச்சிருக்குது இயற்கை…” என்றேன் ஆவேசத்துடன். அந்த ஆவேசம் எனக்கே வினோதமாக இருந்தது

”பொறுக்கி அலையணும்ணா?” என்று நீ சீறினாய். நீ அந்த நேரடிப்பேச்சை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

”ஆமா… முடிஞ்சவரை அதிகமான வயிறுகளிலே வீரியத்தைக் கொண்டுபோய் சேருன்னு ஆண்கிட்ட சொல்லியிருக்கு இயற்கை. முடிஞ்சதில –பெஸ்டைமட்டும் ஏத்துக்கிட்டா போரும்னு பெண்கிட்ட சொல்லியிருக்கு…அந்த போராட்டம்தான் நாய் பூன ஆடு மாடு மனுஷன் எல்லா இனத்திலயும் நடந்திட்டிருக்கு… அது இயற்கையோட வெளையாட்டு”

”நான் மனுஷனைப்பத்திப்பேசறேன்.மிருகத்தைப்பத்தி பேசல்லை” உன் மூச்சு இரைப்பதை, கழுத்தும் கன்னமும் வியர்த்திருப்பதைப் பார்த்தேன்.

”மனுஷனும் ஒருமிருகம்தான்…வெறும் மிருகம் கெடையாது. சிந்திக்கக்கூடிய ,கண்ணீர்விட்டு அழக்கூடிய மிருகம்… ஆனாலும் மிருகம்தான்…”

”ரைட் …அத்தை வேற ஒருநல்ல ஆம்பிளைகூட போயிருந்தா ஏத்துக்கிட்டிரூப்பிங்களா?”

சுசி, உன் மனம் படும் வதையை நான் அப்போது உணர்ந்தேன். என்னுள் உவகை ஊறியது. உன்னை மேலும் வதைக்க விரும்பினேன். வதைபடும் மனம் கொண்டவன் ஆபத்தானவன் சுசி, அவன் உலகை வதைக்க விரும்புகிறான்.

”நான் இதை ஏத்துக்கிட்டேன்னு சொல்ல வரல்லை...ஆனா இந்தமாதிரி தப்புகளை மன்னிக்கிறதுதான் நாகரீகம்னு சொல்லவந்தேன்” நான் மிக மிக நிதானமடைந்தேன். குரூரமாகும்போது நமக்கு தர்க்கம் வேலைசெய்வதைப்போல எப்போதும் இருப்பதில்லை. தர்க்கத்துக்கும் குரூரத்துக்கும் மிக நெருக்கமான உறவுண்டு. அவர்கள் இரட்டை சகோதரர்கள் ”காமத்தை பாவமா பாக்கிரது கிறிஸ்தவ மதம் உருவாக்கி வச்சிருக்கிற ஒரு மனநோய்...காமம் பலவீனமா இருக்கலாம் ஆனா கண்டிப்பா பாவம் கெடையாது...”

”நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லலை” என்றாய். என் குரூரத்தை உன் உள்ளார்ந்த குரூரத்தால் நீ எதிர்கொள்ள ஆரம்பித்தாய். உன் கண்களில் ரேசர் கூர்மை . ”இப்ப உங்க வீட்டிலே ஒருத்தர் கறுப்பா தெனாவெட்டா உங்கம்மாவுக்கு புருஷனா உலவிட்டிருந்தா என்ன செஞ்சிருப்பீங்க?”

”அம்மா அப்டிப் போயிருந்தா நான் ஏத்துக்கிட்டிருக்கமாட்டேன். ஆனா மன்னிக்கமுடியாத குற்றமா அதை பாக்கமாட்டேன்...” என்றேன். சுசி, உனது அந்தக் குரூரம் எனக்கு வேண்டியிருந்தது. சிலசமயம் நம்மை எவராவது பளார் பளாரென்று அறைந்தால்கூட நமக்குப் பிடித்திருக்கிறது.

”சும்மா...இதெல்லாம் சும்மா பேசறது”

”தென் கோ டு ஹெல்”என்று நான் காரைக்கிளப்பினேன்

கார் நெரிசலான தெருக்களில் நீந்திச்சென்று கொண்டே இருந்தது.

”அந்தம்மாதான் வேலைக்காரியா இருந்ததா?”என்றாய் சற்று நேரம் கழிந்து.

”இல்லை…அதுவேற. அப்பா அதுக்கப்றம் குடிச்சு சீரழிஞ்சார். பல தொடர்புகள். வேலைபோச்சு. தாம்பரத்தில எங்கியோ குடிசையிலே இருந்திருக்கார்… அப்பதான் இந்தம்மாவை கட்டிகிட்டார். மூத்த பொண்ணு அவங்களுக்கு முதல் கணவனிலே பொறந்தவ. அவர் விட்டுட்டுப் போனபிறகு எங்கப்பா சேத்துக்கிட்டார்”

”சீ”என்றாய்.

நான் உன்னை திரும்பிப்பார்த்தேன்

”நான் இனிமே இந்த வீட்டுக்கே வரமாட்டேன்” என்றாய். உன் முகத்தின் அருவருப்பைக் கண்டபோது எனக்கு திருப்தியாக இருந்தது சுசி. ஆண்மனம் என்று சொல். நடுத்தரவற்க ஆணின் சுயநலம் மிக்க கீழ்மை என்று சொல். நீ ‘தரமான’ பெண்ணாக இருக்க வேண்டும் என்றும் காமத்தைச் சார்ந்த எல்லா மீறல்களையும் நீ அருவருத்து ஒதுக்க வேண்டும் என்றும் நான் ஆசைப்பட்டேன்.

”நான் வருவேன்…என்னால அவங்கள விடமுடியாது”என்றேன். ”நீ எல்லாத்தையும் தெரிஞ்சுகிடணும் அவ்வளவுதான் என்னோட பிளான்…”

”நான் உங்கிட்ட ஒண்ணு கேக்கணும் அருண்” கேள் கேள் என என் மனம் குதித்தது. நீ கேட்பதற்கான பதில் என்ன்னிடம் உள்ளது. அங்கே

உன்னைக் கொண்டுசெல்கிறேன்

”ம்”

”நீ எப்டி? உனக்கு வேற பெண்தொடர்புகள் உண்டா?” நீ அதைக் கேட்கும்போது உன் கைவிரல்களே உன் மனமாக இருந்தன. அவை பின்னின, தயங்கின, இறுக்கிக் கொண்டன, தவித்தன….

”உண்டுண்ணு சொன்னா என்ன செய்வே?” நான் உன்னை அந்த இடம் நோக்கி தள்ளினேன்

நீ என்னையே பார்த்தாய். உன் கண்களில் நீர் தளும்புவதைக் கண்டேன். நான் அதை எதிர்பார்க்கவில்லை. நான் எதிர்பார்த்தது சந்தேகத்தின் குரோதபாவனையை

நீ உன் கண்ணீர் வழியாக அந்த தருணத்திற்கு சுற்றும் நான் எழுப்பிய சுவர்களை உடைத்து வெட்டவெளியை உருவாக்கினாய் சுசி…உன் கண்களில் கண்ணீர் கொட்டியது. நீ பலமாக விசும்பினாய்.

நான் ”இதோ பாரு” என்று நான் சொல்லவருவதற்குள் நீ உடைந்து அழுதபடி முழங்கால்களில் முகம் புதைத்தாய். ”ஐ வில் கமிட் சூயிஸைட்…யெஸ்…அதுக்கப்றம் நான் உயிரோட இருக்கமாட்டேன்..செத்திருவேன்..சாமி சத்தியமா செத்திருவேன்”

நான் உன்னை இழுத்து என் தோள்மேல் சாய்த்து அணைத்துக்கொண்டேன். ”சுசி…சும்மா சொன்னேன்..சத்தியமா

இல்லை...சத்தியமா கெடையாது...போருமா..உன் மேல சத்தியம்...”

நீ என்னை நிமிர்ந்து பார்த்து ”பிராமிஸ்?”என்றாய்

”பிராமிஸ்”என்றேன். உன்னை கழுத்திலும் கன்னங்களிலும் முத்தமிட்டேன்.

”ப்ளீஸ் அருண் என்னால தாங்கமுடியாது...ப்ளீஸ்”என்றபடி என் தோள்மேல் நீ சாய்ந்துகொண்டாய். என் கழுத்தை வளைத்து என்னை இறுக்கினாய்.

சுசி, நான் சொல்ல எண்ணிய சொற்களையெல்லாம் அந்த நிமிடமே உள்விழுங்கிக்கொண்டேன்.

[7]

காலையில் நான் கண்விழித்தபோதே சந்திராவின் குரலைக் கேட்டேன். அரைத்தூக்கத்தின் மயக்கத்தில் அது கனவா என்ற எண்ணம் ஏற்பட்டது. பின்பு அவள்தான் என்று தெரிந்ததும் எழுந்து அமர்ந்துகொண்டு அப்படியே இருந்தேன். கதவை மெல்லத்திறந்து சந்திரா ”குட்மார்னிங்’ என்றாள்.

சந்திராவின் முகத்தைக் கண்டு அஞ்சினேன். ஏனென்றால் அவள் புத்தம்புதிதாக, கள்ளமே இல்லாத சிரிப்புடன் இருந்தாள். இளம் அம்மா தன் வால்பையனிடம் பேசுவது போன்ற பாவனை.

நான் மெல்லிய புன்னகையுடன் ”குட்மார்னிங்” என்றேன், போர்வைக்குள் கையை விட்டு லுங்கியை இடுப்புக்கு ஏற்றிக் கொண்டேன்

”மணி எட்டு…இப்பதான் எந்திரிக்கிறதா? உனக்கு வேலை வெட்டி ஒண்ணுமே கெடையாதுன்னு நெனைக்கிறேன்…”

”போகணும்” என்றேன், கண்களைச் சரித்து.

சிரித்தபடி என் போர்வையை இழுத்து, ”சீ எந்திரிடா…முழிக்கிறான் பாரு”என்றாள்

நான் போர்வையைப்பற்றிக்கொண்டேன்.

சந்திரா முகம் மாறி மெல்லிய கனத்த குரலில் ”நான் உன்னை ராத்திரி முழுக்க கூப்பிட்டுட்டே இருந்தேன்...” என்றாள்

”நான்...”

”வேண்டாம்...”என்றபின் உரக்க ”சீக்கிரம் வாடா... ஒருவேலை இருக்கு” என்றபின் வெளியே சென்றாள். அவளாக வேடமிட்டு வந்த இன்னொருத்தி என்னிடம் வந்து பேசிவிட்டுச் சென்றது போலிருந்தது.

நான் வெளியே வந்தேன். வாஷ் பேசினில் முகம் கழுவும்போது கண்ணாடிக்குள் சமையலறையில் இருந்து வந்த அம்மா என்னிடம் ”என்னமோ லாயரைப் பாக்கணும், நீ கூடவந்தா நல்லாருக்கும்னு சொல்றாடா..போய்ட்டு வா”என்றாள்

”லாயரா எதுக்கு?” என்றேன் டைனிங் டேபிளில் அமர்ந்தபடி.

”குமாரோட சில பிராப்பர்டீஸ் மேல ஏதோ கிளெய்ம் இருக்காம்..என்ன சொல்றார்னே புரியல்லை...நீ கூடவந்தா தெளிவா பேசிடலாம்”என்றாள்.

அம்மா காபியை மேஜைமேல் வைத்தாள். நான் ஹிண்டுவை எடுத்தேன். சந்திரா என் முன் அமர்ந்து அதைப்பிடுங்கி வீசினாள். ”நான் உங்கிட்டதான் பேசணும்,வாடா ”என்றாள்

”பேசு...கேக்கிறேன்ல...”

”இது ரொம்ப சீரியஸ்…அந்த ஸ்கௌண்டிரல்ஸ் போலி டாகுமெண்ட்ஸ் காட்டுறாங்கன்னு லாயர் சொல்றார்”

அம்மா உள்ளே ”பாவிப்பசங்க புருஷன் இல்லாத சொத்துன்னா அள்ளிக்கிடலாம்னு நெனைக்கிறாங்க”என்றாள்

சந்திரா என்னை கூர்ந்து நோக்கி ”என்ன பயப்படுறியா?” என்றாள்.

சுசி முதன்முறையாக நான் சந்திராவின் கண்களில் மனநலச்சிக்கலின் மெல்லிய தடம் ஒன்றைக் கண்டேன். அச்சத்தில் என் இதயம் கல்லாக ஆகிவிட்டது

”உன்னை ஒண்ணும் வெஷம் வச்சு கொன்னுட மாட்டேன்…” அவள் கண்களின் அலைதல் மனத்தின் நிலையில்லாமையேதான். சுசி மனச்சிக்கல் முளைவிட்டு இரண்டு இலை விரித்து நிற்கும் கண்கள் மிக மிக பயங்கரமானவை. முற்றிலும் பைத்தியமாகிவிட்ட ஒருவரால் நமக்கு ஒன்றுமில்லை. அவர் வேறு கரைக்குச் சென்று விட்டவர். இது அப்படியல்ல. நம்மைபோன்ற ஒருவர்– ஆனால் நம்மிலிருந்து வேறுபட்டவர்.

நான் மெல்ல ”வர்ரேன்” என்றேன்

”என் வீட்டுக்குப் போறோம்….” உதடுகள் அழுந்த மூக்கு விடைத்து அசைய காய்ச்சல் அலையும் முகத்துடன் ”ஆண்ட் வி வில் •பக்” என்றாள்

சுசி, அக்கணம் நான் காம எழுச்சி கொண்டேன். விசித்திரமும் விபரீதமும் அளிக்கும் காம எழுச்சி முற்றிலும் வேறானது. அதற்காகத்தான் பிணத்துடன் கூடுகிறார்கள் போல. என்னென்ன எண்ணங்கள்….

குளித்துவிட்டு டவலை தலையில் சுற்றிக்கொண்டு நீ வெளியேவந்தாய். ”ஹாய் சந்திரா” என்றாய்

”ஹாய்..யூ லுக்ஸ் க்யூட் ”என்ற சந்திரா ”இன்னிக்கு காலைல உனக்கு ஒரு புரோக்ராமும் இல்லியே” என்றாள். ஒரு கணத்தின் ஆயிரத்தில் ஒருபகுதிக்குள் படமாடிய பாம்பு திரும்பி வளைக்குள் மறைந்து அங்கே ஒரு பூத்த மலர்ச்செடி நின்றிருப்பது போல….

”இல்லை. ஏன்?” என்றாய்

”அருண் என் கூட லாயர் வீடுவரைக்கும் வரான்…”

”அதுக்கென்ன?”என்று புன்னகைசெய்துவிட்டு நீ உள்ளே சென்றாய். சுசி அப்போது ஒரு மணி எனக்குள் அடித்தது. அத்தனை பெரியமனுஷித்தனமாகச் சொல்லிவிடு மிகையான சாதாரணத்தன்மையுடன் நீ உள்ளே போனாய். பெண்ணுக்குள் இதற்கென்றே ஒரு நுண்புலன் உள்ளதா என்ன?

நான் அப்போது அதுவரை இருந்த பதற்றத்தை மெல்ல இழந்து இலகுவானேன். உனக்குள் எனக்கான பொறாமை எழுந்தது என்று புரிந்துகொண்டதுதான் காரணம் என நான் அப்போது உணர்ந்தேன் என்று சொல்லமுடியாது. ஆனால் நான் ஆண்மகனாக, உன்னை

என்னை நினைத்து ஏங்குபவளாக உணர்ந்தேன்.

நான் குளித்து உடைமாற்றிவிட்டுவரும்வரை நீயும் அம்மாவும் சந்திராவிடம் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள். நீ அந்த தமிழ்ப்படத்தின் கதையைச் சொன்னாய். உன் மிகையான சிரிப்பொலியும் உற்சாகக் கிரீச்சிடலும் கேட்டது. சட்டைபோட்டுக்கொண்டிருக்கும்போது உன் உற்சாகம் எனக்கு சட்டென்று கிரீச்சிட்டது. மனம் எப்போது எதில் உரசிக்கொள்ளும் என்பதே புதிர்தான்.

உன்னை சீண்டவேண்டுமென எண்ணினேன். நான் போனபின் நீ அழவேண்டுமென . ஆகவே என் மிகச்சிறந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டேன். சிறந்த ஷ¥க்களை போட்டேன். வெளியே வந்த போது உன் கண்கள் என்னை ஒருகணம் ஒரே ஒரு கணம் மிகச்சாதாரணமாக –சுசி எந்தப்பெண்ணும் ஏதேனும் சில கணங்களில் மகாநடிகை — வந்து தொட்டுச்சென்றன.

”என்ன டிரெஸ் அமர்களப்படுது?” சந்திராதான். நான் அவள் கண்களைப் பார்த்தேன். எனக்கு அவள் மனம்புரிந்துவிட்டது. அந்த அபாயத்தின் சுவாரசியம் அவளுக்கு தேவைப்படுகிறது. விளிம்புவரை நகர்த்திச் செல்கிறாள்.

நான் ”லாயரைப் பாத்துட்டு ஒரு கிளையண்டையும் பாக்கணும்…” என்றேன்

”கிளையண்டா…உனக்கா? மை குட்னெஸ்.. நீ ஒண்ணும் என்னை அட்ராக்ட் பண்ண டிரை பண்ணல்லியே…” சந்திரா மேலும் எல்லையைக் கடந்தாள்.

அம்மா சிரித்தபடி ”சரிதான்…உன் கூட வர்ரப்ப ஒரு இது இருக்கணும்ல… கேட்டியா சுசி, இவதான் எங்க காலேஜ்லயே குயின்.. பசங்கள்லாம் இவளைப்பாக்க வரிசையா நிப்பாங்க…”

நீ வாயைப்பொத்திச் சிரித்தாய். சந்திரா ”ஜிஎஸ்…இதெல்லாம் டூ மச்…” என்று சிரித்தபின் ”போலாமா” என்று என்னிடம் கேட்டாள். அதற்குள் என் உணர்வுகள் குளிர்ந்து மண்ணோடு படிந்துவிட்டன. வெடிகுண்டை வைத்து கால்பந்துவிளையாடுவது போல…பெண்கள் அதை ரசிப்பது போல ஒருபோதும் ஆண்களால் முடியாது. ஆண்களின் நரம்புகள் முறுகி உடைந்துவிடும்

போகும்போது சந்திரா என் தோளைப்பிடித்து ஒற்றைக்காலில் நின்று செருப்பைப் போட்டுக்கொண்டாள். ”என்ன செண்ட் போட்டே…யூ ஆர் ஸ்பைஸி…” அவள் உன் மீதான கொடியை பறக்கவிடுகிறாள் என்று புரிந்து நான் பேசாமல் நின்றேன்.

சந்திரா என்காரில் முன்னிருக்கையில் ஏறிக்கொண்டு சாய்ந்து அமர்ந்து ”ஸீ யூ ஜிஎஸ்…வரேன் சுசி’ டார்லிங் ” என்றாள். நான் காரை கிளப்பினேன். அவள் ”நேரா வீட்டுக்குப்போ”என்றாள். மீண்டும் நாபறக்கும் பாம்பு!

”நவீன்?”

”அவன் ஸ்கூலுக்குப் போயாச்சு”

கார் நகரை ஊடுருவிச் செல்லும்போது நாங்கள் ஒரு சொல் கூட பேசவில்லை. சந்திரா சிலைபோல அமர்ந்திருந்தாள். அவளை ஓரக்கண்ணால் பார்த்தபோது கழுத்து இறுக்கமாக இருப்பது தெரிந்தது.

காரை நிறுத்திவிட்டு லி•ப்டில் மேலேறும்போதும் அவள் ஆழமான அமைதியுடன் இருந்தாள். கதவைத்திறந்து இருவரும் உள்ளே நுழைந்ததும் நான் என் ஷ¥க்களை கழற்றிக்கொண்டிருந்தேன். அவள் சட்டென்று கதவை மூடிவிட்டு தன் சப்பலை எடுத்து என் மீது எறிந்தாள்.

”யூ...ராஸ்கல்..யூ...”என்று மூச்சிரைக்க கூவினாள். இன்னொரு சப்பலை எடுத்தவள் அதை சுவர் மீது வீசினாள்.தவள் மாரபகங்கள் விம்மி விம்மி தணிய கழுத்துக்குழி ஏறியேறி அமிழ விழிகளில் நீர்ப்படலம்

”இதோபார் சந்திரா...” என்றேன். அந்தக்குரல் அவளைத் தொட்டதும் அவள் மீண்டும் வெறிகொண்டு என் மீது பாய்ந்தாள். நான் அவளைதடுக்க முயன்றேன். அவள் என்னை அடித்தாள். என் சட்டையைப்பிடித்துக் கசக்கினாள். என் மீது ஒரு பேரருவி கொட்டியது போல் இருந்தது. இல்லை, நெருப்புதழல்கள்.

நான் நிலைதடுமாறி சோ•பாவில் பின்னால் விழுந்தேன். அவள் என் மேல் விழுந்து என்மீது ஏறி அமர்ந்து கொண்டாள். மார்பிலிருந்து புடவை உதிர்ந்து இரு முலைகளும் மேலே பிதுங்கி வெண்ணிறமாந பளபளப்புடன் தெரிந்தன. சேலை கசங்கி வெண்ணிறமான தொடை ஒன்று கீழே நீட்டியிருந்தது.

”கொன்னிருவேன்...வெட்டிக்கொன்னிருவேன்...ராஸ்கல்.. உன்னைக்கொன்னுட்டு நானும் செத்திருவேன்..” என்று கூவினாள். என் கன்னத்தில் அறைந்தாள். ஆனால் நான் அப்போது மிக வன்மையான

காமத்தை உணர்ந்தபடி செயலிழந்து கிடந்தேன்.

பின்னர் மெல்ல அழுதபடி என் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். அவள் கண்ணீர் என் கழுத்திலும் மார்பிலும் கொட்டியது. அவளுடைய அழுகையின் குலுங்கல்களில் என் உடலுக்கும் பரவின.

நான் பிணம் போல அப்படியே கிடந்தேன். அவள் எழுந்து என் மேலேயே அமர்ந்து கலைந்த கூந்தலை அள்ளி பின்னுக்குக் கொண்டுசென்று முடிந்தாள். அப்போது அவள் மார்புகள் அசைவதை மட்டும் நான் கண்டேன்.

அவள் பெருமூச்சுடன் ”கமான்.. நீ என்ன நெனைச்சிருக்கே?”என்றாள்.

‘ம்ம்?”

”நீ என்ன பிளான் வச்சிருக்கிறே?”

‘ம்”

”கமான்…டோண்ட் பிளே •பூல்…”

”தெரியலை…”என்றேன் ”சத்தியமா தெரியலை”

”டேய், டீன்ஏஜ் பாய் மாதிரி பேசாதே…நான் உன் அம்மாகிட்ட பேசிட்டேன். நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கப்போறே…உண்மையா இல்லியா?”

நான் பார்வையை திருப்பினேன்

”கமான் லுக் அட் மி”

”அவ கேட்டா” என்றேன் பலவீனமாக

”கேட்டா? கேட்டா பண்ணிக்குவியா? இப்ப நான் கேக்கிறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ”

நான் அவளையே பார்த்தேன். என் மனம் உறைந்து கிடந்தது

”கல்யாணம் பண்ணிக்குவியா? சொல்லு” என்று அவள் என் சட்டையை பிடித்தாள். அதன் பித்தான்கள் எல்லாம் தெறித்திருந்தன. ”சொல்லு…நாளைக்கே நாம ரிஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக்குவோம்…”

”நவீன்?”

”யாரு எக்கேடா கெட்டா எனக்கென்ன? என்னால நீ இல்லாம வாழமுடியாது… ஐ லவ் யூ..ஐ நீட் யூ…” அவள் சட்டென்று உடைந்து விசித்திரமான கேவல் ஒலியுடன் அழ ஆரம்பித்தாள் ”ப்ளீஸ் அருண்..என்னை விட்டிராதே…நீ இல்லாம என்னால இருக்க முடியாது அருண்…நான் உன்னை அப்டி நெனைச்சிட்டேன்…ப்ளீஸ்”

நான் ஆவள் அழுகையை கண்ணெடுக்காமல் பார்த்துக் கிடந்தேன். கெஞ்சுவது அவள் இயல்பே அல்ல. என்னைக் கவர்ந்ததே அவளிடம் இருந்த கம்பீரம்தான். அவளிடமே கல்லூரியில் படித்தவன் நான். நிமிர்ந்த முகத்தில் அறிவின் செருக்குடன் , மூக்குக்கண்ணாடி ஒளிர அவள் வகுப்பெடுக்கும் காட்சியை என் நினைவில் கண்டேன். ”Shakespeare is basically a cynic and his cynicism reached its zenith on his last play Tempest in which he depicts himself as the main character Prospero. Prospero is a magician and he can change everything in this world in to gold, but he throw away all of his magical devices in to the sea...” கஞ்சியிட்ட மென் மஞ்சள் நிறப் புடவையுடுத்த அவள் நிமிர்ந்த உடலையே நோக்கி அவள் உதடுகளின் அசைவை மட்டும் பார்த்துக்கொண்டிருதவன் மேல் ஒரு சாக்பீஸை விட்டெறிந்து ”You, what is your problem?”

அவள்தான் இவள் என்று என்னால் நினைக்க முடியவில்லை. அவள் எழுந்து அப்படியே சரிந்து தரையில் அமர்ந்து முழங்கால்மேல் முக வைத்து சின்னக்குழந்தை போல அழுதுகொண்டிருந்தாள். நான் மெல்ல எழுந்தேன். மெல்ல என் ஷ¥ அருகே சென்றேன்.

”எங்க போறே?” என்றாள்.

”தெரியலை...நீ கேட்ட எதுக்குமே எங்கிட்ட பதில் இல்லை சந்திரா...ஏன் இப்டியெல்லாம் ஆச்சு...இனிமே என்ன செய்றது ஒண்ணும் புரியல்லை...இந்த முடிச்சை எப்டி அவிழ்க்கிறதுன்னே எனக்குப் புரியல்லை” நான் திரும்பி அமர்ந்துகொண்டேன் ”உண்மையச் சொலல்ணும்னா நானும் நெத்து ராத்திரி முழுக்க தூங்கலை. எதில மாட்டியிருக்கோம்னே எனக்குப் புரியல்லை”

”நீதான அந்தப்பொண்ணுகிட்டே மாட்டியிருக்கே…உனக்கு நான் கசந்திட்டேன்..இப்ப புதிய பொண்ணு கேக்குது உனக்கு…பச்சையாச்சொன்னா உனக்கு புதிசு வேணும்…நாலு பேர் முன்னாடி கௌரவம் வேணும் அதான்…”

நான் அவள் கண்களைப்பார்த்துக்கொண்டு நின்றேன். அழகிய பெரிய கண்கள். வெண்ணிறமான வட்ட முகம். தடித்த பெரிய உதடுகள். மென்மை மென்மை என்று சொல்லும் கழுத்து.

நான் மீண்டும் சோபாவில் அமர்ந்து என் தலையைப் பற்றிக் கொண்டேன். இனம்புரியாத சிந்தனைகள் முட்டி மோதிக் அக்டந்துசென்றன. சிந்தனைகள் அல்ல, வெறும் சொற்கள். பின் நான் சட்டென்று அறுத்து விலகிக்கொண்டு தலைதூக்கி கூர்மையாகச் சொன்னேன். ” சந்திரா நான் என் மனசைத்திறந்து சொல்றேனே….நான் சொல்றதை நீ நம்ப மாட்டே…அவளும் நம்ப மாட்டா..யார்கிட்ட சொன்னாலும் என்னை ஒரு கிராதகன்னுதான் சொல்லுவாங்க…ஆனா நான் சொல்றதுதான் உண்மை…” என்றேன்

அவள் என்னை கூர்ந்து பார்த்தாள். நான் ஒருபோது அந்த திடத்துடன் பேசியதில்லை. அதை அவள் அஞ்சினாள்.

”எனக்கு நீயும் வேணும் அவளும் வேணும்…இதுதான் உண்மை. என்னால ரெண்டுபேரையுமே விடமுடியலை. உங்கிட்ட இருக்கிற அருண் வேற அவகிட்ட இருக்கிற அருண் வேற…ரெண்டுபேரில யாரை விட்டாலும் ஒரு அருண் செத்திருவான்… நான் பாதியா ஆயிடுவேன்..என்னால அதை தாங்க முடியல்லை. நான் ஒரு ராஸ்கல்னு சொல்லு. சுயநலவாதி, அயோக்கியன், பெண்பித்தன் என்னவேணுமானாலும் சொல்லு…நான் யோக்கியன்னு என்னைப்பத்தி சொல்லிக்கவே மாட்டேன்…ஆனா இது உண்மை…எனக்கு நீ இல்லாம

இருக்கமுடியாது…உன்கிட்ட இருக்கிறப்ப நீ மட்டும்தான் வேணும்னு தோணுது…ஆனா அவகிட்ட இருக்கிறப்ப அவளே முக்கியம்னு தோணுது… ஐ யம் எ ஸ்கௌண்டிரல்..எஸ் ஐ யம்…”

சந்திரா அயர்ந்து போய்விட்டாள்.

”என் கிட்ட இல்லாத எதை நீ அவகிட்ட பாத்தே?” என்றாள் ”அவ என்னைவிட சின்னப்பொண்ணு..அதுதானே?”

”அதில்லை….அப்டீன்னா நான் உன்னை விட்டுட்டு அவகிட போயிருக்கணுமே” என்றேன். ”உன்கிட்ட இருக்கிறப்ப நன் சின்னப்பையனா இருக்கேன் சந்திரா…நீ நான் பிரமிச்சு பாக்கக்கூடியவளா இருக்கே…உன் உடம்பு என் கைக்கு அடங்காததா இருக்கு.. உன் மனசு என்னால புரிஞ்சுக்க முடியாததா இருக்கு… மறுகரை காணமுடியாத ஏரிமாதிரி இருக்கே நீ.. எல்லாவகையிலயும் நீ என்னைவிட பெரியவள்…என்னை உனக்குள்ள ஒரு துளியா அடக்கிக்கிறவள்…. ..அது உருவாக்குற பிரமிப்புதான் என்னை உங்கிட்ட இழுக்குது. அது இப்பவும் எனக்கு வேண்டியிருக்கு…அதில இருந்து என்னால விலகமுடியல்லை…. ஆனா சுசி கிட்ட நான் பெரியவனா அதாவது ஒரு ஆண்மகனா என்னை •பீல் பண்றேன்.. அவ என் உள்ளங்கையிலே இருக்கிறா…இந்த செல்போன் மாதிரி…நான் அவளை ஹேண்டில் பண்ணலாம்…”என்றேன்.

அவள் பிரமித்துப்போய் என்னைப்பார்க்க நான் ” எனக்கு ரெண்டுமே வேண்டியிருக்கே சந்திரா” என்றேன்

”யூ ஆர் எ மதர் •பக்கர்” என்றாள்

நான் ஒருகணம் அதிர்ந்து அவளைப்பார்த்தபின் தொய்ந்து சோபாவில் சாய்ந்தேன். என் உடல் வியர்த்திருந்தது. அக்கணத்தில் முழுமையாக தோற்கடிக்கப்பட்டவனாக மரணம் மட்டுமே மிச்சமிருப்பவனாக உணர்ந்தேன்.

என் தளர்ச்சி அவளுக்கு குரூரத்தை அளித்தது. சுசி, பெண்கள் மட்டுமே அந்த உச்சகட்ட குரூரத்தின் தருணங்களை அடையாளம் காண்கிறார்கள். அவர்கள் அப்போது எதிரில்லாமல் வென்றபடியே செல்கிறார்கள்.

”எஸ்…நீ பெத்த தாயைக்கூட விடமாட்டே…”என்றாள்

நான் அவளையே பார்த்தேன். அவள் வியர்வையில் முகமெங்கும் கூந்தல் ஒட்டியிருக்க ”நீ ஒரு செக்ஸ் மேனியாக்….பொண்ணோட ஒடம்பு உனக்கு வேனும். வேற ஒண்ணுமே வேண்டாம். அதுக்காகத்தான் இந்த நியாயமெல்லாம் பேசறே… அந்தப்பொண்ணுக்கும் நீ துரோகம்செய்வே…அவளையும் நீ கைவிடுவே…நீ ஒரு ஸ்கௌண்டிரல்…”என்றாள்

”சந்திரா பிளீஸ்”

”ஏன்னா உன் உடம்புல ஓடுறது உங்கப்பனோட ரத்தம். சும்மா கெடைச்சா சாக்கடையையும் குடிச்சுப்பாக்கிற நாய்ப்புத்தி”

”ஷட் அப்!” என் உடல் நடுங்கியது. நான் எழுந்து அவளை அடிக்க

கையை ஓங்கி ஒரடி எடுத்து வைத்து அப்படியே நின்று மின்னதிர்ச்சி ஓடும் உடல்போல விதிர்த்தேன்.

”அடிடா…கொல்லு…கொன்னுபோட்டுட்டு போய் அவகூட படு…அதானே உனக்கு வேணும்? நீ பெண் ஒடம்புக்காக கொலையும் செய்வே…கொன்னு அந்த உடம்பை கடிச்சு தின்னாலும் திம்பே… சதைவெறி பிடிச்ச மிருகம் நீ… கொல்லுடா…”

நான் அந்த அரைக்கணத்தில் அவளை அறைந்து அறைந்து மிதித்து மிதித்து மிதித்து……..மனம் உக்கிரமாகச் செயல்படும்போது உடல் முற்றிலும் இல்லாமலாகிவிடுகிறது.

சந்திராவும் எங்கோ ஓர் இடத்தில் என்னை ரத்தச்சகதியாக கூழாக்கிக் கொண்டிருந்தாள். அவள் கண்களிலும் உதடுகளிலும் அவளுடைய மொத்த மூளைத்திறனும் வெளிப்படும் நேரம் அது என்று தெரிந்தது. சிங்கத்தின் வேட்டைமிருகத்தை நோக்கிப் பாய்வதற்கு முந்தைய கணம்…

”எஸ்….யூ ஆர் எ மதர் •பக்கர்…ஆக்சுவலி யூ ஆர் •பக்கிங் யுர் மதர் த்ரூ மீ”

நான் ஓடிப்போய் கதவைத்திறந்து வெளியே பாய்ந்து லி•ப்டை நோக்கிச்சென்றேன். கலைந்த உடையும் தலையுமாக சந்திரா என் பின்னால் ஓடி வந்தாள்.

”அருண் பிளீஸ்..பிளீஸ் அருண்..”என்று கூவியபடி லி•ப்ட் முன்னால் என்னைப்பிடித்தாள். லி•ப்ட் மேலே வந்து திறந்தது ”சொல்றதைக்கேள் அருண்…உன் மேல உள்ள ஆசையில சொல்லிட்டேன்.நீ

என்னைவிட்டுட்டுப்போகக்கூடாதுன்னு நெனைச்சு சொல்லிட்டேன்.....பிளீஸ்” அந்த சந்திராவை உள்ளே விட்டுவிட்டு இன்னொருத்தி பாய்ந்து வந்ததுபோல...

நான் லி•ப்டுக்குள் நுழைந்தேன்.அவள் அதன் கதவை கையால் பிடித்துக்கொண்டாள் ”அருண்...என்னை நம்பு...நான் சொன்னதுக்கெல்லாம் ஸாரி.. ஆயிரம் வாட்டி சாரி...நான் நீ சொல்றதையெல்லாம் புரிஞ்சுக்கிடறேன்..என்னை மட்டும் நீ புரிஞ்சுக்க... நான் உன் மேலே வச்சிருக்கிற பிரியத்தைமட்டும் புரிஞ்சுக்க.பிளீஸ்..”

”போ... யாராவது பாத்திருவாங்க..போ”

”மாட்டேன் நீ வா”

”தயவுசெஞ்சு போ”

”யாரு பாத்தாலும் எனக்கு ஒண்ணுமில்லை...இனி எனக்கு எதைப்பத்தியும் கவலை கெடையாது..எனக்கு நீ வேணும். உன்னை நான் விடமாட்டேன்...செத்திருவேன் அருண்...கண்டிப்பா செத்திருவேன்..”

நான் அவளைப்பிடித்து தள்ளினேன். அவள் சரிந்து தரையில் விழுந்தாள். லி•ப்டுக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டஒரு கணத்தில் ராஜம்மா கிழவியின் திகைத்த முகத்தை தூரத்தில் பார்த்தேன்

லி•ப்ட் இறங்கும் போது என் தலையில் நானே மடேர் மடேரென்று அடித்துக்கொண்டு அழுதேன். இறங்கி ஓடி காரை எடுத்து மிதித்தேன். ஏதாவது ஒரு விபத்தில் செத்து விடமாட்டேனா என்று நினைத்தேன். ஒரு சுவரை நோக்கி சீறிச்சென்ற என் கார் கடைசிக் கணத்தில் முத்தமிட்டு நின்றது. என் உயிர் காலை இயக்கியிருக்கிறது சுசி. அந்த மதியத்தில் நகரமே கொந்தளித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் என் காருக்குள் ஸ்டீரிங்கில் முகம் சாய்த்து கைவிடப்பட்ட குழந்தை போல தேம்பித்தேம்பி அழுதேன்.

பின்பு மனம்தேறி நேராக காரை ஜோவின் குடிலுக்குச் செலுத்தினேன். அவன் இருப்பானா என்று தெரியவில்லை. ஆனால் இருந்தான். குப்பை குப்பையாக தூசடைந்த புத்தகங்கள் சிடி அடுக்குகள் கித்தார் சுவரில் பாப் மார்லி நெல்சன் மண்டேலா படங்கள் சுவரில் டிஷர்ட்டுகள் லுங்கிகள் சாத்திய துடைப்பம் நடுவே அமர்ந்து கம்ப்யூட்டரில் ஏதோ தட்டிக்கொண்டிருந்தான்.

”வாடா...தனியா வரே?” என்றான்

”உன்னைப்பாக்கலாம்னு தோணிச்சு”

”கமான். கொஞ்சம் பழைய பாட்டுகளை டவுன்லோட் பண்ணிட்டிருந்தேன். சும்மா பொழுது போகலை. உக்காருடா”

நான் அமர்ந்துகொண்டேன். ”இன்னைக்கு போகலியா?”

‘எங்க?”

”வேலைக்கு?”

”அந்தவேலையை நான் அப்பவே விட்டுட்டேன்...”

”ஆம அதான் தெரியுமே...நான் சொல்றது இப்ப கடைசியாக் கெடைச்ச வேலையைப்பத்தி”

”அதைத்தாண்டா சொல்றேன்...அதையும் விட்டாச்சு”

”ஏன்?”

”•பூலிஷ் ஜாப்” என்றான் ”அதைவிடு இப்ப என்ன பிரச்சினை உனக்கு?”

”ஒண்ணுமில்லியே.சும்மாதான் வந்தேன்...”

”ஒண்ணு, உன் முகமே சரியில்லை. ரெண்டு, நீ பிரச்சினை இல்லாம என் கூடு தேடி வந்தது கெடையாது...’

”நாம சந்திச்சுகிட்டேதானே இருக்கோம்”

”ஆமா. ஆனா நீ என்னை எங்காவது வரச்சொல்லுவே..இல்லாட்டி நானே வருவேன்…நீ இங்க வர விரும்பறதில்லை, இந்த குப்பை அழுக்கு எல்லாம் உனக்கு அவெர்ஷன்…”

”இப்ப என்னை ஹர்ட் பண்ண நெனைக்கிறியா?”

”கண்டிப்பா இல்லை. உண்மையச் சொன்னேன். அதில தப்பே கெடையாது. நீ சீரா ஒழுங்கா ஒரு லை•ப்ல போய்ட்டிருக்கே. நான் கோணல்மாணலா கன்னாபின்னான்னு போய்ட்டிருக்கேன்… புறநானூறிலே ஒரு உவமை வருது வில்லிலேருந்து அம்பு போறப்ப அதன் நெழலும் கூடவே போகும்னு. ஆனா அம்பு நேரா போகும், நிழல் காடுமேடு குப்பைகூளம்லாம் விழுந்து பொரண்டு போகும். ரெண்டுமே போய் தைக்கிற எடம் ஒண்ணுதான்..”

”நான்சென்ஸ்…”என்றேன்

”உன்னைமாதிரி ஆட்களுக்கு நாங்க பேசறதெல்லாம் நான்சென்ஸ்தான். ஆனா அப்பப்ப உங்களுக்கு இந்த நான்சென்ஸ் தேவைப்படுது…”

”கடிக்காதே”என்றேன். அவனுடைய சிறிய கட்டிலில் கால்நீட்டிப்படுத்துக்கொண்டேன்.

”என்னடா?” என்றான்

”ஜோ …எனக்கு ஏதாவது குடிக்கணும்போல இருக்கு…”

”நீர்மோர் இருக்கு...குடிக்கிறியா?”

”வெளையாடாதே”

”அப்ப தேவ்டியா வீடுபோறதுமாதிரி குடிக்கணும்னா எங்களைத்தேடி வருவீங்க நீங்க?”

”ஜோ ஐ யம் ஹர்ட்”

ஜோ புன்னகைபுரிந்தபின் எழுந்து பாத்ரூமுக்குச் சென்றான்

”ஜோ”

”இருடா அதான் எடுக்கப்போறேன்...”

”பாத்ரூமிலேயா?”

”யா...பக்கெட்டிலே தண்ணிக்குள்ள போட்டு வச்சிருக்கேன். இங்க என்ன •ப்ரிட்ஜா இருக்கு...இதோ”

அவன் ரம் புட்டியை எடுத்து வந்தான். ”தண்ணி மட்டும்தான் இருக்கு. நான் குடிக்கிறப்ப ஒண்ணும் தொட்டுகிடறதில்லை... எனக்கு சிகரெட்டே

போதும்..”

அவன் கண்ணாடிக்குவளைகளை எடுத்து வைத்து அளந்து ரம்மை ஊற்றி நீர் கலந்தான். தேநீர் நிற திரவம் சுழித்து அ¨சைந்தது. ”ச்சீயர்ஸ்!” என்றான். நான் எடுத்து ஒரே மடக்காக விழுங்கினேன். குபுக் என்று ஏப்பம் விட்டேன்.

”சும்மா குடி. வாந்தி எடுத்தாக்கூட பரவால்ல. இங்க ஏகப்பட்டபேர் வாந்தி எடுத்திருக்காங்க. மூளைய வாந்தி எடுக்கிறவங்க உண்டு. ஆத்மாவையே வாந்தியா எடுத்தவங்களும் ஒண்ணுரெண்டுபேரு உண்டு...அப்றம் கற்பை வாந்தியா எடுத்தவங்க...”

”ஸ்டாப் இட் ஐ ஸே”

”சரி” என்று மௌனமாக சிகரெட்டை பற்ற வைத்தான்.

நான் மௌனமாக குடித்துக் கொண்டிருந்தேன். என் தலை கனத்தது. உடல் தலையின் எடையை தாள முடியாததுபோல ஆடியது.

”ஜோ, நான் உங்கிட்ட இதுவரைக்கும் ஒரு விஷயம் சொன்னதில்லை. உங்கிட்ட மட்டுமில்லை யார்ட்டயுமே சொன்னதில்லை. இப்ப அதைச் சொல்லத்தான் வந்திருக்கேன்”

”ம்ம்”

”எனக்கும் சந்திராவுக்கும் உறவு இருக்கு”

”சந்திரான்னா?” என்றவன் ”ஓ அவங்களா? உன்னோட காலேஜ் டீச்சர்…?”என்றான்

”ஆமா”

”அவங்க உன் அம்மாவோட ·ப்ரண்ட் இல்ல?”

”ஆமா”

ஜோ இன்னொரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டான் ”உறவுன்னா?”

”செக்ஸ்…”

”ஒண்ணுரெண்டு வாட்டி…அவ்ளவுதானே? இப்ப அதைப்பத்தி என்ன? விடு… இதெல்லாம் லை·ப்ல இல்லாத எடம் இல்ல…எல்லா வாயும் நாறும்னு ஒரு பழமொழி இருக்கு சீனாவிலே…”

”அதில்லடா…நான் வந்து…”

”குற்ற உணர்வு? சுசிகிட்டே சொல்லணுமா வேண்டாமாங்கிற பதற்றம்…”

”அதில்லை. இது இன்னும் தீவிரமான உறவு....உறவுன்னா இதோபார் இதுவரைக்கும் அந்தமாதிரி ஒரு ரிலேஷன் எனக்கு யார்கிட்டயும் உண்டானதில்லை... தீ மாதிரி”

”ஐ ஸீ”என்று அவன் நன்றாகச் சாய்ந்துகொண்டான். ”அவ இப்ப ரொம்ப தீவிரமா இருக்கா...நீ சுசிகூட நெருங்கறது அவளுக்குப்பிடிக்கலை...அவ்ளவுதானே?”

நான் கண்களை மூடிக்கொண்டேன். என் நரம்புகள் நெற்றிக்கு இருபக்கமும் இரு மண்புழுக்கள் போல நெளிந்தன. சட்டென்று எழுந்து அமர்ந்து ”ஜோ என்னை அவ காமவெறிபிடிச்ச மிருகம்னு சொன்னா. அம்மாவைக்கூட விட்டுவைக்காத அசிங்கமானவன்னு சொன்னா.... அதோட—” என் குரல் உயர்ந்தது ”ஜோ நான் அங்கேருந்து தப்பிச்சு ஓடிவந்தேன். ஏன்னா அப்ப எனக்குத்தோணிச்சு அவ சொல்றது உண்மைதான்னு. நான் ஒரு மிருகம்தான். சதைவெறிபிடிச்சு அலையற மிருகம்...அந்த உண்மைய என்னால தாங்க முடியல்லை...” என்னால் என் பேச்சை நிறுத்த முடியவில்லை ”அப்டிப்பாத்தா இந்த பூமியிலே எல்லா ஆணும் காமவெறிபிடிச்ச மிருகம்தானே? எல்லா ஆணும் சதைக்காக அலையவன்தானே? என்ன சொல்றே? சொல்லுடா..”

”ஒரு வகையிலே சரிதான்”

நான் குபுக் என்று ஓங்கரித்தேன். ஆனால் வாந்தி வரவில்லை. கையை கண்கள் மேல் வைத்துக்கொண்டு கட்டிலிலேயே படுத்துக்கொண்டேன். ”அவள் மேலே தப்பே கெடையாது ஜோ. எல்லா தப்பும் என் மேலேதான். குமார் மாமா இறந்தபிறகு தனியா பிடிவாதமா இருந்தா. அவ மனசைக்கலைச்சவன் நான் தான். நான் தான் அவளைக் கெடுத்தேன்...”

”ம்ம்”

”என்ன உம்?” என்றேன் ”நான் என்ன கதையா சொல்றேன்?”

”டேய் நீ நெனைக்கிறத சொல்ரா...நான் நெனைக்கிறத அப்றமாச் சொல்றேன்...”

” சின்னவயசிலே இருந்து நான் அம்மாகிட்டே வளர்ந்தவன் ஜோ...ஒருவேளை அப்பாவும் கூடவே இருந்திருந்தா நான் வேறமாதிரி இருந்திருப்பேனான்னு தெரியலை.. சின்ன வயசிலே இருந்து எனக்கு அம்மாதான். அம்மா என்னை பொத்திப்பொத்தி வளர்த்தா. அவ சொல்றதுமாதிரி தலை சீவணும். சொல்றதுமாதிரி சட்டை போட்டுக்கணும். சொல்ற நேரத்திலே படிக்கணும். பத்துமணிக்கு வெளக்கணைச்சுகிட்டு படுத்திரணும்...அம்மாவுக்கு நானும் அப்பாமாதிரி ஆயிடுவேனான்னு ரொம்ப பயம்... எனக்கும் அம்மாவைவிட்டா வேற ஆளில்லை. அப்றம் சந்திரா... சின்னவயசிலே எங்க வீட்டுக்கு வார ஒரே வெளியாள் அவதான்... அப்டியே அவமேலே ஒரு நெருக்கம் உணாச்சு...அது இப்டியெல்லாம் ஆகும்னு நான் கனவிலயும் நெனைக்கல்லை... இப்ப சின்னவயசை நெனைச்சா உடம்பே கூசுறதுமாதிரி இருக்கு...நான்லாம் ஒருமனுஷனான்னு தோணுது”

”தன்னிரக்கத்தையெல்லாம் அப்றமா வச்சுக்கலாம்...இப்ப சொல்லவேண்டியதைச் சொல்லு”

”எல்லாத்துக்கும் எனக்கு அம்மாதான். இல்லேன்னா சந்திரா. கொஞ்சம்

வளந்ததுக்குப் பிறகு அம்மாவுக்கும் எனக்கும் ஒரு தூரம் வர ஆரம்பிச்சுது... காலேஜ்ல பி.ஏ ·பைனல் படிக்கிற டைம் அது. நான் உடம்பால இளைஞனா ஆயிட்டேங்கிறத அம்மாவால புரிஞ்சுக்க முடியலை. மீசைய ஷேவ் பண்ணிக்கோன்னு சொல்லி கத்துவா. போம்மான்னு சொல்லிடுவேன். வாரப்பத்திரிகையில ஒரு நடிகையோட படத்தை உக்காந்து பாத்திட்டிருந்தேன். அதைப்புடுங்கி வீசிட்டு அந்த பத்திரிகையையே நிப்பாட்டிட்டா. டிவி பாக்கணுமானா அவகூட உக்காந்துதான் பாக்கணும். பாட்டெல்லாம் பாக்கவே கூடாது. அவன்கிட்ட சேராதே இவன்கிட்ட சேராதேன்னு ஒரே கெடுபிடி. என்னை பசங்கள்லாம் கங்காருன்னுதான் கூப்பிடுவாங்க. அம்மா மடிக்குள்ளேயே இருக்கிறேனாம்... அம்மா என்னை பிடிவாதமா சின்னப்புள்ளையா பாத்திட்டிருந்தா. நான் வளராம இருக்கிறதுக்கு ஏதாவது மருந்து இருந்தா வாங்கி குடித்திருப்பா. ஒருவாட்டி துணிமாத்திட்டிருக்கிறப்ப சாதாரணமா உள்ளவந்து எதையோ பீரோவிலேருந்து எடுத்துட்டு போனா. நான் அப்ப ஜட்டிகூட போடல்லை. அப்டியே வெலவெலத்துப்போச்சு...அப்றம் ஒருநாள் இதேமாதிரி ஒரு சம்பவம். ஞாயித்துக்கிழமை காலையிலே தூங்கிட்டிருந்தேன். எந்திரிடா எந்திரிடான்னு கூப்பிட்டுடே இருந்தா. நான் கேட்கலை. சட்டுனு வந்து என் போர்வையை புடிச்சு இழுத்திட்டா”

”புரியுது...”

”நான் எந்திரிச்சு போர்வையை சுருட்டி இடுப்போட புடிச்சுகிட்டு போடி வெளியேன்னு கையை தூக்கி அடிக்கப்போயிட்டேன். அப்டியே வெளிறிப்போய் நின்னுட்டு வெளியே ஓடிட்டா...நான் நேரா சாய்பாபா கோயில் போய் அங்க உக்காந்துட்டேன். எங்கியாவது ஓடிப்போகணும்னு எண்ணம்.கையிலே ஒரு வாட்ச் இருந்தது. அதைக்கொண்டுட்டுபோய் முந்நூத்தைம்பது ரூபாய்க்கு வித்தேன். நேரா பஸ் புடிச்சு திருச்சிக்குப் போயிட்டேன். ஒரேநாளிலே பணம் காலி. என்ன செய்றதுன்னு தெரியல்லை. திரும்பிவரவும் மனசில்லை. சந்திராவுக்கு ·போன் பண்ணினேன். அவதான் அப்ப எனக்கும் அம்மாவுக்கும் இருக்கிற

சின்ன பிரச்சினைகளையெல்லாம் தீத்து வைப்பா. அம்மாவை ஆஸ்பத்திரிய்லே சேத்திருக்குன்னு சொன்னா. நன் •போனிலேயே ஓன்னு அழுதிட்டேன். உடனே வான்னு சொன்னா. நன் வழியெல்லாம் அழுதிட்டே திரும்பிவந்தேன். நேரா சந்திரா வீட்டுக்குதான் போனேன். என்ன நடந்ததுன்னு அவ கேக்கலை. என்னை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போனா. அம்மாவைபாத்ததுமெ அழுதிட்டே காலிலே விழுந்து அழுதேன். அவளும் அழுதா…”

”அம்மா கிட்டேருந்து படிப்படியா வெலகிட்டேன். அம்மாவும் என் கிட்டேருந்து மரியாதையான தூரம் வச்சுகிட்டா.ஆனா அதுக்குப்பின்னால அவ பழைய கலகலப்போட இருக்கல்லை. கொஞ்சம் கொஞ்சமா அவளுக்கு வயசாகி கிழவியா ஆனதுமாதிரி இருந்தது. வாலண்டரி ரிட்டயர்மெண்ட் வாங்கிட்டா. அவளே தனக்குத்தானே பேசிக்கிட்டு கோயில் குளம்னு போய்ட்டு இருந்தா… அப்றம்தான் சந்திராகூட நெருங்க ஆரம்பிச்சேன். அவகூடவே காலேஜ் போவேன். அவளை என் ஸ்கூட்டரிலே பின்னால உக்காரவச்சு கூட்டிட்டுப்போவேன். பாதிநாள் அவ வீட்டிலேதான் இருப்பேன். அம்மாகூட என்னைப்பத்தி அவகிட்டதான் கேட்டு தெரிஞ்சுகிடுவா”

‘பி.ஏ முடிச்சப்ப மேற்கொண்டு என்ன பண்றதுன்னு தெரியாம திண்டாடிட்டிருந்தேன். என்னென்னமோ கொழப்பம். அம்மா சந்திராவைக்கூப்பிட்டு என்னடி என்ன செய்யபோறான் அவன்னு கேட்டிருகா. சந்திரா என்கிட்டே கேட்டா. நான் தெரியல்லைன்னு சொன்னேன். சரி நான் சொல்றேன் நீ விஷ௳வல் கம்யூனிகேஷன்ஸ் படி, அட்வர்டைஸிங்லே உனக்கு இண்ட்ரெஸ்ட் இருக்குன்னு சொன்னா. நான் அப்டியே பிரகாசமாயிட்டேன். எப்டி தெரியும்னு கேட்டேன். சிரிச்சுகிட்டே, எனக்கு உன் மனசு தெரியும்… உன் மனசு முழுக்க பெண்கள்தான். பெண்கள் கூடவேதான் நீ இருக்க விரும்புவே…உன்னாலே நீ வேற பிஸினஸோ வேலையோ செய்யமுடியாதுன்னு சொன்னா”

”நான் அப்டியே அதிர்ச்சி ஆயிட்டேன். மூஞ்சியிலே செருப்பால அடிச்ச மாதிரி ஆயிட்டுது. அப்டியே கௌம்பி வெளியே போய்ட்டேன். எங்கெங்கோ சுத்திட்டு வீட்டுக்குவந்தேன். அம்மா இல்லை. ரூம்ல வெளைக்கைக்கூட போடாம உக்காந்திருந்தேன். அப்ப ஸ்கூட்டர் சத்தம். சந்திரா வந்தா. நான் கதவைத்தெறந்தேன். எங்க போயிருந்தே? செல்லிலே கூப்பிட்டுட்டே இருந்தேனேன்னா. நான் பாக்கலைன்னு சொன்னேன். உள்ளவந்து உக்காந்தா. உக்கார்டான்னு சொன்னா நான் சோ•பாவிலே உக்காந்தேன். என் எதிரிலே உக்காந்து என்னையே பாத்திட்டிருந்தா. ஸாரி யதார்த்தமா சொன்னேன்னு சொன்னா. நான் தலைய தூக்கவே இல்லை. இதபார், நீ ஒரு ஆம்பிளை. நீ பொம்பிளைங்களை நினைக்கிறதுல எந்த தப்பும் இல்லை. உன் மனசு அங்க போகுதுன்னா அது உன்னோட நேச்சர். அந்த நேச்சருக்கு ஏத்த வேலையிலதான் நீ மகிழ்ச்சியா இருக்க முடியும்…அதான் சொன்னேன்னு சொன்னா.”

”நான் முரட்டுத்தனமா நான் ஒண்ணும் அப்டி இல்லைன்னு சொன்னேன். பொய், நீ எந்தப்பொண் படத்தையும் அஞ்சு நிமிஷமாவது பாப்பே. பெண் உடல்மேலே உனக்கு அப்டி ஒரு மோகம் இருக்குங்கிறத நான் எத்தனையோ வாட்டி கவனிச்சிருக்கேன்னு சொன்னா. எனக்கு ஆத்திரமோ வெறியோ…ஏன் அப்டி சொன்னேன்னு தெரியலை. கண்ணைத்தூக்கி ஆமா நான் உன் உடம்பைக்கூடத்தால் ரசிச்சுபாப்பேன். இப்ப என்னன்னு கேட்டேன்

அப்டியே ஸ்தம்பிச்சு போய்ட்டா. சட்டுனு எந்திரிச்சு கதவைத்தெறந்து வெளியே ஓடினா. என்னால நான் என்ன சொன்னேன்னு நம்பவே முடியல்லை. அவளுக்குப் பின்னாலே ஓடினோனா கதவைத்திறந்து வெளியே ஓடிட்டா”

பெருமூச்சுடன் கண்களை மூடி படுத்திருந்தேன். ”ஸோ அங்கதான் ஆரம்பிச்சுது இல்ல?”என்றான் ஜோ.

[8]

சுசி, அங்கே ஆரம்பித்தது இதெல்லாம். என்ன நடந்தது எப்படி நடந்தது என்று என்னால் சொல்லமுடியாது. அவை என் நெஞ்சில் கோவையாக இல்லை. அவை என்னுள் காலத்தால் வரிசைப்படுத்தப்படவில்லை. என்னுடைய நினைவால், இல்லை என் காமத்தால் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

காமத்தை அறிவது பெரும் ஞானிகளான முனிவர்களுக்கே வசப்பட்டதில்லை என்கிறார்கள். என் காமத்தைப்பற்றி நான் மீண்டும் மீண்டும் தனித்த இரவுகளில் எண்ணிக்கொண்டிருக்கிறேன். நம் காமத்தைப்பற்றி நாம் முழுக்க அறிவதேயில்லை. அறிய அறிய எஞ்சிக்கொண்டேயிருக்கின்றன சில. அந்த எஞ்சும்பகுதிகளே எப்போதும் முக்கியமானவை. பிரக்ஞைக்குச் சிக்காமல் ஒளிந்துகொள்வதில் முடிவிலாத மாயங்கள் கொண்டது காமம். தன்னை காதலாக, கனிவாக, கடமையாக, ரசனையாக உருமாற்றிக்கொள்கிறது. வெறுப்பாகவும் அருவருப்பாகவும் மாறிக்கொள்கிறது. ஏன் காமத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் காமத்தைக் கண்காணிக்கும் கண்ணாகவும்கூட காமமே மாறிக்கொள்கிறது.

நான் எட்டுநாள் சந்திராவைப்பார்க்காமலிருந்தேன். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கணமும் அவளையே நினைத்துக்கொண்டு. அப்போது நான் அறிந்தேன், அவளைப்பார்ப்பது எனக்கு எவ்வளவு தேவையாக இருக்கிரது என்று. அவள் உடல். அவளுடைய முகம் .சிரிப்பு. அம்மாவின் ஆல்பத்தை எடுத்து அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் படத்தை என் நடுங்கும் கரங்களால் தொட்டேன். மார்போடு அவளை அணைத்துக்கொண்டேன். சுசி, அவள் கல்லூரிக்குச்செல்லும்போது சாலையோரம் மறைந்து நின்று அவளை பார்த்தேன். அவளுடைய எடுப்பான நடையையும் தோற்றத்தையும். பின்னர் தனிமையில் நின்று ஏங்கி கண்ணீர் மல்கினேன்.

எட்டாம் நாள் அவளே அம்மாவுடன் எங்கள் வீட்டுக்குவந்தாள். வெளியே அவர்கள் பேசிக்கோண்டு வரும் ஒலியைக்கேட்டதுமே பதற்றம் கொண்டேன். என் கையில் இருந்து வாசித்துக்கொண்டிருந்த இதழ் நழுவியது. என் சொற்கள் அனைத்து நெஞ்சுக்குள் இறங்கி இறுகிக் கொண்டன. அவர்கள் சிரித்துப்பேசியபடி உள்ளே வந்தார்கள். சந்திரா என்னைப்பார்த்து மிகச்சாதாரணமாகச் சிரித்து ”என்ன வாசிப்பா?”என்றாள்.

அம்மா என்னிடம் ”உனக்கு லயோலாவிலே அப்ளிகேஷன் வாங்கிட்டுவந்திருக்காடா... விஷ¤வல் கம்யூனிகேஷன் படிக்கணும்னு சொன்னியாமே..”

நான் எப்படி என் முகபாவனையை மறைத்தேன் என்று எனக்கே தெரியவில்லை.

”எல்லாத்தையும் பாத்து •பில்லப் பண்ணுங்க...”என்றபடி அம்மா உள்ளே சென்றாள்.

சந்திரா என் முன்னால் அமர்ந்தாள் ”உன் சர்டி•பிகெட்ஸ்லாம் எங்க? கொண்டுவா”என்றாள்.

நான் எழுந்தேன். ”போட்டோகிரா•பிக்குகூட ஏதோ அவார்ட் கெடைச்சிருக்குல்ல? அதுக்கு சர்டி•பிகெட் இருக்கா?”

நான் தலையசைத்தேன்.

”கொண்டுவா” அறைக்குள் சென்று நான் என் பெட்டிகளையே அர்த்தமில்லாமல் துழாவிக்கொண்டிருந்தேன். அவள் முன் செல்லவே கூடாது என்ற தயக்கமும் அவளை விட்டு ஒரு கணம் கூட சிந்தனை விலகாத மாயமும் சேர்ந்து என்னை செயலற்று அமரச் செய்தன.

”வர்ரியா?” என்றாள். நான் என் •பைல்களுடன் சென்றேன். அவள்: முன் சோ•பாவில் மெல்ல அமர்ந்தேன். சோபா நழுவி என்னை வீழ்த்திவிடும்போல் இருந்தது.

”இந்தா இப்பவே •பில்லப் பண்ணு…நாளைக்கே மணிசார்ட்ட குடுத்து குடுக்கச்சொல்லிடறேன். அங்க சாம்னு ஒரு •பாதர் இருக்கார். மணிசாருக்கு நெருக்கமானவர்…”

நான் விண்ணப்பப்படிவத்தை நிரப்ப ஆரம்பித்தேன். என் கைகள் நடுங்கின. மனம் நிலைகொள்ள மறுத்தது.

சந்திரா என்னருகே வந்து குனிந்து பார்த்தாள். ”சேச்சே…என்ன நீ கிறுக்கறே…இது காலேஜுக்கு குடுக்கற •பார்ம்…பாத்து எழுது” நான் திரும்பியபோது அவளுடைய மார்புகள் என்னருகே இருந்தன. நிறைந்த முலைகளின் வெண்ணிறமான இடுக்கு. அவை எனக்கு எத்தனை தூரம் அறிமுகமானவை என்று அறிந்தேன். உதிரிக்கணங்களின் காட்சிகளாக அவை என்னுள் சேர்ந்திருக்கின்றன. நான் அவற்றை எண்ணாத நாளே இல்லை.

முந்தானையை போட்டுக்கொண்டு ”நோ”என்றாள் ”நீ படிக்கிற பையன்…இந்தமாதிரி பார்வையெல்லாம் வேண்டாம். மனசு கெட்டிரும்.

என்ன...நல்ல பிள்ளை இல்ல? சொன்னா கேப்பேல்ல?”

என் கண்கள் நிறைந்தன. ”சீச்சீ... என்னடா இது?” என்று என் தொடையை தொட்டாள்.

”ஐயம் ஸாரி” என்றேன் தலை குனிந்து.

”சும்மாரு...உன் மேலே எனக்கு ஒண்ணும் கோபம் இல்லை. ஏதோ வெளையாட்டாச் சொன்னே...விடு...•பார்மை பில்லப் பண்ணு”

”சத்தியமா கோபம் இல்லல்ல?”

”சொன்னேன்ல?”

நான் அக்கணமே மலர்ந்து புன்னகை செய்தேன். மனதிலிருந்த எடைகள் முழுக்க அகன்றன. ” உன்னை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு...நீ தப்பு பண்ணினாக்கூட அந்த பிரியம் அப்டியேதான் இருக்கும் என்ன? சும்மா மனசைப்போட்டு அலட்டிக்க கூடாது”

நான் படிவங்களை எழுதினேன். அவள் அதை குனிந்து பார்த்து திருத்தினாள் என் காதைப்பிடித்து திருகி தப்பைச் சுட்டிக்காட்டினாள். சிரித்தாள். நான் மீண்டும் அவள் மார்புகளையும் தோள்களையும் கழுத்தையும் பார்த்தபோது ”நோ” என்று விரலை ஆட்டினாள்.

சுசி, அவள் என்னுடன் விளையாடினாள் .அல்லது தன்னுடன். அல்லது தன் காமத்துடன். அல்லது தன்னைப்பற்றி தான் கொண்டிருக்கும் எண்ணத்துடன். நான் விளைவுகளைப் பற்றி எண்ணவே இல்லை. அந்த நிகழ்காலத்து பரவசம் அன்றி என் மனதில் எதுவுமே இருக்கவில்லை. அவள் என் கண்முன் மெல்லமெல்ல வெறும் உடம்பாக ஆகிக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அவள் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தேன். நவீனுடன் விளையாடினேன். அவள் வீட்டுக்கு குற்றேவல்கள் செய்தேன். அவள் துவைத்த துணிகளைக் காயப்போட்டேன். அவளுக்கு பாத்திரங்கள் கழுவிக்கொடுத்தேன். ஆனால் எங்களுக்கு நடுவே இப்போது அவள் உடல் எப்போதும் இருந்தது. சுசி, ஒரு ஆண் ஒரு பெண்ணை உடம்பாகப் பார்க்க ஆரம்பித்தானென்றால் அந்தப்பெண்ணும் மெல்ல மெல்ல உடம்பாக ஆக ஆரம்பிக்கிறாள். அவனை அவள் வெறுக்கலாம், அருவருக்கலாம். ஆனாலும் அதை அவளால் தடுக்க முடியாது. புத்தியுடன் விளையாடலாம், மனதுடன் விளையாடலாம், ஆத்மாவுடன் விளையாடலாம், ஒருபோதும் நாம் உடலுடன் விளையாடலாகாது

ஏனென்றால் உடல் நம் மனம் போல புத்தி போல ஆத்மா போல நம்முடையது அல்ல. அது இந்த பிரபஞ்சத்தின் ஒரு துளி. பிரபஞ்சத்தின் மாற்றமில்லா பெருநியதிகளுக்குக் கட்டுப்பட்டது. பிரபஞ்சத்தை நம்மால் புரிந்துகொண்டாலொழிய உடலைப் புரிந்துகொள்ள முடிவதில்லை

அவள் ஒவ்வொரு கணமும் தன் உடலைப்பற்றிய கவனத்துடன் இருப்பதைக் கவனித்தேன். என் கண்கள் அவளை மீண்டும் மீண்டும் நாடின. பக்கவாட்டில் நிற்கையில் தெரியும் இடையின் சரிவு ஒவ்வொரு முறையும் என்னை கிளர்ச்சியுறச்செய்தது. முப்பதைத்தாண்டிய குழந்தைபெற்ற பெண்களுக்கே உரிய இடை அது. என் கண்களுக்கு அன்று ஓர் இளம்பெண்ணின் இடை எவ்வகையிலும்

அழகாகதெரியவில்லை– அது ஓரு பையனின் இடையாகவே தெரியும்.

அவள் உடல்… அந்த ஒவ்வொரு கணத்தையும் என்னால் நினைவுகூர முடிகிறது குனியும்போது புடவை விலகும்போது தெரியும் மென்மையான வயிறின் குழைவு. பிரசவத்தின் வெண்தழும்புகள் ஆற்றுநீரோடிய மணல்வரிகள் போல…கழுத்தின் மெல்லிய சதைவரிகள். கொழுத்து உருண்ட கன்னங்கள். காதோரத்துப் பூனைமுடி. அனைத்துக்கும் மேலாக அசையும், திமிறும், பெரிய முலைகள்.

முலைகளின் கோடானுகோடிக் கணங்கள். ஆயிரம் பல்லாயிரம் அசைவுகள். முலை ஏன் ஆண்மனதை இழுக்கிறது. அவனை குழந்தையாக ஆக்குகிறதா? இல்லை பலசமயம் அது அவனை ஆணாகத்தான் ஆக்குகிறது. அதன் உயிர்த்தன்மை வேறு எந்த மானுட உறுப்புக்கும் இல்லை. கருணையும் காமமும் கலந்த ஓர் உறுப்பு. உணர்ச்சிகளின் குறியீடாக மட்டுமே இருக்கும் தசைகள்…

சமையலறையில் காய்கறி வெட்டியபடி பேசிக்கொண்டிருந்தபோது அவளுடைய கூந்தல் என்னருகே இருந்தது. பின்னால் திரும்பி பாத்திரம் கழுவிக்கொண்டிருந்தாள். நான் மெல்ல மெல்ல நகர்ந்தேன். இரை நோக்கி நகரும் சிறுத்தை போல. அவளுடைய கூந்தலை மெல்ல முகர்ந்தேன். அதை அவள் உணரவில்லை. மேலும் முகர்ந்தபோது சட்டென்று அவள் கை நின்றது. நான் விலகவில்லை. அவள் சாதாரணமாக கூந்தலை அள்ளி முன்னால்போட்டுக்கொண்டு விலகிச்சென்றாள். பருப்பு டப்பாவை எடுத்துக் கொண்டு ”எப்ப காலேஜ் தெறக்குது?”என்றாள்

.நான் ”மண்டே”என்றேன்.

அவள் ”டிரெஸ்லாம் எடுத்தாச்சுல்ல?”என்றாள்.

”யா” திரும்பியபோது அவள் கண்களைச் சந்தித்தேன். அவற்றில் முதல்முறையாக அவளுடைய காமத்தைக் கண்டேன். ஒரு கணத்தில் அவள் விலக அந்த காமம் என்னை மெல்லிய அச்சத்துடன் பின் வாங்கச்செய்தது.

கல்லூரியில் முதல்நாளே ஒரு டிஜிட்டல் காமிரா வாங்கவேண்டும் என்று சொன்னார்கள். நண்பர்களுடன் சென்று ஒரு காமிரா வாங்கினேன். காமிராவுடன் நேராக அவள் வீட்டுக்குத்தான் சென்றேன். சாதாரணமான நைட்டியுடன் டிவி பார்த்துக்கொண்டிருந்தாள். ”சந்திரா ஆண்டி...கெஸ் வாட் ஐ ஹேவ்”என்று குதித்தேன்.

”என்ன?”என்று சிரித்தபடி எழுந்தாள்.

”போய் டிரெஸ் பண்ணிட்டுவாங்க....போங்க”

”ஏண்டா?”

”போங்க சொல்றேன்”

”என்னடா அது?”

”டிஜிட்டல் காமிரா...மொதல் ஷாட் உங்களைத்தான்... ப்ளீஸ் டிரெஸ் சேஞ்ச் பண்ணுங்க”

”நவீன் வரட்டுமே..அவனை எடுக்கலாம்”

”நான் உங்களைத்தான் எடுக்கணும்…ப்ளீஸ்”

அவள் சென்று உடைமாற்றி வந்தாள். நீலநிற ஷிபான் சேலை. அதேநிறமான பொட்டு. அவள் எத்தனை பேரழகி என்று எண்ணிக்கொண்டேன். வெண்ணிறமான அவள் கைகளும் தோள்களும் நீலப்புடைவையிலிருந்து பூத்து விரிந்தவை போலிருந்தன.

அவளை மீண்டும் மீண்டும் பல கோணங்களில் புகைப்படம் எடுந்தேன். ”ப்ளீஸ் இன்னொரு ஸாரி ஆண்டி…ப்ளீஸ்”

”நோ…வேண்டாம்…” என்றாள் கண்களில் பூரிப்பும் அதே சமயம் எச்சரிக்கை உணர்வுமாக.

”ப்ளீஸ் ஆண்டி ப்ளீஸ்”

மேலும் மேலும் உடைகள். எத்தனை எடுத்தேன் என்றே நினைவில்லை. அதன்பின் ஒவ்வொரு படத்தையாக கம்ப்யூட்டரில் போட்டுப்பார்த்துக் கொண்டிருந்தோம் ..”சந்திரா ஆன்டி, இன்னைக்குள்ள எந்த மாடலும் உங்க அளவுக்கு அழகு கெடையாது”என்றேன்

”போடா” என்றாள்

அடுத்த படம் எங்களை அமைதியாக்கியது. காற்றில் முந்தானை விலக அவள் மார்புகளின் முழுமை தெரிந்தது. ”சீ”என்று அவள் கீயைஅழுத்த படம் மாறியது.

நான் திரும்பி அந்தப்படத்தை எடுத்தேன். ”நோ மாத்து…டிலிட் பண்ணு அதை”

”நோ”’ என்றேன் அதைபார்த்தபடி.

”சொன்னதைச் செய்டா”என்று கோபத்துடன் அதை அழித்தாள்

”காமிராவிலே இருக்கே”

அவள் பாய்ந்து காமிராவை என்னிடமிருந்து பிடுங்க முயன்றாள். நான் ”சரி காமிராவை அழிச்சாலும் என் கண்ணுலே இருக்கே…”என்றேன்

அவள் என் கண்களைப் பார்த்தாள். சட்டென்று திரும்பி உள்ளே போய்விட்டாள்.

நான் ஹாலிலேயே தயங்கி நின்றேன். பின்னர் மெல்ல நடந்து உள்ளே எட்டிப்பார்த்தேன். உள் அறையில் சன்னல் வழியாகப்பார்த்தபடி நின்றிருந்தாள்

அருகே சென்றேன். அவள் திரும்பி என்னைப் பார்த்தாள்.

அழுதுகொண்டிருக்கிறாள் என்பதை அப்போதுதான் கண்டேன். அத்துடன் புகைப்படத்துக்காக அவள் கண்களுக்கு மையிட்டிருக்கிறாள் என்பதும் தெரிந்தது. கன்னங்களில் மையின் தீற்றல்.

என் மனம் கொந்தளித்தது. ”ஸாரி ஆண்டி”என்றேன்

”இட் இஸ் ஓகே”

”நான் ஏன் அப்டில்லாம் சொன்னேன்னு எனக்கே தெரியல்லை” என்றேன்.

”எனக்கு ரொம்ப பயமா இருக்கு…பிளீஸ் வேண்டாம்”

”ஸாரி.நான் அப்டி நெனைச்சு சொல்லலை. வாயில வந்திட்டுது”

”நான் என்னை நெனைச்சு பயப்படறேன்…உன்னைப்பத்தி இல்ல…ப்ளீஸ் இனிமே இங்க வராதே…ப்ளீஸ்”

நான் அடிபட்டவன் போல் நின்றேன்

”உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். உன் அம்மாகிட்ட உனக்கு ஒரு தூரம் இருக்குல்ல? அந்த தூரம் என் கிட்டயும் வச்சுகோ. இனிமே தனியா இருக்கிறப்ப வராதே… வெலகிருவோம்..”

”ஏன் ஆன்டி?”

”இது போற எடம் சரியில்லை…வேண்டாம்”

”ஸாரி”என்றேன். பேசமல் திரும்பி காமிராவை எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

”அருண்…ப்ளிஸ் கோவிச்சுட்டு கெளம்பாதே”

நான் ஒன்றும் சொல்லாமல் கிளம்பி வெளியே சென்றேன். ராஜம்மா கிழவி லி•ப்ட் அருகே நின்றிருந்தாள் ”இப்பதான் போறியா?”என்றாள். என்ன கேட்கிறாள் என்று எனக்கு புரியவில்லை

லி•ப்டில் கிழவியும் வந்தாள் ”காலேஜிலே சேந்திருக்கியா?”

”ஆமா”

”படம் புடிக்க வந்தியாக்கும்?”

நான் கிழவியின் கண்களைப் பார்த்தேன். அவள் என்ன சொல்கிறாள் என்று எனக்குப்புரிந்துவிட்டது. கீழே இறங்கிச்சென்று என் சைக்கிளில் ஏறி விரைந்தேன்.

பதினெட்டு நாள் நான் அவளைச் சந்திக்க போகவில்லை. முதல் இரண்டுநாள் எந்தக் கணத்திலும் கிளம்பி அவளைத்தேடிச் சென்று திரும்பிவந்த நாய்க்குட்டி போல அவள் வாசலில் நான் நிற்பதற்கான சாத்தியம் இருந்தது. ஆனால் இரண்டுநாள் தாண்டியதும் அது எனக்கு தன்னம்பிக்கையை அளித்தது. நான் வல்லமையோடிருக்கிறேன். ஆண்மகனாக இருக்கிறேன். என்னை நான் எங்கும் எதற்கும் அடிமைப்படுத்தவில்லை….

ஆனால் ஆறேழுநாட்கள் தாண்டியதும் அவள் ஏன் என்னைப்பார்க்க வரவில்லை என்று என் மனம் தவிக்க ஆரம்பித்தது. அப்படியானால் அவளுடைய பிரியம் பொய்யானது. அவளுடைய காமத்துக்கு ஒரு முகம்தான் நான். நான் அவளை விட்டுவிட்டால் அவளுக்கு ஒன்றுமில்லைலீன்னொருவனை தேடிக்கொள்வாள்—

அந்த எண்ணத்தில் தடுக்கி நின்றுவிட்டேன். உண்மையாகவா? அதற்கான வாய்ப்பு இருக்கிறதா? அவளுக்கு யாரையாவது தெரியுமா? கல்லூரியில் அவளுக்கு நெருக்கமான எவராவது இருப்பார்களா? மூர்த்தி சார் அவளை இருமுறை காரில் கொண்டுவிட்டிருக்கிறார். ஆனால் மூர்த்தி சார்—- ஏன் இருக்க கூடாது? ஏன் ? எனக்கும் அவளுக்குமான உறவேகூட பிறிதொருவர் கேட்டால் சேச்சே என்று ஒதுக்கும்படியானதுதானே?

அவள் அந்த உறவுக்கும் தயாராக இருப்பவள். காமத்தால் கட்டிழந்தவள். உண்மையில் அதெல்லாம் நான் முயன்று உருவாக்கிக் கொண்ட உணர்ச்சிகள். எனக்கு அந்த இம்சை வேண்டும்போலிருந்தது. பொறாமையும் கசப்பும் சுயவெறுப்புமாக நான் அறைக்குள் முடங்கிக் கிடந்தேன். அடிபட்ட எலும்பு போல மனம் எப்போதும் தெறித்துக்கொண்டிருந்தது.

இரண்டுமுறை அவளையும் மூர்த்தியையும் வேவுபார்க்க நான் கல்லூரிவரைக்கும் சென்றேன். ஆனால் உள்ளே செல்லவில்லை. ஏனென்றால் நான் உள்ளூர அது பொய் என்று அறிந்திருந்தேன். அந்தப்பொய்யை நம்ப விரும்பி நான் அவர்களை பலவகையான கோணங்களில் கற்பனை செய்துகொண்டு என் உள்ளத்தின் மென்சதைமீது அமிலத்தைப் பூசிக்கொண்டேன்

ஆனால் அபப்டியே பதினெட்டுநாள். ஆம், பதினெட்டுநாள் நான் தவிர்த்துவிட்டேன். அந்த மூன்றுவாரக்கால மன உளைச்சல் என்னை மூன்றுவருட மனவளர்ச்சியை அடையச்செய்தது. என் இளமையின் துள்ளல் முற்றிலும் இல்லாமலாகியது. முற்றிலும் எனக்குள் ஒடுங்கியவன் ஆனேன்.

பத்தாவது நாள் நான் தற்செயலாக எதையோ படிக்க ஆரம்பித்தேன். பலமாதங்களாக நான் வாசிப்பதை நிறுத்திவிட்டிருந்தேன். ஒருவரிகூட என் சிந்தனையை எட்டாமல் வெறும் எழுத்துக்களையே வாசித்துச் செல்பவனாக மாறிவிட்டிருந்தேன். ஆனால் அப்போது ஹிண்டு ஞாயிறு இதழில் வந்த ஏதோ ஒரு இலக்கியக் கட்டுரையை வாசித்தபோது என் மனம் முற்றிலும் அதில் குவிந்ததை உணர்ந்தேன்.

என் மனதின் வலி சட்டென்று நிறுவிட்டது போலிருந்தது. என்னால் வாசிப்பதை நிறுத்தவே முடியவில்லை. மீண்டும் மீண்டும் நூல்களை நோக்கிச் சென்றேன்.எந்த அளவுக்கு புத்தகம் செறிவானதாக இருந்ததோ அந்த அளவுக்கு நான் அதில் ஆழ்ந்தேன். மேடம் பவாரியை அப்போதுதான் படித்தேன். அதன் பின் வுதரிங் ஹைட்ஸ். அதன்பின் கான் வித் த விண்ட். அதன்பின் பிரைட் ஆண்ட் பிரஜுடிஸ்…

அந்த நூல்களை பிறிதொரு மனநிலையில் நான் பத்துபக்கம் தாண்டியிருக்க மாட்டேன்…கனமான நூல்களையே என் கைகள் தேடி

எடுத்தன. இரவுபகல் இடைவேலையில்லாமல் ஒருநாள் அதிகபட்சம் இரண்டு மணிநேரம் மடும் தூங்கியபடி நான் வாசித்துக் கொண்டிருந்தேன். சுசி, அப்போது வாசித்த நாவல்கள் அனைத்தும் எனக்கு வரிவரியாக நினைவிருக்கின்றன என்றால் என் மனம் எந்த அளவுக்கு அதில் மூழ்கியிருந்திருக்கிறது....

சுசி, அது ஒரு மனநோய். இல்லை மனநோயின் விடுவிப்பு. மனம் நிறைந்த ஏரி போல. ஏரியின் ஒவ்வொரு துளியும் அழுத்தத்தால் நெரிபடுகிறது. விடுவித்துக் கொள்ளத் துடிக்கிறது. ஒரு சிறிய வழியை கண்டடைந்ததும் அதன் வழியாக பீரிட்டு வெளிப்பட்டு தன்னை உடையாமல் காத்துக் கொள்கிறது. என் இயல்பு அன்று நூல்களை நாடியது. நான் எப்போதுமே நல்ல வாசகன். என் அம்மா இலக்கிய ஆசிரியை என்பதனால் வந்த பழக்கம். அல்லது அம்மா என்னை நல்ல பையனாக வளர்க்கவேண்டுமென்று நூல்களுக்குள் அடைவைத்திருந்தாள்

பதினெட்டாம் நாள் அவள் வந்தாள். அம்மாவைப் பார்க்க வந்ததுபோல. நான் கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்தேன். என் புகைபறந்த கண்கள் முன் அவள் உருவம் திரைபோல ஆடியது. சாதாரணமாக ”ஹாய்” என்றபின் உள்ளே சென்றாள்.

நான் உதடசையாமல் ”ஹாய்”என்ரேன். எழுந்து என் அறைக்குச் சென்றேன்.

அவள் விடை பெறும்போது அம்மா வந்து ”டேய் சந்திரா கௌம்புறாடா”என்றாள்.

நான் வெளியே சென்று ”பை”என்று சாதாரணமாகச் சொன்னேன்.

சந்திராவின் கண்கள் என் கண்களைச் சந்தித்தன. அவை திகைத்திருந்தன. என் கண்களில் அவள் ஏதோ விபரீதத்தைக் கண்டுவிட்டாள்.

காலேஜ் விட்டு வெளியே வந்தபோது கேட் வாசலில் ஸ்கூட்டரில் சந்திரா நின்றிருந்தாள். நான் அவளைப் பார்த்தேன். ஒருகணம் தயங்கியபின் அருகே சென்று சாதாரணமாக ”ஹாய் ஆன்டி”என்றேன்.

”வா..உங்கூட பேசணும்”

”வாங்க டீ சாப்பிட்டுட்டே பேசலாம்”

”நம்ம வீட்டுக்குப்போகலாம்”என்றாள்

நான் ‘வேண்டாம்” என்றேன் ”நீங்க சொல்றதுதான் சரி...இதை விட்டுடலாம்.... வேண்டாம் தப்பா போயிடும்” என்றேன்

”டேய் வாடா”என்று உரக்கக் கத்திவிட்டாள். கழுத்தில் ஒரு பச்சை நரம்பு தெரிந்து மறைந்தது.

நான் திகைத்து சுற்றுமுற்றும் பார்த்தேன். என் மனம் அறைபட ஆரம்பித்தது

”வர்ரியா இல்லியா?” என்று மூச்சிரைத்தபடி கேட்டாள்.

நான் அவளை பின்னால் அமரச்செய்து முன்னால் ஏறிக்கொண்டேன். அவள் என்னை தொடவில்லை. அவளுடைய வெப்பமான மூச்சு மட்டும் என் முதுகுச் சட்டையை தொட்டுக்கோண்டிருந்தது. அவளுடைய அபார்ட்மெண்டை அடையும் வரை நாங்கள் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை.

மாடி ஏறி மேலே சென்றபோது நான் ராஜம்மா கிழவியை தேடினேன்.
”என்ன பாக்கிறே?”

”ராஜம்மாகெழம் வேவுபாக்குமே அதான்”

”அவளுக்கு உடம்புசரியில்லை” என்றாள். இருவரும் மிகச்சாதாரணமாக இருந்தோம். நிதானமாக. ஆம், இருவருக்குமே தெரிந்திருந்தது, அது முடிவுக்கு வந்து விட்டது என்று. நாடகம் முடிந்துவிட்டது, திரை தாழ்த்தியாகிவிட்டது.

கதவை திறந்து உள்ளே சென்றதும் நான் சோ•பாவில் அமர்ந்துகொண்டேன். அவள் ”கா•பி சாப்டறியா?”என்றாள்

”வேண்டாம்”

அவள் எதிரே டீபாயை இழுத்துப்போட்டு அமர்ந்துகொண்டு ”நீ ஏன் பாக்கவே வரதில்லை?” என்றாள்.

”நீங்கதானே சொன்னீங்க?”

”சொன்னா?” குரலைத்தாழ்த்தி ”பாக்கணும்னே தோணாதா?”

நான் நிமிர்ந்து அவளைப் பார்க்கவில்லை.

”தோணும்..ஆனா வேண்டாம்” என்றேன்

”ஏன்?” அவள் குரலில் மெல்லமெல்ல ரகசியம் மிக்க ஒரு கனம் உருவாகிச்சென்றது. என்னை பின்னாளில் பித்துபிடிக்கச்செய்த அந்த அடிக்குரலை அப்போதுதான் கேட்டேன்.

”வேண்டாம்..அவ்ளவுதான்” என்றேன் வீம்புடன்

”என்னை வெறுக்கிறே இல்ல?” இந்த கேள்வியை ஆணிடம் கேட்காத பெண் எங்காவது உண்டா?

”சும்மா வெளையாடாதீங்க...இதெல்லாம் வேண்டாம். என் மனசு என் கன்ட்ரோலிலே இல்ல”

”என் மனசும் என் கன்ட்ரோலிலே இல்ல... அருண் நான் ராத்திரி நிம்மதியா தூங்கி பதினெட்டுநாள் ஆச்சு...மாத்திரை போட்டு தூங்கறேன்...”

”அதுக்கு நான் என்ன பண்னனும்?” என்றேன் சட்டென்று நிமிர்ந்து, கோபத்துடன்

”நீ வரணும்...நீ இல்லாம என்னால முடியலை. பதினைஞ்சு வருசமா உன்னை எனக்கு தெரியும். உன்னை என் இடுப்பிலே தூக்கிட்டுப் போய் கொஞ்சியிருக்கேன்... ப்ளீஸ்டா...நீ இல்லாம என்னால இருக்க முடியல்லை”

”வேண்டாம்..நான் வரமாட்டேன்”என்றேன்.

”என் மனசைபுரிஞ்சுக்கோ... நீ வெறுத்திட்டு போனேன்னா என் வாழ்க்கையில அப்டி ஒரு வெறுமைதான் இருக்கு...எனக்கு பேசிக்கறதுக்கு கூட யாருமில்ல. நீ இல்லேன்னா எனக்கு ஒண்ணுமே இல்லைடா”

”நான் வந்தா உங்களுக்குப் பிரச்சினைதானே?”

”எப்படா இப்டி எல்லாம் தப்பா ஆச்சு? நமக்குத்தெரியாம தப்பா ஆயிடிச்சு..அதை சரி பண்ணிகிடலாம். நீ பழையமாதிரி இருடா... நானும் பழையமாதிரி இருக்கிறேன்...நீ நவீன் மாதிரியேதானே இருந்தே” அவள் எட்டி என் கைகளைப்பிடித்தாள்.

கைகளை உதறி ”அப்பநான் சின்னப்பையன்...இப்ப இல்லை” என்றேன் . அவள் என்னை பிரமித்து பார்த்தாள். அவளை ஏறிட்டுப் பார்த்து ”இப்ப என்னால உங்கள அப்டி பாக்கமுடியாது...நான் சும்மா பொய்யெல்லாம் சொல்ல விரும்பலை...எனக்கு மனசு முழுக்க உங்க உடம்புதான் இருக்கு...அதான் வரமாட்டேன்னு சொல்றேன்”

அவள் திகைத்துப் போய்விட்டாள்.

நான் எழுந்தேன் ”இனிமே வரவே மாட்டேன்...குட்பை”என்று சொல்லிக்கொண்டு கிளம்பினேன்.

”அருண் ப்ளீஸ்...என்னை விட்டுட்டு போகாதே...பதினைஞ்சு வருச்ஷமா நான் ஒவ்வொரு நாளும் உன்னை நெனைச்சிட்டு இருந்திருக்கேன்...நீ இல்லாம என்னால ஒருநாள்கூட இருக்கமுடியாது...டேய் நில்டா”

பின்னால்வந்து என்னைப் பிடித்தாள். கண்களில் ஆவேசத்துடன் ”இப்ப என்ன வேணும் உனக்கு?சொல்டா” என்றாள்

எனக்குள் உறைந்த அந்தப்புராதனமான ஆண் கண்டுகொண்டான்,அதுதான் அந்தக் கணம் என. நான் அவளைக் கட்டிப்பிடித்துக்கொண்டேன். ஆவேசமாக அவள் கழுத்திலும் கன்னங்களிலும் முத்தமிட்டேன்.

”அருண் பிளீஸ்..ப்ளீஸ்...வேண்டாம்டா..” என் மார்பைப்பிடித்துத்தள்ளி பின்னுக்கு முகத்தைக் கொண்டுசென்றாள். மார்பகங்களின் பிதுக்கமும் சிவந்து கனிந்த தோள்களும் இழுபட்ட கழுத்தின் மென்மையான வெண்மையும்–

நான் அவளை சுழற்றி சுவரோடு வைத்து அழுத்தி அவள் உதடுகளைக் கவ்விக்கொண்டேன். என் வலக்கையால் அவள் மார்பகத்தை பற்றினேன். அவள் மேலாடையை விலக்கி ஜாக்கெட்டை கிழித்து

மார்பகங்க¨ளை ஏந்திக்கொண்டேன்.

அவள் உடல் தளர்ந்தது. மெல்லிய விம்மல் போலவோ கேவல்போலவோ ஒரு ஒலியைக் கேட்டேன். அது அரைக்கணம் என்னை தளரச்செய்தது. ஆனால் அவள் என்னை பொங்கி எழுந்த ஆவேசத்துடன் அணைத்து என் உதடுகளை கவ்வி முத்தமிட்டாள். என்னை அவளே உந்தி சோபாவில் படுக்கச்செய்தாள். நான் அவள் உடலைக் கையாள ஆரம்பித்தேன். ஆண் உடலும் பெண் உடலும் ஒன்றை ஒன்று உணரும்போது எப்போதும் உணர்ந்து வந்த ஒன்று மறைகிறது. உடலின் முழுமையின்மை எனலாம் அதை.

பின்பு எழுந்து அவளை பார்த்தேன். அவள் புடவையை இழுத்து தன் மீது போட்டுக்கொண்டாள். முலைக்கண்கள் மெல்லிய ஷிபான் புடவைக்கு மேல் தெரிந்தன. நான் புன்னகைசெய்தேன்.

அவள் தலையை பக்கவாட்டில் சரித்து கிடந்தாள். கண்கள் நிறைந்து காதில் வழிந்தன.நான் சரிந்து அவள் கண்களை துடைத்தேன். என் கைகளை தட்டி விட்டாள்.

”நான் ஸாரின்னெல்லாம் சொல்லப்போறதில்லை”என்றேன்..”ஏன்ன இப்ப செஞ்சதையெல்லாம் நான் மனசால பல தடவை

செஞ்சாச்சு..அது இப்பதான் தெரிஞ்சுது…”

அவள் என் சொற்களைக் கேட்கவில்லை. மௌனமாக அழுதுகொண்டிருந்தாள். நான் எழுந்து சமையலறைக்குச் சென்று இரு காபி போட்டுவந்தேன். அவள் இல்லை. அவளுடைய புடவை கிடந்தது.

அதை எடுத்துப் பார்த்தபடி காபியை குடித்தேன்.

அவள் பாத்ரூமில் இருந்து மார்பில் பாவாடையைக் கட்டிக்கொண்டு வந்தாள். அவளுடைய நடுவயதுப்பெண்களுக்குரிய பெரிய தோள்களையே தாகத்துடன் பார்த்துக்கொண்டிருந்தேன்.

”காபி சாப்பிடு”என்றேன்.

அவள் வந்து காபியை எடுத்துக்கொண்டதும் மீண்டும் அவளைக் கட்டிக்கொண்டு தோள்களில் முத்தமிட ஆரம்பித்தேன். அவள் என் முகத்தைப்பிடித்து தூக்கி கண்களில் கண்ணீருடன் கேட்டாள் ”அருண் நான் ஒண்ணு கேக்கட்டுமா? பிராமிஸ் இல்லை வரம்..ப்ளீஸ்”

”கேள்”

”உன் அம்மாவுக்கு இது தெரியக்கூடாது…எக்காரணத்தாலும் தெரியக்கூடாது. தெரிஞ்சா அதுக்குப்பின்னாடி நான் உசிரோட இருக்கிறதிலே அர்த்தமில்லை

”தெரியாது..கண்டிப்பா தெரியாது போதுமா?”

அவள் என்னை முத்தமிட்டாள். காமம் எரியும் பெண் விழிகள். காட்டை எரிக்கும் கனல் துண்டுகள் போல. முனகலாக ”என்னை சந்திரான்னு கூப்பிடு”என்றாள்

”சந்திரா”

”அடியே சந்திரான்னு கூப்பிடு”

”சந்திரா. அடி சந்திரா... என்னடி நெனைச்சிருக்கே நீ?”

அவள் என்னை இறுக்கி வெறியுடன்  முத்தமிட்டாள். இம்முறை அது அவளுடைய உறவு.

[ᥧ]

சுசி , அன்று நள்ளிரவில் நான் வீடுதிரும்பியபோது நள்ளிரவு.அம்மா தூங்கிவிட்டிருந்தாள். நீதான் கதவை திறந்தாய். விளக்கைப்போட்டுக்கொண்டு எனக்காக காத்திருந்தாய். நான் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கியபோது உண்மையில் என் போதை தெளிய ஆரம்பித்திருந்தது.

ஜோவின் குடிலில் நான் மணிக்கணக்காக உளறிக்கொண்டிருந்தேன். சந்திராவைப் பற்றி. என்னைப்பற்றி. ஒன்றிலிருந்து ஒன்றாக எண்ணங்கள்... எண்ணங்கள் வாய்வழியாக ஒழுகின. நான் உளறுவதை நானே உணர்ந்து எற்கனவே உளறிய ஒன்றை சமன் செய்யும்பொருட்டு மீண்டும் உளறி பின்பு சோர்ந்து எப்போதோ தூங்கிவிட்டிருந்தேன். எழுந்தபோது ஜோ இல்லை.

நான் ஷ¥க்களை கழற்றி வைக்கும்போது நீ கதவைத்திறந்தாய். ஒற்றைக்காலில் எனக்கு சற்றே நிலை தடுமாறியது. கதவருகே வந்து உன்னைப் பார்த்து ”ம்ம்?” என்றேன்.

நீ முகத்தைச் சுளித்து ”யூ ஆர் டிரங்க்”என்றாய்.

”யா...” என்றேன் ”ஒருபார்ட்டி”

மெல்ல உள்ளே சென்றேன். என் உடலின் வியர்வை நாற்றத்தை என்னாலேயே உணர முடிந்தது. வாய் ரப்பரால் செய்யப்பட்டது போல இருந்தது. பின்னந்ததலை வலித்தது.

நீ என் பின்னால் வந்து ”சாப்பிடுறியா?” என்றாய்.

”சாப்பிட்டுட்டேன்”என்ற பின் என் அறைக்குச் சென்று சட்டையை கழற்றிவிட்டு முகம் கழுவினேன். கண்ணாடியில் என்னைப்பார்கக் எனக்கே கொடூரமாக இருந்தது. என்ன ஆயிற்று எனக்கு. பித்தனின் முகம் அல்லது கொலைக்காரனின் முகம்.

விளக்கை அணைத்துவிட்டு கட்டிலில் படுத்துக்கொண்டேன். கட்டிலில் என் உடல் துணிவிரிப்பு போல பரவி செயலிழந்து கிடந்தது. மேலே சுழலும் மின்விசிறியின் ஒலியையே கேட்டுக்கொண்டிருந்தேன்.

கதவு மெல்ல தட்டப்பட்டது. அது தொலைவில் எங்கோ கேட்பது போலிருந்தது. பின்னர் அது சந்திரா என்று தோன்றி எனக்கு திடுக்கிட்டது. பின்னர் அது நீ என உணர்ந்ததும் கசப்பு எழுந்தது. மீண்டும் நீ தட்டினாய். ஒருகணம் தயங்கிவிட்டு எழுந்து திறந்தேன்.

நீ நின்றிருந்தாய். உன் முகத்தைப்பார்த்ததுமே நீ சாதாரணமாக வரவில்லை என்பதை உணர்ந்தேன். எனக்கு நீ அப்போது என்னை திட்டவேண்டும்போலிருந்தது சுசி. நீ என்னை அறைந்திருந்தால் மேலும் மகிழ்ந்திருப்பேன்.

”என்ன?”என்றேன். என் மன உணர்ச்சிகளுக்கும் குரலுக்கும் தொடர்பே இல்லை.

”நான் உன்கூட பேசணும்” என்றாய். கண்களில் குழந்தைத்தனமே

அப்போது இருக்கவில்லை.

”நாலைக்குப் பேசலாமே...நான் இபப் டயர்டா இருக்கேன்” ஏன் அப்போது அசட்டுத்தனமாக சற்று சிரித்தேன் என்று எனக்குப் புரியவில்லை.

”நாளைக்குவரை என்னால பேசாம இருக்க முடியாது” என்றாய். குரல் பிளேடு நுனிபோல் இருந்தது.

”என்ன விஷயம்?” என்றேன். அப்போதும் கதவைபிடித்து உன்னை வெளியே விட்டு நின்றிருந்தேன்.

”அத்தைக்கு தெரியவேண்டாம். அதான் உள்ள வந்து பேசலாம்னு நெனைக்கிறேன்”

”என்ன விஷயம்?”

”அத்தை ஒரு நாளும் தெரிஞ்சுக்ககூடாத விஷயம்.. போருமா?” உன் கண்களின் உக்கிரம் என்னை அச்சுறுத்தியது. எல்லா மயக்கமும் விலகி என் மனம் உச்சகட்ட கூர்மையை அடைந்தது. மௌனமாக கதவைத் திறந்து உன்னை உள்ளே விட்டேன்.

நீ உள்ளே வந்து கதவைச் சாத்தினாய். ”அருண், நீ மெதுவா பேசணும்...அத்தைக்குக் கேட்டிரக்கூடாது”

”ம்ம்” என்றேன். கட்டிலில் அமர்ந்து சப்பணமிட்டுக்கொண்டேன். சப்பணம் போட்டுக்கொண்டதும் அந்த அமரும்முறையாலேயெ ஒரு நிதானம் மனதில் உருவாகியது.

”சந்திரா ஆன்டி கூப்பிட்டிருந்தாங்க” என்றாய், என் கண்களைக் கூர்ந்து நோக்கி.

”யா..நான் ஈவினிங் அவங்களைப் பாக்க போறதா சொல்லியிருந்தேன்”

”லூக்...நீ காலையிலே அவங்க வீட்டுக்குப் போனே. அப்றம் கௌம்பினே...வேற எங்கியோ போய் குடிச்சே... மொபைலை ஆ·ப் செஞ்சு வச்சிருந்தே..அவங்க உன்னை கூப்பிட்டுட்டே இருந்தாங்க. இங்க மட்டும் ஒன்பது வாட்டி கூப்பிட்டாங்க...”

நான் ”இப்ப என்ன அதுக்கு?” என்றேன்

”அவங்க கூப்பிட்டவிதம் சரியா இல்லை. அருண் நானும் பொண்ணுதான். என்னாலயும் பலவிஷயங்களை ஊகிக்க முடியும். நான் இங்கவந்த முதல்நாளிலே முதல் செகண்டிலேயே உங்க உறவு வேறன்னு ஊகிச்சுட்டேன்...அதை எனக்குநானே ஒப்புக்காம இருந்தேன்...”

”ஓ” என்றேன். அது ஆச்சரியம் அளிக்கவில்லை. எப்படியோ அது தெரிந்திருக்கும் என்று என் ஆழ்மனம் அறிந்திருந்தது

”முதலிலே நீங்க ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பாத்துக்கிட்டதைக்

கவனிச்சேன்.அப்பவே எனக்கு சந்தேகம் வந்தது. நான் சந்திரா ஆன்டியைப்பத்தி உங்கிட்ட பேச்செடுத்ததே அதனாலதான். மகாபலிபுரத்திலே நான் அழுததுகூட அதை நெனைச்சுத்தான்.டாந்தபயத்தாலதான் நானே உங்கிட்டே என்னைக் கல்யானம் பண்ணிக்கோன்னு சொன்னேன்....தப்பா ஏதாவது இருந்தா நீயே சொல்லிடுவேன்னு நெனைச்சேன்...எங்கிட்ட எல்லாத்தையும் சொல்லி மன்னிப்பு கேட்டிருவேன்னு....அருண், எனக்கு இப்ப எல்லாமே தெரிஞ்சாகணும்... ”

”அதான் தெரிஞ்சாச்சே”

”நீயே சொல்லணும்”

”என்ன?”

”அவங்க உனக்கு யாரு?”

”அவசியம் தெரிஞ்சுக்கணுமா?”

”எஸ்”

”உன்னைமாதிரி”என்றேன்

”ச்சீ” என்று கூவி பின்னால் நகர்ந்து கதவில் முட்டிக்கொண்டாய்

”அவ்ளவுதான். அவளும் எனக்கு உன்னைமாதிரித்தான். அவ என் மனசுக்குள்ள வந்த முதல்பெண். நான் அறிஞ்ச முதல்பெண்...அதான்”

அப்படி நான் சொன்னதுதான் உனக்கு உச்சகட்ட துயரை அளித்திருக்கும் சுசி. உன் முகம் அப்போது பாறையால் அடித்து நசுக்கப்பட்டதுபோல் இருந்தது.

”அப்ப நீ என்னை ஏன் என்னை ஏமாத்தினே? ஏன் என் வாழ்க்கையோட வெளையாடினே?” என்று ஆவேசத்துடன் கேட்டாய். சுசி, சுசி,சுசி, அந்த ஆவேசத்திலும் உன் குரல் மேலெழவில்லை. எப்பேற்பட்ட பெண் நீ!

”வேணும்ணே செய்யலை சுசி. நான் உன்னை பாக்க வராததே அதனாலதான். உன்னை பொருட்படுத்தவே கூடாதுன்னுதான் இருந்தேன்...ஆனா உன்னை ஏர்ப்போர்ட்டுலே பாத்த முதல் செகண்ட் முதல் என்னை மீறி நான் உன்னை விரும்ப ஆரம்பிச்சேன்... நீ எனக்கு வேணும்னு தோணிச்சு. உன்னை என்னால விடமுடியலை. அவ்ளவுதான்”

”ஷட் அப்” என்று நீ சீறினாய். ”சீ...நீயெல்லாம் ... ” என்றாய். என்ன சொல்வதென்றே உனக்கு தெரியவில்லை. சுசி, உனக்கு வசைபாடவும் சாபமிடவும் பழக்கம் இல்லை. ஆண் மனதின் நுண்ணிய மென்பகுதியில் அறைவதற்கு நீ கற்றிருக்கவில்லை. சுசி, அது ஆணுடன் நெருக்கமாக பழகிப் பழகி பெண்கள் கற்றுக்கொள்வது. நீ ஒரு சிறுமி

”அருண் நீ என்னை கொன்னுட்டே..ஆம்பிளங்கன்னாலே அசிங்கம்னு

என்னை நெனைக்க வச்சிட்டே..” நீ மேலும் எதையோ சொல்ல முயன்றாய். சொற்கள் கிடைக்காமல் திணறியபின் சட்டென்று வாசலை திறக்கமுற்பட்டாய்.

”சுசி ஒரு செகண்ட் நில்லு...நான் சொல்றதைக் கேளு...ப்ளீஸ்”

”நீ சொல்ற எதையும் நான் கேக்கவிரும்பலை...ஐ ஹேட் யூ... உன்னைப்பாத்தாலே அருவருப்பா இருக்கு”

நான் எழுந்து உன் கைகளைப் பிடித்தேன் ‘ப்ளீஸ், சொல்றதைக் கேள்...”

”விடு...என்னை தொடாதே...விடப்போறியா இல்லியா?”

”மாட்டேன்.நான் சொல்றதை நீ கேக்கணும்... ஒரு அஞ்சு நிமிஷம்...கேட்டாகணும்”

”கேக்கவேண்டியதையெல்லாம் கேட்டாச்சு..கைய விடு..”

”சொல்றதைக் கேள்டீ ” என்றேன் உரக்க

”ஷட் அப்”என்று நீ கிசுகிசுத்தாய் ”அத்தை கேக்கப்போறா...தெரிஞ்சா செத்திருவா”

நான் தணிந்தேன். ”சுசி…இதுதான் உண்மை. என் சின்னவயசிலே நான் பாத்த ஒரே பெண் சந்திரா. அவளோட கம்பீரம், நிதானம், அழகு எல்லாமே எனக்கு பிடிச்சிருந்தது. பிடிச்சதை சொந்தமாக்கிக்கணும்கிறது ஆம்பிளையோட காமம்… தப்புசரிகள் தெரியாத பிராயம். நான் சமாதானம் சொல்லலை…ஆனா…என்ன சொல்ர்து..சுசி, என் உடம்புமேலதான் எல்லா தப்பும்…நான் உடம்பை நம்பி அது போக்குல போய்ட்டேன்….

நீ முகத்தைச் சுளித்தபடி சூடான ஒன்றின்மேல் நிற்பது போல நிலைகொள்ளாமல் தவித்தாய்

”சுசி, அப்டி அந்த உறவு உண்டாச்சு…அப்றம் நீ என் லை•ப்ல வந்தே. உன்னையும் எனக்கு பிடிச்சிருக்கு. அவ முன்னால் நான் சின்ன பையன். உன் முன்னாடி நான் மெச்சூர்டான ஆம்பிளை… அப்டி இருந்தேன், இப்ப இப்டி ஆயிட்டேன். எனக்கு நான் செய்றது தப்புன்னு தெரியும்..ஆனா உன்கிட்ட நான் தப்பு பண்ணலை… ப்ளீஸ்…உன்னை நான் ஏமாத்தலை. உன் மேல எனக்கு இருக்கிற காதல் பொய் கெடையாது. அது நெஜம்…அவ்ளவுதான்”

சட்டென்று நீ கசிந்து அழ ஆரம்பித்தாய். ”நீ மறுக்கணும்னு ஆசைப்பட்டேன் அருண். எல்லாம் பொய்னு ஒருவார்த்தை நீ சொல்லியிருந்தா அதையே நம்பிட்டு நான் இருந்திருப்பேன்..நான் அந்த அளவுக்கு உன்னை லவ் பண்ணிட்டேன்.அந்த அளவுக்கு உன்னை டிபெண்ட் பண்ணி இருந்திட்டேன்…” மூக்கை உறிஞ்சியபடி வளையல் குலுங்க கண்ணீரை மாறி மாறித் துடைத்தபடி நீ அழுவதை நான் செயலற்றவனாகப் பார்த்திருந்தேன்

”நீ என்னை ஏமாத்திட்டே அருண்…நீ என் நம்பிக்கையை எல்லாம் சிதறடிச்சிட்டே”

நான் மீண்டும் சென்று கட்டிலில் அமர்ந்துகொண்டேன். உன்னையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு கணம் என்ன இது என்று தோன்றியது. மூன்று பெண்களின் கண்ணீரை மாறி மாறிக் கண்டுகொண்டே இருக்கிறேன். நான் அறிந்த வாழ்க்கை இதுதான்

நீ அழுது முடித்தாய். நான் சொன்னேன் ” இதோபார் சுசி, அட்லீஸ்ட் நான் உங்கிட்டே பொய் சொல்லலை… நீ அதை நம்பணும்..அதுபோதும் எனக்கு”

நீ என்னை கண்ணீர் வழியும் கண்களுடன் பார்த்தாய். ஓர் உடைவின் கணம். சட்டென்று என்னருகே ஓடிவந்து என் மடியில் விழுந்து ”உன்னை வெறுக்க என்னால முடியலை அருண்… நீ என்ன செஞ்சாலும் உன்னை என்னால வெறுக்க முடியலை…மானசீகமா நான் உன்கிட்ட தாலி கட்டிகிட்டாச்சு அருண்…ஐ லவ் யூ…ஐ லவ் யூ ” என்று அரற்றினாய்

நான் உன் தலையை மெல்ல தொட்டேன். என் கைகள் அப்படி நடுங்கின. உன் தலைமயிரின் பிசிறுகள் தீண்டியபோதே என் உடல் அதிர்ந்தது. சுசி, அதி தூய ஒரு புனிதப்பொருள்போலிருந்தாய் நீ.

நீ தலையை தூக்கி என் கையைப் பிடித்துக்கொண்டாய். ”அருண், நடந்ததை விட்டுடு…பிளீஸ்…நானும் மறந்திருறேன்…ஆனா நீ இனிமே அவங்களை விட்டுடணும்…அவங்ககிட்ட எந்த தொடர்பும் வைச்சுக்கக் கூடாது..அவங்களை நீ பாக்கவோ பேசவோ கூடாது…எனக்கு சத்தியம் செஞ்சுகுடு…”

நான் கைநீட்டவில்லை. என் மனம் செயலற்றிருந்தது

”பிளீஸ் அருண்…அவங்க கிட்ட சொல்லிரு…நீ அவங்ககூட வாழமுடியுமா என்ன? உன் வயசு என்ன? பின்ன எதுக்கு அது…தப்பு அருண்…வேணாம். அத்தைக்கு இந்த விஷயம் தெரிஞ்சா உசிரோட இருப்பாங்களா? நீ அவங்களை நெனைக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணிக்கொடு. ப்ளீஸ்”

”நான் பொய் சத்தியம் பண்ண விரும்பலை”

நீ பாய்ந்து எழுந்து அமர்ந்து பிரமித்த கண்களுடன் என்னைப்பார்த்தாய்

”இதுதான் உண்மை சுசி…எனக்குள்ள இருக்கிற பையனுக்கு சந்திராதான் தேவைப்படுறா….எனக்குள்ள இருக்கிற ஆம்பிளைக்கு உன்னை தேவைப்படுது…எனக்கு ரெண்டுபேரும் வேணும்னு தோணுது…என்னால ரெண்டுபேரையுமே மறக்க முடியல்லை”

”ச்சீ”என்று சீறினாய் ”அப்ப நீ என்னைப்பத்தி என்ன நெனைச்சே? அவளையும் தாங்கிக்கிட்டு நான் உன்கூட இருக்கணுமா?”

”நான் எதையுமே சொல்ல விரும்பலை சுசி…என் மனசில என்ன இருக்கோ அதைச் சொல்றேன்…இதுதான் உண்மை…பெண்கள் என்ன வேணுமானாலும் நெனைக்கலாம். ஆனா ஆம்பிளை மனசு இப்டித்தான். நான் இப்ப இப்டித்தான் நெனைக்கிறேன். ஒரு ஆம்பிளைக்கு அட்லீஸ்ட் ரெண்டு மனைவி வேணும். அம்மா மாதிரி ஒருத்தி தோழி மாதிரி ஒருத்தி… அவ்ளவுதான்”

”புல் ஷிட்!” என்றாய் ”நீ ஒரு மிருகம். காமம் மட்டும்தான் உனக்கு

தெரியும்…பொம்பிளைன்னா என்னன்னு நெனைச்சே? வெறும் சதை இல்ல? வெறும் மார்பும் இடுப்பும் இல்ல? யூ நேஸ்டி •பக்கர்”

”இல்ல சுசி, பொண்ணுண்ணா அம்மா அப்றம் தோழி. அப்டித்தான் நான் சொன்னேன்… வெறும் அம்மாவும் வெறும் தோழியும் மட்டும் பத்தாது. இது ஒரு அடிபப்டை விஷயம்… அவ்ளவுதான்”

”உங்கிட்ட பேச நான் விரும்பலை…”என்று மூச்சிரைக்கச் சொல்லி கதவை நோக்கி சென்று தாழில் கைவைத்தாய். கதவைத்திறக்க உன்னால் முடியவில்லை. உன் விரல்கள் தாழில் வழுக்கின. இழுத்து இழுத்துப் பார்த்தபின் அப்படியே சரிந்து தரையில் அமர்ந்தாய். மீண்டும் உடைந்தாய் ”மை காட், மைகாட்! நான் என்னவெல்லாம் நெனைச்சேன்…என்னென்ன கற்பனை செஞ்சேன்….மைகாட் மைகாட்!.”

தலையையும் முகத்தையும் மூர்க்கமாக ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டாய். அந்த அறைகள் ஒவ்வொன்றையும்…

[10]

காலையில் அம்மா வந்து என் அறைக்கதவை பதற்றமாக தட்டினாள். நான் விழித்துகொண்டு எழுந்து கதவை திறந்தேன். இமைகள் கனத்து ஒளி விழிகளைக் குத்தியது. எழுந்தபோது தலைசுற்றி சற்றே குமட்டியது. நான் இரவில் தூங்க நெடுநேரமாகியது. சந்திராவுடன் பேசிக்கோண்டிருந்தேன் என்பது மட்டும்தான் நினைவிலிருந்தது. என்ன பேசிக்கோண்டிருந்தேன் என்பதை எத்தனை முட்டியபோதிலும் நினைவுகூர முடியவில்லை.

அம்மா பதறியபடி ”எந்திரிடா...எத்தனைநாழி கூப்பிடறது?” என்றாள். ”ம்ம்” என்றபடி எழுந்து லுங்கியை சரியாகக் கட்டிக்கொண்டேன். என் அறைக்குள் நான் முந்தைய நாள் இரவு கழற்றிப்போட்ட பாண்டும் சட்டையும் பெல்ட்டும் ஷ¥க்களும் சிதறிக்கிடந்தன. அம்மா உள்ளே வந்திருந்தால் மதுவின் வாசனையையும் அடைந்திருப்பாள்

”சீக்கிரம் வாடா”

”மணி என்ன ஆச்சு?” என்றேன். பின்பு வாட்ச்சை எடுத்துப் பார்த்தேன். எட்டரை. ஜன்னலுக்கு வெளியே அப்போதே நல்ல வெயில் பொழிந்துகொண்டிருந்தது.

பாத்ரூம் போய் முகத்தைக் கழுவினேன். கண்ணாடியில் முகத்தைப் பார்த்தேன். கண்களுக்குக் கீழே சதை தொய்ந்து நிழல் பரவி முகம் முதுமை தட்டியதுபோல் இருந்தது. வாயை கழுவியபோது சற்று குமட்டியது. பல் விளக்க ஆரம்பித்தேன்.

அம்மா பாத்ரூம் கதவைத்தட்டினாள் ”டேய்...டேய்...”

கதவு அதிர்வது என்னுள் எரிச்சலை எழுப்பியது. சரேலென்று திறந்து ”எதுக்கு இப்ப கத்துறே? வரேன்னு சொன்னேன்ல”

அம்மா தளர்ந்து மெல்லிய குரலில் ”டேய் அந்த மூதேவி வந்து வாசலிலே நிக்குதுடா...” என்றாள்

”யாரு?”

”அவதான்...அந்த சின்னக்குட்டி...” அந்தக்கணத்தில் அவள் முகம் நினைவுக்கு வந்திருக்க வேண்டும். அம்மாவின் குரல் எகிறியது ”சனியன்....எப்டிடா அதுக்கு நம்ம வீடு தெரிஞ்சுது? நீ அங்க போறதுண்டா? எனக்கு இப்ப தெரிஞ்சகணும்” நிலைகுலைந்தவளாக கட்டற்றவளாக இருந்தாள். குரல் ஓங்கியது, மூச்சுவாங்கியது.

”என்ன விஷயம்? என்ன ?”என்றேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளைத்தாண்டி வாசலுக்குச் செல்லப்போனேன்.

”அந்த மூதேவி ஏன் இங்கவரணும்? எப்டி அதுக்கு உன்னைத்தெரியும்? சொல்டா..சொல்லிட்டுபோடா...டேய்”என் பனியனைப்பிடித்து இழுத்தாள்

நான் கோபத்துடன் ”என்ன உளறுறே? சொல்லித்தொலை” என்றேன் சீற்றமாக

”அந்தாள் செத்துப்போயிட்டானாம்.அந்த தேவடியா பெத்த குட்டி வந்து காலம்பர நம்ம வீட்டு வாசலிலே நின்னிட்டிருக்கு” அரைக்கணம் கழிந்துதான் எனக்கு அது புரிந்தது.

நான் வெளியே ஓடினேன். வாசலில் குரோட்டன்ஸ் செடியருகே அழுக்கு சுடிதார் போட்டுக்கொண்டு கண்ணீருடன் ராணி நின்றிருந்தாள். என்னைக்கண்டதும் ”அண்ணா ”என்று அலறியபடி ஓடிவந்தாள்.

”சீ யாருடீ அண்ணன்? போடி வெளியே”என்றபடி அம்மா பின்னால் பாய்ந்துவந்தாள். ”செருப்பாலடி நாயே...சொந்தமா கொண்டாடறே..”

”அம்மா நீ உள்ள போ ”என்றேன்

”ஏய் உன்னைய அப்பவே தொரத்தினேன்ல...போடீ ”

”அம்மா”

”தொரத்துடா அந்த சனியன தேவ்டியா பெத்த தேவ்டியாக்குட்டி என்ன மாதிரி சட்டமா வந்து நிக்கிறா பாரு”

நான் திரும்பி அம்மாவின் முகத்தை பார்த்து திடமாக ”ஏய் உள்ள போ”என்றேன்

”டேய் இது என் வீடு... வெளியபோகச்சொல்லுடா அந்த நாய”

”சீ வாய மூடு....போ உள்ள”என்று கையை ஓங்கியபடி அம்மாவை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்தேன். என் உக்கிரத்தைக் கண்டு அம்மா நடுங்கிவிட்டாள். அப்படியே வாய் திறந்து நின்றவள் கதவைப்பிடிக்க அதன் கிரீச்சிடல் மட்டும் ஒலித்தது.

”அருண், பிஹேவ் யுவர்செல்•ப்” என்று உள்ளிருந்து அவசரமாக ஓடி வந்த நீ சொன்னாய். ”அத்தை நீங்க உள்ள போங்க”

”அந்தாள் செத்தா இவன் ஏன் போகணும்? அவனுக்கும் இவனுக்கும் என்ன சொந்தம்? இவனை வளத்தவ நான்...” அம்மா அரற்றினாள். அவள் குரலும் பேச்சும் குளறின.

”அருண் லெட் அஸ் கோ ” என்றபடி நீ படியிறங்கினாய். ஏற்கனவே உடைமாற்றிவிட்டிருந்தாய்.

”சுசி எங்க போறே? நில்லுடீ... ” என்று அம்மா பாய்ந்தாள் ” நீ போகப்பிடாது.. போனே இனிமே இந்த வாசப்படி மிதிக்கப்பிடாது...உள்ள வா உள்ள வா சொல்றேன்...”அம்மா கையை விரித்துக்கொண்டு முன்னால் ஓடிவந்தாள்.

நீ திரும்பி அம்மாவைப்பார்த்த பார்வையை, அந்தக்கணத்தில் வெளிப்பட்ட உன்னை நான் என் வாழ்வின் இறுதித்துளி வரை மறக்கமாட்டேன் சுசி. திடமான குரலில் ”அத்தை நான் என்னைக்குமே இன்னொருத்தர் பேச்சை கேட்டு நடந்துகிட்டதில்லை... என் மனசாட்சிப்படித்தான் நடப்பேன்...” என்றாய். படி இறங்கிப்போய் பிரமித்து நின்ற ராணியை மெல்ல

அணைத்துக்கொண்டாய் ”வாடி ..காரிலே ஏறு”

நாம் காரில் ஏறிக்கொண்டதை அம்மா நம்பமுடியாமல் பார்த்துக்கொண்டு நின்றாள். சட்டென்று பைத்தியம் போல ஏதேதோ கத்தியபடி கீழே இருந்த பூந்தொட்டிகளைத் தூக்கி வீசி உடைக்க ஆரம்பித்தாள்.

நான் காருக்குள் பின்னால் திரும்பிப்பார்த்து ”அம்மா— ”என்றேன்

”ஒண்ணும் ஆகாது…கொஞ்சம் ஆர்ப்பாட்டம் பண்ணிட்டு படுத்திருவாங்க”' என்றாய் நீ.

காருக்குள் பின் இருக்கையில் உன் மடியில் ராணி தலைபுதைத்து குப்புற விழுந்து கதறி அழுதாள். ”இல்லம்மா இல்லம்மா சரி சரீ”என்று நீ ஆறுதல் சொன்னாய் ”அதான் அண்ணா இருக்காருல்ல அப்றம் என்ன? ” அப்போது நீ ஆயிரம் அன்னைகளுக்கு நிகராக இருந்தாய் சுசி.

”அப்பா இப்ப எங்க இருக்கார்?” என்றேன்

”வீட்டிலதான் அண்ணா….நேத்து ராத்திரி ஏழுமணிக்கே அப்பா செத்துட்டார்”

”எனக்கு •போன் பண்ணியிருக்கலாம்ல?”என்றேன் அதிர்ச்சியுடன்

”போன் பண்ணிட்டே இருந்தோம். நீதான் எடுக்கலை. வீட்டுல யாருமே

இல்லை. வீட்டு அட்ரசும் சரியாத் தெரியலை. என்ன பண்றது? யாருமே துணைக்கு வரல்லை. இருட்டிலே பொம்பிளை தனியா போகவேணாம்னு அம்மா சொல்லிட்டா. நானும் அக்காவும் அம்மாவும் அப்பாவை அப்டியே வச்சுகிட்டு ராத்திரியெல்லாம் உக்காந்திருந்தோம்” என்றாள் ராணி ”அப்றம்தான் நான் காலம்பர எந்திரிச்சு எங்கூட படிக்கிர செல்வி வீட்டுக்குப்போய் உங்கம்மா அட்ரஸை விசாரிச்சுட்டு நேரில வந்தேன்…”

நான் குற்ற உணர்வுடன் பல்லைக் கடித்தேன். அக்ஸிலேட்டரை வேகத்துடன் மிதித்தேன். அப்பா அப்பா அப்பா…மரணத்தின்போது ஒரு மனிதர் சட்டென்று தன் முழுமையுடன் நமக்குத்தெரியவருகிறார். நாம் அவரைப்பற்றி அறிந்தவை அனைத்தும் அப்போது தொகுக்கப்பட்டுவிடுகின்றன. நான் அப்பாவை இழந்தமைக்காக அப்போது உள்ளூர கொந்தளித்துக் கொண்டிருந்தேன்.

ஏன்? அவர் சாவை காத்திருந்தவன் அல்லவா? ஆம், ஆனால் நேற்று அந்த உறவில் ஏதோ ஒன்று கூடிவிட்டிருந்தது என அப்போது அறிந்தேன். அவரை நான் மீண்டும் கண்டிருந்தால் ஒருவேளை அவர் கையை பற்றி ஏதேனும் சொல்ல விரும்பியிருந்திருப்பேன். அவருடன் எனக்கிருந்த உறவின் கடைசிக்கசப்பும் நேற்று மறைந்துவிட்டிருந்தது… ஆம், நேற்று நான் அவரை நினைக்கவேயில்லை. ஆனால் அது உண்மை

அப்பா என்னை பழிவாங்கிவிட்டார் என்று உணர்ந்தேன். அவரை நான் நுட்பமாக அவமதித்தேன். அவர் என் முன் ஒரு கணம்கூட இயல்பாக இருந்ததில்லை. நிலையில்லாதவராக என்ன சொல்வதென அறியாதவராக இருப்பார். அந்த தருணத்தில் நான் திளைப்பேன். அவரை அங்குமிங்கும் மானசீகமாக அலைக்கழிப்பேன். அதற்கு அவர் பழிவாங்கிவிட்டார்

அவரை நான் நேசித்தேனா? நேசித்தேன் என்று அப்போது உணர்ந்தேன். ஏனென்றால் என் மனம் அப்பா அப்பா அப்பா என்றே அரற்றிக்கொண்டிருந்தது. அவரை நேசிப்பது என்னுள் நான் வெறுத்த ஏதோ ஒன்றை நான் அங்கீகரிப்பதற்குச் சமம் என்று நினைத்துக் கொண்டேன்போலும்…

காரை தெருவில் நிறுத்திவிட்டு மாடியேறியபோது பின்னால் நீ ராணியைக் கூட்டிக்கொண்டு வந்தாய். என் எதிரே ஒரு பெரியவர் வந்தார். கையில்லாத பனியன் போட்டு வேட்டி கட்டியிருந்தார். கழுத்தில் ருத்ராட்ச மாலை. பனியன் வழியாக தெரிந்த பூணூல். என்னிடம் உரக்க ”என்னதம்பி நீதானா அந்தாள் பையன்…? இது கூத்தியா குடும்பம்தானே?”என்றார்.

நான் அப்படியே பொங்கிவிட்டேன். ஆனால் மெல்ல அடக்கிக் கொண்டேன். அவர் ”உன்னைய இங்க பாத்திருக்கேன்..நீதான் அந்தாளோட முதல் சம்சாரத்தோட மகன்னு இப்பதான் என் ஆத்துக்காரி சொன்னா…” என்றார்

நான் அவரைத் தாண்டிச்செல்லும்போது அவர் பின்னாலிருந்து ”பாத்தா பளபளான்னு இருக்கே…ஏன் இங்க குடிவய்க்கணும்…இது கௌரவமானவா இருக்கப்பட்ட காலனியாக்கும் பாத்துக்கோ” என்றார்

இன்னொரு ஆசாமி ”சீக்கு ஒடம்பு….ராத்திரியே நாத்தம் கௌம்பியாச்சு இப்ப சாவகாசமா வாறே..இங்க மத்தவா வாழறதா வேண்டாமா?”என்றார்

நான் பொறுமை அறுபட்டு ஆவேசத்துடன் திரும்பி ”டேய்”என்று அவரை அடிக்கப்போனேன்.

நீ ”அருண்” என்று உரத்த கூரிய குரலில் என்னை அடக்கினாய். அந்தக்குரலை எவரும் மீறமுடியாது.

”அடிச்சிருவியாடா? டேய் அடிச்சிருவியாடா?”என்று அந்த ஆள் முன்னால் வந்தார் நெஞ்சை தள்ளிக்காட்டி ”எங்க அடி பாக்கலாம்…ரவுடிப்பயலே”

அய்யர் பின்னால் நின்று ”அதான் பாத்தாலே தெரியுதே பொறுக்கின்னு…”என்றார்

நீ சட்டென்று எரியும் கண்களுடன் முன்னால் வந்தாய் ”மிஸ்டர், உன்னை அடிக்கணுமானா ஆள் வச்சு அடிச்சு ரத்தமும் சதையுமா தெருவிலே தூக்கிப் போட எங்களால முடியும், புரியுதா?” என்றாய்

அந்த ஆள் வாய் திறந்து பிரமித்து நின்றான்.”…கோ எவே” என்றாய் நீ. உன் சொற்களில் ஒலித்த தீவிரம் என்னையே பிரமிக்கச் செய்தது. அய்யர் அப்படியே தன் வீட்டுக்குள் நுழைந்துவிட்டார்

அப்பா தரையில் பாயில் துணிமூடிக்கிடந்தார். மூக்கில் பஞ்சு. மண்எண்ணையும் ஊதுபத்தியும் கலந்த வாசனை எழுந்தது. என்னைக்கண்டதும் சுபாவும் சித்தியும் கதறி அழுதார்கள்.

”என்ன நாத்தம்?” என்றேன்

”எறும்பு வந்திச்சு அதான் மண்ணெண்ணைய உடம்பைச் சுத்தி பூசினோம்”என்றாள் ராணி

நான் ஒருகணம் அப்பாவைப் பார்த்தேன். வாய் திறந்து தேய்ந்த பற்கள் தெரிந்தன. பற்களின் அடியில் காவி நிறம். வெளிறிய நோயுற்ற சருமம் மெழுகு போல் இருந்தது. அவரை அதுவரை அத்தனை கூர்ந்து நான் பார்த்ததில்லை. அவரது மூக்குத்தண்டின் வளைவு மேலுதடை விட கீழுதடு எழுந்திருந்த விதம்….. ஆனால் நான் பார்ப்பது அவரைத்தானா?

இது என் அப்பா….இவரது உடலின் ஒரு துளிதான் நானாக ஆகியது. என்னைப்போன்ற ஒரு முட்டாள். காமம் என்ற புலிவாலைப் பற்றி விடமுடியாது அழிந்த ஒரு ஆத்மா. அவரை தொடவேண்டும் போலிருந்தது. அப்பா என்ன நினைத்தார் என்னைப்பற்றி? ஒருபோதும் அவர் என்னை ஏறிட்டு பார்த்ததில்லை. ஏதாவது வேடிக்கையாகச் சொல்லிவிட்டால் அவரே சிரித்துவிட்டு அரைக்கணம் ஓரக்கண்ணால் என்னைப்பார்த்து விலகுவார்.

சட்டென்று நிலைமை புரிந்து நான் திரும்பி வெளியே சென்றேன். நீ பின்னால் வந்தாய் ”எங்க போறே?” என்றாய்

”ஏடிஎம் கார்டுகூட எடுக்கலை, பதற்றத்திலே அதை மறந்துட்டேன். விட்டுக்கு போய்ட்டு–”

”பணம்லாம் நான் எடுத்துக்கிட்டேன்..”என்று ஒரு கத்தை நோட்டை நீட்டினாய் ”உடனே மார்ச்சுவரி வேனுக்குச் சொல்லி ஏற்பாடுசெய்”

நான் செல்போனுக்காக துழாவி மண்டையை அறைந்தேன்.. ”நான்

எடுத்துட்டு வந்தேன்”என்று அதையும் நீ நீட்டினாய்.

உன்னை அப்போதுதான் பார்ப்பதுபோல பார்த்தேன். பின்பு இறங்கி தெருவில் ஓடினேன். செல்போனில் எண் விசாரித்து மார்ச்சுவரி வேனுக்குச் சொன்னேன். அவர்கள் என்னை தெரு சந்திப்பில் நிற்கச் சொன்னார்கள்.

தெருமுனையில் ஒரு சிறு காய்கறிச்சந்தை. புத்தம்புதிய வெண்முள்ளங்கிகள் குவிந்துகிடந்தன. நடுவயது மனைவிகள் ஆர அமர காய்கறி வாங்கிக் கொண்டிருந்தார்கள். பேருந்துகள் குமட்டும் புகை கக்கி கடந்துசென்றன. என் நேர் எதிரே செல்போன் விளம்பரத்தில் ஒரு இளைஞன் அவன் அப்பாவிடம் •போனில் பேசிக்கோண்டிருந்தான். மகன் பிரகாசமான இளைஞன். ஏதோ ரயில் நிலையத்தில் நின்றிருந்தான். அப்பா ஒரு வீட்டின் போர்ட்டிகோவில் செய்தித்தாள் காபிக் கோப்பையுடன் பைஜாமா சட்டை போட்டு அமர்ந்திருந்தார். இதுதான் அப்பா மகன் ஒரு இலட்சிய உறவா? அது எங்காவது இருக்கிறதா?

வேன் வந்து தயங்கியது. ஆம்புலன்ஸ் போன்ற வண்டி. நான் அதை கவனித்தும்கூட அது எனக்காகவே வருகிறது என்று ஊகிக்கவில்லை. ஒருபோதும் அந்த வண்டியுடன் ஓர் தொடர்பு எனக்கு ஏற்படும் என எண்ணியதில்லை. அந்த வெள்ளை உடை சிப்பந்தி என்னை பார்த்து ஏதோ கேட்டபின்னர்தான் எல்லாம் என் மூளைக்கு உறைத்தது. கையை ஆட்டி ஓடினேன். வேனிலேயே ஏறிக்கொண்டு தெருவுக்குள் சென்றேன்.

மேலே ஏறிச்சென்றபோது அழுகைக் குரல் கேட்கவில்லை. வராந்தா முழுக்க பல்வேறு மனிதர்கள். வீட்டு வாசல்களிலும் சன்னல்களிலும் பெண்முகங்கள். அழுக்குத்துணிவாடை தூசுவாடை மிக்க சிறிய வீடுகளுக்குள் இருந்து டிவி ஒலி எழுந்தது. அய்யர் என்னைக் கண்டதும்

மீண்டும் வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

சிப்பந்திகள் ஸ்டிரெச்சருடன் படி ஏறி மேலே வந்தார்கள். ”என்னா சார் இம்மாம் படி இருக்கு…செங்குத்தா எறக்கணும் போல”என்றான் ஒருவன் .நான் ஒன்றும் சொல்லவில்லை

இன்னொரு முதிய சிப்பந்தி ”அல்லாம் ரூல்ஸ் இருக்கு சார், நாங்க ரோட் மட்டத்திலேதான் பாடி தூக்கணும்…இப்ப பாருங்க எத்தினி படி”’

”என்ன வேணுமோ குடுத்திடறேன்பா” என்றேன்

”அதுக்காகச் சொல்லலை…டெட் பாடி பாத்தீங்களா? பத்திரமா எறக்கணும் அதிலே…”

நான் ”இதான் வீடு ”என்றேன்

”பாடி மேலா •பீமேலா சார்” என்றபடி உள்ளே நுழைந்தார். ”இன்னா சார் கிஸ்னாயில் கப்பு வருது…சூஸைடா? அப்பாலே ராயப்பேட்டை ஆஸ்பிடலாண்ட சொல்லு சார்…போலீஸ் கேஸ்…”

”யோவ், எறும்பு வராம இருக்கறதுக்காக போட்ட சீமெண்ணை…சும்மா கத்தாதே”

”எறும்பா…சீக்கு ஒடம்பு…ஸார் டிராப்ஸ் சொட்டும்னு நெனைக்கறேன்….”

என்றார் சிப்பந்தி ”இந்த ஸ்டிரெச்சர்லே கொண்டு போக முடியாது. பிளாஸ்டிக் பேக் ஓணும்...அது அவ்ளோ காஸ்ட் ஆவும்...இப்ப எதுக்குச் சொல்றேன்னா—”

”சார் உங்க பேர் என்ன?” என்றாய் நீ

”துலுக்காணம்... நாங்க ஆஸ்பிடல் எம்ப்ளாயீஸ்... மேடம் யாரு?”

”துலுக்காணம் உங்களப் பாத்தா விஷயம் தெரிஞ்சவர் மாதிரி இருக்கீங்க...எல்லாம் முடிஞ்சதுக்குப் பிறகு நான் வேண்டியத செய்ஞ்சிடறோம்...நீங்க பாத்து என்ன வேணுமோ எல்லாத்தையும் செஞ்சிடுங்க...ப்ளீஸ்..”

”அவ்ளவுதாம்மா....நான் பாத்துக்கறேன்...உங்க •பாதராம்மா?”

”இல்ல, மாமா”

”பாவம் சீக்கு ஆளு...டேய் அந்தப்பக்கமா போடா. பம்முறான் பாரு”

சித்தி மட்டும்தான் மூலையில் படுத்து அழுதுகொண்டிருந்தார்கள். ராணியும் சுபாவும் சுவரில் ஒட்டி பிரமித்த கண்களுடன் நின்றார்கள். அப்பாவை மெல்ல தூக்கி ஸ்டிரெச்சரில் படுக்க வைத்தார்கள். உடல் நன்றாக இறுகியிருந்தது.

”சில்லுன்னு ஆகிப்போச்சு சார்…ஸ்மெல் வேற வந்தாச்சு…எப்ப போனாரு?”

நி ”நேத்து சாயங்காலம்…”என்றாய்

அப்பாவை வெண்துணியால் மூடி அந்த துணியை சேர்த்து கட்டினார்கள். முகத்தை மூடி அவரை தூக்கியதும் சித்தி கதறியபடி பாய்ந்து பிடிக்க வந்தாள். நீ அவளை பிடித்துக்கொண்டாய். ராணியும் சுபாவும் கதறியபடி பின்னால் வந்தார்கள்.

நான் வண்டியில் ஏறிக்கோண்டேன். பின்பக்கம் காரில் நீ மட்டும் ஓட்டிவந்தாய். மயானத்தை நான் முதன்முதலாகப் பார்க்கிறேன். அது ஒரு சிறிய ஆலை போலிருந்தது. அதன் முன் நாலைந்து வெள்ளை வேன்கள். சிறிய அமைதியான கூட்டம் சிதறி நின்றிருந்தது. ஒரு இளைஞன் மண் தரையில் படுத்து புரண்டு அழ இருவர் அவனை அள்ளி அமரச்செய்ய முயன்றார்கள். அவன் நழுவி நழுவி தரையில் விழுந்து மண்ணை அறைந்து அழுதான். அவனுடைய துயரத்துக்கு மண்ணில் ஒட்டிக்கொள்வதே ஆறுதலாக இருந்தது போல.

நீ காரை நிறுத்திவிட்டு சாவியுடன் வந்தாய். மயானமே உன்னை வேடிக்கை பார்த்தது. அங்கே உன்னைப்போன்ற ஒரு பெண் வருவதில்லை போல. ”துலுக்காணம் சார்” என்றாய். துலுக்காணம் ஓடிவந்து ”சொல்லுங்க மேடம்…” என்றார்

”இங்கே என்னென்ன •பார்மாலிட்டீஸ்னு தெரியல்லை…நீங்கதான் பாத்து எல்லாம் செய்யணும்…”என்றாய். ”அது என்னம்மா நாங்க எத்தினி பாத்திருக்கோம்மோ. நீங்க பேசாம அப்பாலே குந்துங்க..தோ

வந்திடறேன்”

துலுக்காணமே எல்லாவற்றையும் செய்தார். படிவங்கள் கொண்டுவந்து என்னிடம் கையெழுத்து வாங்கினார். ” ஆயிரத்தி எண்ணூறு ரூவா குடுசார்” என்று அதிகாரமாக கேட்டு வாங்கி கொண்டுசென்றார். ரசீதுடன் திரும்பி வந்தார். ஒரு நோயாளியை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்வதுபோல இருந்தது

அப்பாவை அவர்கள் உள்ளே கொண்டுசென்றார்கள்.முடிந்தது என்ற ஒற்றைச்சொல் என் மனதில் எழுந்தது. எத்தனை துயரங்கள் ஏக்கங்கள் அலைக்கழிப்புகள் பதற்றங்கள் வலிகள்....எல்லாம் இபப்டி முடிவதற்காகத்தான். அந்த இடத்தில் இருந்தபோது எல்லாமே மிக மிக சல்லிசானவையாக தோன்றின. ஒன்றுக்கும் ஒரு பொருளும் இல்லை. கனவில் பாம்பைப்பார்த்து பதற்றம் கொள்வதுபோலத்தான் எல்லா உணர்ச்சிவேகங்களும்.

அங்கேயே நாவிதர் இருந்தார். துலுக்காணம் ”இப்பல்லாம் ஆரும் மொட்டை போட்டுக்கறதில்லை சார்..சொம்மா ஒரு கத்தை முடிய வெட்டினு போய்னே இரு...இன்னா?” என்று அவரே முடிவெடுத்து ”சாஸ்திரத்துக்கு கட் பண்ணு இன்னாப்பா?”என்று உத்தரவும் கொடுத்துவிட்டார்.

முடியைக் களைந்து வேகமாக சில சடங்குகளைச் செய்தேன். ஐந்து நிமிடங்கள்தான். ”அப்பாலே உங்க சாதி வழக்கபப்டி அல்லாத்தையும் சப்ஜாடா பண்ணிக்கோ சார்...”என்றார் துலுக்காணம்.

ஒருமணிநேரம் காத்திருந்தோம். துலுக்காணம் வராந்தாவில் அமர்ந்து

இன்னொரு சிப்பந்தியிடம் பீடி வாங்கி பகிர்ந்து இழுக்க ஆரம்பித்தார். மயானமுற்றத்தில் நின்ற மரங்களிலிருந்து அணில்கள் இறங்கி துள்ளி துள்ளி ஓடி முற்றத்தில் சிதறிக்கிடந்த பொரிகளைக் கவ்வி மீண்டும் மேலேறின. கிச் கிச் என்ற ஒலி. நூற்றுக்கணக்கான கத்திரிக்கோல்கள் சிமிட்டிக்கொள்வதுபோல.

நான் அணில்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். எத்தனை உற்சாகமான பொருளில்லாத வாழ்க்கை. என்ன பொருளை எதிர்பார்க்கிறேன். எல்லா உயிரினங்களையும் போல பிறப்பு, காமம், மரணம். ஆனால் நம்பும்படி ஒரு அர்த்தம் தேவைப்படுகிறது அதற்கு. கடவுள் விதி மறுபிறப்பு பாவபுண்ணியம் சொற்கம் நரகம்....

என்னருகே நீ இறுக்கமாக அமர்ந்திருந்தாய். உன்னை ஓரக்கண்ணால் பார்த்தேன். நீ என் பார்வையை பொருட்படுத்தவில்லை. அணில்களைத்தான் பார்த்துக்கொண்டிருந்தாய். ஒரு அணில் உன்னை நோக்கி ஓடிவந்தது. கும்பிட்டு குந்தி அமர்ந்து படுவேகமாகக் கொறித்தது. நீ சற்றே குனிந்து ச்சு ச்சூ என்றாய். அது நாணல்குலை போன்ற வாலைத்தூக்கி சிச் சிச் சிச் என்று சொல்லி துள்ளி ஓடியது. மலர்ந்த முகத்துடன் இயல்பாக திரும்பிய நீ என்னை பார்த்தாய். உன் முகம் மாறியது. கண்கள் என்னை சந்திக்காமல் திரும்பிக்கொண்டன.

சுசி அப்போது நான் மகிழ்ந்தேன். உன் கோபம் எனக்கு உறுதியான ஒரு ஆதாரமாக இருந்தது, உன் மனதில் நான் இருக்கிறேன். நீ என்னை வெறுக்கவில்லை, என் மீது கடுமையான கோபத்துடன் இருக்கிறாய் அவ்வளவுதான். சுசி, நெடுங்காலமாகவே நீ என்னைப்பற்றிய கனவுகளுடன் வளர்ந்திருக்கலாம். உன் மனதில் இருந்து என்னை அழிக்க உன்னால் முடியாது என அப்போது உணர்ந்தேன்.

எத்தனை அருமையான இடம் ஒரு பிரியத்தைப் புரிந்துகொள்ள என

எண்ணினேன். ஆனால் அதுவும் நியாயம்தானே? மரணத்தைச் சொல்லித்தானே காதலர்கள் வாக்குறுதி எடுக்கிறார்கள். அன்பிலும் காதலிலும் அதிகமாகப் பேசப்படும் சொல்லே மரணம்தானே? மரணத்தின் வெறுமையை வெல்ல மனிதன் கண்டுபிடித்தவைதானா அன்பும் காதலும்?

அப்பாவின் அஸ்தியை ஒரு சிறிய டப்பாவில் தந்தார்கள். அதை என்னால் வாங்க முடியவில்லை. அதற்குள் இருப்பது அப்பா என்ற எண்ணம் எழவில்லை, ஆனால் அதிலிருந்து அப்பாவை பிரிக்கவும் முடியவில்லை. நீ என் கையிலிருந்து அதை வாங்கிக் கொண்டாய்

”துலுக்காணம் சார்” என்றாய்.

”அம்மா” என்று ஓடிவந்தார்

”நாங்க காரிலே போய்க்கறோம்….ரொம்ப தாங்ஸ்ங்க…ரொம்ப உபகாரமா இருந்தீங்க…இக்கட்டான நேரத்திலே உங்கள மாதிரி ஒருத்தர் வந்தது சாமியே வந்ததுமாதிரி…தப்பா நெனைக்க மாட்டீங்களே”என்று ஐநூறு ரூபாயை நீட்டினாய். ”ஷேர் பண்ணிக்குங்க”

”என்னம்மா நீயி” என்று அவர் முகம் மலர்ந்து அதைப் பெற்றுக்கொண்டார் ”இவ்ளவெல்லாம் ஆரும் குடுக்கிறதில்லை”

‘என்ன …பரவால்லை நீங்க செஞ்ச உதவி பெரிசில்லியா?”

”எங்க டூட்டிம்மா இது”

”வரேன் துலுக்காணம் சார் …வரேங்க” என்றாய்

நான் காரை ஓட்டினேன். நீ மடியில் கலசத்துடன் அருகே விரைப்பாக அமர்ந்திருந்தாய். சுசி அப்போது என் மனதில் துயரமே இல்லை. வெறுமை காலைப்பனிபோல விலகி மெல்லமெல்ல ஒளி பரவிக்கொண்டிருந்தது. உன்னை ஓரக்கண்ணால் பார்த்தேன். நான் எதையாவது வேடிக்கையாகச் சொல்லியிருக்கக் கூடும். உன் கையில் இருந்த அப்பாவின் அஸ்தி மட்டும்தான் தடையாக இருந்தது.

கார் தெருவை அடைந்தது ” நம்ம வீட்டிலேயே குளிச்சுக்கலாம்…இந்த வீட்டிலே எடமே இல்லியே”என்றாய் . ‘ஒரு செகண்ட் நிப்பாட்டுங்க” என்று பேக்கரி முன் காரை நிறுத்தச் சொன்னாய் இஃறங்கிப்போய் பிரட்டும் வெண்ணையும் ஜாமும் வாங்கிவந்தாய்.

வீட்டுக்குள் நாம் நுழைந்த்ததும் மீண்டும் சித்தியும் சுபாவும் அழுதார்கள். ராணி உன்னருகே வந்து தோளைத் தொட்டுக்கொண்டு நின்றாள். நான் நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். அப்பாவின் படம் குங்குமப்பொட்டுடன் மாலைபோடப்பட்டு நாற்காலி மீது இருந்தது. நான் அப்பாவின் படத்தைப் பார்த்தேன். அவர் இருந்தபோது அந்தப்படம் அவரைப்போல இல்லை என்றே தோன்றியிருந்தது. இப்போது அது அவராகவே இருந்தது.

‘வாடி” என்று ராணியை அழைத்துக்கொண்டு நீ உள்ளே போய் காபி போட்டுக்கொண்டுவந்தாய். பிரட் துண்டுகளை தட்டில் வைத்து பரிமாறினாய். சுபாவும் சித்தியும் மறுத்தார்கள். ராணி உள்ளேயே தின்றிருந்தாள் என்று வாயைப் பார்த்தாலே தெரிந்தது.
”சாப்பிடுங்க…செத்துப்போனவங்க ஆத்மா சாந்தி அடையணும்னா

இருக்கிறவங்க பட்டினி கிடக்கக்கூடாதுன்னு சொல்வாங்க...சாப்பிடுங்க அத்தை”

சித்தி ”இல்லம்மா”என்றாள்.

”சாப்பிடுங்க சொல்றேன் ”என்று நீ அதட்டினாய் ”ஏய் சுபா எடுத்துக்கப்போறியா இல்லியா?”

மெல்ல சுபாவும் அத்தையும் எடுத்துக்கொண்டார்கள். சாப்பிடும்போது சித்தி விக்கி விக்கி அழுதாள்.

”அழுதிட்டே சாப்பிடக்கூடாது அத்தை”

சித்தி சட்டென்று கையை விரித்துக்கொண்டு என்னிடம் உடைந்த குரலில் உரக்க ”தம்பி மூத்தவ உங்க ரத்தமில்லேன்னு விட்டுடாதே...அவளுக்கு யாருமில்லை தம்பீ”என்றாள்

அந்தக் கணத்தில் உன் முகம் சிவந்து தழல் போல எரிந்ததைக் கண்டேன். கடுமையாக ”வாய மூடுங்க....என்ன பேச்சு இது? இப்ப அவரு ஏதாவது சொன்னாரா? சும்மா சின்னப்புள்ளைங்க மனசைக் கலைச்சுகிட்டு....அவதான் அருணோட முதல் தங்கச்சி...முதல் உறவே அவதான் போதுமா”என்றாய்

சுபா சட்டென்று அப்படியே உன் காலைக்கட்டிக்கொண்டு கதறி அழுதாள். நீ அமர்ந்து அவளை அணைத்துக்கொண்டாய். மூன்று பெண்களும் ஓர் அருவியில் குளிப்பதுபோல அழுகையில் நின்றீர்கள்.

நான் எழுந்து வெளியே வந்தேன். எனக்கு ஒரு டீ குடிக்க வேண்டும் போலிருந்தது. தெருவில் இறங்கி நாயர் கடையில் ஒரு டீ சொன்னேன்

அய்யர் கையில் ஒரு பையுடன் வந்தார். என்னைப்பார்த்து சிரித்தபடி ”டீ குடிக்கிறேளா?” என்றார்

”ம்ம்” என்றேன்

”நான் ஒண்ணும் தப்பா சொல்லல்லை…நீங்கதான் சட்டுனு சீரியஸா ஆயிட்டேள்..அந்த ராஜமாணிக்கம் ஒரு மொரடன்…தாசில்தார் ஆபீஸ்ல கிளார்க்கு…சரியானடூழல் ஆசாமீன்னு சொல்றா..அபத்தமா ஏதோ பேசி உங்கள அப்செட் பண்ணி விட்டுட்டான்”

”பரவாயில்லை”என்றேன்

”ஒண்ணும் கவலைப்படாதீங்கோ நல்ல நேரத்திலே போயிருக்கார்…அவருக்கு மோக்ஷம் உண்டு… நாப்பத்தொண்ணுந் ஆள் கழிச்சு ஒரு மோட்சதீபம் ஏத்திடுங்கோ…”

”சரி”

”பாப்பா நம்மளை ரொம்ப கோவிச்சுண்டுட்டா…நம்மாத்து மாமிக்குக் கூட அதிலே மனஸ்தாபம்…பாப்பா யாரு?”

”என்னோட முறைப்பொண்ணு”

”அதுசரி” என்றார்” பாப்பா ரொம்ப போல்டு.. அந்தாளுக்கு போட்டா பாருங்க ஒரு போடு…செத்தான் நாயி… பொண்ணானா அப்டி இருக்கணும். என்ன சொல்றீங்க?”

நான் நடக்க ஆரம்பித்தேன். அவர் என்னுடன் வந்தபடி ”உங்கப்பாவை நான் நாலஞ்சு வாட்டி சந்திச்சு பேசியிருக்கேன். தங்கமான மனுஷன்”என்றார்

”அவர் நேத்தே போயிட்டார்…யாராவது அவங்களுக்கு ஹெல்ப் பண்ணியிருக்கலாமே” என்றேன்

”எனக்கு அல்ஸர்…சாப்பிடாம இருந்தா மறுநாள் ஆஸ்பத்திரிதான் வாசம். டெட்பாடிய வச்சுண்டு சாப்பிடவும்படாது…அதான் செத்துப்போன விஷயமே தெரியவாணாம்னு எங்காத்து மாமிட்டே சொல்லிட்டேன். காலைல பாத்துண்டா போச்சுன்னு பிடி மோருஞ்சாதம் சாப்பிட்டிட்டு ராமா தாசாரதேன்னு போத்தி படுத்துட்டேன்”

அவர் தன் வீட்டில் நுழைந்தார். நான் வாசலில் நின்றேன். எழுந்து என் அருகே வந்தாய். நான் மெல்ல ”சுசி நாம கௌம்பலாம். அம்மா என்ன செய்றான்னே தெரியல்லை” என்றேன்

”ஆமா..அவங்கள நெனைச்சா கவலையாத்தான் இருக்கு…நீ போ…நான் இங்கியே ராத்திரி தங்கணும்…”

”ஏன்?” என்றேன்

”பின்ன? மரன வீட்டிலே இவங்களை தனியா விடலாமா? நீ போ..” என்று சொன்னாய். நான் உன்னைப்பார்த்தபடி நின்றேன் ”சண்டை போஅவேணாம். எது சொன்னாலும் இப்ப அத்தைக்கு ஏறாது…ஒரு பத்துநாள் போகட்டும்.அதுக்குமேலே பேசிக்கலாம். இப்ப அவங்க சொல்றதை மட்டும் கேட்டுட்டு பேசாம படுத்து தூங்கு”

கள்ளமற்ற குழந்தைமுகம். ஐஸ்கிரீமுக்க்காக குதித்த அதே சிறுமி. சுசி பெண்ணை ஆண் முகங்களின் நதிபோல பார்த்துக்கோண்டே இருக்கலாம்போல.

நான் பெருமூச்சுடன் கிளம்பி கீழே காரை நோக்கி நடந்தேன். என் மனம் எபப்டி நெகிழ்ந்திருந்தது என்று அறிவாயா? இந்தச் சொற்களை எல்லாம் நீ வெறும் உணர்ச்சிப்பிதற்றலாகவே எண்ணுவாய்…

சுசி சுசி சுசி….கருவறைவிட்டு வெளியே வரும்போதே பெண் தாயாகத்தான் வருகிறாள் என்று அப்போது புரிந்துகொண்டேன்.

[11]

நான் வீட்டை அடையும்போது இருட்டியிருந்தது. வீடு இருண்டு கிடந்தது. போர்ட்டிகோவிலும் சிட் அவுட்டிலும் விளக்குகள் இல்லை. கேட் பூட்டியிருக்கிறதா என்று பார்த்தேன், இல்லை. சிமின்ட் முற்றமெங்கும் பூந்தொட்டிகள் உடைந்து செடிகள் வாடிக்கிடந்தன. காரை நிறுத்திவிட்டு சென்று கதவை அடைந்தேன். கதவுக்கு அப்பாலும் விளக்கு இல்லை என்பதை சாவித்துளை காட்டியது

காலிங் பெல்லை அழுத்தினேன். பலமுறை அழுத்தியும் கதவு திறக்கவில்லை. உள்ளே அசைவே இல்லை.நான் அம்மா வெளியே பூட்டிக்கொண்டு போய்விட்டாளா என்று எண்ணி தாழை அசைத்தேன். பூட்டவில்லை, உள்ளே தாழிட்டிருக்கிறது. பரபரவென்று சந்தேகங்களும் பயங்களும் எழுந்து அடிவயிற்றை சில்லிடச்செய்தன கதவை போட்டு உந்தினேன்

உள்ளே அசைவு தெரிந்தது. அம்மா உள்ளே கதவருகே நின்றிருக்கிறாள் என்பதை உணர்ந்தேன். காத்திருந்தேன். மெல்லிய கிளிக்–கதவுதிறந்தது.

அம்மா கதவைத்திறந்து சிறிய இடைவெளியை கைகளால் தடுத்தபடி நின்றாள். அவளுடைய தோற்றம் என்னை ஒரு கணம் துணுக்குறச் செய்தது. நெற்றியில் பொட்டும் நகைகளும் இல்லை. வீட்டுக்குள் இருட்டு. அவள் ஒரு நிழல் போலிருந்தாள்.

”எங்க வந்தே?” என்றாள்

”ம்ம்?”

”இங்களங்க வந்தே?”

”வழிய விடு”

”போடா…உள்ள வராதே…

நான் அவளையே பார்த்தேன். பாழ்நெற்றியுடன் அவள் முகம் என் நேராகப்பார்க்கவிடவில்லை

”போ வெளியே..அப்டியே போயிடு” என்றபோது அவள் குரல் எழுந்தது. சுட்டிககட்டிய கை நடுங்கியது.

”சும்மா டிராமா போடாதே…” என்றபடி உள்ளே செல்ல முயன்றேன்

”வெளிய போடா ராஸ்கல்..இனி நீ எனக்கு மகன் கெடையாது….நான் உனக்கு அம்மாவும் கெடையாது”என்று என் தோளைப்பிடித்துத் தள்ளினாள். அதை எதிர்பாராததனால் நான் சற்றுத் தடுமாறிவிட்டேன்.

நிதானப்படுத்திக்கொண்டு நான் அவளையே உற்று பார்த்தேன். பிறகு திடமான தாழ்ந்த குரலில் ”இப்ப நான் வெளியே போனென்னா அப்றம் நீ என்னைப்பாக்க முடியாது…கண்டிப்பா நீ செத்தா கொள்ளிபோடக்கூட வரமாட்டேன்…இது உன்மேலே சத்தியம்”என்றேன்

அம்மா அயர்ந்து போய்விட்டாள். வாசலை தடுத்த கை தழைந்து தட்டென்று பக்கவாட்டில் விழுந்தது. பின்னால் சாய்ந்து சுவரில் ஆதரவாக பிடித்துக்கொண்டால்.

”நான் உள்ள போகலாமா?”என்றேன்

அவள் விலகிக்கொண்டாள். நான் உள்ளே சென்று என் அறைக்குள் போய் உடையை மாற்ற ஆரம்பித்தேன். அவள் பின்னால் வந்து கதவுமீது கன்னங்களைச் சேர்த்து நின்றாள்.

”சுசி எங்கேடா?”

”அங்க இருக்கா…அவங்களுக்கு துணைக்கு”

”அவளுக்கென்ன கிறுக்கா?”என்றாள் சீற்றத்துடன். ”அந்த தேவ்டியாவீட்டிலே…”

”கிறுக்கு உனக்கு…வெறிபிடிச்சு மனுஷத்தனத்தை மறந்துட்டு அலையுறே…”

அம்மா அவள் நினைத்தபடி கத்தும் ஆற்றலை அப்போதுதான் அடைந்தாள் ”டேய் நீ இதைச்சொல்லணும்டா…அந்தப் பாவி எனக்கு துரோகம் பண்ணிட்டு போனதுக்கு அப்றம் உன்னை பாடுபட்டு வளத்தேன் பாரு அதுக்கு நீ இதைத்தான் சொல்லணும்… பதினெட்டு

வருஷம் ஏச்சும் பேச்சும் அவமானமும் அப்ட்டு உன்னை வளத்து ஆளாக்கினேனே...அதுக்கு நீ என்னைச் எருபபலே அடிக்கணும்...உன்னை ரத்தம் குடுத்து வளத்தவ நான். இப்ப அந்தப் பொறுக்கி உனக்கு பெரிசாப் போயிட்டார்... இல்ல?”

”அவரு உன்னைவிட பெரிசுன்னு நான் சொல்லல்லை. நீதான் எனக்கு முக்கியம்.நான் நீ வளத்த பிள்ளை. ஆனா அவரோட ரத்தம் நான்..அந்தக்கடமைகளை நான் செஞ்சாகணும்.”

‘எதுடா கடமை? துரோகம் செஞ்சபாவிக்கு அடைக்கலம்குடுக்கிறதா? டேய் நீ அந்தாளைப்போய் பாத்திட்டுதானே இருந்தே? உண்மையச்சொல்லு...என் மூஞ்சியபாத்து சொல்லு”

”உன் முகத்தைப்பாத்தே சொல்றேன். ஆமா.”என்றேன் ”அவருக்கு நான் தான் வைத்தியம் பாத்தேன். அந்தக்குடும்பத்துக்கே நான்தான் சோறு போடுறேன்...இப்ப அந்தக்குடும்பத்தையே என் கிட்ட ஒப்படைச்சுகிட்டுதான் அவர் போயிருக்கார்”

”டேய் நீ எனக்கு துரோகம் செய்திட்டிருந்தே இல்ல? சொல்லுடா பாவி ”

”அம்மா நீ நம்பினாலும் நம்பாட்டியும் ஒண்ணு சொல்றேன், நெஞ்சில கையவைச்சு சொல்றேன்.எனக்கு இந்த பூமியிலே நீ மட்டும்தான் முக்கியம். உனக்கு சமானமா எனக்கு யாருமே கெடையாது... உனக்காக மட்டும்தான் நான் சிரிச்சுட்டே என் உயிரைக் கொடுப்பேன்...ஆனால் நீ என்கிட்ட பாவம் செய்யச்சொன்னா செய்யமாட்டேன்...”

”என்னடா பாவம்? அந்த தேவ்டியாளை போய் பாத்துக்கிடறதா?”

”அம்மா…ஜாஸ்தி பேசறே நீ…” என்று நான் திரும்பிக்கோண்டேன்

”டேய் பாவி”என்று அலறியபடி என்னை அடிக்க வந்தாள். ”மனுஷனாடா நீ? சொந்த அம்மாவுக்கே துரோகம் செய்றியே நீயெல்லாம் ஒரு மனுஷனாடா? நான் உனக்கு என்னனடா பாவம் செஞ்சேன்…அடப்பாவி…தீய அள்ளிபோடுறதுமாதிரி சொல்றியெடா டேய்” என்று பாதியிலேயே தொய்ந்து என் முழங்கையைப்பிடித்தபடி கதறி அழ ஆரம்பித்தாள்.

”நான் என்ன பண்ணனும்ணு சொல்றே?” என்றேன் கோபத்தை அடக்கியபடி.

”அந்தப்பாவி புழுத்து செத்திருக்கனும்டா…அவன் செஞ்ச துரோகத்துக்கு அவன் அணுவணுவா அழுகிச் செத்திருக்கணும்….அந்தப்பாவியோட குடும்பம் நடுத்தெருவிலே நிக்கணும்..அவன் எனக்குச் செஞ்ச துரோகத்துக்கு அவன் நாசமா போயிருக்கணும்…கடைசீகாலத்தில நீ போய் அவனை சந்தோஷமா சாகவிட்டுட்டேல்ல? பாவி இதுக்காடா நான் உன்னை வளத்தேன்…”

என்னுள் இருந்து உக்கிரமான வெறுப்பு ஒன்று குமுறிவந்தது. சுசி எத்தனை நெருக்கமானவர்கள் ஆனாலும் நமக்கு எல்லார்மேலும் ஒரு துளி வெறுப்பாவது உள்ளே இருக்கும். மிக ஆழத்தில். அந்த வெறுப்பு சிலசமயம் நம்மை அறியாமலேயே நம் சொற்களில் முனைகொண்டுவிடும்.

”துரோகம் துரோகம்னு சொல்றியே…துரோகம் செய்யாத மனுஷங்க

இந்த பூமியிலே உண்டா என்ன?”

‘என்னடா சொல்றே நீ?”என்றாள் பீதியுடன்

”அவரு செஞ்சது துரோகம்… பெரிய தப்புதான் அது….ஆனா தப்புசெய்யாத மனுஷனே கெடையாது…. இந்த கூப்பாடு போடுறியே , சரி நீ ஒருநாளைக்காவது ஒரு தடவையாவது மனசாலே எங்கப்பாவுக்கு துரோகம் செஞ்சதில்லேன்னு சொல்ல முடியுமா? வேற ஆம்பிளைய கற்பனையிலயும் நெனைச்சதில்லைன்னு சொல்ல முடியுமா உன்னால? சொல்லமுடியும்னா வா சாமிமுன்னாடி சூடம் அணைச்சு சத்தியம் பண்ணு. நான் நம்பறேன்”

‘டேய்!டேய் பாவி”என்று தளர்ந்து வெறும்தரையில் அப்படியே அமர்ந்து விட்டாள். முகம் பிரேதம்போல வெளுத்து விட்டது.

அவள் முகத்தை அப்போது பார்த்தபோது என் மனத்தில் அச்சம்தான் ஏற்பட்டது. அவள் உயிரோடு மீள்வாள் என்றே தோன்றவில்லை. ஆனால் அச்சத்துடன் போட்டியிட்டு ஓடிய குரூரம் அரைக்கணத்தில் முந்திக்கொண்டது.

”மத்தவங்களோட ஒழுக்கத்துக்கு மார்க் போடுறதுக்கு யாருக்குமே ரைட் இல்ல…சும்மா ஒழுக்கம் ஒழுக்கம்னு சொல்ரவங்க அவங்களை மறைச்சுக்கிடறதுக்காகத்தான் அப்டி சொல்றாங்க… எல்லாருக்கும் மனசு ஒண்ணுதான்…” என்றேன்

ஆனால் அம்மாவும் பெண்தான். அவளுக்கும் தெரியும் ஆணை ஆழமாகப்புண்படுத்தும் விதம். அம்மா பாம்புபோல தலையை சொடுக்கி

தூக்கி ”சீ…பொறுக்கி நாயே…நீ சொல்லுவேடா..அந்தாளோட ரத்தம்தானே நீ? அவன் ஒடம்பிலே ஓடுற சாக்கடைதானே உன் ஒடம்பிலேயும் ஓடுது.. அவனை மாதிரி நீயும் எச்சில்கலைக்கு நாக்கத் தொங்கப்போட்டு ஓடணும்னு திட்டம்போடறே.. போடா போ”

அதுதான் என் கடைசி எல்லை. நான் உடைந்து மளமளவென சரிந்தேன். மடேரென்று என் மார்பில் ஓங்கி அறைந்து கூவினேன். .”…. ஆமா நானும் எங்கப்பாவும் ஒழுக்கம்கெட்டவங்கதான்…போக்கிரிங்கதான். காமவெறி பிடிச்சவங்கதான். போதுமா? உலகத்தில இருக்கிற யோக்கியங்க அத்தனை பேரும் சேர்ந்து வந்து எங்கள தூக்கில ஏத்துங்க…போதும்…கேட்டுக்கேட்டு புளிச்சு போச்சு… தீயில எரிஞ்சு எரிஞ்சு ஆத்மாவே சாம்பலாயாச்சு…துரோகம், ஒழுக்கம், மண்ணாங்கட்டி…. எங்களைக் குறைசொல்ல உலகத்துல யாருக்குமே யோக்கியதை கெடையாது. உனக்கும் கிடையாது உன் மருமகளுக்கும் கெடையாது…”

”டேய்.. என்னடா ஔறுறே.”என்று அம்மா பதறியபடி ஏதோ சொல்லவந்தாள்

”நானும் எங்கப்பா மாதிரித்தான் …அதைத்தான் சொல்லவந்தேன்”

”டேய்”

”நான் சந்திராகூட உறவு வச்சிட்டிருக்கேன்…மூணு வருஷமா அவகூட படுக்கிறேன்… நான் கேவலமான பொம்பிளைப்பொறுக்கி… அம்மாவுக்கும் பொண்டாட்டிக்கும் வித்தியாசம் தெரியாதவன்… போதுமா? நீதான் உத்தமியாச்சே, போ, சமையலறையில போய் எனக்கு

வெஷத்தைக் கலந்து கொண்டாந்து குடு... இல்ல நான் தூங்குறப்ப தலையில கல்லைத்தூக்கிபோடு...கொல்றியா? கொல்றியா? கொல்ல முடியுமா உன்னால?”

அம்மாவின் பிணமுகத்தைப்பார்த்துச் சொன்னேன். ”உன்னாலே முடியாது...ஏன்னா நான் உன் புள்ளை...என்னை நீ மன்னிச்சிருவே. ஆனா அப்பாவை மன்னிக்க மாட்டே. ஏன்னா அவரு உன் ரத்தம் இல்லை. அவரைவிட உனக்கு உன் ஈகோ பெரிசு...நீ பெரிய இவள்னு நாலுபேருட்ட காட்டிக்கணும்கிற ஆசை....நீ சொல்ற மாதிரி நீ பெரிய உத்தமின்னா நான் இப்ப போய் தூங்கறேன். என் தலையில அம்மிக்குழவியை தூக்கிப் போடணும் நீ...சத்தியமா அதைத்தான் செய்யணும்”

ஒருகணத்தில் சொற்களெல்லாம் விலகிப்போய் முழுமுற்றான வெறுமையை அடைந்தேன். இறந்துபோய் மெல்ல மெல்ல மீண்டுவருவதுபோல மீண்டேன். திரும்பி என் அறைக்குப்போய் கதவை அறைந்து மூடிவிட்டு கட்டிலில் விழுந்து மல்லாந்து படுத்துக்கொண்டேன்.

தூங்கி எத்தனை நாள் ஆகிறது என எண்ணிக்கொண்டேன். ஆனால் இனி என் வாழ்நாளிலேயே என்னால் தூங்கமுடியும் என்று தோன்றவில்லை. வாய் கசந்தது, தலை சுழன்றது, உடல் நீர் நிறைந்த தோல்பை போல கனத்து கிடந்தது. ஆனால் மனம் உள்ளே கொந்தளித்துக்கொண்டே இருந்தது. படுத்தபடியே நான் வேகமாக ஓடிக்கோண்டிருப்பவன் போல உணர்ந்தேன்.

புரண்டு புரண்டு படுத்தேன். என் எண்ணங்கள் சிதறி விட்டன. அவற்றை குலுக்கி இணைத்துக்கொள்ள முயல்பவனைப்போல தலையணையில் தலையை அறைந்தேன். கையால் நெற்றியில் அடித்துக் கொண்டேன். எழுந்து மர்ந்து மேலே ஓடிய ·பேனைப்பார்த்தேன். அக்கணமே

போர்வையைஎடுத்து அதில் கட்டி தொங்கிவிடவேண்டும் என்று எண்ணினேன்.

மீண்டும் படுத்துக்கோண்டேன். என்ன வலி இது... மனித உடல் நோயுற்று அழுகி வலித்துத் துடிப்பதை இயல்பானது என்று சொல்லலாம். இந்த மேலும் பலமடங்கு தீவிரமான மனவலிக்கு என்ன அர்த்தம்? ஏன் இதை நான் அனுபவிக்க வேண்டும்? இது நானே கற்பித்துக் கொள்வதல்லவா? இதை ஏன் என்னால் தூக்கி வீசிவிடமுடியவில்லை?

மனித உடலைவிட திடவட்டமான மனித இருப்பு மனித அகங்காரம். உடலில் படும் அடியைவிட தீவிரமானது அகங்காரத்தில் படும் அடி. என் உடல் தூங்கத்தவிக்கிறது. ஆனால் அகங்காரம் அடங்காமல் அதனால் தூங்க முடியாது. டிராயரை திறந்து ஏதாவது மாத்திரை இருக்கிறதா என்று பார்த்தேன். ஏதுமில்லை. மீண்டும் வந்து கட்டிலில் அமர்ந்துகொண்டேன். கடிகாரம் டிக் டிக் டிக் என்று சென்றுகொண்டே இருந்தது.

ஏன் எதைப்பற்றியும் கவலைபட்டாமல் எது பிடிக்கிறதோ அதைமட்டும் செய்துகோண்டு செல்லக்கூடாது? எதர்கு இந்த அவஸ்தை? நான் பிரரைப் பயப்படுகிறேனா? ஏன்? இல்லை இது அதுவல்ல. நான் செய்வதை நானே நியாயப்படுத்திக்கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படி நியாயபட்டுத்திக்கொள்ளத்தான் உலகில் கோடானுகோடி சொற்கள் கணம்தோறும் கொட்டப்படுகின்ரன கோடானுகோடி எண்ணங்கள் கணந்தோறும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

எதையும் நியாயப்படுத்திக்கொள்ளாமல் பிடித்ததைச் செய்து வாழ்பவர் எவராவது உண்டா என்ன? அது சாத்தியமா? எல்லாருமே ஒரு நியாயம் வைத்திருக்கிறார்கள். ஆனால் மண்ணில் எதையும்

நியாயப்படுத்திவிடலாம். கொஞ்சம் கண்ணீரும் கொஞ்சம் சொற்களும்போதும். ஆனால் நான் நல்லவன் என்று நம்பாமல் மண்ணில் உயிர்வாழவே முடியாது. கால்கீழ் பூமி சவ்வாகக் கிழிந்து பாதாளத்துக்குத் தள்ளிவிட்டுவிடும்.

எழுந்து வெளியே சென்றேன். அம்மாவின் அறை பூட்டியிருந்தது. உள்ளே அம்மா தூங்கிவிட்டிருந்தாள். இல்லை கண்டிப்பாக துங்க மாஆள். இன்று இந்த நகரில் நான்கு உயிர்கள் தூங்கியிருக்காது. நான் அம்மாவின் அறைக்கத்வருகே சென்று நின்றேன். கதவை தட்டுவதற்கு முந்தைய கணத்தில் காலமே இல்லாதவனாக நின்றுகொண்டிருந்தேன்

கதவைத் தீண்டினால்போதும் அது திறக்கும். ஆம், அம்மா என்னை எதிர்பார்த்து உள்ளே படுத்திருக்கிறாள். நான் அவள் கால்களில் விழுந்து அம்மா என்னை மன்னித்துவிடு என்று ஒரு வார்த்தை சொன்னால்போதும் மீண்டும் ஆறுவயதுப் பையனாக அவள் மடியின் இளம் வெம்மையில் அடைக்கலமாகிவிடமுடியும். எல்லாம் சரியாகிவிடும்.எல்லாம்

அம்மாவின் தனிமையை என்னால் நினைக்கவே முடியவில்லை. முன்பு ஒரு கேரள மன்னரின் வதைக்கூடத்தைப் பார்த்தேன். தன் எதிரியை அவன் உடல் அளவுக்கே சிறிய , உணவுக்கும் கழிவுக்கும் மட்டும் பொந்துள்ள, அறைக்குள் தள்ளி நிரந்தரமாக சுவர்கட்டி மூடிவிட்டார். அங்கே அவன் எட்டுமாதம் உயிரோடு இருந்தான். பைத்தியம் பிடித்து செத்தான்.

அம்மா அதுவரை நம்பி வாழ்ந்த அனைத்தையும் இழந்து வெறுமையில் உள்ளே கிடக்கிறாள். அவளுடைய மரணம் நிகழ்ந்துவிட்டது. நாளைக்காலையில் அவள் தூங்கி எழுவதற்கான காரணம் எதுவுமே இப்போது எஞ்சியிருக்கவில்லை...

ஆனால் என்னால் கதவைத் தட்ட முடியவில்லை. என் விரல்களை என்னால அசைக்கவே முடியவில்லை. பின்பு மெல்ல ஓசையில்லாமல் திரும்பி •ப்ரிட்ஜை அடைந்து தண்ணீர்புட்டியை எடுத்து குளிர்நீரை வாயில் கொட்டி குடித்தேன். நான் எத்தனை தாகமாக இருந்தேன் என்பது அப்போதுதான் தெரிந்தது. என் எரியும் எண்ணங்கள் மீதே குளுமையான நீர் வழிந்தோடுவதுபோல் இருந்தது

•ப்ரிட்ஜை மூடும்போது நான் திரும்பி பார்த்தேன், அம்மா அறைவாசலில் நின்றிருந்தாள். இருண்ட கோயிலுக்குள் சிலை நிற்பதுபோல. நான் அசப்பில் அவளைக் கண்டு சற்று அதிர்ந்தபின் மெல்ல மீண்டு அவளைநோக்கி நடந்தேன். அவளிடம் ஏதோ சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் சொற்களால் சென்றடையும் தூரத்துக்கு அப்பால் இருந்தாள் அம்மா

அவளருகே நின்று தயங்கி பின்னர் மெல்ல ”மாத்திரை போட்டுக்கோ”என்றேன். அம்மாபொன்றும் சொல்லவில்லை. நான் ”முகத்திலே பிரஷர் தெரியுது…”என்றேன். அம்மா உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டாள். மூடிய கதவை பார்த்து நின்றபின் என் அறைக்குச் சென்றேன்

கதவை மூடியபின் என் தன்னிரக்கம் மெல்லமெல்ல வளர ஆரம்பித்தது. அந்த உடலளவுச் சிறைக்குள் சிக்கிக் கொண்டிருப்பவன் நான் அல்லவா? எனக்குத்தான் எதுவுமே மிஞ்சவில்லை. நம்புவதற்கு, சாய்ந்திருப்பதற்கு. நாந்தான் முற்றிலும் அனாதை. எனக்கிருந்தது அம்மா மட்டும்தான், அவளை சற்றுமுன் கொன்று விட்டேன்.

தொண்டை கரகரத்தது. உதடுகளை இறுக்கிக்கொண்டேன்.

செல் •போனை பாய்ந்து எடுத்தேன். வழக்கம்போல நூற்றுக்கும் மேல் மிஸ்டுகால்கள். நான் அதை கையில் வைத்துக்கொண்டு சிந்தனைசெய்தேன். பின்பு உன்னுடைய எண்னை அழுத்தினேன். மணியடித்தது. மீண்டும் மீண்டும் . நீ எடுக்கவில்லை. சைலண்ட் மோடில் வைத்துவிட்டு தூங்கியிருந்தாய்.

சுசி நான் அந்த இரவில் உனக்காக மிஈண்டும் மீண்டும் கூவிக்கோண்டிருந்தேன். பின்பு செல்போனை வீசிவிட்டு மின்விசிறியைப் பார்த்தபடி நெடுநேரம் அமர்ந்திருந்தேன்.

பின்பு நான் சந்திராவின் எண்ணை அழைத்தேன். மணி ஒலி பிப் என்றதுமே அவள் எடுத்து ”அருண்”என்றாள். சுசி அப்போது உன் முகம் என் மனதில் வந்துசென்றது.

”ம்ம்”

”என்ன ஆச்சு? அப்பா–”

”ஆமா”

”என் ஸ்டுடன்ட் ஒருத்தி சொன்னா… ”என்றாள் ”இப்பதான் வந்தியா?”

”ஆமா”

”அக்கா வந்தாங்களா?”

”இல்லை”

”வரமாட்டாங்க….நீ அவங்களை கம்பெல் பண்ணாம விட்டிடு…அவங்களோட நேச்சர் அப்டி…”

”சந்திரா”

”என்ன?”

எனக்கு அழுகை வந்து உடல் விம்மியது ”சந்திரா என்னால தாங்க முடியல்லை…ஐ யம் டையிங்” என்றேன்.

”உனக்கு அப்பாமேல அன்பு உண்டுன்னு தெரியும்…ஆனா அவர் செஞ்சதையும் நீ யோசிச்சுப்பாக்கணும்….பாவம் அக்கா. அவங்களோஅ லை•ப் எப்டி ஆயிடிச்சு…முப்பத்தஞ்சு வயசு முதல் தனியா புள்ளையையும் வச்சுகிட்டு …நம்ம ஊரிலே பொண்ணு புருஷனைப் பிரிஞ்சிருந்தா எல்லாருக்கும் இளக்காரம் ஆயிடுது. வம்புபார்ட்டிங்க பேசிட்டே இருக்கும். அதாவது பரவாயில்லை, நம்மகிட்ட நெருக்கமா இருக்கிறவங்க கூட அவங்களை மறந்து அந்த கூட்டத்திலே சேந்துகிடுவாங்க…உனக்கு சாரதா மேடத்தை தெரியும்ல?”

”தெரியாது”

”எங்க காலேஜ்தான்…ரிட்டயர் ஆயிட்டாங்க. உங்கம்மாவோட

உயிர்தோழி.நான் வரதுக்கு முன்னாடி அவங்க ரெண்டுபேரும்தான் ஒண்ணா இருப்பாங்களாம். ஒருவாட்டி ஸ்டா·ப்ரூமிலே நாலஞ்சுபேர் உங்கம்மாவைப்பத்தி கேவலமா பேசி சிரிச்சுட்டிருந்தாங்க. சாரதாம்மாவும் சேந்து சிரிச்சிருக்காங்க. அப்ப அதைக் கேட்டுட்டு உங்கம்மா உள்ள வந்தாங்களாம். சாரதாம்மா அப்டியே வியர்த்திட்டாங்க... அப்றம் உங்கம்மாவை பாத்து கண்ணீர் விட்டு அழுதிருக்காங்க. ஆனா உங்கம்மா அப்றம் அவங்ககூட பேசவே இல்லை. ஒம்பதுவருஷம் பேசலைன்னா பாத்துக்கோ. சாரதாம்மாவோட பையன் பைக் ஆக்ஸிடெண்டிலே செத்துப்போனப்ப எல்லாரும் திரண்டு போனாங்க. உங்கம்மா போகலை. நான்கூட சொல்லிப்பாத்தேன். பேசாம இருந்திட்டாங்க. இத்தனைக்கும் அவங்க அந்த பையனை தூக்கி வளத்திருக்காங்க... அந்த அளவுக்கு மனசிலே கசப்பு...”

நான் அந்தச் சொற்களுக்கு சம்பந்தமில்லாத தூரத்தில் இருந்தேன். சந்திராவின் சகஜத்தன்மை எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதிலும் அந்த நல்ளிரவில்...

”சின்ன அவமானங்களா? ஒருவாட்டி சந்தானம் சார்ட்டே லைப்ரரியிலே என்னமோ கத்தினாங்க.அவர் வேகமாக ஓடிப்போனார்.நான் போய் என்ன ஜிஎஸ்னு கேட்டேன். ஒண்ணுமில்லை, எங்கூட படுக்கணும்னு கேக்கிறார். புருஷன் இல்லாத பொண்ணுன்னா பொதுச்சொத்துதானே யாரு வேனும்னாலும் அப்ரோச் பண்ணலாமே–ன்னு சொன்னாங்க. நான் அப்டியே கைய பிடிச்சுட்டு அழுதிட்டேன் ...”

நான் ”சந்திரா நான் உன் கிட்ட பேசணும்...” என்றேன். அவளுடைய சகஜத்தை உடைத்து உள்ளே போவது கடினமாக இருந்தது.மவள் சொல்வது எதுவும் என் மனதில் பதியவில்லை

”ஏன்?” என்றாள், சாதாரணமாக.

”என்னால ஒண்ணுமே யோசிக்கமுடியலை..பித்து பிடிச்சதுமாதிரி இருக்கு” சந்திரா எந்த உணர்ச்சியும் இல்லாமல் மறுபக்கம் அதைக் கேகிறாள் என்று எனக்குத் தோன்றியது. அவளைக் கொந்தளிக்கச் செய்தாகவேண்டும். அவளில் ஏதாவது ஓர் உணர்ச்சியை எழச்செய்தாகவேண்டும்

அம்மாவிடம் சொன்னதைச் சொல்லலாமா என்று எண்ணினேன். ஆனால் அது சந்திராவுக்கு அதிர்ச்சி அளிக்கும். அவள் வெறி கொள்ளக்கூடும். அப்போது எனக்கு அவளிடம் தேவைபப்ட்டது மென்மையான ஆதரவான முத்தங்கள்…கொஞ்சல். ‘என்ன கண்னா என்ண்டா’ என்று ஒரு மென்குரல் கிணுங்கல்.. நேற்றிரவெல்லாம் அவள் குரலுஅன் சல்லபித்திருந்தேன். அந்தக்குரலை முத்தமிட்டேன், அந்தக்குரலை புணர்ந்தேன். இன்று அது எனக்கு தேவைபப்டது. தாகநீர் போல, உயற்ற் மருந்து போல

”எனக்கு மனசே சரியில்லை சந்திரா” என்ன அபத்தமான சொல்லாட்சி. சினிமா வசனம் போல. ஆனால் மனம் வேறு எங்கோ கவனம் கொள்கையில் பழகிப்போன சொற்களைத்தான் சொல்கிறது. அவள் கேட்கப்போகிறாள். இதோ…என்ன கண்ணா…என்ன சொல்லு…எங்கிட்ட சொல்லு நான் உன் சந்திராதானே…ம்ம்ம்.

”நீ ரொம்ப ஜாஸ்தி பண்ணிக்கிறே” என்றாள் சந்திரா கறாராக
”டெத்னா பெரிய விஷயம்தான். ஆனா ஹி இஸ் அல்ரெடி ஸிக்…”

”இல்ல சந்திரா…நான்–”

சந்திரா ”சுசி எங்க இருக்கா?”என்றாள்.

நான் ”அங்க” என்றேன். என் கொந்தளிப்பு ஒருகணம் உறைந்து பின் அபப்டியே இறங்கி அடங்கியது.

”அங்கயா?” என்றபின் ”அவளும் கூடவே வந்தாளா?”என்றாள்

”ம்ம்”

எல்லாவற்றையும் ஒரே கணத்தில் சந்திரா கண்டுவிட்டாள் என்று உணர்ந்தேன். என் அழுகை நுரை அடங்குவதுபோல உள்ளுக்குள் அமிழ்ந்தது. நாக்குக்கு அடியில் மெல்லிய கசப்பு மட்டும் இருந்தது

”என்ன சொல்றா?” என்றாள் சந்திரா. அவள் கண்களை என்னால் கற்பனையில் காணமுடிந்தது.

”ஒண்ணும் சொல்லலியே” என்றேன். என் கசப்பு வளர்ந்தது.

”சச் எ நைஸ் கேர்ல்” என்றாள்.

புல் ஷிட் ! புல் ஷிட் ! புல் ஷிட் ! புல் ஷிட் ! புல் ஷிட் ! பாவனைகள்...இத்தனை பாவனைகளுடன் உலகில் உள்ல அத்தனைபெண்களையும் பெறோல் ஊற்றிக்கொளுத்தவேண்டும். பிச்...டாம் பிச்

”என்ன பேசாம இருக்கிறே?”

”ம்ம்ஹ¥ம்”

”சுசி உனக்கு இப்ப பெரிய பலம், இல்ல?”

நான் பெருமூச்சு விட்டேன். ”சரி சந்திரா, ஐ யம் ஸ்லீப்பி...ஸீ யூ”

”சுசிகிட்ட பேசினியா?” சந்திரா விட விரும்பவில்லை.

”சாயங்காலம்தானே வந்தேன்?”

”இப்ப?”

”இல்லியே”

”அம்மாகிட்ட பேசின பிறகு?”

”இல்ல”என்றபின் சட்டென்று ஐயம் கொண்டு ”அம்மா கூப்பிடாங்களா?”என்றேன்.

”ஆமா...”

‘எப்ப?”

”ஒன் அவர் பேக்...ஷி வாஸ் டயர்ட்”

”என்ன சொன்னாங்க?” என்றேன். எனக்குள் கடலோசை எழுவதைக் கேட்டேன்.

”ஒண்ணும் சொல்லல்லை... பொதுவாத்தான் பேசினாங்க....ஒண்ணுமே புடிக்கலை செத்துப்போகணும்போல இருக்கு அப்டீன்னாங்க...நான் சமாதானபப்டுத்தினேன்”

”அப்டியா?”

”நீ அம்மாகிட்டே என்ன சொன்னே?”

”ஒண்ணும் சொல்லலியே” அந்தச் சாதாரணக்குரலில் நான் அலசி அலசிந்தேடினேன், காலிபெப்டியை துழாவுவதுபோல.

”ஜிஎஸ் இஸ் நாட் நார்மல்...”

”ம்ம்” என்ன சொல்கிறாள்....ஆனால் ஏதோ ஒன்று ஒலிக்கிறது.

”நான் நாளைக்கு அங்கே வரேன்...உங்கம்மாகிட்டே பேசணும்...இன்னைக்கு சாயங்காலம்தான் எனக்கு விஷயமே தெரியும். உங்க ரெண்டுபேர் மொபைலிலயும் கூப்பிட்டா பதில் இல்லை”

”ம்ம்” என்றேன் ”பை”

”பை..ஸீ யூ”

நான் படுத்துக்கொண்டேன். அம்மா சந்திராவை ஏன் கூப்பிட்டாள்? என்ன பேசினாள்? அதிலும் இந்த நள்ளிரவில். மின்னலில்மலை தெரிவதுபோலா எனக்கு அந்த விஷயம் ஒரே கணத்தில் முற்றிலுமாகப் புரிந்து உடல் உதறிக்கொள்ள எழுந்து அமர்ந்தேன்.

அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது என சந்திராவுக்குப் புரிந்துவிட்டது. ஆகவேதான் அவள் அம்மாவுக்காகப் பேசுகிறாள். நிதானமாக இருக்கிறாள். உற்சாகமாகக்கூட இருக்கிறாள். என்னுடன் விளையாடுகிறாள். இப்போது அவள் நினைப்பது சுசியைப்பற்றி மட்டும்தான். அம்மா அறிந்துகொண்டது அவளுக்கு பெரிதாகத் தெரியவில்லை.

ஏனென்றால் அவள் நெடுங்காலமாக நெஞ்சுக்குள் மிக ரகசியமாக ஆசைப்பட்ட ஒன்று நடந்துவிட்டது. பல்லாயிரம் முறை அவளுக்குள் அவள் சொல்லிப்பார்த்து நிகழ்த்திப்பார்த்து அஞ்சி அஞ்சி பின்பு ரகசியமாக ரசிக்க ஆரம்பித்துவிட்ட தருணம் தாண்டிவிட்டது. சந்திரா அம்மாவின் மீது தன் வெற்றியை நிகழ்த்திவிட்டாள். ஆம், அதுதான். அதுதான். நான் மீண்டும் படுத்துக் கொண்டேன்.

[12]

காலையில் நான் எழுந்தபோது நன்றாகவே விடிந்திருந்தது. சன்னல் வழியாக வந்த ஒளி நான்கு சட்டங்களாக தரையில் சரிந்துக் கிடந்தது. தூக்கம் விழித்ததும் தூங்குவதற்கு முந்தைய கணம் ஏற்பட்டிருந்த அதே எண்ணம் காத்திருந்தது போல வந்து ஒட்டிக்கோண்டு நீட்சி பெறுவதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். சந்திராவும் அம்மாவும்..... ஆனால் நேற்றிரவு நான் கொந்தளிப்புடன் தூங்கினேன். அப்படியே கட்டிலில் விழுந்து குமுறும் மனதை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படியே தூங்கிவிட்டேன். சிலகணங்களில்...

ஆச்சரியமாக இருந்தது, சுசி நீ வந்தபின்னர் நான் ஒருநாள்கூட நிம்மதியாக தூங்கியதில்லை. ஆனால் கொந்தளிப்பின் உச்சியில் கரிய நீரில் மூழ்கிப்போகும் கற்சிலைபோல தூக்கத்துக்குள் மூழ்கி அடித்தட்டுக்குப்போய் அசைவிலாது படிந்துவிட்டேன். காலையில் எழுந்தபோது நான் அறிந்த அந்த நிம்மதியும் தெளிவும் தூக்கத்தால் வந்தது. எல்லாமே துல்லியமாக,சாதாரணமாக இருந்தன அப்போது. நேற்றிரவின் எல்லாக் கொந்தளிப்புகளும் அபத்தமாக தெரிந்தன

சுசி, தூக்கத்தை மூதேவி என்பது நம் மரபு. அவளை மரணத்தின் தங்கை என்பார்கள். ஆனால் அவளைப்போல கையில் அமுதத்துடன் வரும் பிறிதொரு தேவதை உண்டா? அவளை வழிபடாத அவளை இறைஞ்சாத ஆத்மாக்கள் உண்டா? சுசி, எல்லா மானுடரும் ஒரு தருணத்தில் மரணத்துக்காக யாசிப்பவர்கள் தானே?

தலையணையை மடியில் வைத்துக்கொண்டு யோசித்துக்கொண்டே இருந்தேன். அப்படியானால் நான் அடைந்த அத்தனை உணர்ச்சியலைகளும் என்ன? பாவனைகள்தானா? நானே விரும்பி அவற்றை எனக்குள் உருவாக்கிக் கொண்டிருக்கிறேனா? துன்பத்தை

ரசிக்கும் ஆழத்தின் ஆழம் போடும் நாடகம்...

எழுந்து கண்ணாடியில் என்முகத்தைப்பார்த்தபடி முகம் கழுவினேன். முகத்தில் தேங்கிக் கனத்திருந்தவை சொட்டி வடிந்து முகம் அத்தனை துல்லியமாக இருந்தது. இந்த நிம்மதிக்காகவே அத்தனை நெருக்கடிகளையும் அடையலாம் என்று எண்ணி புன்னகைசெய்தேன்

அம்மா வந்து அறை வாசலருகே நின்றாள். நான் திரும்பவில்லை. ஆனால் அவளை என் உடலெங்கும் உணர்ந்தேன்.

”டேய் இன்னிக்கு நீ அங்க போறதானா நானும் கூடவே வரேன்”

நான் திரும்புவதற்குள் அம்மா சென்று விட்டிருந்தாள். ஒன்றும் புரியாமல் நான் விழித்து நின்றேன். அவள் குரலைக் கேட்டேனா, இல்லை அந்த எண்ணங்கள் மட்டும் என்னை வந்தடைந்தனவா?

குளித்து உடைமாற்றிக் கிளம்பி கார் அருகே சென்றபோது அம்மா வேகமாக வந்து காரில் ஏறிக்கொண்டாள். நான் காரை எடுத்தேன். ஸ்டீரிங்கை மெல்ல வளைத்தபடி அம்மாவையே உடலால் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது நான் அம்மாவிடம் எப்படிப் பேசுவது? அம்மா மிக மிகத்தொலைவில், நான் இதுவரை அறிமுகம் செய்துகொள்ளாத ஒரு பெண்மணியாக, என்னருகே அமர்ந்திருந்தாள்

காரை மெதுவாக ஓட்டினேன். பின் இருக்கையில் இருந்து வெளியே பார்த்துக்கொண்டு வந்தவள் நெடுநேரம் மெல்லச் செருமினாள். பேசமுற்பட்டு குரல் எழாத செருமல். என் உடல் அதிர்ந்து கன்னத்தில் புல்லரித்தது. சற்று நேரம் கழித்து ”அருண்” என்றாள்

என் கண்ணில் கண்ணீர் முட்டிவிட்டது. ஆனால் நான் காரை ஓட்டுவதிலேயே கவனத்தைக் குவித்திருந்தேன். அப்போது என்னை தொகுத்துக்கொள்ள அந்தச்செயல் எனக்குத்தேவைப்பட்டது.

”சரிடா....புரியுது...” என்றாள் அம்மா. ”ஆனா நீ பொம்பிளைங்களையும் புரிஞ்சுகிடணும்... தன் புருஷன் தனக்குமட்டும்தான் வேணும்னு பொண்ணு நெனைக்கிறதில தப்பே கெடையாது...”

நான் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால் என் உடலே காதாகி அவளைக் கேட்டேன். அம்மாவின் குரல் எத்தனை இனியது என அப்போதுதான் தோன்றியது. ஆழ்ந்த, கனத்த, அதேசமயம் மென்மையான பெண்குரல். அவளுடைய மாணவர்கள் அவளைக் கொண்டாடியது அதனால்தான் போலும்.

”சுசி ஒரு தேவதைடா...அவளை விட்டுராதே...உனக்கு அம்மா தோழி எல்லாமே அவதான்... அவகிட்ட அப்டியே ஒப்படைச்சிரு...அவகிட்ட அவ பெத்த குழந்தைமாதிரி இருந்திரு...உனக்கு ஒரு கொறையும் வராது. அம்பாள் மாதிரி உன்னை அவ பாத்துக்கிடுவா”

நான் என் கண்ணில் வழிந்த கண்ணீரை துடைக்காமல் வண்டியை ஓட்டினேன். அம்மா மந்திரம் சொல்பவள் போல ”உன்னைப்பத்தி எனக்கு என்னைக்குமே பயம்டா...நீ ரொம்ப இமோஷனலானவன்...இப்ப இவ வந்ததுக்குப்பிறகுதான் என் மனசு தெளிஞ்சிருக்கு...இவ உன்னை பாத்துக்குவா...”

நான் மூக்கு உறிஞ்சும் ஒலி கேட்டு அம்மா என் தோளை தொட்டாள் ”என்

ராஜால்ல? என் செல்லம்ல? அழக்கூடாது..நீ ஒரு தப்பும் பண்ணல்லை...நீ நல்லவண்டா...அம்மாக்கு நீ எப்பவுமே நல்லவன்....ஆம்பிளையா இரு...”

நான் ஸ்டீரிங்கைப்பிடித்த கையை விட்டுவிட்டு கண்களைத்துடைத்துக்கொண்டேன்.

”’நடந்தது நடந்தாச்சு. விட்டிரு...விதீன்னு நெனைச்சுக்கோ...எல்லாத்தையும் நாமளே செய்றதில்லை. பலவிஷயங்கள் எப்டியோ நடந்திடுது...சரி அதையெல்லாம் இனிமே நெனைச்சிட்டே இருக்காதே...”

நான் மூச்சை இழுத்து இழுத்து விட்டேன். பவர்ஸ்டீரிங் இத்தனை இறுக்கமாக எப்படி ஆனது என்று எண்ணிக்கொண்டேன். சட்டென்று ஓர் எண்ணம் . கேட்கலாமா என்று எண்ணினேன். சந்திராவுடன் என் உறவைப்பற்றி அம்மாவுக்கு ஊகம் இருந்ததா?

ஆனால் அம்மாவிடம் மீண்டும் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசவே என்னால் முடியாது என அப்போது உணர்ந்தேன். இனி ஒருபோதும் என்னால் அம்மாவை நெருங்க முடியாமல் போகலாம். இனி என்னுடன் அவள் உறவுகள் சரியாகிவிடும். ஆனால் அவள் எனக்கொரு அன்னியப்பெண்ணாக ஆகிவிட்டிருப்பாள். அன்னியத்தன்மையின் உபச்சாரம் மூலம் எல்லாம் சுமுகமாக ஆகும்....

நான் நேற்று அம்மாவிடம் சொல்லியவற்றுக்காக அப்போது என்னையே சபித்தேன். பற்களைக் கடித்துக்கொண்டு ஸ்டீரிங்கை அழுத்திப் பற்றினேன். நேராக காரைக்கோண்டுசென்று எதிலாவது மோதிவிடவேண்டும் என்ற வெறி எழுந்தது. எனக்கு எது மிக மிக

முக்கியமோ அதை எப்போதைக்குமாக இழந்துவிட்டேன். நான் அம்மா மடிவிட்டு மானசீகமாக நீங்காத பிள்ளை….ஆனால்…

கார் தெருவுக்கு வந்ததும் நான் நிறுத்தி திரும்பிவந்து கதவைத்திறந்தேன். அம்மா மிக இலகுவாக இருந்தாள். முகம் பிரகாசமாக இருந்தது. நான்தான் மிக அப்பால் எங்கோ நின்று எரிந்துகொண்டிருந்தேன். இரண்டு மணிநேரம் முன்னால் எல்லாவற்றையும் உதிர்த்துவிட்டு புதிதாக நின்றவன் நான் என்பது நம்ப முடியாத ஒன்றாக இருந்தது.

அம்மா இறங்கி தெருவைப்பார்த்தாள். ”என்னடா இப்டி இருக்கு இந்த எடம்? ஸ்லம் மாதிரி?”

”அப்பாவுக்கு கடைசி காலத்திலே வேலை இல்லல்ல?”

அம்மா பேசாமல் நடந்தாள். தெருவே குண்டும் குழியுமாக சாக்கடை வழிந்து கிடந்தது. அம்மா அவளுடைய குதி உயர்ந்த செருப்புடன் கால் ஊன்ற முடியாமல் தடுமாறினாள். கால்தடுக்கியபோது நான் அவள் தோளைப் பிடித்துக் கொண்டேன். பின் கையை எடுத்தபோது அம்மா அவள் கையை என் கைமீது வைத்து என் கையை பற்றிக்கொண்டாள்.

நான் அதிர்ச்சியும் கூச்சமுமாக கையை பின்னுக்கு இழுப்பதைப்பற்றிய எண்ணத்துடன் ஆனால் கையை அவள் பிடிக்குவிட்டுக்கொடுத்து நடந்தேன். அம்மாவுக்கு பிறர்தொடுவது பிடிக்காது. நான்கூட அவளை தொடுவதில்லை. அந்த தடையை முதற்கணத்திலேயே உடைத்தது நீதான் சுசி.

அம்மா என் கையை அவள் கையிலேயே வைத்திருந்தாள். ஈரமான உருண்ட மெத்தென்ற விரல்கள். படி ஏறும்போது நான் அந்தக் கையை இறுகப்பிடித்து ”இந்த வழி” என்றேன். அதன்பின் என் பிடி திடமானதாக ஆகியது. வராந்தாவில் யாருமில்லை. ஒரு குழந்தை சிறுநீர் கழித்த ஈரத்தடம் மட்டும் தெரிந்தது.

கதவு ஒருக்களித்து திறந்து கிடந்தது. நீயும் சுபாவும் ராணியும் அமர்ந்து எதையோ கத்தரித்து தாளில் ஒட்டிக்கொண்டிருந்தீர்கள். பாயில் சித்தி சுவருக்கு திரும்பிப் படுத்திருந்தாள். உங்கள் பேச்சுக்குரல் ஒலித்தது. என் நிழல் கண்டு நீ எழுந்து சுடிதார் துப்பட்டாவை எடுத்துப் போட்டுக்கொண்டு ”ஏன் லேட்?”என்றாய். ராணி
பார்த்து ”வாண்ணா”என்றாள்

அப்போதுதான் நீ பின்பக்கம் நின்ற அம்மாவைக் கண்டாய். அரைக்கணம் பிரமித்து, உடனே மலர்ந்து, ஆச்சரியத்துடன் எழுந்து ”அத்தை!”என்றாய்

அம்மா ஒரு கணம் திகைத்தபின் விடுவிடென்று நேராகச்சென்று சித்தி அருகே அமர்ந்துகொண்டாள். சத்தம் கேட்டு எழுந்து அமர்ந்த சித்தி ஒன்றும்புரியமால் ஏதோ சொல்லவந்ததுமே எல்லாவற்றையும் புரிந்ந்துகொண்டு கைகளால் வாயைப்பொத்திக்கொண்டாள். கண்கள் பெருமி வழிந்தன.

அம்மா சித்தியின் முழங்கால்மேல் கையை வைத்தாள். சித்தி கன்ணீருடன் ”வந்திட்டீங்களா? ஒரு தடவ பாக்கணும்னு ஆசைப்பட்டார். உங்க காலில விழுந்து மன்னிப்புகேக்கணும்னு சொல்லிட்டிருந்தார்... ” என்றாள். சுபாவும் ரானியும் அழ ஆரம்பித்தார்கள்.

அம்மா மெல்ல தலைகுனிந்து உதடுகளை உள்ளே மடித்து அழுகையை அடக்கினாள். சித்தி ”மகாராணிமாதிரி இருக்கீங்கம்மா….அந்த மனுஷனுக்கு ஏதோ புத்திகெட்டுபோய் என்னமோ செஞ்சிட்டார்… அதெல்லாம் பூர்வஜென்மத்துக்கொறைன்னு நெனைச்சுங்குங்கம்மா….இப்ப போய் சேந்துட்டார்… செத்துப்போனவங்களை சபிக்கப்படாது… பெரிய மனசு பண்ணி மன்னிச்சிருங்கம்மா தாயீ”என்று அம்மாவின் கையைப்பிடித்தாள். அம்மா அதற்குமேல் தாளாமல் உடைந்து அழுதபடி சித்தியின் மடியில் விழுந்தாள்.

ராணியும் சுபாவும் அழுதபடி சுவரை நோக்கி திரும்பிக்கொண்டார்கள். என் கண்களிலும் கண்ணீர் வழிந்துகொண்டிருப்பதை உணர்ந்தேன்.

நீ கண்ணிருடன் என்னைப்பார்த்து வெளியே வா என்று உதடு அசையாமல் சொல்லி வெளியே சென்றாய். நானும் வெளியே வந்தேன். நீ என்னிடம் ”என்ன ஆச்சு?”என்றாய்.

”அம்மாகிட்டே நான் எல்லாத்தையும் சொல்லிட்டேன்”என்றேன்.

”எதை?”என்றாய், உன் புருவமத்தியில் சுருக்கம்.

”சந்திரா பத்தி”

நீ ஆச்சரியம் அடையவில்லை என்பது எனக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது. நகங்களையே பார்த்தாய். ஏதோ யோசித்து உள்ளே எட்டிப்பார்த்தாய். மௌனம் சில கணங்கள் கனத்து நீண்டது

பின்பு நீ சட்டென்று , ”அது அத்தைக்கே கொஞ்சம் தெரிஞ்சிருக்கும்போல” என்றாய்.

”எப்டிச்சொல்றே?” என்றேன்

”பொம்பிளைங்களுக்கு தெரியாம இருக்காது...ஆனா அதை வேணும்னே நம்பாம இருந்திருப்பாங்க.. அதைத்தெரிஞ்சுதான் என்னை வரச்சொல்லி எழுதிட்டே இருந்திருக்காங்க.”

நான் பெருமூச்சுவிட்டேன். ஆம், அதுதான்.

”இவங்களை வேற எங்கியாவது கொண்டு குடிவைக்கணும்னு நெனைச்சேன். பரவாயில்ல இப்ப அத்தையே வந்திட்டாங்க.நம்ம வீட்டுக்கே கூட்டிட்டுபோயிருவோம்” என்றாய்.

”ஏன்?”

”ஏன்னா? இவங்களை மாமா கல்யாணம் பண்ணிக்கலை இல்ல? இருந்தவரை அவரு கூடவே இருந்தார். இப்ப தனியா இருந்தா ஊரு வாய் சும்மா விடுமா? அந்தப் பொண்ணுகளுக்கு இங்க இருந்தா கல்யாணமே ஆகாது...”

நான் என் மனஉருக்கத்தை அபத்தமான ஒரு நகைச்சுவையாக ஆக்கினேன் ”...பரவால்ல தமிழ் சீரியல் பாக்கிறதனால பிரயோஜனம்

இருக்கு…”

நீ அதை ஓர் உதட்டுச் சுழிப்பால் விலக்கி ”நீயே அத்தைட்ட சொல்லிடு…இனிமே நீ சொல்ற எதையுமே தட்டமாடாங்க” என்றாய்.

நான் ”ஏன்?” என்றேன்

நீ வேறெங்கோ பார்த்து இழுத்தகுரலில் ”…இப்பதான் நீ ஆம்பிளை ஆயிட்டியே” என்றாய்

சுசி அந்தக்கணத்தில் நீ சொல்லாத – நான் புரிந்துகொண்ட – எத்தனை உரையாடல்கள். நான் அந்த நிமிடத்தின் உக்கிரமான அழுத்தத்தை வெல்ல நெகிழ்ச்சியை உருவாக்கிக் கொண்டேன். அதை வளர்த்தெடுத்தேன்.

”சுசி எனக்கு இப்ப என்ன தோணுது தெரியுமா?”

”ம்?”

”அப்டியே உன் காலிலே விழுந்து கும்பிடணும்னு….நான் உன்னைப்பத்தி நெனைச்சதெல்லாமே தப்பு …நீ ஆயிரம் கொழந்தைகளுக்கு அம்மா மாதிரி இருக்கே”

நீ சிரித்தாய். பின் முகம் மாறி ”அத்தை என்ன சொன்னாங்க?”என்றாய்

”எதைப்பத்தி?”

”சந்திராவைப்பத்தி”

”விட்டுடுன்னாங்க...”

”ம்?” என் கண்களை நீ பார்க்கவில்லை.

”நான் சரின்னேன்”

நீ சுற்றுமுற்றும் பார்த்தாய் பின்பு சட்டென்று சிறுமிபோல எம்பி உன் சிறிய மார்புகள் என் மார்பில் தோய்ந்து ஏற என்னை ஆரத்தழுவி ”மை காட்! மை காட்!”என்றாய். உன் கண்ணீரை அத்தனை அருகே கண்டேன். உன்னுடைய சிறிய வாயின் வெம்மையான நறுமணத்தை உணர்ந்தேன். உன் இடையை சுற்றிப்பிடித்து உன் பின்பக்கத்தை கைகளால் கவ்வி என் உடலுடன் உண்ணை இறுக்கிக் கொண்டு உன் உதடுகளை அழுத்தமாக முத்தமிட்டேன்.

உனக்குள் புகுந்துவிடுவது போன்ற முத்தம். உதடுகளை இணைத்து இரு உடல்களையும் ஒன்றாக ஆக்கிவிடுவது போன்ற முத்தம். பின்பு நீ மூச்சுத்திணறி மெல்ல திமிறினாய். அந்த திமிறல் என்னை வேகம் கொள்ளச்செய்தது. உன் உதடுகளை கவ்விக்கொண்டேன்.

சுசி, அப்போது ஓர் எண்ணம் மின்வேகத்தில் தோன்றிச்சென்றது.

சந்திராவின் உதடுகளைவிட மிகச்சிறியவை உன் உதடுகள் என. என் பிடியும் இதழ்களின் கவ்வலும் தளர்ந்தன. அந்த தளர்வை உணர்ந்து நீ உன் கண்களை மேலேற்றினாய். அந்தப்பார்வையைக் கண்டதும் நான் பிடிநழுவிப்பாதாளத்தில் விழுபவனைப்போல உணர்ந்து மீண்டும் உன்னைப்பற்றினேன். உன் இதழ்களை உயிரர் காக்கும் மருந்தை உண்பவன்போல கவ்விக்கோண்டேன். .

சட்டென்று நீ வலுவாக உதறி என்னை விடுவித்துப் பின்னால் நகர்ந்தாய். நல்லவேளையாக முச்சந்திக்கு நிகரான அந்த வராந்தாவில் யாருமில்லை. ஆனால் அப்போது நான் முச்சந்தியில் வைத்து உன்னை முத்தமிட விரும்பினேன்.

நீ கண்களை கீழே தழைத்திருந்தாய். என் உயரத்திலிருந்து பார்க்கையில் நீ அரைவிழி மூடியிருப்பதுபோல இருந்தது. நான் உன் கையைப்பிடித்தேன். ”நோ”என்று பின்னால் நகர்ந்து ”திஸ் பிளேஸ்….” என்றாய்.

நான் உன்னையே பார்த்தேன். மெல்லிய கழுத்தை, சிறிய செப்புத் தோள்களை, பறந்த சிறுகுழல்பிசிறுகளை, கன்னத்தில் எழுந்த சின்னஞ்சிறிய பருவை… உன் சிறிய உதடுகள் ஈரமும் செம்மையுமாக தளதளத்தன…

நான் பெருமூச்சுடன் உள்ளே போகத்திரும்பினேன். அப்போது நீ மெல்ல அசைந்தாய். அந்த அசைவில் நான் என் கட்டுப்பாட்டை இழந்து உன்னை அப்படியே அள்ளிக்கொண்டு சுவரோடு சேர்த்து வெறியுடன் முத்தமிட ஆரம்பித்தேன். குரல்வளை அழுந்தித்தட்டுப்பட்ட கழுத்தில் கன்னங்களில் உதடுகளில்….நீ திமிறிக்கொண்டே இருந்தாய். மூச்சுமுட்டுபவளைப்போல, நிலைகொள்ளாதவளைப்போல…உன் திமிறல்கள் கைக்குள் திமிறும் புறாபோல என்பிடிக்குள் மென்மையாக

முரண்டன. அந்த அசைவே என்னை என்னை மறக்கச்செய்தது....சுசி என் முதல் காம அனுபவம் அது என்று சொல்வேன். நான் அப்போதுதான் என்னை சில கணங்கள் என்னை முற்றிலும் மறந்திருந்தேன்....

பின்பு நீ என்மீது ஒரு மெல்லிய சல்லாத்துணி போல படர்ந்துகோண்டாய். உன் சுயநினைவே இல்லாமலாகியது. சூழலும் சந்தர்ப்பமும் எதுவுமே தெரியவில்லை. ஆனால் நான் சுய உணர்வை அடைந்தேன். உன்னை விலக்கி உன் துப்பட்டாவை எடுத்து உன் தோளில் போட்டேன்.

ஆனால் உன் முகம் கொதித்துக்கொண்டிருந்தது. நீ ”ம்ம்”என்ற முனகலுடன் என்னை எம்பிப் பற்றிக்கொண்டாய். ”க்ம் திஸ் ஸைட்...”’ என்றாய் கிட்டத்தட்ட என்னை இழுத்துசென்றாய். அங்கே ஏராளமான மின்சார மீட்டர்பெட்டிகளுக்குக் கீழே பழைய பக்கெட்டுகளும் துடைப்பங்களும் ஒட்டடைபடிந்து கிடந்த ஒரு இடுக்குக்குள் என்னைக் கொண்டுசென்று இருகைகளாலும் அள்ளிப்பிடித்துக்கொண்டாய். முகத்தை தூக்கி சிறிய குமிழ் மூக்கு உணர்ச்சியால் சிவந்துஅசைய ”கிஸ் மீ” என்றாய்.

நான் உன்னை முத்தமிடும்போது பல கண்கள் என்னைப்பார்ப்பதாக உணர்ந்தேன். சுபா, ராணி...என்ன இது என்று என் அகம் பதைத்தது. ஆனால் நீ பிளாஸ்டிக்பொம்மை போல என் உடலுடன் உருகி ஒட்டிக்கொண்டாய். உன் கனமற்ற தொடைகளாலும் என்னைக்கவ்விக் கொண்டபடி ”ஐ வில் கில் யூ...ஐ வில் கில் யூ”என்று முனகி மேலும் மேலும் வெறிகொண்டாய். சட்டென்று மின்னதிர்ச்சி பட்டவள் போல என் இரு கன்னங்களையும் உன் கைகளால் பிடித்து நகங்களால் அழுந்தக்கிள்ளி உலுக்கி உலுக்கி பின் மெல்ல தளர்ந்து என் மார்பில் தொய்ந்து சரிந்து மூச்சுவாங்கினாய்

உன் கழுத்துக்குழி பதைப்பதை அதன் மீது வியர்வையுடன் உன் தங்கச்சங்கி சேர்ந்து மின்னுவதை குனிந்து பார்த்தேன். என் கன்னங்களில் உன் நகக்காயம் எரிந்தது. உன்னை விலக்கி உன் இதழ்களில் முத்தமிட்டு ”யாராவது பாத்திருவாங்க”என்றேன்

உன் கண்களில் பிறந்த குழந்தையின் கண்கள்போல மெல்லிய படலம் ஒன்று இருப்பது போல தோன்றியது. உன் உதடுகள் அப்போது சற்றே கனத்து சிவந்திருப்பவையாக, உன் கன்னங்கள் காய்ச்சலில் தகிக்கும் சருமத்தின் சிவப்புத்திட்டுகளுன் இருப்பவையாக தெரிந்தன.

”போலாமா?” என்றேன்

நீ மெல்ல ”ம்ம்” என்றாய்.

நான் ”ட்ரெஸ்லாம் கசங்கியிருக்கு” என்றேன்

நீ சுடிதாரின் டாப்ஸை கையால் நீவி இழுத்து விட்டாய். அப்போது உன் முலைக்கண்களின் கூர்மை தெரிந்து மறைந்ததைக் கண்டேன் என்கண்களைச் சந்தித்துப் புன்னகை செய்தாய். சுசி, அந்தப்புன்னகைக்கு இணையாக ஒரு புன்னகையை நீ ஒருபோதும் பூத்ததில்லை.

”கமான்” என்று நீ முன்னால்சென்றாய். நான் உன் பின்னால் வந்தேன். என் உடைகளில் ஒட்டடை ஒட்டியிருந்தது. வந்தபடியே அவற்றை துடைத்தேன். என் கன்னம் எரிந்தபடியே இருந்தது

நீ உள்ளே போனாய். நான் அரைக்கணம் கழித்து உள்ளே வந்தேன்.

அம்மாவையும் உன்னையும் அங்கேயே விட்டுவிட்டு நான் கிளம்பினேன். எரியும் கன்னங்களுடன் என் காரை சாலையில் ஓட்டிச்சென்றபோது சட்டென்று எனக்கு உற்சாகம் வந்தது. நெடுநாட்களுக்குப் பின் ஒரு பாடை சீட்டியடித்தேன். எனக்கு மிகப்பிடித்த பாடல் அது என்பதை சீட்டியடித்தபின்னர்தான் அறிந்தேன் .

”உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்

உன்னை உள்ளம் எங்கும் அள்ளித்தெளித்தேன்

உணர்வினில் விளையாடி வரும் உறவுகள் பலகோடி...

எஸ்.ஜானகியின் குரல் அந்தப்பாடல் அளவுக்கு இனிதாக எப்போதுமே அமைந்ததில்லை சுசி. அந்த வெட்கத்தையும் தாபத்தையும் கனிவையும் குழைவையும் ஜானகியன்றி வேறு யாரும் பாடிவிடமுடியாதென அப்போது தோன்றியது. அந்த பாடலே மனமெங்கும் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. குறிப்பாக உணர்வினில் விளையாடீ என்ற நீட்டலில் சுழன்றிறங்கும் அந்த மெல்லிய கீச்சிடல். பலகோடீ என்ற முனகலில் உள்ள இரு மெல்லிய வளைவுகள்...

நெடுநாளைக்குப் பின் என் அலுவலகம் சென்றேன். அலுவலகமே புதிய இடம்போல் இருந்தது. செல்லப்பன் என்னைப்பார்த்ததும் சற்று ஆச்சரியபப்ட்டபின் வணக்கம் சொன்னான். நான் என் கேபினுக்குள் சென்று அமர்ந்துகோண்டேன். கண்ணாடிமேஜை மீது டேபிள் வெயிட்டை கையால் சுழற்றிக்கொண்டே இருந்தேன்.

செல்லப்பன் கடிதங்கள் அடங்கிய கோப்பை என் முன் வைத்தான். நான் அவற்றைப்பார்க்க ஆரம்பித்தேன். மெல்ல மெல்ல வேலையில் அமிழ்ந்தேன். தீவிரமாக, வேறு நினைப்பே இல்லாமல் வேலைசெய்து கடிதங்களுக்கு பதில்களை நானே கணிப்பொறியில் டைப் அடித்தேன். அவற்றை உறைகளில் போட்டு விலாசம் ஒட்டினேன். செல்லப்பனைக் கூப்பிட்டு அவற்றை அனுப்பச்சொல்லிவிட்டு ஒரு காபிக்கும் சொன்னேன்

அப்போது செல் அடித்தது. சந்திராதான். நான் ஒரு கணம் தயங்கினேன். வேண்டாம் என்று தோன்றியது. ஆனால் அடுத்தக்கணம் பார்ப்போமே என்றும் தோன்றியது.

”எஸ்...”என்றேன்

”அருண்...நான் உங்கிட்ட பேசணும்” சந்திராவின் குரல் தீவிரமாக கறாராக இருந்தது.

”ம்ம்” என்றேன்

”எங்க இருக்கே?”

”ஆ·பீஸ்லே”

”ஐ ஸீ...குடும்பஸ்தனா லட்சணமா இருக்கப்போறே...இல்ல?”

நான் ஒன்றும் சொல்லவில்லை.

”ஸோ… என்ன புரோக்ராம்?”

”என்ன?”

”அம்மா என்ன சொல்றாங்க?”

”ஷி இஸ் தேர் நவ்”

சந்திரா ஆச்சரியத்துடன் ”’எங்கே?” என்றாள்

”அந்த வீட்டிலே. அவங்களை எங்க வீட்டுக்கே கூட்டிட்டுவர்ரதா இருக்கோம்…”

”ஜிஎஸ் ஒத்துக்கிட்டாங்களா?”

”நான் சொன்னா கேப்பாங்க” அந்தச் சொல் அவளுக்குப்புரிகிறதா என காது கூர்ந்தேன்

ஆம் சுசி, அவளுக்குப்புரிந்தது என்பதை செல்போனில் ஒலித்த மெல்லிய மூச்சே சொல்லிவிட்டது

”ஐ ஸீ….”என்றாள்

நான் பேசாமல் இருந்தேன்

”யூ …ஸில்லி பாஸ்டர்ட்” பாம்பு சீறுவது போன்ற ஒலி

சுசி என் மனம் அப்போது ஓர் உவகையை அடைந்தது. சந்திராவை நன் வெல்லும் இடங்கள் அவை.

”அப்ப நீ யோக்கியன் ஆயிட்டே…ம்ம்?” சந்திராவின் பற்கள் கெட்டித்துப்போயிருந்தன ”….ஸோ நீ பாவமன்னிப்பு எடுத்தாச்சு…டர்ட்டி பாஸ்டர்ட்…எஸ், யூ ஆர் எ பாஸ்டர்ட்…”

”எஸ்..ஐ யம்” என்றேன்

”வெளையாடுறியா? நீ என்னைத்தெரிஞ்சுக்கல்லை… பிளடி சன் ஆ·ப் எ பிச், உன்னைத்தேடிவந்து கொரல்வளையைக் கடிச்சு துப்பிடுவேன்….என்னை என்னன்னு நெனைச்சே? உங்கம்மாவுக்கு தெரிஞ்சா என்ன பண்ணிடுவா? ஐ வில் கம் மைசெல்ப் ஆண்ட் பிக் யூ அப்….பருந்து தூக்குற மாதிரி தூக்கிட்டுவந்திருவேன்…” சந்தற்றாவால் மூச்சிரைப்பு தாளாமல் பேசமுடியவில்லை.

நான் மெல்ல தளர்ந்து என் கால்களை நீட்டிக் கொண்டேன். சந்திரா தன் வேகத்தை மெல்ல மெல்ல அவளே அடக்கிக் கொண்டாள்.

”அந்தக் குட்டி எங்க இருக்கா?”

”சுசி..? சுசி அங்கதான் இருக்கா” நான் தடுமாறினேன்

சட்டென்று சந்திரா மூச்சை இழுப்பது கேட்டது. பின் மெல்லிய குரல் ”ஸோ, யூ •பக்ட் ஹெர்?”

நான் ஒரு எண்ணமும் இல்லாமல் அமர்ந்திருந்தேன்

”சொல்லுடா ....பாஸ்டர்ட், அவளையும் பண்ணிட்டியா?”

”இல்லை சந்திரா...அம்மா மேல சத்தியமா இல்லை...”

”சீ !எதுக்குப்போய் அம்மாவை இழுக்கிறே? வெக்கமில்லை உனக்கு?”

”சத்தியமா சந்திரா அப்டி இல்லை”’

”ஐ நோ...ஐ யம் அ டெவில்....டெவில் நோஸ் எவ்ரி திங்... ஐ நோ” சந்திரா கிட்டித்த குரலில் சொன்னாள் ”உன் குரலே போதும் எனக்கு, எல்லாம் தெரிஞ்சிரும் தெரியுமா?”

நான் மெல்ல கோபமானேன். அவள் என் மிக அந்தரங்கமான ஓர்

இடத்துக்குள் நுழைகிறாள். சுசி, அவளை நான் அப்போது வெறுத்தேன். அவளை அக்கணம் கொல்லக்கூட செய்திருப்பேன். அவள் இல்லாமலிருந்திருந்தால் இன்று என் அனுபவம் எத்தனை தூயதாக இருந்திருக்கும்....என் மனம் அந்த தருணத்தில் அப்படி திமிறி ஊசலாடியிருக்குமா என்ன? சுசி நான் எதை இழந்தேன் என்று அப்போது உணர்ந்தேன். ஒருபோதும் இழக்கக்கூடாத ஒன்று அது சுசி. நான் இழந்தது காதலை.... எனக்கு இனி உறவுகள்தான் சாத்தியம், ஒருபோதும் ஓருபோதும் ஒருபோதும் காதல் சாத்தியமல்ல..

என் தொண்டை ஏறி இறங்கியது. என் கண்கள் நிறைந்து கனத்திருந்தன. தன்னிரக்கத்தின் படிகளில் இறங்கி உலகிலேயே கடைக்கோடியனாக, ஜென்மஜென்மாந்தரங்களில் சாபம் பெற்றவனாக உணர்ந்து அங்கே இருந்தேன். மீண்டும் நான் தூய்மைக்குத் திரும்ப முடியுமா சுசி? உன் முதல் முத்தம் என் முதல்முத்தமாகவும் இருக்கும் ஒரு கணம் இனி வாய்க்குமா...சுசீ, அதற்காக நான் இனி ஒரு பிறவி காத்திருக்கத்தான் வேண்டுமா?

சந்த்ரா என் மௌனத்தைக் கவனித்து மெல்ல மெல்ல அடங்கினாள். பின்னர் ” நீ உடனே கௌம்பி வா” என்றாள்.

”அப்றமா வாரேன்...”

”நோ இப்பவே வரணும்...”

”நான் ஆ•பீசிலே இருக்கேன்”

”எந்த நரகத்திலே இருந்தாலும் நீ இப்ப வந்தாகணும்.. நான் உங்கிட்ட

பேசணும்”

”லுக் சந்திரா...”

”டாமிட் நீ வரப்போறியா இல்லியா? அப்ப நான் அங்க வரேன்...இப்பவே கெளம்பி வரேன்”

நான் பேசாமல் செல்லை என் மண்டையில அடித்தேன்

”லுக், என்னால தூங்க முடியல்லை.. நான் உன்னை இழந்திட்டே இருக்கிறதா எனக்குப்படுது...தட் மீன்ஸ் ஐ யம் டையிங்.... நேத்து ராத்திரி நான் தூங்கலை. உன்னை கூப்பிட்டுட்டே இருந்தேன்...”

”நான் தூங்கிட்டேன்....”

”மிஸ்டுகால் பாத்து எடுத்திருக்கலாம்லியா?”

”பாக்கலை...காலையிலேயே அங்க போய்ட்டேன்”

” அருண்...டூ யூ நோ? நேத்து ராத்திரி முதல் இப்பவரை நான் ரூம்ல அடைஞ்சு கிடந்து மாஸ்டர்பேட் பண்ணிட்டே இருக்கேன்.... உன் படத்தைப்பாத்து...ஸீ பாய், ஐ யம் கெட்டிங் மேட்.. கடவுள் படத்தை வச்சு உபாசனைசெய்ற மாதிரி... திரும்பத்திரும்ப..... ஐ யம் பர்னிங்... அருண் மை டியர்...நான் உன்னை மிஸ் பண்ணிட்டே இருக்கேன்...நீ அலையில ஏறி போய்ட்டே இருக்கே....ப்ளீஸ் கம்...டோண்ட் லெட் மி டை...ப்ளீஸ்

அருண் ப்ளீஸ் கம்...டோண்ட் லெட் மி டை , மை டியர்...”

சந்திரா கேவிக்கேவி அழுதாள். நான் அவளால் ஒருபோதும் அப்படி அழ முடியும் என்று எண்ணவில்லை. அழ அழ அவளுடைய தேம்பல்களும் விம்மல்களும் அதிகரித்தபடியே சென்றன ”ப்ளீஸ் கம்...ப்ளீஸ் கம்” என்று சொல்லிக்கொண்டே இருந்தாள்.

நான் மறுமுனையில் அந்த அழுகையை கேட்டபடி என் கண்ணெதிரே ஓடிய தெருவை, கண்ணாடிக்கதவை திறந்து செல்லப்பன் கொண்டுவைத்த டீயை நிழல் வடிவங்களாகப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

பின் முச்சுவாங்கும் ஒலி. பின்னர் ஆழ்ந்த மௌனம். நெடுநேரம். செல்லை வைத்துவிட்டாளா? ”சந்திரா?”

”ம்ம்”

”நான் வரேன்”

”ம்ம்”

நான் செல்போனை அப்படியே வைத்திருந்தேன். ஒலியே இல்லை. ஆனால் அவள் மறுமுனையில் இருப்பதை உணர்ந்தேன். சட்டென்று முத்த ஒலிகள். அணில்களின் கிச் கிச் போல. இலைநீர்த்துளிகள் மணலில் சொட்டுவதுபோல. முத்தம் முத்தம் முத்தம்....மூச்சிளைப்பு ஒலியும் தொண்டை அடைக்கும் ஒலியும் முத்த ஒலிகளும்...

நான் அந்த ஒலியால் தூக்கி எங்கோ கொண்டுசெல்லபப்ட்டதாக உணர்ந்தேன். பின் அவள் பெருமூச்சுவிட்டபோதுதான் நான் என் உடல் மொத்தமாக விரைத்து இறுகியிருப்பதைக் கண்டேன். மெல்ல தளர்ந்து நானும் பெருமூச்சுவிட்டேன்

”அருண்”

”ம்ம்”

”ப்ளீஸ்”

”ம்ம்”

”நான் லைனை கட் பண்ண மாட்டேன்…நீ அப்டியே செல்லை உன் கிட்ட வச்சுக்கோ….நை வில் கீப் த மொபைல் இன் மை செஸ்ட்”

”ம்ம்” என்றேன்

செல்லை அப்படியே என் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டேன். உயிருடன் துடிக்கும் ஓர் இதயத்தை சட்டைக்குள் வைத்துக்கொண்டிருப்பது போல இருந்தது.

[13]

நான் ஆபீசில் இருந்து கிளம்பும்போது சந்திராவின் வீட்டுக்குப்போகவேண்டும் என்றுதான் முடிவுசெய்திருந்தேன். பகல் முழுக்க நான் சந்திராவை சந்திப்பது பற்றி நினைத்துக்கொண்டே நிலையற்று ஆபீஸில் அமர்ந்திருந்தேன். தி ஹிண்டுவை அர்த்தமில்லாமல் எல்லா பக்கங்களையும் படித்தேன். எழுந்து சாலையோரம் வந்து நின்று போகும் ஆள்கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போதே சந்திராவைப் பார்க்கவேண்டுமென நினைத்து நேராக காரில் ஏறியபின் சாவியை திருப்பாமல் அங்கேயே அமர்ந்திருந்துவிட்டு திரும்பி வந்தேன். என் கன்னங்களின் மெல்லிய எரிச்சல் என்னை உன்னை நோக்கி திருப்பியது. சுசி, அப்போது நீ என்னுடன் இருந்துகொண்டே இருந்தாய். என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தாய்.

அப்படியே முழுநாளும் போயிற்று ஆறுமணிக்கு செல்லப்பன் கண்ணாடிக்கு அப்பால் இருமுறை தலைகாட்டினான். அந்தக் கணம் வரை நான் எதையுமே முடிவெடுக்கவில்லை. ஆனால் எழுந்ததும் என் மனம் முடிவெடுத்தது — சந்திராவிடம்தான். படிகளில் இறங்கும்போது அம்முடிவு உறுதியாயிற்று. ஆனால் மீண்டும் காரில் ஏறி தலையைச் சரிசெய்கையில் கன்னங்களின் கீறல்கள் நினைவுக்கு வந்தன.நான் காரை ஜோவின் குடிலுக்கு ஓட்டிச்சென்றேன்

ஜோ அவன் அறைக்கு கீழே பெட்டிக்கடையில் சிகரெட் பிடித்துக்கொண்டு நின்றிருந்தான். நான் மேலெ செல்வதைப்பார்த்து ”டேய்”என்றான். நான் நின்றபோது ஓடிவந்துசேர்ந்துகொண்டான். ”என்னடா? மறுபடியும் பிரச்சினையா?”

”பிரச்சினை அதேதான்” என்றேன். ”என்ன கீழ வந்து சிகரெட் பிடிக்கறே?

பாக்கெட் பாக்கெட்டா வாங்கி வச்சுக்குவியே?”

”குறைச்சிட்டேன்...விட்டுடலாம்னு இருக்கேண்டா”

”ஏன்?”

”ஏன் நாங்கமட்டும் சிகரெட் பிடிச்சு சாகணுமா? நீங்கள்லாம் எங்களுக்கு அட்வைஸ் பண்ணிட்டே நூறுவயசு வரை இருப்பீங்களா?”

”அது சரி, கதை அப்டி போகுது...” என்றேன் புன்னகையுடன்

”ரொம்ப போரடிச்சுபோச்சுடா...”என்றான். ”வா வேற எங்காவது போலாம்”

”எனக்கு மூட் இல்லடா” என்றேன்

”எனக்கு இருக்கு, அதான் எனக்கு முக்கியம்...”என்றான். ”கமான்...”

”சரி வா” என்று காரில் ஏற்றிக்கொண்டேன். கார் சென்றபோது அவன் ”அருண் உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்” என்றான்

”சொல்லு”

”நான் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்”

நான் அதை சரியாகக் கவனிக்கவில்லை. அவன் மீண்டும் சொன்னான் ” எனக்குமேரேஜுடா”

”போடா…” என்றேன்

”நிஜம்தாண்டா” என்றான்.

”அப்டியா? யார்ரா அந்த மக்கு?”

”பேரு மேகி. மார்கரெட் ஸ்டூலாண்ட். அமெரிக்காக்காரி…”

”மை குட்நெஸ்.. லவ்வா? எப்படா? ”

”ஆக்சுவலா லவ் ஆனது முந்தாநாள். நீ வந்துட்டு போனியே அதுக்கு மறுநாள்…இப்ப மோதிரத்தைக் குடுத்திட்டேன். அவளுக்கும் ஒரே பரவசம்…நான் அவகூட அமெரிக்கா போறேன்.”

”விஷ் யூ ஆல் த பெஸ்ட்”

”அங்கபோய் மியூசிக்லே ஏதாவது பண்ணணும்டா”

”கண்டதும் காதல்னு கேள்விப் படிச்சிருக்கேன். இது கண்டதும் கல்யாணம். நல்லாத்தான் இருக்கு…”

”நைஸ் இல்ல….? ஆனா கண்டதும் முதலிரவுன்னு சொன்னாத்தான் கரெக்ட்”

நான் சிரித்துவிட்டேன். ”பல்லாண்டு வாழ்க…, இவளை எப்டி அறிமுகம்செஞ்சுகிட்டே”

”இவ ஒரு பியானோ ஆர்ட்டிஸ்ட். காஸ்பல் மியூசிக்லே எக்ஸ்பர்ட். பாத்தோம் பேசினோம். ஒரே டேஸ்ட். ஒரே மனசு. அவ டிவோர்ஸி…நான் பிரம்மசாரி… அப்றம் என்ன?”

‘என்ன அப்றம்?”

”நாங்க செக்ஸ் வச்சுகிட்டோம். அப்பதான் எனக்கு அவதான் எனக்குபொருத்தமான பொண்ணுண்ணு தெரிஞ்சது. பக்கா… மகாபலிபுரத்திலே ஒரு ரிஸார்ட். மறுநாளைக்கு காலையிலேயே நான் பிரபோஸ் செஞ்சுட்டேன்…”

”இந்தியாவிலே இருந்துட்டு நீ இப்டி இருக்கே… லண்டன்ல பொறந்து வளந்தவ அப்டி இருக்கா…”

”யாரு சுசியா? நைஸ் கேர்ல்…”

நான் அவனிடம் அவளைப்பற்றிச் சொன்னேன். காரை மகாபலிபுரம் சாலையில் ஒரு ரெஸ்டாரெண்டில் நிறுத்தினோம். பீருக்குச் சொல்லிவிட்டு சாய்ந்து கொண்டோம்

”ஷி இஸ் ஏன் ஏஞ்சல்...டேய் , பாப் மார்லி மேலே சத்தியமா ஒண்ணு சொல்றேன்... அவளைவிட உனக்கு ஒரு ஜோடி கெடையாது.அவதான் உனக்கு....அவகிட்ட உன்னை அப்டியே குடுத்திடு..அவ சொல்றதைக்கேட்டு நடந்துக்கோ. அவளுக்கு சேவகம் பண்ணு...புள்ள குட்டி பெத்துக்கோ. உனக்கு இந்த ஜென்மத்திலேயே வீடுபேறு உண்டு”

”சந்திரா? அவளை எனன் பண்றது?”

”டேய் உன்னோட பிரச்சினை என்ன? ஈடி•பஸ் காம்ப்ளெக்ஸ். எனக்குத்தெரிஞ்சு அதுக்கு கிளாஸிக் உதாரணமே நீதான். யாரு கண்டா உன்னைய வச்சு நானே ஒரு நல்ல நாவல்கூட எழுதினாலும் எழுதிருவேன்...உனக்கு எல்லாமே அம்மாதான். அம்மாவைத்தவிர வேற ஒண்ணுமே தெரியாது. டீன் ஏஜ்ல் வழக்கமான செக்ஸ் ஆசை வந்தப்ப செக்ஸ¤ம் அம்மாமாதிரி ஒருபெண் கிட்ட வேணும்னு தோனிச்சு. இவ மாட்டினா...அவ்ளவுதான்”

”புல் ஷிட்.....” என்றேன் ”இதெல்லாம் வெஸ்டர்ன் தியரட்டிகல் கார்பேஜ்....”

”இது எல்லாரும் சொல்றதுதான்”

”யாருமே தாங்க ஒரு சைக்காலஜிகல் ஸ்பெஸிமன் மட்டும்தான்னு சொல்றதை ஒத்துக்கமாட்டாங்க... மனுஷமனசு அந்தமாதிரி சிம்பிள்

தியரிக்கெல்லாம் கட்டுப்பட்டதில்லை...”

”ஸோ...காம்ப்ளிகேட் ஆக்கியே தீருவேன்னு நிக்கிறே...” என்றான் ஜோ ”நீ அவளை விட்டுடா உனக்கு நல்லது. எனிவே நீ விட்டுத்தான் ஆகணும். விடவும்போறே. இப்ப விடா உனக்கு ஒரு தேவதை கிடைப்பா...”

”பட் ஐ லவ் ஹெர்... என்னால சந்திராவை அப்டி உதறிடமுடியலைடா...எனக்கு இப்பவும் அவ வேணும்னுதான் மனசுக்குள்ள தோணுது... அவளை இழந்தா நான் காலியாயிருவேன்னு தோணுதுடா....உனக்குத்தெரியாது இதோ இப்பகூட அவ என்னை கூப்பிட்டுட்டே இருக்கா”என்று செல்போனை தூக்கி மேஜைமேல் போட்டேன். அது ஒளிவிட்டு அதிர்ந்தது. ”அவதான்... எப்டியும் நூறு மிஸ்டுகால் இருக்கும்...” என்றேன்

”ஸ்டிரேஞ்ச்” என்றான் ஜோ

”டேய் இந்த செல் போன் மாதிரித்தான் என் மூளையும்.. ராப்பகலா அவளோட பேரு மின்னி அதிர்ந்துகிட்டே இருக்கு. ஒரு செகன்ட் ரெஸ்ட் கெடையாது. விட்டுடுன்னு சொல்றது ஈஸி. அம்மா சொல்றா, சுசி சொல்றா...ஆனா என்னால முடியல்லை..நீயாவது புரிஞ்சுகிடுவேன்னு உங்கிட்ட வந்தேன்..”

”அதெல்லாம் உண்மைதான். ஆனா நான் சொன்னேனே, சந்திரா கூட உள்ள உறவு இன்னும் கொஞ்ச நாளிலே முறிஞ்சிரும்...அது வேணாம்னு உனக்கு ஆயிடும்...”

”இல்லடா”

”டேய், டீன் ஏஜ்ல போட்ட சட்டைய இப்பப் போடுவியா? அது உனக்கு பொருந்தாதுடா. நீ வளந்துட்டே…அதைமாதிரித்தான். அப்ப உனக்கு அவ தேவைப்பட்டா…இனிமே கெடையாது. இப்ப நீ வளர்ந்தாச்சு. இனிமே உனக்கு தேவை அம்மா டைப் மனைவி கெடையாது. தோழி…. தேவையானா அம்மாவாகவும் ஆகக்கூடிய ஒரு நல்ல தோழி…அதான் சுசி….சும்மா போட்டு குழப்பிக்காதே”

”சும்மா ஸ்யூடோ தியரியா பேசிட்டிருக்காதே….. என்னால அவளை மறக்கமுடியும்னு தோணல்லை”

”இப்ப உன்கிட்ட மிச்சமிருக்கிறதெல்லாம் ஒரு குற்றவுணர்வு மட்டும்தான்… அவ மேலே ஆசைவச்சு அனுபவிச்சுட்டு தூக்கி எறிஞ்சிரக்கூடாதுன்னு நெனைக்கிறே..அவ தாங்கமாட்டான்னு நெனைக்கிறே…ஆனா ஒண்ணு தெரிஞ்சுக்கோ, உறவுகளிலே நாம விரும்பினாலும் விரும்பாட்டியும் ஒரு ‘யூஸ் ஆன் த்ரோ’ விஷயம் இருக்கு. நமக்கு தேவையான உறவுகள் மட்டும்தான் நிக்கும். மத்த உறவுகள் என்ன பண்ணினாலும் மெதுவா உதிர்ந்திரும்….முயற்சி பண்ணினா கொஞ்சநாள் நீட்ட முடியும். அவ்ளவுதான்…”

அவன் சொல்வது முழுக்க உண்மை என்ற எண்ணம் ஏற்பட்டது. ”அப்ப என்ன சொல்றே?”

”பேசாம இரு…என்னைப்பொறுத்தவரை லை•ப்ல முக்கியமான தாரகமந்திரம் இதுதான்.பேசாம இருக்கிறது. பொறுமையா என்ன நடக்கிறதுன்னு பாக்கிறது…. சும்மா இருந்தாலே போதும் காலப்போக்கில பெரும்பாலான பிரச்சினைகள் அதுவா

அணைஞ்சிரும்.....மனுஷங்களுக்கெல்லாம் வயசாகுதுடா...எல்லா மனுஷங்களும் கொஞ்சம் கொஞ்சமா செத்திட்டிருக்காங்க... பூமியில உள்ள எல்லாமே மாறிட்டிருக்கு, அழிஞ்சிட்டிருக்கு...இதிலே அப்டியே இருந்திட்டிருக்கிற விஷயம்னு ஒண்ணும் இல்லை....ஸோ நீ பாட்டுக்கு இரு. அவ கூப்பிட்டா பேசு...ஆனா தனியா போய் பாக்காதே... அப்டியே நாளடைவில அந்த உறவு இல்லாம ஆயிடும்”

நான் பெருமூச்சுவிட்டேன். செல் அதிர்ந்துகொண்டே இருந்தது.

”எனக்கு ஒரு அனுபவம் உண்டுடா...”என்றான் ஜோ ”உறவுகள் அப்டியே போய்ட்டிருக்கிறப்ப சட்டுன்னு ஒரு இடத்திலே மனசுக்குள்ள தோணிடும், ‘அவ்ளவுதான்– இதுக்குமேலே இந்த உறவு போகாது’ன்னு...ஸ்டிரா போட்டு உறிஞ்சி எளநீரைக்குடிக்கிறப்ப ஒரு புள்ளியிலே எளநீர் தீந்துபோச்சுன்னு தெரியற மாதிரி சட்டுன்னு தெரிஞ்சிரும்... அந்த செகண்ட் வாரது வரை ரெண்டுபேரும் கிடந்து துடிப்பீங்க போராடுவீங்க.. சட்டுன்னு ரெண்டுபேருக்குமே தெரியும்..அப்ப உறவு அறுந்திரும் ...அதுவரைக்கும் நீ காத்திருந்தாபோரும்...”

”அறுந்திரும்நு எப்டி சொல்றே?”

”சுசி பத்தி சொன்னியே அதிலேருந்து....அவ இப்ப அம்மாவாகவும் ஆயிட்டா...உனக்கு இனிமே அவளே போரும்...யாரு கண்டா நீ மிச்சவாழ்நாள்முழுக்க ஒரு படிதாண்டா பதியா வாழ்ந்தாக்கூட ஆச்சரியமில்லை”

நான் பில்லை கொடுக்க ரிஜிஸ்டரை எடுத்தேன்.

”நான் குடுக்கிறேண்டா”

”ஏன்? பணம் துள்ளுது போல?”

”மாகியொட பணம்… அள்ளிக்குடுக்கிறா மகராசி…டாலர் மதிப்பு சரியாம இருக்கணும்னுதான் நான் இப்பல்லாம் சாமிகும்பிடுறது…”என்றவன் ”பில் குடுக்கிறது கூட ஒரு சந்தோஷமான விஷயம்தான் இல்லியா?”என்றான்.

நான் சிரித்தேன்.

சாலைக்கு வந்ததும் ஜோ ”என்னை நீ மவுண்ட் ரோட்டிலே விட்டிரு”என்றான் ”நான் அங்க ஒரு ஆசாமியைப்பாக்கணும்…பழைய மியூசிக் •பிரண்ட்…பாவம் சாகக்கிடக்கான்”

”என்னது?” என்றேன்.

”குடி…ஈரல் அப்டியே வாடர்மெலோன் மாதிரி ஆயிட்டுது…இன்னும் ஒருமாசம்னு சொல்லியிருக்காங்க…அதுக்குள்ள போய் பாத்தா அவன்கூட உள்ள உறவு சுமுகமா முடிஞ்சிரும் பாரு…”

நான் அவனை இறக்கிவிட்டுவிட்டு நேராக லேன்ட்மார்க் சென்றேன். சுசிக்காக சில ஆடியோ சிடிக்களும் ஒரு சில புத்தகங்களும் வாங்கினேன். பின்னர் மெல்ல காரை வீட்டை நோக்கிச் செலுத்தினேன். தனிமையாகாவும் அதேசமயம் விடுபட்டவனாகவும் உணர்ந்தேன். ஜோ மாதிரி ஆட்கள் எல்லாவற்றையும் எளிமைப்படுத்துகிறார்கள். சிறிதாக

ஆக்கிவிடுகிறார்கள். ஆனால் வாழ்க்கையின் முக்கியமான பல தருணங்களில் அதுதான் சிறந்த வழியாக இருக்கிறது.

காரை நிறுத்தி படி ஏறிய போது கதவை திறக்க வந்த சுபாவை நான் முதலில் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. புதிய சுடிதார் அணிந்திருந்தாள். ராணி டைனிங் டேபிளில் சாப்பிட்டுக்கொண்டிருக்க நீ தோசை சுட்டு கொண்டுவந்து போட்டாய்.
என்னிடம் ”வந்தாச்சா?”என்றாய்.

”சாப்பிடறியாடா?”என்றாள் அம்மா. அவள் அதுவரை எப்போதும் இல்லாத நிதானத்துடன் இருப்பதாகத் தெரிந்தது.

”சாப்பிட்டுட்டேன்” என்றேன்

”எங்க?”

”ஜோ கூட” என்றேன். ”சும்மாதான் அவனைப்பாக்கப்போனேன்…”

”எப்டி இருக்கான்? வேலைக்கு எதுக்காவது போறானாமா?”

”அவன் கல்யானம் பண்ணிக்கப்போறான்”

”அய்யோ அவரா?” என்றாய் நீ

”ஏன் அவனைப்பாத்தா ஆம்பிளையா தெரியலையா?”

”அவர் தாடியையும் பேச்சையும் பாத்தா கல்யாணம் பண்ணிகிற கேஸ் மாதிரி தோணல்லை”

”பொண்ணு என்னடா பண்றா?” என்று அம்மா கேட்டாள் ”சாதியிலேயே பன்றானாமா?”

”மனுஷ ஜாதிதான். அமெரிக்கப்பொண்ணு. மேகினு பேரு”

”மேகின்னா நூடுல்ஸ் பேருல்ல?’ என்றாள் ராணி

”எப்ப பாரு திங்கிறதிலேயே இரு”என்று நீ அவள் மண்டையை தட்டினாய்

”அமெரிக்கா போறான் ”என்றேன்

”நல்லா இருந்தா சரி” அம்மா அவனைப்பற்றிய பேச்சை தவிர்க்க விரும்பினாள். ஜோவை அம்மாவுக்குப் பிடிப்பதில்லை. எனக்கும் மனநெருக்கடிகள் இல்லாத நேரத்தில் அவனைச் சந்திப்பது ஒருவகை தர்மசங்கடத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

நான் சுபாவிடம் மெல்ல ”சித்தி சாப்பிட்டாச்சா?”என்றேன்.

அம்மா நிதானமாக ”கற்பகமா? சாப்பிட்டாச்சு…தூக்கமாத்திரை ஒண்ணு குடுத்தேன். என் ரூமிலே தூங்கிட்டிருக்கா”என்றாள்

நான் ரகசியமாக உன் கண்களைப் பார்த்தேன். நீ புன்னகை செய்தாய்.

நான் என் அறைக்குள் சென்று உடைகளை மாற்றிக்கொண்டிருக்கும்போது வெளியே பைக்கின் ஒலி கேடது. என் விரல்களால் சட்டைப்பித்தான்களை பிடிக்க முடியவில்லை.

வெளியே சத்தங்கள் ,பேச்சுக்குரல்கள். நான் கட்டிலில் அமர்ந்துவிட்டேன். ராணி கதவைத் தட்டி மெல்ல திறந்து ”சந்திரா மாமி வந்திருக்கிறதா சொல்லச் சொன்னாங்க”

”யாரு?” என்றேன்

”பெரிம்மா”

நான் எழுந்தபோது அறை படகு போல ஆடியது. மீண்டும் அமர்ந்துகொண்டேன். என்ன செய்வது? இங்கேயே அமர்ந்துவிடுவதா? ஆனால் இப்படி கோழையாக, பூஞ்சையாக இருப்பதைவிட அங்கே சென்று மூர்க்கனாகவும் தூர்த்தனாகவும் நின்று கொண்டிருக்கலாம். ஆமாம், அதுதான் அந்த முகம்தான் இப்போது எனக்குத்தேவை. அதுதான் எனக்குப் பலம்

நான் முகத்தைக் கழுவிவிட்டு பூபோட்ட சட்டை ஒன்றை அணிந்துகொண்டு வெளியே வந்தேன். கூடத்தில் அம்மா சோ•பாவில்

அமர்ந்திருக்க சந்திரா எதிரே நாற்காலியில் அமர்ந்திருந்தாள். டீபாயில் ஹெல்மெட். நீ மோடாவில் அமர்ந்திருந்தாய். நீ தலையை ஆட்டி ஏதோ சொல்லிக்கோண்டிருந்தாய்.

என்னைக்கண்டதும் நீ மிக உரிமையும், கண்டிப்பும் கலந்த குரலில் ”என்ன சட்டை இது, ஆ·ப்ரிக்கன்ஸ் போடுற மாதிரி…” என்றபின் சந்திராவிடம் செல்லச்சலிப்புடன் ”எப்ப சின்னப்பையனா ஆகிடுவார்னு சொல்லவே முடியறதில்லை” என்றாய்.

எனக்கு அந்த மனைவித்தனம் சற்று மிகையாகத்தோன்றியது. ஆனால் அது என்னை அதுவரை இருந்த நிலைகொள்ளாமையில் இருந்து மீடது. இங்கே நாடகம்தான் நடக்கப்போகிறது என்று தெரிந்துவிட்டது. நான் சிரித்தபடி அமர்ந்துகொண்டேன்

சந்திராவும் அந்தத்தருணத்தை கச்சிதமாகப் பிடித்துக் கொண்டாள். அவள் என்னை நோக்கி செல்லமாகச் சிரித்து ”’ஸ்டில் ஹி இஸ் எ பாய்” என்றாள். அங்கே அவள் தன்னை ஒரு அம்மாவாக உருவகித்துக்கொண்டு உன்னுடைய குதிரையை தன் ராணியைக் கொண்டு செக் வைத்தாள்.

”என்னமோ போ….வரவர இவனை நெனைச்சாலே பயம்மா இருக்கு…பிஸினஸ் பண்றேன்னு இதுவரை போன தொகைக்கு ஒரு வீடே வாங்கியிருக்கலாம்…” என்றாள் அம்மா. அவள் லௌகீக வாழ்க்கையில் இருந்து மெல்ல ஒதுங்கிக் கொண்ட பாட்டியின் கதாபாத்திரத்தை எடுத்துக் கொண்டாள்.

அந்த சதுரங்க ஆட்டம் நுட்பமான சொற்கள்மூலமும் சொற்களுக்கு அப்பால்செல்லும் கண்கள் மூலமும் நீண்டு நீண்டு சென்றது. நான்

அதில் ஒரே வேடத்தைத்தான் எடுக்க முடியும். பிறரால் கையாளப்படும் சின்னக்குழந்தை. சுசி, நான் கிட்டத்தட்ட மழலையே பேசினேன். நீங்கள் மூவரும் ஆடும் பூப்பந்தாட்டத்தின் பந்து. வானிலேயே இருந்தேன்.

பின்னர் எங்கோ அது சலித்தது. நால்வரும் மௌனமாக அமர்ந்திருந்தோம். நீ என்னிடம் ”சந்திரா ராணிக்கும் சுபாவுக்கும் கி•ப்ட் கொண்டாந்திருக்காங்க அருண்” என்றாய்

”அப்டியா?”

”ஏய் காட்டுடீ”

ராணி வெட்கத்தில் வளைந்தபடி முன்னால் வந்து ஒரு சிறு நகைப்பெட்டியைக் காட்டினாள். அதனுள் இரு சிறு தங்கத் தொங்கட்டான்கள்.

”வாங்கினீங்களா?” என்றேன் சந்திராவிடம்

வன்மம் கொண்ட பார்வை ஒன்று எனக்கு மட்டுமே தெரிந்து மறைந்தது அவள் கண்களில். ”வர்ரப்பதான் வாங்கினேன்… எப்டீன்னாலும் தங்கம் வேணுமே”

நீ ”ராணிக்கு சந்தோஷம் தாங்கலை” என்றாய்

”ஷி இஸ் வெரி கியூட்” என்றாள் சந்திரா . எழுந்தபடி ”ஓகே

தென்...”என்றாய்

”தனியா போய்டுவியாடீ? அருணை கூட அனுப்பவா?” என்றாள் அம்மா. அம்மாவின் பார்வையை சந்திராவின் பார்வை மிக நுட்பமாக சந்தித்துச் சென்றதை நான் கண்டேன். என் மனம் சிலிர்த்துக் கொண்டது.

”நோ...இப்ப எட்டுமணிதானே ஆச்சு...நோ பிராப்ளம் ஜிஎஸ்...வரேன் சுசி...ராணி சுபா ரெண்டுபேருக்கும் பை” சந்திரா ஹெல்மெட்டையும் சாவியையும் எடுத்துக் கொண்டாள். என்னிடம் திரும்பி ”வரேண்டா” என்றாள்

நான் அரைக்கணத்தில் திரும்பி உன் முகத்தைப் பார்த்தேன். உன் முகம் குரோதத்தால் சுளித்திருந்தது. சந்திரா சுவரில் கையூன்றி குனிந்து நின்று செருப்பின் வாரைப்போட்டாள். என்னிடம் சிரித்தபடி ”என்னடா, பெரிய குடும்பஸ்தனா ஆயிட்டே போல இருக்கே” என்றாள்

அம்மா வந்து என்னருகே நின்று என் தோளில் கையை போட்டு கிட்டத்தட்ட அணைத்துகொண்டு ”ஆமா...பொறுப்பு...நீதான் மெச்சிகிடணும்” என்றாள்

சந்திராவின் கண்கள் அம்மா என்னை அணைத்திருப்பதை கவனித்து மெல்ல மாறுபட்டன. ”வரேன் ஜிஎஸ்...ஏகப்பட்ட பேப்பர் வேல்யுயேஷன் இருக்கு...பை அருண்”

அவள் ஸ்கூடரைக் கிளப்பிச் செல்வதை நான் பார்த்து நின்றேன். அம்மா என் கையை தன் கையில் பற்றியபடி ”பால் சாப்பிடுறியாடா?”என்றாள்

”வேணாம்...”என்றேன்

”தூக்கம் வருதுன்னா படுத்துக்கோ”

”இல்ல பரவால்ல”

அம்மா சோபாவில் அமர்ந்து டிவியை போட்டாள். வழக்கமான ஏதோ நிகழ்ச்சி. நீயும் சுபாவும் ராணியும் வந்து அமர்ந்து கொண்டீர்கள். நீ என்னிடம் ”இது டிவி கெடையாது சினிமான்னு ராணி சொல்றா” என்றாள்

நான் திரும்பி ராணியை நோக்கி புன்னகைசெய்தேன் ”இது வேறமாதிரி டிவி” என்றேன் ”புடிச்சிருக்கா?”

”ம்ம்” என்றாள் ராணி

மெல்ல மெல்ல டிவி எங்கள் இறுக்கங்களையும் பாவனைகளையும் இல்லாமலாக்கியது. அந்த தொடரின் கதையை நீ சொன்னாய். அதன் கதாபாத்திரங்களைப் பற்றி விவாதிக்க ஆரம்பித்தோம். சிரித்தோம், வாதாடினோம். டிவி ஒரு குடும்ப ஊடகம் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். அது குடும்பத்துக்குள் வந்துவிடுகிறது. வாழ்க்கையைப்பற்றி நம் இந்தியக் குடும்பங்களில் பேசிக்கொள்ளவே முடிவதில்லை. ஆனால் தொலைகாட்சித்தொடர்களை முன்வைத்து நாம் வாழ்க்கையைப்பற்றி எத்தனை வேண்டுமானாலும் விவாதிக்கலாம்.

பின்பு நான் எழுந்தேன். ”ஓகே… நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கிறேன்”என்று என் அறைக்குச் சென்று உடைகளைக் கழற்றிவிட்டு கட்டிலில் படுத்தேன். அப்போதே தூங்கிவிட்டேன். ஆனால் தூக்கத்துக்குள் என் தலைக்கருகே செல்போன் மின்னி மின்னி என்னை அழைத்துகொண்டே இருந்தது தெரிந்தது.

நான் விழித்துக்கொண்டபோது பின்னிரவு. மெல்ல எழுந்து அமர்ந்தேன். கண்களை திறந்தபடி இருட்டில் அமர்ந்திருந்தேன். செல் அப்போதுதான் அணைந்தது போல மெல்லிய புன்னகைஒளியுடன் இருந்தது.

சட்டென்று தீ பற்றிக்கோண்டது போல செல் மீண்டும் மின்னியது. அதை எடுத்தேன். ”ஹலோ” என்றேன்

”அருண்…”

”சொல்லு”

”ஸாரி…எல்லாத்துக்கும் ஸாரி… ப்ளீஸ் என்னை மன்னிச்சிரு….நான் உன்னை கஷ்டப்படுத்தணும்னு நெனைக்கல்லை. என்னால உன்னை விடமுடியல்லை அருண்…ஏன்னா நான் உன்னை அப்டி விரும்பறேன்… இ அம் மேட்லி இன் லவ் வித் யூ…என் மனசை நீ புரிஞ்சுகிடணும்”

”எனக்குத்தெரியும் சந்திரா…”

”நீ இன்னைக்கு ரொம்ப ஹேப்பியா இருந்தே அருண். ரொம்ப ஹோம்லியா…உன்னைப்பாக்கவே ஆசையா இருந்தது”

”ம்ம்”

”நீ எப்பவும் இபியே சந்தோஷமா இருக்கணும்”

”சரி…தூங்கு…நான் நாளைக்கு வரேன்”

”நோ…இனிமே நீ வரவேண்டாம்…குட்பை அருண்”

”சந்திரா”

செல்போனில் முத்தத்தின் ஒலிகள். ஒரு விம்மல்.. பின் மீண்டும் மெல்லியகுரல் மிக அந்தரங்கமாக– ”குட்பை அருண்” உறவின்போது சொல்வதைப்போன்ற அந்தரங்கம். செல்போனின் கவற்சியே அதுதான் .அத்தனை அந்தரங்கமாக காதில் பேசுவது வேறு எப்படியும் சாத்தியமில்லை.

செல் அணைந்தது. என்ன சொனனள்? நான் ஐயத்துடன் அதை எடுத்து அவளை அழைத்தேன். ”தி மொபைல் நம்பர் யூ ஹேவ் டயல்ட் இஸ் சுவிட்ச் ஆ•ப். ப்ளீஸ் டிரை ஆ•ப்டர் சம் டைம்…..நீங்கள் டயல்செய்த எண் சுவிட்ச் ஆ•ப் செய்யப்பட்டுள்ளது”

மீண்டும் மீண்டும். நான் தரைவழி போனில் அழைத்தேன். அதுவும் எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

எனக்குள் விம்ம்ம் என்று ரத்தம் மேலேறி மூளையை ஓர் அலைபோல தாக்கியது. வேகமாக எழுந்து சட்டையைப்போட்டுக்கொண்டேன். மெல்ல ஓசையில்லாமல் கதவைத்திறந்து வெளியே வந்தேன் இருளிலேயே நடந்து முன்வாசலை திறந்து மீண்டும் பூட்டிக்கொண்டு வேகமாக வெளியே ஓடினேன். காரை எடுக்கவில்லை. வெளியே ஓடி இருளில் சாலையில் விரைந்தேன்.

ஆளில்லாத சாலையில் ஒரே ஒரு கார் முகவிளக்குகள் சீற தாண்டிச்சென்றது. பாலிதீன் கவர்களும் தாள்கசங்கல்களும் காற்றில் அலைமோதி நிலையழிந்தன. தார்ச்சாலையில் பெட்றோல் சிந்திக்கிடந்த வாசனை... டாக்ஸி ஸ்டான்ட் வரை வேகமாக நடந்தேன். கால் வெளியே தெரிய டிரைவர் தூங்க ஒரு வெள்ளை அம்பாசிடர் டாக்ஸி மட்டும் நின்றது.

அந்தக்காலைத்தொட்டு டிரைவரை எழுப்பினேன். ”சாலிகிராம்” என்றேன். ஆளில்லாத சாலைகள். கைவிடப்பட மாநகரம். வெறுமை வானத்தில் இருந்து இறங்கி நகர் மீது பரவியிருந்தது. சோடியம் விளக்குகள் தரையில் வெறுமையின் வட்டங்களை உருவாக்கியிருந்தன. குற்றவுணர்வுடன் கம்பங்களும் கட்டிடங்களும் பின்னால் நகர்ந்தன.

டிரைவர் மிக மெல்ல ஓட்டுவதுபோல தெரிந்தது. ”கொஞ்சம் வேகமா போங்க” என்றேன்

”வேகமாத்தான் சார் போறேன்”

விருகம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன்...சாலிகிராம். தெருக்கள் எல்லாமே

அந்த வேளையில் ஒன்றேபோலிருந்தன. தெருநாய்கள் ஆட்டுமந்தைகள் போல சாலையில் நிச்சிந்தையாக அலைந்தன. அவள் •ப்ளாட்டை அடைந்து இரங்கி டாக்ஸியை அனுப்பினேன்.

அபார்ட்மெண்ட்டுக்கு முன் வாட்ச்மேன் இல்லை. கேட் சும்மா சாத்தியிருந்தது. உள்ளே நுழைந்தேன். வாட்ச்மேனும் அவன் குடும்பமும் பார்க் செய்யப்பட்ட கார்கள் நடுவே கொசுவலை கட்டி தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

லி•ப்ட் வழியாக மேலேறினேன். லி•ப்டின் ஒலி அந்த இரவில் உரத்து ஒலிப்பதாகத்தோன்றியது. கதவைத்திறந்து வெளியே வந்தவன் ஒருகணம் சிந்தனைசெய்தேன். நவீன் இருப்பான். சந்திராவை மீண்டும் ஒருமுறை அழைத்தேன். அழைப்பு நிராகரிக்கப்பட்டபோது ஒரு நிமிடத்தில் என் அட்ரினலின் உடம்பெங்கும் பதறிப்பரவியது.

மெல்ல காலெடுத்து வைத்து மாடிப்படி ஏறி மொட்டை மாடிக்குச் சென்றேன். ஏராளமான ஏஸி மெஷின்கள் வெம்மையை உமிழ்ந்துகொண்டு முனகிக் கொண்டிருந்தன. காற்றில் கம்பிக்கொடியில் சில ஆடைகள் படபடத்தன. பலவகையான உடைந்த தட்டுமுட்டுச்சாமான்கள்.கைப்பிடிச்சுவர்களில் விளிம்புவழியாகச் சுற்றிவந்தேன். கீழே ஆழத்தில் தெருவும் அங்கே ஒரு காரின் மேல்வளைவும் தெரிந்தது

மழைநீர் குழாயை பிடித்து மெல்ல இறங்க ஆரம்பித்தேன். அங்கிருந்து ஜன்னலின் சன் ஷேடில் குதித்தேன். அதைபப்ற்றி தொங்கி மெல்ல ஆடி ஜன்னலில் கால் வைத்து இறங்கிக் கொண்டேன். சந்திராவின் படுக்கையறைச் சன்னல். ஒரு கதவு மூடியிருந்தது. இன்னொன்று விரிசலாக திறந்திருந்தது. அதன் வழியாகப் பார்த்தேன். சந்திரா படுக்கையில் ஒருக்களித்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

தலையணைமேல் அவள் கூந்தல் பரவியிருந்தது

நான் ”சந்திரா !சந்திரா ” என்று கிசுகிசுத்தேன். பின்பு மேலும் உரக்க அழைத்தேன். அவள் விழிக்கவில்லை. அந்த நிலையின் தீவிரத்தை என் மனம் உணர்ந்துகோண்டே இருந்தது. எதுவும் நிகழலாம். யார் வேண்டுமானாலும் கண்விழித்து என்னைப்பார்த்து அலறலாம். போலீஸ், அவமானம்....

ஆனால் அப்போது எனக்கு எதுவுமே பொருட்டாக தெரியவில்லை. அத்துடன் இன்னொன்றும் உள்ளது சுசி, நெருக்கடிகளில் திளைத்து மகிழும் ஒரு ஆழ்மனம் நமக்குள் உள்ளது.லது இத்தருணங்களைக் கொண்டாடுகிறது.

நான் என் வாட்சை எடுத்து சந்திரா மேல் எறிந்தேன். அது படுக்கையில் தப் என்று விழுந்தது. பின்னர் என் பாக்கெட் டைரியை எடுத்து எறிந்தேன். பின்பு என் இரு ஷ¥க்களையும் எறிந்தேன். இரண்டாவது ஷ¥ சந்திரா மேலேயே விழுந்தது. அவள் எழவில்லை.

எனக்குள் எழுந்த அச்சத்தை எப்படிச் சொல்வேன்? என் மீது உயர் அழுத்த மின்சாரம் ஓடிச்செல்வது போல ஓர் உணர்வு. சன்னல் கம்பிகளை வளைக்க முயன்றேன். மிக இறுக்கமாக இருந்தன. அசையவில்லை.

ஒப்புநோக்க பாத்ரூம் ஜன்னல்கம்பிகள் மென்மையானவை என்பது ஞாபகம் வந்தது. குடிநீர் குழாய்பதித்த தடம் வழியாக கால்களைப் பதித்து சுவர் விளிம்பை பிடித்துக்கொண்டு மெல்ல நகர்ந்தேன். பாத்ரூம் ஜன்னலில் சாய்வான கண்ணாடிகள் பதிக்கபப்ட்டிருந்தன.

அவற்றை மேல்நோக்கி ஒவ்வொன்றாக உருவி எடுத்தேன். அவற்றை வெளியே போட்டால் பெரிய சத்தம் கேட்கும் என்று எண்ணி உள்ளேயே தள்ளி விட்டேன்.

அந்தத்தருணத்தில் நான் மிகமிகக் கூர்மையாக இருந்தேன். என் மனவலிமையும் உடல்வலிமையும் பலமடங்கு அதிகரித்திருந்தன. கண்ணாடிகளை அகற்றியபின் கம்பிகளை பிடித்து வளைக்க முயன்றேன். கம்பிகள் மெல்லியவை என்றாலும் அவை என் பிடிக்கு நிற்கவில்லை. இடும்பு பெல்ட்டைக் கழற்றி அதைகம்பியில் கட்டி அதன் நுனியை காலால் தண்ணீர் குழாயுடன் சேர்த்து மிதித்துக் கொண்டேன். கம்பியை வளைத்ததும் அந்த வளவை பெல்லால் இழுத்து பிடித்து அப்படியே நிறுத்திக் கொண்டு மேலும் வளைத்தேன்.

மெல்ல மெல்ல கம்பி நெக்குவிட்டது. பின்பு சன்னலில் இருந்து பெயர்ந்து வந்தது. பின் அடுத்த கம்பி. பின்பு அடுத்தது. உள்ளே செல்லும் வழி ஏற்பட்டதும் பற்றிக்கொண்டு எம்பி உள்ளே நுழைந்தேன். உள்ளே கிடந்த கண்ணாடிகள் மேலேயே குதித்தேன். சலாங் என்று சிதறி மொறுமொறுபெ மிதிபட்டன. ஒருகணம் மூச்சுவிட்டேன்.நான் பெரிதாக மூச்சு இரைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

சந்திரா உள்ளே கட்டிலில் கிடந்தாள். சற்று கோணலாக அவள் கிடப்பது போலிருந்தது. கடுமையான வாந்தி வீச்சம். நான் ஓடிப்போய் விளக்கைப்போட்டேன். அறைக்கதவு உள்ளே மூடியிருந்தது. பதற்றத்துடன் அவளை அணுகி மூக்கில் தொட்டுப்பார்த்தேன். மூச்சு ஓடியது. அப்படியே தூக்கி புரட்ட முற்பட்டபோது என் கைகள் திடுக்கிடு வலக அவள் மீண்டும் கட்டிலிலேயே விழுந்தாள். தலையணை முழுக்க ரத்தம். அவள் கழுத்தும் மார்பும் முழுக்க சூடான பச்சை ரத்தம். அது ரத்தத்தின் வாசனைதான்.

[14]

நான் சந்திராவைப்புரட்டினேன். அவள் கழுத்திலும் தோள்களிலும் ரத்தம் ஈரமாக இருந்தாலும் காயம் ஏதும் இருக்கவில்லை. அவள் கையைப்பிடித்தபோதுதான் இடது மணிக்கட்டு வெட்டுபட்டிருப்பதைக் கண்டேன். காயத்திலிருந்து ரத்தம் மெல்லிய குமிழிகளாக வெளிவந்துகொண்டிருந்தது. அதன் மெல்லிய வெம்மை தலையணையையும் மெத்தையையும் பச்சைச்சதைத்துண்டுகள் போல ஆக்கியது.

சந்திராவின் மயக்கம் ரத்த இழப்பினால் அல்ல என்று தெரிந்தது. அவள் இதயம் நன்றாகவே துடிப்பது கழுத்துசசைவில் தெரிந்தது. நான் அவள் காயத்தைக் கையால் இறுகப்பற்றியபடி சுற்று முற்றும் பார்த்தேன். மேஜைமேல் கூந்தலைக் கட்டும் எலாஸ்டிக் நாடா இருந்தது. அதைஎ டுத்து காயத்தை இறுக்கிக் கட்டினேன். என் கையெல்லாம் ரத்தம் கொழகொழத்தது

அவள் ஏதாவது மாத்திரை சாப்பிட்டிருப்பாள் என்று தோன்றியது. உலர்ந்த உதடுகள் சற்றே திறந்து வெண்பற்கள் தெரிந்தன. வாயை முகர்ந்து பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. அவளை அப்படியே தூக்கி தோளிலிட்டு பாத்ரூமுக்குக் கொண்டுசென்றேன். பாத்ரூம் முழுக்க ரத்தம். அதிர்ந்து திரும்பிப்பார்த்தபின் என் கால்களைப் பார்த்தேன். என் கால்களில் இருந்து ரத்தம் வழிந்தது. கண்ணாடிச்சில்லுகளில் அறுத்துக் கொண்டிருக்கிறேன்.

அவளை பாத்ரூம் தரையில் படுக்கச்செய்தேன். அவள் குழைந்து கிடந்தாள். டாய்லட் அருகே கழுவிக்கொள்ளும் குழாய் இருந்தது. அதை எடுத்து தடி அதன் முகப்பை உடைத்துவிட்டு அந்தக்குழாயை அவள் வாய்க்குள் விட்டேன். உதடுகளை கெட்டியாகப்பிடித்துக்கொண்டு

தண்ணீஈர் உள்ளே பீய்ச்சிடச்செய்தேன். அவள் திமிறி குழைந்தாள். நீர் அவளுக்குள் பீரிட்டு செல்ல அவள் அதை குரல்வளை அசைய மடக் மடக் என்று குடித்தாள்

அவள் வயிறு உப்பியதும் அவளை படுகக்ச்செய்து வயிற்றை வேகமாக அழுத்தினேன். குபுக் என்று வாந்தியாக குடித்த தண்ணீர் வெளிவந்தது.அதில் மாத்திரைகள் கலந்திருந்தன. பல்வேரு மாத்திரைகளை சேர்த்து தின்றிருக்கிறாள். மீண்டும் குழாயை அவள் வாய்க்குள் செலுத்தி நீரை புகட்டினேன். மூன்றுமுறை வாந்திஎடுக்கச் செய்தபோது வெறும் நீர் வெளிவந்தது

எழுந்து பெருமூச்சுடன் அவளைப்பார்த்து நின்றேன். நனைந்த நைட்டியை அவள் தலைவழியாகக் கழற்றினேன். உள்ளாடைகள் மட்டும் அணிந்த அவளை மெல்ல தூக்கி வெளியே கொண்டுவந்து படுக்கையில் படுக்கச் செய்தேன். அப்போதுதான் படுக்கையின் ரத்தத்தில் அவள் கிடப்பதைக் கண்டேன். மெல்ல அவள்கீழிருந்து ரத்தம் தோய்ந்த தலைய¨ணையை எடுத்தேன்

அவள் கண்விழித்தாள். என்னை அதிர்ச்சியுடன் பார்த்து ”அருண்!”என்றாள். பின்பு மெல்ல புன்னகை புரிந்தபடி கண்ணைமூடிக்கோண்டு ”அருண் ”என்றாள்

நான் அவள் கன்னத்தில் ஓங்கி அறைந்தேன். அவள் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்து கன்னத்தைப் பொத்தியபடி என்னைப் பார்த்தாள். ” ஏண்டி, என்னை தூக்கிலஏத்தனும்னு நெனைக்கிறியா?”

அவள் நம்பாமல் என்னைபபர்த்து ”அருண் நீயா?” என்றாள் பின்னர் விழித்துக் கொண்டு ”அருண் நீ எப்டி உள்ள வந்தே?” என்றபின்

கதவைப்பார்த்தாள்

 ”ஜன்னலை உடைச்சு வந்தேன்...நீ என்ன பண்ணினே? சொல்லுடீ...என்ன காரியம் பண்ணினே...”  அவள் தோளைப்பிடித்து உலுக்கினேன்

 அவள் உடைந்து அழுதபடி மெத்தையில் சரிந்தாள் ”என்னால் முடியல்லை அருண்....என்னால முடியல்லை...ப்ளீஸ்.. என்னை சாகக்கூட விடமாட்டியா? என்னால ஒரு செகண்ட் கூட உன்னைமறந்துட்டு இருக்க முடியல்லை...தீயில நின்னு எரிஞ்சுட்டே இருக்கிற மாதிரி இருக்கு...என்னை விட்டிரு”

 நான் அவளை விட்டுவிட்டு எழுந்து நின்றேன். அவள் முகத்தை அந்த ரத்தத்தலையணையில் போட்டு தேய்த்தாள். நான் ”எழுந்திரு”என்று அந்த பெட்ஷீட்டைப் பிடித்து இழுத்தேன்.

 சந்திரா எழுந்து என் கையைப்பிடித்து ஆவேசமாக இழுத்து தன் மீது என்னைப் போட்டுக்கொண்டாள். நான் எழ முயல்வதற்குள் என்னை இறுக அணைத்து முத்தமிட ஆரம்பித்தாள்

 ”நோ..நோ சந்திரா...”

”ஐ வில் டை..!.ஐ வில் டை!” என்று காய்ச்சல் போல பிதற்றியபடி அவள் என்னை முத்தமிட்டுக்கொண்டே இருந்தாள். அவள் முகம் ரத்தம் தோய்ந்து செக்கச்சிவப்பாக இருந்தது. ஏதோ விசித்திரமான மோகினிப்பேய்போல. வெறித்த நீர்ப்படலம் பரவிய கண்கள், மந்திரம் போல ஏதோ ஒலியிலாமல் சொல்லிய சூடான உதடுகள், அவிழ்ந்து

தலையணைமேல் பரவிய கரிய நீள்கூந்தல்....மோகினி...

என் முதுகு சிலிர்த்தது. இரு கைகளையும் இருபக்கமும் ஊன்றி எழ முயன்றபோது அவள் தன் கால்களாலும் என்னைப்பின்னிக் கொண்டாள். அவள் மென்மையான உடல்மேல் நான் அமிழ்ந்தேன். என் காமம் விழித்துக்கொண்டது. விபரீதங்களில் மட்டுமே எழும் காமம் ஒன்று ஆணுக்கு உண்டு சுசி....

வலுவான நீரோட்டம் கொண்ட ஒரு ஓடை. வழவழக்கும் மலைப்பாம்பு. பற்றிச்சூழ்ந்துகொள்ளும் தீ. அவள் தோள்களும் கழுத்தும் மார்புகளும் எல்லாம் ரத்தம். அவள் கையை எடுத்தபோது மணிக்கட்டின் கட்டு அவிழ்ந்து ரத்தம் மணிகள் போலச் சிதறியது. நான் ”இரு ”என்று அவள் கையைப்பிடித்தேன் ”ம்ம்ம்”என்ற உறுமலுடன் அவள் என்னை விலக்கி இறுகப்பிடித்துக் கொண்டாள்

நான் அவள் கண்களைப் பார்த்தேன். அச்சம் குளிர்ந்த நீர் போல என் மீது கொட்டியது அவளை மூர்க்கமாக உதறி எழுந்து கொண்டேன். அவள் மெத்தையில் மல்லாந்து விழுந்து பாம்பு போல் நெளிந்து எழுந்து என்னை நோக்கி கை நீட்டி ”அருண் ப்ளீஸ் ப்ளீஸ்” என்றாள்

என் எல்லைகள் மறைந்தன. நான் பாய்ந்து அவளை அணைத்து அவள் உடல்மேல் கவிழ்ந்தேன். அவளுடைய ரத்தம் தோய்ந்த தோள்களில் கன்னங்களில் கழுத்தில் முத்தமிட்டேன். ரத்ததின் சிவப்புக்கு ஈடு இணையே இல்லை. எரியும் சிவப்பு. கொதிக்கும் சிவப்பு. சிவப்பு செக்கச்சிவந்த தீயில் இருவரும் சேர்ந்து எரிந்தோம். ஒரு கருப்பைக்குள் இரு உதிரக்குழந்தைகள் பின்னிப்பிணைந்துகொள்வதுபோல...

பின்பு நான் புரண்டு படுத்தேன். நாவால் என் உதடுகளை நக்கினேன்.

உப்புவீச்சம். திரும்பி அவளைப்பார்த்தேன். புன்னகையுடன் ஒருக்களித்து ”என்ன?” என்றாள்

”ரத்தம்”

”ருசியா இருக்கா?”

நான் அவளையே பார்த்தேன். ரத்தம் உலர்ந்த கன்னங்கள், தோள்கள்… அவள் மார்புகள் ஒன்றின் மீது ஒன்றாக அழுந்தியிருந்தன. அவளுடைய சிரிப்பில் மெல்லிய பித்து இருந்தது.

”பிடிச்சிருக்கா?” என்றாள்

நான் கண்களை மூடினேன். அவள் புரண்டு என்னருகே வந்து என் மீது கையைப்போட்டு ரகசியக்குரலில் ”பிடிச்சிருந்தா அப்டியே என்னை சாப்பிட்டிரு…மொத்த ரத்தத்தையும் குடிச்சிரு…ஐ யம் ரெடி ” என்றாள்.

நான் எழுந்து போர்வையை இடுப்புக்குக் கட்டிக்கொண்டு எழுந்து பாத்ரூமுக்குச் சென்றேன். உடலெங்கும் களைப்பாக இருந்தது. கால்கள் என் எடையை தாங்கமுடியாமல் தள்ளாடின.

கண்ணாடியில் என்னைப்பார்த்தேன். என் உடலெங்கும் ரத்தம். அப்போதுதான் கருப்பையில் இருந்து வெளிவந்த குழந்தைபோல இருந்தேன். ஷவரை திறந்து விட்டுக்கொண்டேன். என் உடலை நீர் கழுவி செந்நிறமாக ஓடியது. என்னில் இருந்து ஓடும் அந்த செந்நிறப்பிரவாகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

டவல் ஒன்றை மார்புக்குக் கட்டியபடி சந்திரா வந்து பாத்ரூம் வாசலில் நின்றாள். தரையைப்பார்த்து ”எவ்வளவு ரத்தம்?” என்றாள்.

நான் பேசாமல் அவளைத்தாண்டி வெளியே சென்றேன். ஈர உடலுடன் ஜன்னல் வழியாக நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தைப்பார்த்துக்கொண்டு நின்றேன்.

சந்திரா ஈரமாக வெளிவந்தாள். ”அருண் நான் என் கையை மறுபடியும் கெட்டியா கட்டிட்டேன்” என்றாள். ”இப்ப நோ பிராப்ளம்…”

”ம்ம்?”என்றேன்

அவள் படுக்கை விரிப்பை இழுத்து எடுத்தாள். தலையனையுடன் அதை சுருட்டி அறை ஓரத்தில் போட்டபின் வெறும் மெத்தைமேல் ஏறிப்படுத்துக் கொண்டாள். அருகே இருந்த கூஜாவிலிருந்து நீர் சரித்து கண்னாடித்தம்ளரை நிரப்பி அதைக் குடித்தாள்

‘அருண்”

”ம்ம்″

”இதுமாதிரி எனக்கு இருந்ததே இல்லை….எனக்கு ஒண்ணுமே ஞாபகம் இல்லை… மின்னல் மின்னலா… சுவரெல்லாம் அப்டியே திரைச்சீலை நெளியறது மாதிரி…. ஒரு செகண்ட் செத்திட்டேன்னே நெனைச்சுட்டேன் ”

என் மௌனம் அவளை நிம்மதியிடக்கச்செய்தது. ”அருண்”

”ம்ம்‘

”ஏன் பேசமாடேங்கிறே?”

”சொல்லு”

”என்னை வெறுக்கிறியா?”

நான் தோளைக்குலுக்கினேன்

”எனக்கு எல்லாம் தெரியும் அருண்... உனக்கும் எனக்கும் ஒரு பொருத்தமும் இல்லை. நாம சேரவே முடியாது... உலகத்துக்கு முன்னாடி போகவே முடியாது. நானும் உன்னை விட்டுரணும் அப்பதான் உனக்கு ஒரு லை•ப் இருக்கும்னுதான் நெனைக்கிறேன்...எத்தனயோ வாட்டி உன்னை விட்டுரணும்னு நினைப்பேன்...ஆனா முடியறதில்லை. நீ இல்லாம நான் என்ன ஆவேன்னு நெனைச்சாலே என் மனசு பொங்க ஆரம்பிச்சுடுது...அதான்”

நீர் நிறைந்த கண்களுடன் ”அதான் அருண்...என்னால முடியல்லை...நான் செத்தாலொழிய உனக்கு நிம்மதி இல்லை...அதனாலதான் அப்டி முடிவுசெஞ்சேன்...”

நான் பெருமூச்சுவிட்டேன்

”நான் முட்டாத்தனம் பண்ணிட்டேன் அருண்...செத்திருந்தா என்ன ஆகியிருக்கும்...எல்லாமே ஊர் சிரிச்சிருக்கும். அதைவிட நவீன் என்ன ஆகியிருப்பான்... நெனைக்கவே பயங்கரமா இருக்கு... என்ன முட்டாள்தனம்..சே...”

”உண்மைதான்...நீ அவனை மறந்துட்டே”என்றேன்.

அவள் முகம் கறுத்தது பேசாமல் சுவரைப்பார்த்தாள். பின்பி திரும்பி என்னிடம் ”ஆனா அப்ப எனக்கு அதைவிட வேற வழியே இல்லேன்னுதான் பட்டுது. யப்பா என்ன ஒரு அவஸ்தை... சொன்னேன்ல தீயில எரியிற மாதிரி...அப்டி ஒரு வலி துக்கம் ஆங்காரம்....அருண் நான் என் லை•ப்ல அப்டி ஒரு உச்ச்சகட்ட துக்கத்தை அனுபவிச்சதே இல்லை” என்றாள்.

அவள் மெல்ல புன்னகைத்தபடி ”அதே மாதிரி இப்பமாதிரி உச்சகட்ட சந்தோஷத்தையும் அனுபவிச்சதில்லை... துக்கம் அதுக்கப்றம் சந்தோஷம் எல்லாமே மலைமாதிரி பிரம்மாண்டமா ஆயிட்டுது.. நெனைச்சா ரெண்டுமே கனவுமாதிரி இருக்கு...”

”எனக்கும் அப்டித்தான்”என்றேன். ”படிப்படியா மலை மேலே ஏறி உச்சிக்கு வந்தாச்சு, இனிமே ஏற படியே இல்லேன்னு படுது”

அவள் சந்தேகமாக ஏதாவது கேட்பாள் என்று நான் எதிர்பார்த்தேன்.

அவள் பெருமூச்சுடன் ”ஆமா அருண்...நானும் எல்லாத்தையும் பாத்தாச்சுன்னு தொணுது. இனிமே லை•ப்ல எதுவுமே முக்கியமில்லை. இனி எதுக்காகவும் நான் அழப்போறதில்லை. எதையும் எதிர்பார்த்து தவிக்கப்போறதும் இல்லை....நான் எல்லாத்தையும் கடந்து வந்திட்டேன் அருண்...புதுசா பிறந்திட்டேன்...தேங்க் யூ..எல்லாம் உன்னாலதான்...தேங்க் யூ”

அவள் கையை நீட்டினாள். நான் அருகே சென்றதும் என்னை அணைத்து மெல்ல முத்தமிட்டாள். நான் அவளை அணைத்துக்கோண்டேன். அவளை மெல்ல முத்தமிட்டேன்.

சுசி, அப்போது அந்த உணர்வை அடைந்தேன். ஆம் அந்த உறவு அதன் முடிவை அடைந்து விட்டது. இனி அவள் எனக்குத்தேவை இல்லை. நான் நினைத்தால்கூட அந்த உறவை என்னால் நீடிக்க முடியாது. முடிந்துவிட்டது. அந்த வழிந்தோடும் ரத்தம் வழியாக நான் எல்லாம் கழுவப்பட்டுவிட்டது.

சந்திரா படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். பின்பு பெருமூச்சுடன் நாற்காலியில் அமர்ந்தேன். என்னை அறியாமலேயே தூங்கிவிட்டேன்.

அதிகாலையில் வெளியே அழைப்பு மணி ஒலித்தது. மீண்டும் மீண்டும் விடாமல் ஒலித்தது. நான் எழுந்து வெளியே பார்த்தேன். வானம் இருண்டுதான் இருந்தது. அதற்குள் சந்திரா எழுந்துவிட்டாள்.

”ஐயோ ”என்று அவள் தன் உடைகளை நோக்கி ஓடினாள். அதற்குள் வெளியே நவீன் கதவைத்திறக்கும் ஒலி. மறுகணமே எங்கள் அறைக்கதவு தட்டப்பட்டது

சுசி உன்னுடைய வெறிகொண்ட குரல். ”அருண் கதவைத்திறங்க..அருண்..தெறங்க கதவை...நீங்க உள்ள இருக்கிறது எனக்குத் தெரியும்...தெறங்க கதவை”

சந்திரா சேலையை அரக்கப்பரக்க சுற்றிக்கொண்டாள். நான் கதவைத்திறக்கப்போனேன்.

சந்திரா என் கைகளைப் பற்றிக்கொண்டாள். ‘நோ” என்றாள்

நான் அவளை தள்ளி தாழில் கையைவைத்தேன்

வெளியே நீ கதவை ஓங்கி உதைத்தாய், அடித்தாய். உன் குரல் கதறல்போல ஒலித்தது ”கதவைத்திறங்க அருண்...அருண்..திறங்க...ஐ ஸே ஓபன்...”

சந்திரா என் கைகளை மிண்டும் பிடித்தாள். ”நோ அருண்...நோ...ப்ளீஸ்”

நான் அவளை உந்தி தள்ளினேன் ”போ...அந்தப்பக்கம்” என்று பல்லிடுக்கால் சீறினேன். சந்திரா சுவரோரமாக ஒண்டி தலையில் இரும்புக்கம்பியால் அடிவாங்கியவள் போல கைகளால் முகத்தைப்பொத்தி தலைகுனிந்து நின்றாள். அவள் உடம்பு நடுங்கியது

நான் கதவை நிதானமாக திறந்தேன். வெளியே நீ நின்றிருந்தாய். உன் கண்களில் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது, உன் உடல் பதறுவதைக் கண்டேன்.

”சுசி”என்றேன்

”டோண்ட் ஸே மை நேம் யூ கிரீப்...” என்று கிரீச்சிட்டாய். மூச்சுவாங்க உடம்பே அதில் அலைபாய கைநீட்டிச் சொன்னாய். ”என் கண்ணாலயே பாக்கலாம்னுதான் வந்தேன். அப்பதான் உன் மேலே என் மனசில உள்ள ஆசை அழியும்...இல்லாட்டி என்னால வாழ முடியாது. பாத்துட்டேன்... நான் செத்தாச்சு அருண்...அவ்ளவுதான்.. வர்ரேன்”

”சுசி சொல்றதைக்கேள்”

நீ என் கையை தட்டி விட்டு அதேவேகத்தில் வெளியே சென்றாய். நான் நவீனின் பிரமித்த முகத்தைப் பார்த்தேன். என்னால் அவனை ஏறிட்டுப்பார்க்க முடியவில்லை. சந்திரா அப்படியே தரையிலமர்ந்து முகத்தை முழங்காலில் வைத்துக்கொண்டு உடலை முடிந்தவரை குறுக்கிக்கொண்டாள்.

கதவுக்கு அப்பால் இருந்து ராஜம்மா கிழவியின் முகம் எட்டிப்பார்த்தது. மெல்ல உள்ளே வந்து ”நீயே பாத்துட்டியா தம்பி? பகலிலே நடந்துண்டிருந்த்து.. துஷ்டன் இப்ப ராத்திரியிலேயும் வர ஆரம்பிச்சிட்டானா? அது யாரு பொண்ணு?”

நவீன் நிதானமான குரலில் ”பாட்டி, இது எங்க குடும்ப விஷயம். நீங்க உங்க வீட்டுக்குப்போய் வேலையப்பாருங்க”என்றான்

”நல்லாருக்குடா இதுவா குடும்ப விஷயம்? கண்டவன்லாம் வீட்டுக்கு வரான்”

”அதைப்பத்தி கவலைப்படவேண்டியது எங்கப்பா…அதுக்கப்றம் நான்…உங்களுக்கு என்ன? பேசாம போங்க..இல்லேன்னா மரியாத கெட்டிரும்…ம்ம்ம்” நவீனின் குரல்போலவே இல்லை. அழுத்தமான ஆண்மகனின் குரல்.

கிழவி ”நல்ல குடும்பம்டா சாமி”என்று வெளியே சென்றாள்

நவீன் சட்டென்று திரும்பி உள்ளே போய்விட்டான். பிரமிப்புடன் நிமிர்ந்து அவன் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள் சந்திரா. அவள் கண்களைப்பார்த்தேன். அதிலிருந்த வெறிப்பு எனக்கு அச்சமளித்தது.

நான் என் உடைகளை அணிந்துகொண்டேன். செருப்பைப் போட்டேன் ”போய்ட்டுவரேன் சந்திரா”

அவள் என்னை திரும்பிக்கூட பார்க்கவில்லை

நான் வெளியே வந்து டாக்ஸி ஒன்றைப்பிடித்து வேகமாக என் வீட்டுக்கு வந்தேன். வாசலிலேயே அம்மா பதற்றமாக நின்றிருந்தாள் அருகே சுபா.

அம்மா என்னை நோக்கி ஓடிவந்தாள். ‘டேய் என்னடா ? என்னடா ஆச்சு? இப்பதான் ஸ்கூட்டரிலே கௌம்பிபோனா…லண்டனுக்கே போறேன்னு சொன்னாடா…என்னடா ? எங்கடா போயிருந்தே சண்டாளப்பாவி…டேய் அந்த தட்டுவாணி– ”என்று நிறுத்திவிட்டு சுபாவின் ”உள்ள போடீ”என்றாள்

நான் மேற்கொண்டு பேசாமல் உள்ளே ஓடினேன். அம்மா என் பின்னாலேயே வந்தாள். கார்ச்சாவியை எடுத்து என் காருக்குள் புகுந்து அதை கிளப்பி சாலையில் அதிவேகமாக சீறிச் சென்றேன். உன்னை வழியெங்கும் தேடினேன்.

விமான நிலைய வாசலில் காரை நிறுத்திவிட்டு ஓடி உள்ளே நுழைந்தேன். கவுண்டரிலேயே டிக்கெட் வாங்கிவிட்டு நீ உள்ளே சென்றிருந்தாய். நான் உள்ளே நுழையும்போது பயணிகள் விமானத்துக்குள் செல்ல ஆரம்பித்திருந்தார்கள். கடைசியில் நீ நிற்பதைக் கண்டேன்.

கதவுகளைத் திறந்து திறந்து உன்னை நோக்கி ஓடி வந்தேன். அதற்குள் அடுத்த காத்திருப்பு அறைக்கு நீ சென்றுவிட்டிருந்தாய். கண்ணாடிக்கதவுகளுக்கு இப்பால் நின்று நான் ஒலியில்லாமல் கதறினேன்.

சுசி, ஒரு கணம் நீ என்னைப் பார்த்தாய். உன் கண்களிந் சுருக்கத்தில் கசப்பையும் குரோதத்தையும் பார்த்தேன். சுசி உன் முகத்தில் ஒருபோதும் அவை வருமென நான் எண்ணியதில்லை. உன் சிறிய உதடுகள் லேசாக சுழித்தன. பின்பு நீ கண்ணாடிக்கதவுகள் வழியாக திரும்பிப்பாராமல் சென்று மறைந்தாய்.

கண்ணாடிக்கதவுகளின் அசைவுகள் உருவாக்கிய அலைகளில் உன் பிம்பம் மிதந்து மிதந்து ஒன்று பலவாகப்பெருகிப்பரவி ஒவ்வொன்றும் என்முன்னால் இருந்து விலகி விலகிச் செல்வவதை கண்டேன் சுசி. அந்த குளிர்ந்த முன்னிரவின் தனிமையில் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட கருவிபோல முற்றிலும் செயலிழந்தவனாக நின்று மஞ்சள் சுடிதாரின் கடைசித் திவலை அமிழும் உன் கடைசிப் பிம்பத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்.

[15]

சுசி, ஒரு வாழ்க்கையிலேயே செத்து மறுபிறப்பு கொண்டவர்கள் அதிருஷ்டசாலிகள். அவர்களுக்கு அதன் பின் வாழ்தலின் முடிவிலாத உவகை இருக்கிறது. வாழ்க்கையை முழுமையாக காண்பதற்கு ஒரு கணநேரமென்றாலும் மரணத்தில் ஏறி நின்றாகவேண்டியிருக்கிறது.

நான் கண்விழித்தபோது மருத்துவமனையில் இருந்தேன். நான் இழந்த குருதி ஒரு புட்டியிலிருந்து எனக்குள் துளித்துளியாக ஏறிகொண்டிருந்தது. சிவந்த துளிகளாக நிதானமாகச் சொட்டிக்கொண்டிருந்த காலத்தையே பார்த்துக்கொண்டு கண்விழித்துக் கிடந்தேன்.

கிரீச்சிட்ட ஒலியுடன் கதவைத்திறந்து ஒரு நர்ஸ் எட்டிப்பார்த்தாள். அதன் பின்னர் அவளது தலையாட்டலைக் கண்டு மெல்லிய காலடிகளுடன் சந்திரா உள்ளே வந்தாள். ஒரு நாளில் முதுமையை அடைந்துவிட்டவள் போலிருந்தாள்.

நான் அவளை எவ்விதமான உணர்ச்சியும் இல்லாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். என்னுடைய தொலைதூர இறந்தகாலம் ஒன்றிலிருந்து சந்திரா வந்துகோண்டே இருந்தாள். என் எண்ணங்கள் மிகவும் கனத்து களைத்து கண்ணாடிப்பரப்பில் புழுக்களைப்போல நழுவி நழுவி ஊர்ந்தன.

நர்ஸ் வெளியே சென்றாள். சந்திரா என்னருகே டீபாயில் அமர்ந்தாள். ”உனக்கு ரொம்ப லோ பிரஷர் இருக்கு அருண்…எந்திரிக்காதே”என்றாள் ”ஏகப்பட்ட ரத்தம் வெளியே போயிருக்கு” ரத்தப்புட்டியைப்பார்த்து ”உங்கம்மாவோட ரத்தம்”

என்றாள்.

”ம்ம்” என்றபடி திரும்பிப் பார்த்தேன் கொழுத்த ரத்தத்துளிகள்.

”அவங்களுக்கும் உனக்கும் ஒரே க்ரூப். ரொம்ப ரேர் க்ரூப்பாம்…”

நான் தலையசைத்தேன். அவள் மெல்ல புன்னகைசெய்து ”தப்பிச்சுட்டே.. நல்லவேளை…” என்றாள் ”நானும் நவினும்தான் உன்னை இங்க கொண்டுவந்தோம்….

”நவீனா?”

”ஆமா…நீ கெளம்பி கொஞ்ச நேரமானப்பதான் எனக்கு நீ போயிட்டேன்னு தெரிஞ்சது… நான் உன் பின்னலே இறங்கி ஓடினேன்…ரோட்டில தலைவிரிக்கோலமா ஓடிட்டிருந்தேன். அவன் என்பின்னால பைக்ல வந்து எங்கபோகணும் ஏறிக்கோ, கிறுக்கிமாதிரி ரோட்டில ஓடாதேன்னான். ஏறிட்டு உங்க வீட்டுக்கு வந்தேன். சுசி கெளம்பி போய்ட்டான்னா… நீ பின்னாடி போயிருக்கிறதா சொன்னா…நாங்க ஏர்ப்போட்டுக்குள்ள நுழையிறப்ப நீ கெளம்பி போறதைப்பாத்தோம்… உன் பின்னாடியே வந்தோம்…”

”பைக்லயா பாண்டிச்சேரி வரையா? அந்த ராத்திரியிலே– ”

”நவீன் ரொம்ப நல்ல டிரைவர்…அவன் இருக்கிறப்ப என்ன பயம்? ஹி இஸ் வெரி மேன்லி நவ், யூ நோ”

நான் பெருமூச்சு விட்டேன்.

” என்ன வேகமா ஓட்டினே தெரியுமா நீ? ரோடெல்லாம் ஏகப்பட்ட லாரிகள் கார்கள்.. மைகாட்...எப்டி வந்தோம்னு இப்ப நெனைச்சா நெஞ்சே நடுங்கிடுது. ஆனா அப்ப ஒண்ணுமே தெரியலை... உன்னோட கார் ஓட்டல் வாசலிலே இருகிறதைப் பாத்து உன் ரூமுக்கு வந்தா.... யப்பா ...ரும் கதவு வழியாகவே ரத்த வாசனை... உடைச்சு உள்ள வந்து பாத்தா ரூமெல்லாம் ரத்தம்... அப்டியே அள்ளிபோட்டு இங்க கொண்டுவந்துசேத்தோம். இது நம்ம சங்கரன் டாக்டரோட கஸின் நடத்துற கிளினிக்... நல்லவேளை...தப்பிச்சுட்டே....அரைமணிநேரம் லேட்டாகியிருந்தா எல்லாமே வேற மாதிரி ஆயிருந்திருக்கும்”

நான் கசப்புடன் புன்னகை செய்தேன்.

”அம்மாவும் தங்கச்சிகளும் எல்லாம் இருக்காங்க....நான் உன்னை சந்திச்சு பேசினதுக்குப் பிறகு அவங்க சந்திச்சா போரும்னு சொல்லிட்டேன்... அருண் எல்லாமே முட்டாத்தனம். வெறும் செக்ஸ்..அதைப்போய் அது இதுன்னு நெனைச்சுகிட்டு இல்லாத ஆர்ப்பாட்டம் பண்ணிட்டோம்...ஜஸ்ட் •பர்கெட் இட்... இப்ப மறுபிறப்பு எடுத்து வந்திருக்கே...நானும் மறுபிறப்பு எடுத்திருக்கேன். நம்ம ரெண்டுபேருக்குமே எல்லாம் தெளிவா இருக்கும் இப்ப..”

”ம்ம்”என்றேன்

”உன் மேலே தப்பே இல்ல. எனக்கு அந்த வயசிலே ஒரு ஆண்துணை தேவைப்பட்டது...குமார் போனப்ப நான் கல்யாணம் பண்ணிட்டிருக்கணும்... பெரிய ஐடியலிஸ்ட் மாதிரி விட்டுட்டேன்..அப்றம் வயசாச்சு... ஆண்துணை தேடின என் மனசு உன்னை என்னை

அறியாமலேயே அட்ராக்ட் பண்ணியிருப்பேன்னு நெனைக்கிறேன்... பொம்பிளையோட அடிமனசில ஒரு ஆண்மேல ஆசை வந்தாக்கூட அவ உடம்பு அவனை எப்டியோ கூப்பிட ஆரம்பிச்சிடும்னு சொல்வாங்க.... அதான் இயற்கையோட ரகசியம்...நம்ம விஷயத்திலே அதான் நடந்திருக்கணும்... நீ என்னை புடிக்கலை...நான்தான் உன்னைப் புடிச்சிருக்கேன்... ஏன்னு சிந்திச்சா ஒரு ஆணுக்காகத்தான்னு புரிஞ்சுது...” லேசான கசப்புச்சிரிப்புடன் ”புருஷனும் மகனுமா ரெண்டுரோல் பண்ற ஒரு ஆம்பிளை...ஸில்லி”

நான் புன்னகைசெய்தேன்

”அன்னைக்கு நவீன் அந்த கெழவிகிட்டே பேசின தோரணையில என் கண்ணு தெறந்திட்டுது அருண்...அவன் இப்ப ஒரு ஆம்பிளை....சின்னப் பிள்ளைன்னு நெனைச்சிட்டிருந்தேன். என்ன ஒரு மெச்சூரிட்டி என்ன ஒரு தைரியம்....எங்கப்பா இல்ல, நான் இருக்கேன்னு சொன்னான் பாரு...அப்டியே எனக்கு சிலுத்துப்போச்சு...ஓடிப்போய் மானசீகமா அவன் காலில விழுந்திட்டேன். இனி அவன்தான் எனக்கு எல்லாமே... அவன் கௌரவமும் மரியாதையும் மட்டும்தான் எனக்கு முக்கியம்...நீ எனக்கு இனிமே ஒரு பொருட்டே கெடையாது... உன் கூட இனிமே எனக்கு எந்த உறவும் இல்லை... அதைச்சொல்லத்தான் நான் வந்தேன்...”

அவள் முகம் நிதானமாக இருந்தது. ஒரு பாடத்தை சொல்லிக்கொடுப்பவள்போல இருந்தாள்.

”முந்தாநேத்து உன்னை இங்க கொண்டுவந்து சேத்தபிறகு இந்த ஆஸ்பத்திரி கேரிடார்ல வச்சு அப்டியே அவன் கையப்புடிச்சுட்டு அழுதிட்டேன். உன் காலிலே விழுறேன் என்னை மன்னிச்சிடுடான்னு சொல்லி கதறினேன். மன்னிக்கிறதுக்கு என்ன இருக்கு அம்மா...நீ அழறதைப்பாத்தா எனக்கு கஷ்டமா இருக்கு. முன்னைமாதிரி கம்பீரமா

இருக்கிற அம்மாதான் எனக்கு வேணும்னு சொன்னான். என் புள்ளை மனசில நான் எங்க இருக்கேன் பார்த்தியா? " அவள் வெறுமையாகப்புன்னகைசெய்தாள் "அவனுக்கு முன்னாடியே எல்லாம் தெரியுமாம். ராஜம்மாபாட்டி சொல்லியிருக்கா. அவன் கிளாஸ்மேட் ஜாஸ்மின் கிட்டே சொன்னானாம். அது உங்கம்மாவொட சொந்த விஷயம் நீ தலையிடாதேன்னு சொல்லிட்டாளாம்...சொல்றான்.எந்த அளவுக்கு மெச்சூர்டா இருக்கிறாங்க பாரு...நாமதான் கண்ட கண்ட புக்ஸ்லாம் படிச்சு சிந்திச்சு பேசி வீணாப்போனோம்.. எத்தனை வலி எத்தனை துக்கம்...யப்பா...."

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மௌனமாக கன்ணீரை துடைத்தபின் மூக்கை ஒரு கர்சீபால் துடைத்தாள்.

"சந்திரா" என்றேன் "நீ சொன்னதனால நானும் இதைச் சொல்றேன்...நேத்து அந்த ரத்தத்திலே...."

"ம்ம்"என்றாள் அதைப்பேசப்பிடிக்காதது போல.

"அப்பவே எனக்கு ஒண்ணு தோணிச்சு ...நம்ம உறவு அங்க முடிஞ்சிட்டுதுன்னு... அதுக்குமேலே ஒண்ணுமில்லைன்னு...அந்த பாத்ரூம் வாசலிலே நின்னுட்டு உன்னைப்பாத்தேன்...அப்ப உன் வயித்திலே இருந்து ஒரு பிள்ளையா நான் பிறந்து ரத்தத்தோட நகர்ந்து போறதுமாதிரி இருந்தது..."

சந்திரா "எனக்கும் அப்ப ஒரு நெனைப்பு வந்தது "என்றாள் "...என் உடம்பிலே இருந்து ஒரு கையை வெட்டி போட்டதுமாதிரி..அந்தக்கை தனியா விலகிபோறதுமாதிரி நீ போனே...அப்பவே அவ்ளவுதான்னு தோணிட்டுது...அதனாலதான் என்னெனமோ அபத்தமா பேசினேன்.

செண்டிமெண்டா பேசிப்பாத்தேன். ஆனா முடிஞ்சிட்டுதுன்னு அப்பவே உள்ளுக்குள்ள தெரிஞ்சிட்டுது... அதை நானே ஒத்துக்கிடுறதுக்ககாத்தான் இதெல்லாம்....” பெருமூச்சுடன் எழுந்தாள் ”’அம்மாவை வரச்சொல்றேன்... தைரியமா பேசு. ரொம்ப ஆடிப்போய்ட்டாங்க... நீ தனி ஆள் இல்ல அருண். உன்னை நம்பி எத்தனைபேர் இருக்காங்க...நீ இல்லேன்னா அவங்களுக்கும் வாழ்க்கை இல்லை...”

நான் கண்கள் கலங்க உதடுகளை இறுக்கிக் கொண்டேன்

”சும்மா அழுதிட்டிருக்கக் கூடாது. அதுக்கு முன்னாடி ஒரு வார்த்தை....நான் சுசிகிட்டே பேசிட்டேன்”

நான் நிமிர்ந்து பார்த்தேன்

”அவ பாம்பே ஏர்போர்ட்டிலே இருந்தா...நான் அவகிட்டே பேசினேன். நவீனும் பேசினான். எல்லாத்தையும் சொன்னேன். அவளால உன்னை விட்டுபோகவே முடியாது அருண்...நீ அவ பின்னாடி பம்பாய்க்கே வந்திருவேன்னு  எதிர்பார்த்திருக்கா....ஸில்லி கேர்ல்.... நீ என்ன பண்ணினாலும் உன்னை அவ வெறுக்கமாட்டா..அதான் உண்மையான காதல்... உண்மையான காதல்னா காதலை கொடுக்கிறதுமட்டும்தான்னு எங்கியோ படிச்சிருக்கேன்...அவளோட லவ் அப்டிப்பட்டது ...” என்று பெருமூச்சுவிட்டு ” அவ கௌம்பி வந்திட்டிருப்பா இந்நேரம்....” என்றாள்.

சுசி என் மனதின் எல்லா வாசல்களும் திறந்துகொண்டன. தூய காற்றும் ஒளியும் உள்ளே நுழைந்தன. இருண்ட மூலைகள் எல்லாம்

தூயதாகி ஒளிவிட்டன.

சந்திரா எழுந்து சென்றாள். கண்ணாடிக்கதவு மெல்ல அசைந்து வளை உள்ளே இழுத்துக்கொண்டது. கதவு நெகிழ்ந்து அம்மாவும் சுபாவும் ராணியும் சித்தியும் வந்தார்கள்.அம்மாவின் முகம் அழுகையும் சிரிப்புமாக கனத்திருந்தது. சுபாவும் ராணியும் அழுகையை அடக்கிக்கொண்டிருந்தார்கள். அம்மா என்னருகே வந்ததும் சட்டென்று என் கால்களைப்பிடித்துக்கொண்டு அவற்றில் முகம்புதைத்துக்கோண்டு குலுங்கிஅ ழுதாள். சித்தி அம்மாவை பிடித்து ஆறுதல்செய்தாள். அவளும் அழுதுகொண்டிருந்தாள்

அலையடித்த அழுகைகள். பெருமழை போல அவை எலல குப்பைகளையும் அடித்துச்சென்றன. பின்னர் மெல்லமெல்ல அது அடங்கி வெளிச்சம் வந்தது. அம்மா சிரித்தபடி என் கன்னத்தை மெல்ல அறைந்தாள். சுபாவும் ராணியும் சிரித்துக்கொண்டு என் கைகளைப்பிடிக்க சித்தி வாய்பொத்தி சிரித்தாள்.

நர்ஸ் வந்து நின்றாள். அவர்கள் எழுந்துசென்றார்கள். நான் மீண்டும் தனிமையிலாழ்ந்தேன். என் புஜங்களில் மென்மையாக ஊசி பதிந்தது. என் எண்ணங்களை நனைந்து படியச்செய்யும் மருந்து என் மூளைக்குள் பரவியது.

சுசி, கண்ணாடிக்கதவுகளின் நீரலைகளைப் பிளந்து நீ உள்ளே வரும் நொடிக்காக இதோ காத்து கிடக்கிறேன்.

**[முற்றும்]**